மஹாவம்சம் : ஸ்ரீலங்கா வரலாறு

தமிழில் சாந்திப்பிரியா
ஆங்கிலத்தில் ஜார்ஜ் டர்னர் மற்றும் வில்லியம் கீஜர்
பின்னர் மாற்றி எழுதியது மேபில் ஹேனஸ் போடே

முன்னுரை

கி.மு. முன்றாம் நூற்றாண்டு முதல் மஹாவிஹாரவைச் சார்ந்த புத்த பிட்சுக்கள், ஸ்ரீலங்காவைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புக்களை தற்காலத்தில் எழுதப்பட்டுள்ள வரலாற்று நூல் போல எழுதி வைத்திருந்தனர். ஐந்தாம் நூற்றாண்டில் அந்த குறிப்புக்கள் அனைத்தையும் ஒன்றிணைத்து ஒரு வரலாற்று நூலாக புத்த பிட்சு மஹாதீர மஹானமா என்பவர் எழுதினார். அதற்கு முன்பாகவே மஹாவம்ச அத்தக்கதா *(Mahavamsa Atthakatha)* என்ற பெயரில் ஒரு நூல் எழுதப்பட்டிருந்தது எனறாலும், மஹாதீர மஹானமா அந்த நூலை அடிப்படையாகக் கொண்டே தன்னுடைய நூலினை எழுதி உள்ளார் என்பதற்கு ஆதாரம் உள்ளது என வில்ஹம் கீஜர் (*Wilhelm Geiger*) என்பவர் தெரிவித்துள்ளார்.

மஹாவம்ச அத்தக்கதா என்ற நூலைத் தழுவி தீபவம்சா *(Dipavamsa)* என்ற பெயரில் எழுதப்பட்டுள்ள மற்றொரு நூல் மிக எளிமையாக எழுதப்பட்டு இருந்தாலும், வரலாற்று செய்திகள் அதிக அளவில் அதில் இல்லை. 200,000 வார்த்தைகளுக்கும் அதிகமாக உள்ள, சுமார் 960 பக்கங்கள் கொண்ட அந்த வரலாற்று நூலின் முதல் 37 பகுதிகள் மஹாவம்சம் எனவும், 38 முதல் 79 ஆம் வரையிலான பகுதிகள் குலவம்சம்-1 *(Culavamsa)* எனவும், பகுதிகள் 80 முதல் 101 வரை குலவம்சம்-2 எனவும் பிரித்து எழுதப்பட்டு உள்ளன.

மஹாவம்சத்தின் முதல் பாகம் அனுராதபுரத்தில் கி.பி. ஆறாம் நூற்றாண்டில் இருந்த ‘வென் மஹாநம மஹாதீரா *(Ven. Mahanama Maha Thera)* என்பவரினால் எழுதப்பட்டது.

CLICK HERE TO VIEW ENGLISH VERSION

அவர் 460 முதல் 478 வரை ஆண்ட மஹாவிஹார வம்சாவளியை சேர்ந்த திகசந்த சேனாபதி என்ற பிரிவின் மன்னனான தடுசேனா (*Dhatusena),* என்பவருடைய மாமன் ஆவர்.

அவர் எழுதிய அனைத்தும் 37.50 ஆம் பகுதியுடன் முடிவடைந்து விட்டது. அவருடைய நூல் ஐந்து நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்த தீபவம்சாவை பின்பற்றியே எழுதப்பட்டு இருந்தது என்றாலும் லங்காவை ஸ்தாபித்து ஆண்ட பேரரசர்களான மன்னன் விஜயா *(Vijaya)* முதல் கி.பி. நான்காம் நூற்றாண்டை சேர்ந்த மன்னன் மஹாசேனாவின் *(Mahasena)* ஆட்சி வரையிலான செய்திகளைத் அது தந்தது.

கி.பி. பதிமூன்றாம் நூற்றாண்டில் எழுதப்பட்டுள்ள குலவம்சா என்ற மஹாவம்ச நூலின் இரண்டாம் பகுதி, நான்காம் நூற்றாண்டில் புனிதப் பல் வந்தது முதல் பேரரசன் பராக்கிரமபாஹுவின் ஆட்சி காலம் வரையிலான செய்திகளை தெரிவிக்கின்றது. இதை எழுதியவர் தேரா தம்மகித்தி *(thero Dhammakitti)* என்பது தவறு, அதை உண்மையில் பல்வேறு துறவிகள் எழுதி இருந்திருந்தனர் என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

1815 ஆம் ஆண்டில் ஆங்கிலேயர் ஶ்ரீலங்கா முழுவதையும் படையெடுத்து ஆக்கிரமித்துக் கொண்ட கால கட்டத்தில் அதன் மூன்றாம் பகுதி எழுதப்பட்டுள்ளது.

1837 ஆம் ஆண்டு மஹாவனம்சாவின் அச்சடிக்கப்பட்ட முதல் ஆங்கிலப் பதிப்பை சிலோன் சமுக சேவை பிரிவில்

பணி புரிந்து கொண்டு இருந்த ஜார்ஜ் டர்னர் *(George Turnour)* என்ற வரலாற்று ஆசிரியர் வெளியிட்டார். 1912 ஆம் ஆண்டில் மஹாவம்சத்தையும், 1930 ஆம் ஆண்டில் குலவம்சாவையும் அதிகாரபூர்வமாக ஜெர்மானிய மொழியில் வில்ஹம் கீஜர் (*Wilhelm Geiger*) என்பவர் வெளியிட்டார். அதை தொடர்ந்து மேபல் ஹேனஸ் போர்டே *(Mabel Haynes Bode)* என்பர் அதை சிறிது மாற்றி எழுத, மீண்டும் வில்ஹம் கீஜர் அந்த நூலின் புதுப் பதிப்பை வெளியிட்டார். தீபவம்ச காவியத்தைத் தொடர்ந்து வெளியான மஹாவம்சம் மக்களிடையே மிகப் பெரும் வரவேற்பை பெற்றது மட்டும் இன்றி இன்னும் பல செய்திகளை மற்றும் பலர் எழுத தூண்டு கோலாயிற்று.

பல்வேறுகால கட்டத்தில் அவ்வாறு எழுதப்பட்ட பிற நூல்கள், அட்டன காலு *(Attana-galu)*, விஹாரவம்சா (*Vihara Vamsa*), ததுவம்சா (*Dhatuvamsa*), எலு அட்டனகாலுவம்சா (*Elu-Attanagaluvamsa*), எலு போதிவம்சா (*Elu-Bodhivamsa*), மஹா போதிவம்சா (*Maha Bodhivamsa*), துபவம்சா (*Thupavamsa*), தாலதவம்சா (*Daladavamsa*), மற்றும் விஹாரவம்சா (*Viharavamsa*) போன்றவை ஆகும்.

மஹாவம்ச நூலின் பெருமை

மஹாவம்சம் என்ற மஹாவன்சா என்ற இந்த வரலாற்று நூலே உலகில் எழுதப்பட்டுள்ள வரலாற்று நூல்களில் மிகப் பெரியதும், பழமையானதுமாகும். இந்த நூல் 2500 ஆண்டுகளுக்கான சரித்திரத்தை எடுத்துக் கூறுகின்றது. இந்த

நூல் மட்டும் எழுதப்படாமல் இருந்திருந்தால் ஸ்ரீலங்காவில் எழுப்பப்பட்டுள்ள மாபெரும் நினைவுச் சின்னங்களான ரூவன் வாலி சாயா (*மஹா தூபா*), ஜேதவனா, அப்பியாகிரி போன்றவற்றைப் பற்றிய செய்திகளை இந்த உலகம் அறிந்து கொள்ள வாய்பின்றிப் போய் இருக்கும். 1837 ஆம் ஆண்டு அச்சடிக்கப்பட்ட மஹாவம்சாவுடைய முதல் ஆங்கிலப் பதிப்பை சிலோன் சமுக சேவை பிரிவில் பணி புரிந்து கொண்டு இருந்த ஜார்ஜ் டியூனர் (*George Turnour*) என்ற வரலாற்று ஆசிரியர் வெளியிட்டார். 1912 ஆம் ஆண்டு மஹாவம்சத்தை ஜெர்மானிய மொழியில் வில்ஹம் கீஜர் (*Wilhelm Geiger*) என்பவர் வெளியிட்டார். அதை பின்னர் ஆங்கில மொழியில் மேபல் ஹேனஸ் போர்டே (*Mabel Haynes Bode*) என்பர் சற்று மாற்றி எழுத அதன் மாற்றுப் பதிப்பை மீண்டும் கீஜர் என்பவர் வெளியிட்டார்.

ஸ்ரீலங்காவின் வரலாற்று நூலான மஹாவம்சம் மத-சமய போதனை நூல் இல்லை எனிலும் புத்த மதத்தை ஸ்தாபித்த சித்தார்த கௌதமர் காலம் முதல் எப்படி ஒவ்ஒரு காலத்திலும் புத்த மதம் தழைத்தோங்கியது என்ற செய்திகளையும் விளக்கும் முக்கியமான நூலாகவே விளங்குகின்றது. அது மட்டும் அல்ல இது இந்தியாவை பல்வேறு காலங்களில் ஆண்டு கொண்டு இருந்த அரச பரம்பரைகளைப் பற்றிய செய்திகளையும் நடு நடுவே எடுத்துக் காட்டுவதால் அது வரலாற்று சிறப்பு மிக்க நூலாக விளங்குகின்றது. மயூரத்தை ஆண்ட மன்னன் அசோகனை *(Maurya emperor Asoka)* பற்றியும், மாபெரும் பேரரசரான அலக்ஸாண்டர் *(Alexander)* போன்ற மன்னனின் ஆட்சி பற்றியும் செய்திகளைத் தெரிவிக்கின்றது.

இனி தொடர்வது வரலாற்றுப் பாகங்கள் ....

CLICK HERE TO VIEW ENGLISH VERSION

மஹாவம்சம் : ஸ்ரீலங்கா வரலாறு

தமிழில்
சாந்திப்பிரியா
ஆங்கிலத்தில்
ஜார்ஜ் டர்னர் மற்றும் வில்லியம் கீஜர்
பின்னர் மாற்றி எழுதியது
மேபில் ஹேனஸ் போடே

பொருளடக்கம்

	பக்கம்
01: தாடகாதா விஜயம்	007
02: மஹாசமதா வம்சம்	018
03: முதலாம் ஆலோசனை சபை	023
04: இரண்டாம் ஆலோசனை சபை	028
05: முன்றாம் ஆலோசனை சபை	037
06: விஜயன் வருகை	072
07: விஜயன் முடிசூடல்	079
08: பாண்டுவசுதேவா முடிசூடல்	089
09: அபயா முடிசூடல்	093
10: பாண்டுகபாயா முடிசூடல்	097
11: மன்னன் தேவனாம்பிய திஸ்ஸா	110
12: அண்டை நாட்டில் மதமாற்றங்கள்	115
13: மஹின்தா வருகை	122
14: தலைநகர் வருகை	125
15: மஹாவிஹாரா ஏற்பு	134
16: செடியபப்பதா விஹாரா ஏற்பு	158
17: புனிதச் சின்னம்	161
18: போதி மரம் கிடைத்தது	169
19: போதி மரம் ஸ்தாபனம்	176
20: புத்த தீரர் சமாதி	185
21: ஐந்து மன்னர்கள்	191
22: இளவரசர் காமினி பிறப்பு	195
23: போர்ப் படைவீரர்கள்	204
24: சகோதரர்களின் யுத்தம்	214
25: தத்தகமானி வெற்றி பெற்றார்	220
26: மாரிகவட்டி விஹாரா	233
27: லோஹபாதஸா புனித சடங்கு	237
28: ஸ்துாபி	241

CLICK HERE TO VIEW ENGLISH VERSION

பக்கம்

29:	ஸ்துாபி ஸ்தாபனம்	246
30:	புனித அறை	254
31:	புனித சின்ன ஸ்தாபனம்	265
32:	துாசித சொர்க வாசல்	279
33:	பத்து மன்னர்கள்	290
34:	பனிேனாரு மன்னர்கள்	302
35:	பன்னிரண்டு மன்னர்கள்	312
36:	பதிமூன்று மன்னர்கள்	326
37:	மன்னன் மஹேசன்	339

புத்த கயாவில் புத்தர் ஞானம் பெற்ற இடத்தில் உள்ள மஹாபோதி ஆலயம் மற்றும் போதி மரம்

*நன்றி: பிரிடிஷ் லைப்பிரரி (**British Library**)*

CLICK HERE TO VIEW ENGLISH VERSION

01: தாடகாதா விஜயம்

கௌதம புத்தரின் ஸ்ரீலங்கா யாத்திரை

புனிதப் பறவி எடுத்த சம்மசம்புத்தருக்கு என் பணிவான வணக்கங்களைத் தெரிவித்துக் கொண்ட பின் இந்த காவியமான மகாவம்சத்தை முடிந்தவரை எந்தவித பிழைகளும் இல்லாமல் கூறத் துவங்குகின்றேன். முற்காலத்தில் முனிவர் பெருமக்களினால் கவனத்துடன், மஹாவம்ச காவியம் சிறு சம்பவத்தைக் கூட விடாமல் விரிவாக எழுதப்பட்டிருந்ததினால் ஒரே செய்திகள் பல இடங்களில் மீண்டும் மீண்டும் கூறப்பட்டு இருந்தன. ஆகவே அந்த குறைபாடுகளைக் களைந்து, மிக எளிமையாக அனைவரும் புரிந்து கொள்ளும் வகையில் எழுதப்பட்டு உள்ள இந்த காவியத்தை படித்து மனதில் வைத்திருப்பதின் மூலம் இதயத்தில் சொல்ல முடியாத இன்ப உணர்வையும், மனதில் பேரானந்தத்தையும் பெற்றிடுவீர்கள என்பதில் சந்தேகம் இல்லை.

சம்புத்த தீபாங்கராவை (*Sambuddha Dipamkara*) முன் ஒரு காலத்தில் சந்தித்த நம் புனிதர் இந்த உலகை தீமைகளில் இருந்துக் காப்பாற்றுவேன் என சபதம் பூண்டார். அது போல அவர் கோதன்னா முனிவர் மங்கலா, சுமன்னா, புத்த ரேவதா, முனிவர் சோபிதா, சம்புத்த அனோமதாஸி, பதுமா, நாரதா, சம்புத்த பதுமுத்தரா, தாதகாத சுமேதா, சுஜாதா, பீயதாஸி, அட்டதாஸி, தம்மதாஸி, சித்தத்தா, திஸா, வெற்றி வீரரான புஸா, விபாசி, சம்புத்த சிக்கி, சம்புத்த விசப்பு மற்றும் சம்புத்தா போன்றவரையும் போற்றி வணங்கினார்.

CLICK HERE TO VIEW ENGLISH VERSION

காகசன்தா(*Kakusandha*),கோனகாமன்னா மேலும் புனிதர் காஸப்பா (*Kassapa*) போன்ற இருபத்தி நான்கு சம்புத்தர்கள் மூலம் வருங் காலத்தில் தான் புத்தராகப் போகும் உண்மையை அறிந்து கொண்டவர் தன்னுடைய அனைத்துக் கடமைகளையும் பூரணமாகச் செய்து முடித்தப் பின்னர் ஞானம் அடைந்து உலகின் துயரங்களைத் துடைக்க கௌதமராக உலா வந்தார். மகத நாட்டில் உருவிலா (*Uruvela*) எனும் இடத்திற்குச் சென்று அங்கு ஒரு போதி மரத்தடியில் அமர்ந்து கொண்ட மாகான், ஏழு வாரங்கள் அனைத்துப் புலன்களையும் அடக்கி வைத்திருந்து, ஐம்புலன்களையும் கட்டுப்படுத்திக் கொண்டு ஒரு விசாக மாத பௌர்ணமி தினத்தில் பரிபூரண ஞானம் அடைந்தார். தமக்கு ஏற்பட இருந்த ஞானத்தை முன்னரே அவரால் உணர்ந்து கொள்ள முடிந்திருந்ததினால் அவரால் தம்முடைய இன்ப துன்ப உணர்ச்சிகளைக் கூட கட்டுப்படுத்தி வைக்க முடிந்திருந்தது. அதன் பின் அவர் வாரணாசிக்குச் சென்று வெய்யில் மழை என எதையும் பொருட்படுத்தாமல் உலாவிக் கொண்டு நீதி, நேர்மைகளை எடுத்துரைத்து, தம்முடைய தூய போதனைகளைப் பரப்பத் துவங்கி அறுபது சிஷ்யர்களை அங்கு உருவாக்கினார். அதன் பின் பாதா (*Bhadda*) எனும் பிரிவில் மேலும் முப்பது சிஷ்யர்களை உருவாக்கினார். கடும் குளிர் காலத்தையும் பொருட்படுத்தாமல் உருவிலாவில் இருந்து கொண்டு காஸப்பாவிடம் இருந்த ஆயிரம் ஜடில்லாவினரையும் (*jatilas*) தன்னுடைய மார்கத்தில் இணைத்துக் கொண்டார்.

CLICK HERE TO VIEW ENGLISH VERSION

-9-

உருவிலாவில் தான் மேற்கொண்ட முயற்சி வெற்றிகரமாக முடிந்தேறியதும் இனியும் தான் அங்கிருந்தால் காஸப்பர் எதையாவது செய்து தன்னை அங்கிருக்கும்படி கட்டாயப்படுததுவாா் என நினைத்ததினால், அங்கிருந்து கிளம்பி வட நாட்டில் இருந்த குரு என்ற மன்னர்கள் (*Northern Kurus*) இருந்த இடத்தை அடைந்து, பிட்சை எடுத்தவாறு அங்கு வாழத் துவங்கினார். தான் புத்த பிட்சுவாக மாறி ஒன்பது மாதங்கள் கழிந்த நிலையில் புசா (*Phussa*) மாதம், பௌர்ணமி தினத்தின் மாலை வேளையில் இமய மலையின் அடிவாரத்தில் இருந்த அனோடட்டா (*Anotatta*) என்ற ஏரியின் பக்கத்தில் அமர்ந்து உணவு அருந்திக் கொண்டு இருந்த பொழுது இனி ஸ்ரீலங்காவிற்குச் சென்று அங்குள்ள யக்கா (*yakkhas*) என்ற பெரும்பான்மை இனத்தினரை தன் சமயத்தில் இணைத்துக் கொள்ள போதனைகள் செய்ய வேண்டும் என முடிவு செய்தார்.

மூன்று யோசனை நீளமும் ஒரு யோஜனை அகலமும் கொண்ட நதிக்கரையில் இருந்த மஹானஹா தோட்டம் (*Mahanaga garden)* என்ற இடத்தில் யாக்கா பிரிவினர் ஒன்று கூடி விழா கொண்டாடுவது வழக்கம். ஆகவே வெகு காலத்திற்குப் பின்னர் மஹியாங்கன ஸ்துபா கட்டப்பட்ட (*Mahiyangana-thupa)* இடத்தில் அவர்கள் குழுமி இருந்த பொழுது அங்கு சென்று, அவர்கள் கூடி இருந்த இடத்தின் மேல் ஆகாயத்தில் பறந்து கொண்டு இருந்தவாறு இருட்டு, மழை, இடி, புயல் போன்றவற்றை செயற்கையாக உருவாக்கி அவர்களுடைய மனதில் பீதியை எழுப்பினார். அதைக் கண்டு பயந்து போன யக்கா இனத்தினர் அந்த பயங்கரத்தில் இருந்து தம்மை காப்பாற்றுமாறு அவரிடம் வேண்டினர்.

CLICK HERE TO VIEW ENGLISH VERSION

அதை எதிர்பார்த்திருந்த வெற்றி வீரரோ தனக்கு அந்த தீவில் அமர்ந்து கொள்ள இடம் ஒன்று தந்தால் தாம் அந்த கொடுமையான சீற்றங்களைக் களைவதாக வாக்குறுதி தந்தார். யக்கா இனத்தினரோ, அமர மட்டும் என்ன, இந்த இந்த தீவு முழுவதையுமே நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள், ஆனால் எங்களை பயமுறுத்தும் காட்சிகளை விலக்குங்கள் என்று அவரிடம் வேண்டிக் கொள்ள, அவரும் அவர்களுடைய பீதியை விலக்கினார். பின்னர் அவர்கள் அமரச் சொன்ன இடத்தில் விலங்குத் தோலால் ஆன பாய் ஒன்றை விரித்து போட்டுக் கொண்டு அதன் மீது அமர்ந்தார். அந்த பாயை சுற்றி நெருப்பு கொழுந்து விட்டு எரியத் துவங்க, அந்த தீயினால் ஏற்பட்ட வெப்பம் தாங்க முடியாமல் பயந்து போன யக்கா இனத்தினர் அதன் வெளிப்புறத்தில் சென்று நின்றனர். அவர் தொலை துாரத்தில் இருந்த மலைப் பகுதிகளில் இருந்த மக்களையும் தம் அருகில் வரவழித்தார். வந்த அவற்றை மீண்டும் அவற்றின் பழைய நிலைகளுக்கே திருப்பி அனுப்பினார். அவர்கள் சென்றதும் அவர் தன்னுடைய பாயை சுருட்டிக் கொண்டு எழுந்த பொழுது தேவ துாதர்கள் (*devas*) அவர் முன் வந்து நிற்க, அவர்களுக்கும் தம்முடைய போதனைகளை செய்தார். இப்படியாக தம்மிடம் வந்த பல கோடி மக்களுக்கு போதனைகள் செய்ய, அறியாமையில் சுழன்ற பல மக்களும் அவரிடம் வந்து, சரணாகதி அடைந்து அவருடைய கட்டளையை எதிர் நோக்கி காத்து நின்றனர்.

அப்படி மன மாற்றம் பெற்ற சுமனகுட்டா (*Sumanakuta*) மலையின் இளவரசன் மஹாசுமன்னா (*Mahasumana*) என்பவர் தாங்கள் அவரை நினைத்தபடி வழிபட்டுக் கொண்டு இருக்க எதாவது ஒரு சின்னத்தை தருமாறு அவரிடம் வேண்டுகோள்

அவரும் தம்முடைய மேல் தலையைத் தடவி கரு நீல நிறத்துடன் ஜொலித்த தம் தலை முடியை சிறிது பிடுங்கிக் கொடுத்தார். அதை பெற்றுக் கொண்ட மன்னனும் அதை ஒரு தங்கப் பேழையில் வைத்து அவர் அமர்ந்திருந்த இடத்தில் ஏழு முழ பரப்பளவில் (ஒரு முழம் என்பது சுமார் 18 அங்குலம் ஆகும்) பல வைர, பவழ வண்ண நவரத்தினக் கற்களை குவித்து, வைத்து அதன் மீது அந்த பேழையை வைத்து வணங்கி வரலானான். அவரும் அவரைச் சார்ந்தவர்களும் புத்தரிடம் சரணாகதி அடைந்து அவருடைய கொள்கைகளை ஏற்று அவற்றை கடை பிடித்து நடப்பதாக உறுதி மொழி ஏற்றனர்.

சம்புத்தர் மரணம் அடைந்த பின் அவருடைய சிஷ்யரான தீரா சரிபுட்டா என்பவரின் சிஷ்யனான சரபு (*Sarabhu*) என்பவர், தாம் பெற்றிருந்த இருந்த விஷேச சக்தியினால், எரிந்து கொண்டு இருந்த சிதையில் இருந்து புனிதருடைய தோள்பட்டை எலும்பு ஒன்றை எடுத்துக் கொண்டு ஸ்ரீலங்காவிற்கு வந்து அங்கிருந்த புத்த பிட்சுக்களின் முன்பாக, அந்தப் புனிதர் முடி வைக்கப்பட்டு இருந்த அதே இடத்தில் அந்த பேழை மீதே அந்த எலும்பை வைத்து தங்க நிறத்தில் ஜொலித்த நவமணிக் கல் குவியல் மீது பன்னிரண்டு முழ உயரத்தில் ஸ்துாபியை அமைத்து விட்டு தன் நாடு திரும்பினார். அந்த ஸ்துாபியைக் கண்ட உதயகுலபாய (*Uddhaculabhaya*) என்ற மன்னனின் சகோதரனின் மகன் தேவனாம்பியடிஸ்ஸா (*Devanampiyatissa*) என்பவர் அந்த ஸ்துாபியை இன்னமும் முப்பது முழ உயரத்திற்கு பெரியதாக கட்டினார். துமிலா என்ற பிரிவினருடன் யுத்தம் செய்ய வந்த தத்தகாமணி *(Dutthaga mani)* என்ற மன்னன் அந்த ஸ்துாபியைக் கண்டு

வியந்து, அதை இன்னமும் பெரியதாக எண்பது முழ உயரத்தில் கட்டினார். ஆக அந்த மஹியாங்கன ஸ்துாபா *(Mahiyangana-thupa)* அங்கு இப்படியாக நிறுவப்பட்டது. இப்படியாக பல்வேறு வீரர்களையும் மன்னர்களையும் இந்த தீபகற்பத்தில் நிலைக்கக் காரணமான புனிதர் தம்முடைய கடமை முடிந்ததும் மஹியங்கனா யாத்திரையை முடித்துக் கொண்டு உருவிலாவுக்குத் திரும்பிச் சென்று விட்டார்.

அதற்கு முன் உலகிற்கு மோட்சம் தர அவதரித்த அந்த புனிதர் தாம் புத்தராக மாறிய ஐந்தாவது ஆண்டில் கோசலா என்ற நாட்டில், ஜேதவனா (*Jetavana*) என்ற இடத்தில் இருந்த பொழுது, வைரக் கற்கள் பதித்த தலை கிரீடத்தின் காரணமாய், நாகங்களின் வம்சத்தில், மாமன் மஹோதரா *(Mahodara)* என்பவருக்கும் அவருடைய மருமகன் குலதோதரவுக்கும் *(Culodara)* இடையே யுத்தம் ஏற்பட இருந்ததை ஞானக் கண்களால் பார்த்தவர், சித்ரா *(Citta)* மாதத்தின் அம்மாவாசை கால கட்டத்தில் விடியற் காலையில் பிட்சை பாண்டத்தை கையில் ஏந்திக் கொண்டும், புனித அங்கியை அணிந்து கொண்டும் நாக மன்னனிடம் சென்று வடமேற்கு சிலோன் *(சிலோன் என்பதின் தற்பொழுதைய பெயர் ஸ்ரீலங்கா)* பகுதியில் இருந்த நாகதீபா என்ற இடத்தை பிட்சையாகக் கேட்டார். அந்த தீவில் ஐநுாறு யோஜனை அளவிலான பகுதியை தம் வசம் வைத்துக் கொண்டு ஆண்டு வந்தவர் மன்னன் மஹோதரா என்பவர். கன்னவதாமனா *(Kannavaddhamana)* மலைப் பகுதியை ஆண்டு வந்த ஒரு மன்னருக்கு அவர் தன்னுடைய தங்கையை மணம் முடித்திருந்தார். அவர்களுடைய புதல்வரே குலதோதரா. குலதோதராவின் பாட்டனார் மரணம் அடையும் முன்னர் தன் மகளுக்கு, அதாவது குலதோராவின்

தாயாருக்கு ஒரு வைர கிரீடம் கொடுத்து இருந்தார். அவர் மரணம் அடைந்தப் பின் அது சம்மந்தமாக மாமன்-மருமகன்களிடையே கருத்து வேறுபாடு தோன்றி யுத்தம் எழும் நிலைக்குச் சென்றது. மலைப் பகுதியை ஆண்டு வந்த மன்னர்கள் பல விஷேச சக்திகளைப் பெற்று இருந்தவர்கள். சமித்திசுமன்னா *(Samiddhisumana)* என்ற தேவர், ஜேதவனா பகுதியில் இருந்த இராஜயாதனா *(rajayatana)* மரத்தை அடியோடு பிடுங்கி வந்து அதை ஒரு நிழல் குடை போல குருநாதரின் தலைக்கு மேலாக பிடித்துக் கொண்டு அவருடன் நாகதீபா பகுதிக்கு சென்றார். அந்த இராஜயாதனா பின்னர் மரமாகி நின்றிருந்த இடத்தில் புத்த பிட்சுக்கள் உணவு அருந்திக் கொண்டு இருந்ததைக் கண்டவர் , ஆனந்தம் அடைந்து அவர்களுடைய பிட்சை பாத்திரங்களை சுத்தம் செய்ய மரத்தின் இலைகளை பறித்துத் தந்தார். ஆகவே அடுத்த பிறவியில் ஜேதவானா தோட்டப் பகுதியில் அந்த மரமாகவே அவர் பிறந்திருந்தார். அதனால்தான் கடவுட்களுக்கும் மேலான கடவுளான புனிதர் தாம் வந்த அந்த தீவுப் பிரதேசம் நலமாக இருக்க வேண்டும் என்பதற்காக மரத்துடன் அவரையும் அங்கு அழைத்து வந்திருந்தார்.

ஆன்மீக வெளிச்சத்தையே பார்க்காமல், வாழ்நாள் முழுதும் இருட்டில் வாழ்ந்து கொண்டு இருப்பவர்கள் போல வாழ்ந்து கொண்டு இருந்தவர்கள் மோதிக் கொள்ள இருந்த யுத்த பூமிக்குச் சென்று, ஆகாயத்தில பறந்தவாறு அவர்களுடைய மனதில் முன்னர் யாக்காவிற்கு செய்தது போல செயற்கையான பீதியை உருவாக்கினார். பீதியால் தம்மை நாடி வந்து நின்றவர்களுக்கு கருணைப் புரிந்து ஆறுதல் தந்தார். அவருடைய சக்தியைக் கண்ட இரு பிரிவினரும்

மனம் மாறி அவரிடம் சென்று சரணடைந்து தம் இருவருக்கும் இடையே மனத் தாங்கல் ஏற்பட்டு யுத்தம் நிகழக் காரணமாக இருந்த வைரக் கிரீடத்தை அவரிடமே கொடுத்து விட்டனர். *(நாகர்கள் பாம்பு இனத்தவர்).* ஆகாயத்தில் இருந்து பூமியில் இறங்கி வந்து தம்மிடம் சரணம் அடைந்தவர்களுடைய இடத்திற்கு சென்று அமர்ந்தவருக்கு உணவும், பானகங்களும் தந்து உபசரித்தனர். அவர்களுடைய நிலையைக் கண்ட கருணாமூர்தியானவர் அவர்களுக்கு மன திடத்தை அளித்து அந்த நாட்டில் நீரிலும் நிலத்திலும் வாழ்ந்த அனைத்து ஜீவன்களையும் ஆசிர்வதித்தார்.

புத்த தத்துவத்தில் மனமாற இணைந்து அவரிடம் சரண் அடைந்த கல்யாணி என்ற நதியில் இருந்த நாகங்களின் தலைவர் மனியக்கிகா (*Maniakkhika*), மற்றும் யுத்தத்தில் பங்கேற்க தன்னுடைய படைகளுடன் வந்திருந்த அவருடைய தாயாரின் சகோதரரான மஹோதரா (*Mahodara*) ஆகியோர் தாதகாவிடம் (*Tathagata*) சென்றனர். மனம் உருகிய மஹோதரா கூறினார் ‘எங்களுக்கு கருணைக் காட்டி வழி காட்டி உள்ளீர்கள் . நீங்கள் இங்கு வந்திருக்காவிடில் நாங்கள் அனைவரும் சாம்பலாகி இறந்திருப்போம். கருணாமூர்த்தியே, அன்பு காட்டி எம் மனதை பக்குவப் படுத்தியவரே, உங்களுடைய கருணை முக்கியமாக என் மீது விழ வேண்டும். நீங்கள் என்னுடைய நாட்டிற்கு வந்து எங்கள் அனைவருக்கும் தொடர்ந்து நல் வழி காட்டி அருள் புரிந்து கொண்டு இருக்க வேண்டும். எங்களுடைய நாட்டிற்கும் நீங்கள் வருகை தந்து எங்களை ஆசிர்வதிக்க வேண்டும்’. அவர்களுடைய வேண்டுகோளை ஏற்றுக் கொண்டவர், அவருடைய நாட்டிற்கு வருகை புரிய ஒப்புதல் தந்த கருணை உள்ளம், தன்னுடன் வந்திருந்த இராஜயாதனா மரத்தினை

அங்கேயே நட்ட பின், தான் அமர்ந்திருந்த இடத்தை சுட்டிக் காட்டி, அங்கு தாம் உபயோகித்தப் பொருட்களை வைத்து வணங்கி வருமாறு கூறிய பின் நாகரகளின் தலைமையிடம் அந்த பொறுப்பை ஒப்படைத்தார். ‘ இப்படிப்பட்ட வழிபாடு உனக்கும் உன் இராஜ்ய மக்களுக்கும் மன அமைதியையும், நன்மையையும் கொடுக்கும்’ என்று ஆசிர்வதித்தப் பின் தன்னுடன் வந்தவர்களை அழைத்துக் கொண்டு ஜேதவனா பகுதிக்குத் திரும்பிச் சென்றார். இப்படியாக அந்த கருணா மூர்த்தியின் நாகபீடா (*Nagadipa*) விஜயம் நிறைவு பெற்றது.

அதன் பின் மூன்று வருடங்கள் கழிந்தது. நாக மன்னன் மனியக்கிகா புத்தரிடம் சென்று அவரையும், அவருடைய சீடர்களையும் தம்முடைய நாட்டிற்கு வருகை தருமாறு அழைத்தான். அதை ஏற்றுக் கொண்ட சம்புத்தா, விசாக (*Vesakha)* மாதத்தின் பௌர்ணமியின் இரண்டாம் நாள் அங்கு வந்து பிட்சை பெற்றுக் கொள்வதாகக் கூறிய பின் புனித அங்கியை அணிந்து கொண்டும் பிட்சை பாண்டத்தை கையில் எடுத்துக் கொண்டும் தன்னுடன் ஐநூறு புத்த பிட்சுக்களை அழைத்துக் கொண்டு, முன்னர் சிலோன் என அழைக்கப்பட்ட தீவின் கடலில் கலந்து விழுந்து கொண்டிருந்த கேலானி (*Kelaniya*) *என்ற* நதிக் கரையில் இருந்த கல்யாணி என்ற இடத்தை ஆண்டு கொண்டு இருந்த நாக மன்னன் மனியக்கிகா (*Maniakkhika*) இருந்த இடத்தை அடைந்தார். அந்த இடத்தில் கட்டப்பட்டிருந்த பந்தலில் வைக்கப்பட்டு இருந்த நவமணிகள் பதித்த ஆசனத்தில் சென்று அமர்ந்தார் உண்மையின் உருவம், கருணைக் கடல், அன்பின் உருவமான புனிதர். அவருக்கும் அவருடன் வந்திருந்த அனைவருக்கும் பல்வேறு இனிய உணவு வகைகளை படைத்து கௌரவித்தார் அந்த நாக மன்னன்.

CLICK HERE TO VIEW ENGLISH VERSION

அதன் பின் கருணாமூர்த்தி அனைவருக்கும் போதனைகள் செய்த பின்னர், சுமனகூடா (*Sumanakuta*) என்ற மலை அடிவாரத்தை நோக்கி தம் பரிவாரங்களுடன் நடந்து சென்று அங்கு இளைப்பாரினர். அதன் பின் கிழக்குப் பகுதியில் பாடிகோலா (*Baticola*) மாவட்டத்தில் இருந்து சுமார் 30 மைல் தொலைவில் இருந்த திகவாபி (*Dighavapi*) என்ற இடத்தை சென்றடைந்தார். அங்கு தற்பொழுதுள்ள புனித இடத்தில் அமர்ந்து தியானம் செய்து அந்த இடத்தைப் புனிதமாக்கினார். அதை சுற்றி உள்ள பகுதிகளில் எவை சிறந்தவை, எவை சிறப்பற்றவை என ஆய்வு செய்த பின் அனுராதபுரத்தின் தெற்குப் பகுதியில் இருந்த மஹாமேகம் என்ற பகுதிக்குச் சென்று தன்னுடன் வந்திருந்த புத்த பிட்சுக்களுடன் (*bhikkhus*)) அங்கு பல காலம் தங்கி இருந்தவாறு தியானம் செய்து வந்தார்.

வெகு காலத்துக்குப் பின்னர்தான் அந்த இடத்தில் புனித போதி மரமும், துாபராமா என்ற (*Thuparama*) ஸ்துாபியும் எழுந்தன. பல நாட்கள் தம்முடைய சீடர்களுடன் அங்கு தியானத்தில் அமர்ந்து இருந்த புனிதர் அங்கிருந்து கிளம்பி அனுராதபுரத்தின் மற்றொரு பகுதியில் இருந்த சிலாசிடியா (*Silacetiya*) என்ற இடத்திற்கு சென்று அங்கு வசித்து வந்த மக்களுக்கு மனப்பூர்வமான அறிவுறைகளை வழங்கிய பின், பல்வேறு இடங்களுக்கும் விஜயம் செய்த பின்னர் மீண்டும் ஜேத்வனாவிற்குத் திரும்பினார்.

பெரும் அறிவாற்றலும், நினைத்தும் பார்க்க இயலாத கருணையும் கொண்ட அந்த ஞானி ஸ்ரீலங்காவிற்கு மூன்று

தமிழில் சாந்திப்பிரியா
ஆங்கிலத்தில் ஜார்ஜ் டர்னர் மற்றும் வில்லியம் கீஜர்
பின்னர் மாற்றி எழுதியது மேபில் ஹேனஸ் போடே

முறை பயணம் செய்து அங்கிருந்த அசுரர்களுக்கும், நாகர்களுக்கும் போதனைகள் செய்த பின், அந்த ஸ்ரீலங்கா தீபகற்பத்தை தன்னுடைய கொள்கைகளை ஏற்றுக் கொண்டு புத்த மதத்தில் இணைந்தவர்கள் சென்று வணங்கும் புனித பூமியாக மாற்றினார். இப்படியாக அவருடைய கல்யாணி (*Kelaniya*) விஜயம் நிறைவு பெற்றது.

புனிதரின் பக்தி மார்கத்தில் இணைந்த, புத்த பக்தர்களின் மனதில் பேரானந்தம் பொங்கிட வழி வகுத்த, கருணா மூர்த்தியின் முதல் பாகமான “ தாதகாடாவின் விஜயம் ” இப்படியாக நிறைவுற்றது.

CLICK HERE TO VIEW ENGLISH VERSION

02: மஹாசம்மதா சந்ததியினர்

மஹாசம்மதாவின் இனத்தை சார்ந்தவர் புனித முனிவர். முன்னொரு காலத்தில் மஹாசமன்தா (*Mahasammata*) என்ற மன்னன் வாழ்ந்து வந்தார். அவரைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்தவர்கள் ரோஜா - வரோஜா *(Roja and Vararoja)* , கல்யாணா-வரகல்யாணா (*Kalyanakas*), உபாஸதா-மண்டோசா (*Uposatha and Mandhata*), கரகா-உபகரகா (*Caraka and Upacara*), சேடியா-முகாலா (*Cetiya and Mucala*), மகாமுகாலா (*Mahamucala*), முகாலிண்டா- சாஹரா (*Mucalinda and Sagara*), சாஹரதேவா (*Sagaradeva*), பரதா-அங்கீரஸா (*Bharata and Angirasa*), ருசி-சுருசி (*Ruci and also Suruci,*), படாபா-மஹாபடாபா (*Patapa and Mahapatapa*) , இரு பனடர்கள் (*Panadas*), சுதாசனா-நேரூ (*Sudassana and Neru*), பனடா-மஹாபனடா (*Panada and Mahapanada*), படபா-மஹாபடபா *(Patapa and Mahapatapa)* , சுடாஸனா-மஹாசுடாசனா *(Sudassana and Mahasudassan)*, மற்றும் நிரூ-மஹாநிரூ (*Neru and Mahaneru*) போன்ற இருவரிருவர், மற்றும் அகிமா (*Accima*). போன்றவர்கள். அதன் பின் அவர்களுடைய இருபத்தி எட்டு மகன்களும், பேரன்களும் குசாவடி, இராஜகஹா மற்றும் மிதிலையை (*Kusavati, Rajagaha, and Mithila*) கணக்கிட முடியாத காலத்திற்கு ஆண்டனர். அவர்களுக்கு பிறகு ஆண்டவர்கள் பகுலா முதல் அரிம்தானா வரையிலான நூறு மன்னர்கள், பின்னர் ஐம்பத்தி ஆறு, அறுபது, எண்பத்தி நான்காயிரம், முப்பத்தி ஆறு, முப்பத்தி இரண்டு, இருபத்தி எட்டு, மீண்டும் இருபத்தி எட்டு, பதினெட்டு, பதினேழு, பதினைந்து, பதினான்கு, ஒன்பது, ஏழு, பன்னிரண்டு, இருபத்தி ஐந்து, மீண்டும் இருபத்தி ஐந்து,

CLICK HERE TO VIEW ENGLISH VERSION

பன்னிரண்டு, மீண்டும் பன்னிரண்டு, ஒன்பது மற்றும் காலராஜநாகா தலைமையில் (*Kalarajanaka*) எட்டாயிரத்து நானூறு, ஒக்காலா வரை (*Okkaka*) பதினாறு என மஹாசம்மதாவின் சந்ததியினர் ஆண்டு வந்தனர். ஓக்கக்காவின் (*Okkaka*) மூத்தப் பிள்ளைதான் ஓக்கமுகா(*Okkamuha*) ஆவார். நிபுனா, கன்டிமா, கன்டமுகா, மற்றும் சிவ சம்ஜயா போன்றவர்களும் (*Nipuna, Candima, Candamukha and Sivisamjaya)* பேரரசனான வசன்தராவும் *(Vessantara)* , ஜாலி (*Jali)*, சிஹவாஹனா மற்றும் சிஹஸ்ஸரா (*Sihavahana and Sihassara)* போன்றவர்களும் அவருடைய மகன்களும், பேரன்களும் ஆவர். சிஹஸ்ஸராவுக்கு எண்பத்தி இரண்டாயிரம் மகன்களும், பேரன்களும் இருந்தனர். ஜெயசேனா (*Jayasena*) என்பவர் அவருடைய கடைசி மகன். அவர்கள் புத்தர் பிறந்த இடமான கபிலவட்டு (*Kapilavatthu*) என்ற இடத்தை ஆண்ட சக்யா பழங்குடி இன வம்ச மன்னர்கள். தற்பொழுது இந்த இடம் நேபாளத்தில் உள்ளது என நம்பப்படுகின்றது. ஜேயசேனாவிற்கு சிஹஹானு (*Sihahanu*) என்ற மகனும், யசோதா (*Yasodhara*) என்ற மகளும் இருந்தனர். தேவதாஹச்சா (*Devadahasakka*) என்ற இடத்தில் ஆட்சியில் இருந்தவர் தேவதாஹா (*Devadaha*) என்பவர். அவருக்கு அஞ்ஞனா (*Anjana*) மற்றும் காச்சனா (*Kaccana*) என்ற இரு வாரிசுகள் இருந்தனர். சிஹஹானுவின் முதல் மனைவியே காச்சனா. யசோதாவோ சக்க அஞ்ஞனாவின் (*Sakka Anjana*) இராணியாவார். அஞ்ஞனாவிற்கு மாயா, பஜாபதி (*Maya and Pajapati*) என்ற இரு மகள்களும் தண்டபாணி மற்றும் சக்கிய சுப்பபுத்தா (*Dandapani and Sakiya Suppabuddha.)* என்ற இரு மகன்களும் இருந்தனர். சிஹஹானுவிற்கு சுத்தோானா, தோடோதனா, சக்கா, சுக்கா மற்றும் அமிதோதனா

(*Suddhodana, Dhotodana, Sakka, Sukka*[1], *and Amitodana*) என்ற ஐந்து மகன்களும், அமிதா, பமிதா (*Amita and Pamita*) என்ற இரு மகள்களும் இருந்தனர்.

அவர்களைத் தொடர்ந்து ஆண்ட சந்ததியினரிர் சிட்டி (*Sitthi)* என்பவர் முடிய அட்டிபுராவை (*Aritthapura*) ஆண்ட பதினெட்டு மன்னர்கள், பிரும்மதேவா (*Brahmadeva.)* என்பவர் முடிய இன்டபட்டாவை (*Indapatta*) ஆண்ட பதினேழு மன்னர்கள், பாலதத்தா (*Baladatta*) என்பவர் முடிய எக்கக்கக்கு (*Ekacakkhu*) என்ற இடத்தை ஆண்ட பதினைந்து மன்னர்கள், பாதத்ததேவா (*Bhaddadeva*) என்பவர் முடிய கோசம்பியை (*Kosambi)* ஆண்ட பதினான்கு மன்னர்கள், நாரதேவா (*Naradeva)* என்பவர் முடிய கன்னக்கோச்சாவை (*Kannagoccha*) ஆண்ட ஒன்பது மன்னர்கள், மஹிந்தா (*Mahinda*) என்பவர் முடிய இரோஜனானகராவை (*Rojananagara*) ஆண்ட ஏழு மன்னர்கள், நாகதேவா (*Nagadeva)* என்பவர் முடிய கம்பாவை (*Campa*) ஆண்ட பன்னிரண்டு மன்னர்கள், புத்ததத்தா (*Buddhadatta*) என்பவர் முடிய மிதிலையை (*Mithila*) ஆண்ட இருபத்தி ஐந்து மன்னர்கள், தீபம்கரா (*Dipamkara*) என்பவர் முடிய இராஜகாஹாவை (*Rajagaha*) ஆண்ட இருபத்தி ஐந்து மன்னர்கள், தாலிஸ்ஸாரா (*Talissara*) என்பவர் முடிய தக்கசீலாவை (*Takkasila*) ஆண்ட பன்னிரண்டு மன்னர்கள், புரிந்தா (*Purinda)* என்பவர் முடிய குசினாராவை (*Kusinara*) ஆண்ட பன்னிரண்டு மன்னர்கள், சஹாரதேவா (*Sagaradeva*) என்பவர் முடிய மாலித்தியாவை (*Malitthiya*) ஆண்ட ஒன்பது மன்னர்கள் என ஒரு நீண்ட பட்டியலே உண்டு.

சாகரதேவாவின் மகன் மக்காதேவா. மிதிலையை ஆண்ட அவருடைய பரம்பரையினர் மொத்தம் 84000 பேர்கள்.

CLICK HERE TO VIEW ENGLISH VERSION

அவர்களில் கடைசி மன்னன் கலராஜனாகாவின் தந்தை நிமியா என்பவர். பாரணாசியை ஆண்ட இளவரசர்கள் சிலரில் சாமம்குரா , அசோகா என்பவர் இருந்தனர். அவரைத் தொடர்ந்து 84000 இளவரசர்கள் பாரணாசியை ஆண்டனர். அவர்களில் கடைசியானவர் விஜயா. விஜயாவைத் தொடர்ந்து ஆண்டவர்கள் விஜிதசேனா, தம்மசேனா, நாகசேனா, சமதா, திகம்பஸி, ரேனு, குசா, மஹாகுசா, நவரதா, தசரதா, சிட்டதாஸி, அத்ததாஸி, சுஜாதா, ஒக்கக்கா போன்றவர்கள்.

சக்கா சப்புத்தாவின் மனைவி அமிதாவிற்கு பத்தகாக்கன்னா தேவதத்தா என்ற இரண்டு புதல்வர்கள இருந்தனர். அவர்களில் ஒருவர்தான் நம்முடைய புனித தெய்வமான புத்தர். சுத்தோதானாற்கு மாயா, பஜாபதி எனற இரு மனைவிகள் உண்டு.

அப்படிப்பட்ட மஹாசமன்தாவின் சந்ததியில் வந்தவரே மனிதப் பிறவியில் பிறவி எடுத்த, தேவர்களுக்கெல்லாம் தேவரான நம்முடைய புனிதப் புதல்வர் ஆவர். போதிசத்தா எனும் சித்தத்தாவின் மனைவி பத்தகாக்கன்னா என்பவர். அவர்களின் புதல்வர் ரஹுலா என்பவர்.

பிம்பிசாரா(*Bimbisara*) என்பவரும் சித்தத்தாவும் (*Siddhattha*) நண்பர்கள். அவர்களைப் போலவே அவர்களுடைய தந்தையினரும் ஒருவருக்கொருவர் நண்பர்களாக இருந்தவர்கள். பிம்பிசாராவை விட போதிசத்தா (*Bodhisatta*) ஐந்து வயது மூத்தவர். அவருக்கு இருபத்தி ஒன்பது வயதான பொழுது வீட்டை விட்டு வெளியேறினார். அவர் ஆறு வருடங்கள் கடுமையாக தன்னை வருத்திக் கொண்டு ஞானம் அடைந்ததும் தமது முப்பத்தி ஐந்தாவது வயதில் பிம்பிசாராவைக் காண

வந்தார். பிம்பிசாராவுக்கு முடி சூட்டப்பட்ட பொழுது அவருடைய வயது பதினைந்து. பதினாறு வருடங்கள் அவர் தம் கொள்கைகளைக் கடை பிடித்து ஆட்சி செய்தார். அதற்குப் பின்னரே அவர் புத்தரை சந்தித்தார். அவருடைய ஆட்சி 250 வருடங்கள் நடந்தாலும் அதில் தாதகாடாவின் வழியில் 37 வருடங்களே ஆட்சி செய்தார்.

பீம்பிசாராவின் முட்டாள் மகனும், கொலைகாரனுமான அஜடசட்டு (*Ajatasattu*) என்பவர் அவருடைய தந்தையைக் கொலை செய்து விட்டு 24 வருடங்கள் ஆட்சி செய்தார். இந்த வாழ்வு நிலையானது அல்ல, நிச்சயம் அழியக் கூடியது என்பதை நன்கு உணர்ந்திருந்த தாடகாதா அவருடைய வாழ்வு முடியும் முன் புகழின் உச்சிக்கே சென்று இருந்தார். இப்படி நிச்சயம் அற்ற வாழ்க்கை நமக்கும் உண்டு என்ற அச்சம் இன்றி வாழாவிடில் துன்பமே மிஞ்சும்.

இப்படியாக புனிதரின் பக்தி மார்கத்தில் இணைந்த புத்த பக்தர்களின் மனதில் பேரானந்தம் பொங்கிட வழி வகுத்த இரண்டாம் பாகமான ‘மஹாசம்மதாவின் சந்ததியினர்’ முடிவுற்றது.

03: முதலாம் ஆலோசனை சபை

முதல் தர்மசங்கயானம்

தம்முடைய கடமைகள் அனைத்தையும் முறையாகச் செய்து முடித்த மகான் 84 வருடங்கள் வாழ்ந்திருந்தார். குசினாரா (*Kusinara*) என்ற இடத்தில் இரண்டு சலா என்ற மரங்களுக்கு (*sala-trees*) இடையே அமர்ந்து இருந்த அவருக்கு மனிதப் பிறவியின் இரு கண்களைத் தவிற அனைத்தையும் பார்க்க முடிந்த தெய்வீகக் கண், ஞானக் கண் மற்றும் சத்தியத்தின் ஒரு உருவான புத்தக் கண் என மொத்தம் ஐந்து கண்கள் இருந்தன. விசாக (*Vesakha*) மாத பௌர்ணமியில் அந்த ஆன்மீக ஒளி மறைந்தது.

எண்ணிலடங்கா 700,000 பிட்சுக்கள் நிறைந்திருந்த அந்த இடத்தில் கட்டியா, பிராமணர், வேசா, சுத்தா போன்ற (*khattiyas and brahmans, vessas and suddas)* அனைத்து பிரிவினரும் கூடி இருந்தனர். தேரா மஹாகாசப்பா (*Mahakassapa*) என்பவர் அப்பொழுது சம்ஹத்தேரா என்ற (*samghatthera*) தலைமையாளராக இருந்தார்.

அவர்தான் பின்னர் அணைந்து போன அந்த ஜோதிக்கு *(புத்தபிரான்)* இறுதிக் கடன்களையும் அவருடைய சின்னங்களுக்கு புனித சடங்குகளையும் ஏழு நாட்கள் செய்வித்தார். "தன்னுடைய ஆசான் தமக்கு உபதேசித்த பத்து போதனைகளும், புனித அங்கியை தனக்கு கொடுத்து விட்டு சென்றதின் காரணம் தனக்குப் பிறகு அவருடைய இடத்தை தான் எடுத்துக் கொண்டு சமய போதனைகளை உலகெங்கும் பரப்ப வேண்டும். மேலும் அவர் போதித்து வந்த

தம்மா எனும் (*dhamma*) கட்டளைகளை தாம் தொகுக்க வேண்டும். அவருடைய போதனைகளில் ஒன்பது போதனைகளை திறமையுடன் கற்று அறிந்துள்ள நானூற்று தொன்னூற்று ஒன்பது *(499)* புத்த பிட்சுக்களை அவர் அதற்காகவே நியமனம் செய்து உள்ளார்.

அனைத்து போதனையையும் நன்கு கற்று அறிந்தவர்கள் ஒன்று கூடி விவாதித்து அவருடைய போதனைகள் அனைத்தையும் ஒன்றிணைக்க வேண்டும். பிட்சுக்கள் அவரிடம் பலமுறை கேட்டுக் கொண்டும், தன்னுடைய உதவி இன்றி அவர்களால் அதை செய்து முடியாது என்பதை புத்தர் உணர்ந்ததினால், அவர் பெரும் நம்பிக்கை வைத்துள்ள தேராவாகிய தன்னையும் சேர்த்து ஐநூறு பிட்சுக்களை *(500)* நியமித்து இருக்கின்றார். அப்படி தான் இல்லை எனில் அவர்களால் அதை திறமையுடன் நிறைவேற்றி முடிக்க இயலாது என புத்தர் எண்ணி இருக்கின்றார்" என தேரா மஹாகாசப்பா தன்னுடைய மனதில் எண்ணினார்.

இதற்கிடையில் பிட்சுக்கள் அனைவரும் ஒன்றிணைந்து சமாதி அடைந்து விட்டவருக்கு தொடர்ந்து ஏழு நாட்கள் இறுதிக் கடன்களை செய்தபடியும், ஏழு நாட்கள் அவருடைய புனிதச் சின்னங்களை பூஜித்தும், புனிதப் படுத்தும் பணியிலும் ஈடுபட்டனர். மழைக் காலத்தில் இராஜகாஹாவுக்கு (*Rajagaha*) சென்று அங்கு இருந்தவாறு தம்மாவை தொகுக்க வேண்டும், அந்த நேரத்தில் தம்மைத் தவிற வேறு எந்த பிட்சுவும் அங்கு இருக்கக் கூடாது எனவும் அவர்கள் தீர்மானித்தனர். அதன்படி அசல்கா (*Asalha*) மாதத்தின் பௌர்ணமியில் அனைத்து கஷ்டங்களையும் தாங்கிக் கொண்டு, மருந்து, உடை, தங்க சிறு இடம் மற்றும் பிட்சை எடுத்து உண்ண

சிறந்த இடம் என அனைத்தும் தமக்கு கிடைக்கக் கூடிய இடமாக இருந்த இராஜகாஹாவுக்கு புறப்பட்டுச் சென்றனர்.

அவர்கள் கிளம்பிச் சென்றதும் மஹாகாசப்பா கடைசியாக கிளம்பிச் சென்றார். அந்த நாட்டில் இருந்த மன்னன் அஜதசத்துவிற்குத் (*Ajatasattu*) தாம் அங்கு வந்ததின் காரணத்தை தெரிவித்தப் பின், மழை காலத்தின் முதல் பகுதியில் தங்க முடிவு செய்திருந்த இடங்களை சுற்றிப் பார்த்து பழுதடைந்திருந்த இடங்களை சரி செய்து, இடத்தை சுத்தமும் செய்யத் துவங்கினர். தங்கும் இடம் தயார் ஆனதும் அரசனிடம் சென்று தாம் முதலாம் ஆலோசனை சபையைக் கூட்ட இருப்பதாக அறிவித்தனர். அதற்காக தன்னிடம் இருந்து எதை எதிர் பார்க்கின்றனர் என மன்னன் கேட்ட பொழுது, அந்த சபையை நடத்த ஒரு இடம் வேண்டும் என அவர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

எந்த இடத்தில் அதற்கேற்ற இடம் அமைத்து தர வேண்டும் எனக் கேட்ட மன்னனிடம், அவர்கள் ஒரு இடத்தைக் காட்ட, அவர்கள் காட்டிய இடமான விபார மலைக்கு (*Vebhara Rock*) நுழை வாயிலாக இருந்த சட்டபிரானி குரொட்டோ (*Sattapanni grotto*) வாசலில் தேவர்கள் கூடும் இடம் போன்று தோற்றம் தந்த வகையில் இருக்குமாறு ஒரு பெரிய கூடத்தை வெகு விரைவாக அமைத்துக் கொடுத்தார். அதன் உள்ளே பிட்சுக்கள் அனைவரும் அமருவதற்கு வசதியாக மிக விலை உயர்ந்த ஆசனங்களை வைத்தும், தெற்கு பகுதியில் தேரா அனந்தாவுக்கு (*thera*) வடக்கு நோக்கி அமரும் வகையில் ஆசனமும், கூடத்தின் நடுவில் உயரமான ஒரு அற்புத பீடத்தை போதனையாளரான கருணா பிரான் புத்தபிரானுக்கும் அமைத்தார். அதை கட்டி முடித்தப் பின்

சபை *(கூடம்)* தயாராகி விட்டதை அறிவித்த கையோடு இனி அதை அவர்கள் உபயோகித்துக் கொள்ளலாம் எனக் கூறினார்.

மழை காலத்தின் இரண்டாம் பகுதியில் இரண்டாம் நாள் அனைத்து பிட்சுக்களும் அவரவர் தகுதிக்கேற்ப ஒதுக்கப்பட்டிருந்த ஆசனங்களில் சென்று அமர்ந்தனர். அந்த நேரத்தில் தனக்கு ஒதுக்கப்பட்டிருந்த ஆசனத்தில் தேரா அனந்தா வந்து அமரவில்லை என்றாலும், அவர் வானம் மூலமோ, பூமியை பிளந்து கொண்டோ வந்து அமருவார் என்ற நம்பிக்கையில் அது காலியாக வைக்கப்பட்டு இருந்தது. அதற்கிடையில் தேரா உபாலி (*Upali*) என்பவரை சபையை நடத்தி வைக்க தற்காலிக தலைவராக அழைத்தனர். அவரிடம் புகழ் பெற்ற தேரா மஹாகாசப்பா புனிதரின் போதனைகளைப் பற்றிய சந்தேகங்களுக்கு விளக்கம் கேட்பது போலவும், உபாலி அவற்றுக்கு விளக்கம் அளிக்கும் வகையிலும் சபையின் நிகழ்ச்சி நடைபெற்றது.

கேட்கப்பட்ட அனைத்து சந்தேகங்களுக்கும் விவரமான பதிலை அவர் கூறத் துவங்க, அவற்றை படித்தறிந்திருந்த மற்ற பிட்சுக்களும் சந்தேகங்களுக்குக் கொடுக்கப்பட்ட பதிலை ஏற்றுக் கொண்டபடி அமர்ந்து இருந்தனர்.

புத்தரின் அனைத்து போதனைகளையும் நன்கு கற்றறிந்திருந்த தேரா உபாலி கேட்கப்பட்ட அனைத்து சந்தேகங்களுக்கும் விவரமான விளக்கங்களைக் கூற, அதைத் தொடர்ந்து அந்த போதனைகளை ஏற்கனவே கற்று அறிந்து இருந்த பல பிட்சுக்கள் அதை ஆமோதித்துக் கொண்டு இருந்தனர். இந்த உலகை துன்பப் பிடியில் இருந்து காப்பாற்ற

வேண்டும் என்ற ஒரே சங்கல்பத்துடன் சுமார் ஏழு மாத காலம் தம்மாவின் அனைத்துப் பகுதிகளையும் அவர்கள் அனைவரும் அமர்ந்திருந்து விரிவாக விவாதித்து, தர்கம் செய்து தம்மாவின் அம்சங்களை தொகுத்து முடித்தனர்.

இருளை விலக்கி வெளிச்சத்தை அடைந்தது போன்ற ஞான ஒளி பெற்ற அந்த தேராக்கள் உலகில் ஞான வெளிச்சம் இன்றி இருளில் சுழன்று கொண்டிருந்த மற்றவர்களின் வாழ்விலும் வெளிச்சத்தை ஏற்படுத்தி ஆனந்த ஒளியை அடைந்திட வழி செய்ய முடியுமா என்பதே கேள்வியாக நின்றது.

இப்படியாக புனிதரின் பக்தி மார்கத்தில் இணைந்த புத்த பக்தர்களின் மனதில் பேரானந்தம் பொங்கிட வழி வகுத்த மூன்றாம் பாகமான 'முதலாம் ஆலோசனை சபை' முடிவுற்றது.

04: இரண்டாம் ஆலோசனை சபை

இரண்டாம் தர்மசங்கயானம்

அஜதசட்டுவின் (*Ajatasattu*) மகன் உதயபத்தகா (*Udayabhaddaka*) என்பவர் தன்னுடைய தந்தையை கொலை செய்து விட்டு பதவியை கைப்பற்றி பதினாறு வருடங்கள் ஆட்சி செய்தார். அடுத்து உதயபத்தகாவின் மகன் அனுருத்தகா (*Anuruddhaka*) என்பவரும் தன்னுடைய தந்தையைக் கொன்று விட்டு ஆட்சியில் அமர்ந்தார். அனுருத்தகாவின் மகன் முன்டாவும் (*Munda*) அது போலவே தன்னுடைய தந்தையைக் கொன்று விட்டு ஆட்சியைக் கைப்பற்றினார். இப்படியாக எட்டு வருடங்கள் அந்த குடும்பத்தில் இருந்த கொடுமைக்கார மகன்கள் அவரவர் தந்தைகளை கொலை செய்து விட்டு ஆட்சியில் அமர்ந்தனர்.

அடுத்து முன்லா (*Munla*) என்பவர் தன் தந்தை நாகடசாகாவை (*Nagadasaka*) கொன்று விட்டு இருபத்தி நான்கு வருடங்கள் ஆட்சி செய்தார். அதைக் கண்டு வெகுண்டெழுந்த மக்கள் இந்த மன்னர்களுடைய வம்சம் ஒரு கொலைகாரக் குடும்பம் மட்டும் அல்ல, அவர்கள் தேசத் துரோகிகள் எனவும் முடிவு செய்து நாகடசாகாவை நாடு கடத்தி விட்டு, சுசுனகா (*Susunaga*) என்பவரை ஆட்சியில் ஏற்றினர். அந்த மன்னனும் பதினெட்டு ஆண்டுகள் நேர்மையாக ஆட்சி செய்தார். அவரைத் தொடர்ந்து அவனுடைய மகனான கலசோகா (*Kalasoka*) என்பவரும் இருபத்தி எட்டு ஆண்டுகள் ஆட்சி செய்தார். அவருடைய பத்தாவது ஆண்டு ஆட்சியில் சம்புத்தரின் நூற்றாண்டு கழிந்தது.

CLICK HERE TO VIEW ENGLISH VERSION

அப்பொழுது பீகாரில் வைசாலியில் இருந்த வாஜ்ஜி (*Vajji*) என்ற இனத்தவர் பத்து கட்டளைகளுக்கு எதிரான - உப்புப் போடாத பண்டங்களை, விலங்குகளின் கொம்புகளினால் செய்யப்பட்ட பாத்திரங்களில் போட்டு, அதில் உப்பு போட்டு பதப்படுத்துவது, அனுமதிக்கப்பட்ட நேரம் தாண்டிய பின்னும் இரண்டு விரல் அகலத்துக்கு சூரிய ஒளியின் ஒளியின் நிழல் விழும் வரை மதிய உணவை உண்பது, ஒரு இடத்தில் உணவு அருந்தி விட்டு அடுத்த கிராமத்திற்கு சென்ற பின் அங்கும் உணவருந்த அழைத்தால் மறுக்காமல் சாப்பிடுவது, உள்ளூர் புத்த பிட்சுக்களின் அழைப்பை ஏற்று விருந்து உண்பது, புத்த பிட்சுக்களின் முன் அனுமதி இன்றி வேலைகளை செய்த பின் அனுமதி பெற்றுக் கொள்வது, தங்களுடைய குருமார்கள் செய்த வேலைகளை முன் உதாரணமாகக் கொண்டு சில காரியங்களை தாமே செய்வது, உணவு அருந்திய பின் அதற்கும் மேலும் கடையாத பாலை அருந்துவது, பனை மரத்துக் கள் அருந்துவது, வரையுறுக்கப்பட்ட அளவில் இல்லாத ஆசனங்களில் அமருவது, மற்றும் வெள்ளி, தங்கம் போன்றவற்றை தானமாகப் பெற்றுக் கொள்வது - என அவர்கள் கடைபிடித்து வந்த கொள்கைகளை கொஞ்சமும் வெட்கம் இன்றி நியாயப்படுத்திக் கொண்டு இருந்தனர்.

அந்த செய்தி வாஜ்ஜி நகரத்திற்கு வருகை புரிந்திருந்த தேரா யாசாவிற்குக் (*thera Yasa*) கிடைத்தது. ஒருவரை பார்த்த மட்டிலேயே அவரைப் பற்றி உணர்ந்து கொள்பவர், அனைத்து விஷயத்தையும் துல்லியமாக அறிந்து கொள்பவர், எங்கு என்ன நடக்கின்றது என்பதை உணர முடிந்தவர், அசாபாசத்தைத் துறந்தவர் - என நான்கு சிறப்பான பெருமைகளை அவர் பெற்றிருந்தார். அவர் போலித்தனமான

புத்த பிட்சுக்கள் கூடி இருந்த இடத்திற்குச் சென்றார். அவர் சென்றிருந்த பொழுது அவர்கள் அங்கு ஒரு பெரிய தண்ணீர் நிறப்பும் பாத்திரம் ஒன்றை வைத்து அங்கு வந்து கொண்டு இருந்த உள்ளூர்வாசிகளிடம் அவரவர் மனதிற்கேற்ப எத்தனை பாஹாபாணாவை (*அந்த காலத்தில் புழக்கத்தில் இருந்த வெள்ளி நாணயத்தின் பெயர். அதன் அளவைப் பொறுத்து அதன் மதிப்பு கணக்கிடப்பட்டு வந்தது*) வேண்டுமானாலும் அங்குள்ள சகோதரர்களின் உபயோகத்திற்கு (*புத்த பிட்சுக்கள்*) போடலாம் என அறிவித்திருந்தனர். அதைக் கண்ட தேரா அப்படிப் பணம் பெறுவது பாபச் செயல் என அறிவுறைக் கூறி பணம் போட வந்தவர்களைத் தடுக்கத் துவங்க, மாற்று கருத்து *கொண்ட* பிட்சுக்கள் அவருக்கு பாடிசாரணீயகாமினா (*Patisaraniyakamina*) என்ற நூலில் கூறப்பட்டு உள்ளதைப் போன்ற தண்டனை தருவோம் என மிரட்டினர். அவர்களுடைய எதிர்பை சற்றும் பொருட்படுத்தாமல் தன்னுடன் இன்னொருவரையும் அழைத்துக் கொண்டு நகருக்குள் சென்று தாம் கூறுவதே தர்ம வழி என்று எடுத்துரைத்து மக்களிடம் உண்மை நிலையை நியாயப்படுத்தத் துவங்கினார்.

அதைக் கண்டு கோபமுற்ற மாற்று கருத்து கொண்ட பிட்சுக்கள் அவர் வீட்டை சுற்றி முற்றுகை இட்டு அவரை அங்கிருந்துத் அடித்துத் துரத்த முயன்ற பொழுது அவர் தாம் பெற்றிருந்த சித்தியினால் ஆகாயத்தில் பறந்து கோசம்பி நாட்டை சென்றடைந்தார். அங்கு பாவா (*Pava*) மற்றும் அவன்தீ (*Avanti - தற்பொழுதைய உஜ்ஜயினி தலம்*) என்ற இடங்களில் இருந்த புத்த பிட்சுக்களிடம் தவறான கொள்ளையை கடைபிடித்து வரும் பிட்சுக்களின் நடவடிக்கைகளைப் பற்றிய செய்தியை தெரிவிக்க அதை முறியடிக்க அவர்கள் உடனே தம்முடைய நம்பிக்கையான

பிக்குக்களை அங்கு அனுப்பினர். அதன் பின் அந்த தேரா அஹோகங்கா (*Ahoganga*) என்ற மலைப் பகுதிக்கு தானே சென்று சம்புதா சானவாசி (*Sambhuta Sanavasi*) என்ற தேராவிடமும் நடப்பு நிலைகளைப் பற்றிய செய்தியைக் கூறினார்.

இதற்கிடையே ஆசாபாசங்களை விட்டொழித்து பாவாவில் இருந்த அறுபது பிட்சுக்களும், அவன்தியில் இருந்த எண்பது பிட்சுக்களும் அவரைக் காண அஹோகங்கா மலைப் பகுதிக்குச் சென்றனர். அவன்தி மற்றும் பாவாவில் இருந்து வந்திருந்த பிட்சுக்களையும் உள்ளூரில் இருந்த பிட்சுக்களையும் சேர்த்து சுமார் தொண்ணூராயிரம் *(90,000)* பிட்சுக்களின் கூட்டம் அங்கிருந்தது. அவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து இந்தியாவின் மேற்குப் பகுதியில் தக்கசீலாவின் அருகில் சொரய்யா (*Soreyya*) என்ற இடத்தில் இருந்த ரேவாதா (*Revata*) என்ற தேராவிடம் சென்றனர். அந்த தேரா மிகவும் புத்தி கூர்மையானவர், வயதில் மூத்தவர். அவர்கள் கூறியதைக் கேட்டவர் சற்றும் தாமதிக்காமல் அவர்களுடன் புறப்பட்டு வேசாலி *(Vesali)* வழியாக எங்கும் நிற்காமல் விரைவாக சஹஜாடி (*Sahajati*) என்ற இடத்தை சென்றடைந்தார்.

இதற்கு இடையில் அங்கிருந்த தேரா சல்ஹா (*thera Salha*) என்பவர் அனைத்து விஷயங்களையும் கேட்டறிந்தப் பின் பாவாவில் இருந்த பிட்குக்களின் போதனா முறையே சிறந்தது என்ற முடிவுக்கு வந்தார். பிரும்மா என்ற கடவுளும் அவர் முன் தோன்றி “உன் கருத்தில் நிலையாக நிற்க வேண்டும்” என்று அறிவுறுத்த அவரும் தாம் தம்முடைய கொள்கையில் இருந்து மாறு படமாட்டேன் என உறுதி கூறினார்.

இதற்கிடையில் பல்வேறு பரிசுப் பொருட்களுடன் வந்திருந்த மாற்று கருத்துடைய பிட்குக்கள் தந்த பரிசுக்களை தேரா ரேவா ஏற்க மறுத்ததுடன் அப்படி கொடுக்கப்படும் பொருட்களை துாயவர்கள் ஏற்கக் கூடாது எனவும் கூறினார். ஆகவே கோபமுற்ற அந்த பிட்குக்கள் அங்கிருந்து விசாலீ வழியாக தற்பொழுது பீகாரில் உள்ள பாடலிபுரம் என்ற புப்பஹபுராவிற்கு (*Pupphapura*) சென்று அங்கிருந்த மன்னன் கலசோகாவிடம் (*Kalasoka*) 'வாஜ்ஜியில் (*Vajji*) எங்களுடைய புனிதர் நினைவிடமான மஹாவானவிகாரில் (*Mahavana-Vihara*) நாங்கள் வசிக்கின்றோம். உங்களுடைய நாட்டில் இருந்து சில பிக்குக்கள் எங்கள் இருப்பிடத்திற்கு வந்து நாங்கள் உங்களுடைய இடத்தை ஆக்கிரமித்துக் கொள்ளப் போகின்றோம் என பயமுறுத்துவதால் , அவர்கள் எங்கள் இருப்பிடத்திற்கு வருவதற்கு நீங்கள்தான் தடை விதிக்க வேண்டும். எங்கள் எதிரில் எந்த தீர்வுக்கும் அவர்கள் இணங்க மாட்டார்கள்' என பொய்களைக் கூறி சற்றும் வெட்கம் இன்றி அவருடைய தலையீட்டை கோரினர். இப்படியாக மன்னனிடம் தவறான தகவலை தந்து அவரை திசை திருப்பியவர்கள் வேசாலிக்குத் திரும்பிச் சென்றனர். ஆனால் அங்கு சஹஜாடியிலோ தேரா ரேவாவின் தலைமையில் கூடிய பதினோரு லட்சத்து தொண்ணுாராயிரம் (*11,90,000*) புத்த பிக்குக்கள் அந்த விவாதத்திற்கு நல்ல முடிவு கண்டிட வேண்டும் என தீர்மானித்திருந்தனர்.

அதன் பிறகு அந்த அரசன் அந்த விவாதத்துக்கு ஒரு முடிவு காணுமாறு தன்னுடைய மந்திரிகளை அனுப்பினார். ஆனால் வந்தவர்களை வழியில் வந்த தேவர்கள் திசை திருப்பி விட,

வேண்டிய இடத்தை விட்டு விலகி அவர்கள் வேறு எங்கோ சென்று விட்டனர். அன்று இரவு அந்த மன்னனின் கனவில் லோஹகும்பினி (*Lohakumbhi*) எனப்படும் இடத்தில் இருந்த நரகத்தில் தான் தள்ளப்பட்டது போன்ற கனவு வந்தது. அச்சம் அடைந்து கலங்கி எழுந்த அவரை வானில் பறந்து சென்று கொண்டிருந்த, வாழ்வின் அனைத்து சுகங்களையும் துறந்து விட்டு துறவியாக மாறிய அவருடைய சகோதரி நந்தா (*Nanda*) என்பவள் சந்தித்தாள். அவள் கூறினாள் "போலி பிட்குக்கள் கூறியதைக் கேட்டு நீ மாபெரும் தவறை செய்து விட்டாய். உண்மையான பிக்குக்களை அடையாளம் கண்டு கொள். அவர்களுடைய பக்கம் நீ இருந்து கொண்டு அவர்களுடைய நியாயத்தை நிலை நாட்டினால் நீ ஆசிர்வதிக்கப்படுவாய் ". இப்படியாக கூறி விட்டு மீண்டும் மறைந்து போனாள்.

மறுநாள் காலை எழுந்த உடன் அந்த மன்னன் வைசாலிக்கு புறப்பட்டுச் சென்று அங்கு கூடி இருந்த பிக்குக்களை சந்தித்து இரு தரப்பு வாதங்களையும் கேட்டறிந்த பின் நியாயம் எந்த பக்கம் உள்ளது என்பதை தெளிவாக உணர்ந்து கொண்டான். அதன் பின் அவர்களிடம் 'உண்மையான போதனா வழியை உணர்ந்து கொண்டேன். அதை மேலும் பரப்ப என்ன செய்ய வேண்டுமோ அதை செய்யுங்கள். அதற்கு என்னுடைய முழு ஆதரவும், உதவிகளும் அதற்கு உண்டு' என அறிவித்தப் பின் தன்னுடைய தலைநகருக்கு திரும்பிச் சென்றான். அதன் பின் இரு தரப்பினரும் ஒரு இடத்தில் கூடி அனைத்து கருத்துக்களையும் விவாதித்தனர். தேவையற்ற விவாதம் தொடர்ந்து கொண்டு இருக்கையில் அங்கு திடீர் என வந்த தேரா ரேவதா அவர்களுடைய சர்ச்சைகளை

நிறுத்துமாறுக் கூறிய பின், தான் அதற்கு ஒரு நல்ல தீர்ப்பை நடுவர் மூலம் தெரிவிப்பதாகக் கூறினார். அந்த ஏற்பாட்டின்படி அவர் கிழக்குப் பகுதியை சேர்ந்த சுப்பகாமி, சல்ஹா, குஜ்ஜசோபிதா மற்றும் வாசபாகமிகா என்ற நான்கு பிக்குக்களையும் (*Sabbakami, Salha, Khujjasobhita, and Vasabhagamika,),* பாவாவை சேர்ந்த ரேவதா, சனசம்புதா, காகண்டகாவின் புதல்வாரன யாசா மற்றும் சுமனா என்ற (*Revata, Sänasambhüta, Yasa, the son of Kakandaka, and Sumana*) நான்கு பிக்குக்களையும் கொண்ட குழு ஒன்றை அமைத்து அந்த பிரச்சனைக்கு முடிவு காணுமாறு கூறினார். அவர்களை அழைத்துக் கொண்டு அனைத்து ஆசைகளையும் துறந்திருந்த (அசவா) எட்டு தேராக்கள், வாலிகாரமா (*Valikarama*) என்ற பகுதியில், அஜிதா (*Ajitha*) என்பவர் ஏற்பாடு செய்து இருந்த அமைதியான, யாருமற்ற இடத்திற்குச் சென்று அமர்ந்தனர். அங்கு வந்திருந்த அனைத்து பிட்குக்களின் மன நிலையையும் நன்கு உணர்ந்திருந்த மூத்தவரான தேரா ரேவதா, முதலில் சுப்பகாமியிடம் விவாதத்திற்குறிய பத்து கட்டளைகள் பற்றி அடுக்கடுக்காக கேள்விகள் கேட்டார். அவற்றை எல்லாம் கேட்ட தேரா சுப்பகாமி கூறப்பட்ட அனைத்து முறைகளும் தவறான போதனா வழிமுறைகள், அவைகள் ஐதீகத்திற்கு எதிரானவை என தன் தரப்பு வாதத்தை எடுத்துறைத்தார். இப்படியாக ஒன்றின் பின் ஒன்றாக விவாதத்திற்குறிய பத்து கட்டளைகளையும் பற்றிய கேள்விகள் கேட்கப்பட்டு பதில்கள் பெறப்பட்டன. முடிவில் மாறுபட்ட கருத்துடைய பத்தாயிரம் பிட்குக்களால் கடை பிடிக்கப்பட்டு வந்த வழிமுறைகள் தவறானவை என்ற தீர்மானம் ஏற்கப்பட்டு தேரா சுப்பகாமியை தலைவராக நியமித்தனர். அவர் நூற்றி இருபது ஆண்டுகள் தலைமை பதவியில் இருந்தார். தேரா

அனந்தாவின் சீடர்களாக சுப்பகாமி , சல்ஹா (*Salha*), ரேவதா, குஜசோபிதா (*Khujjasobhita*), காகன்டகாவின் மகன் யாசா, சம்புத்த சானவாசிகா (*Sanavasika*) மற்றும் ஆறு தேராக்கள், இருந்தனர். ஆனால் தேரா அனுருத்தாவின் (*Anuruddha*) சீடர்களாக வாசபகாமிகா (*Vasabhagamika*) மற்றும் சுமனா (*Sumana*) என்ற இருவரும் இருந்தனர். இப்படியாக தாடகதாவின் வழிமுறையை முறையாக ஏற்று நடந்து வந்த அந்த எட்டு தேராக்களுடன் நூற்றிப் பன்னிரண்டாயிரம் *(112,000)* புத்த பிட்குக்கள் மீண்டும் ஒன்றிணைந்து தேரா ரேவதாவை தலைவராக ஏற்றுக் கொண்டனர். அதைத் தொடர்ந்து புத்தருடைய போதனா முறைகள் காலம் காலமாக நன்கு வளர்ந்திட அதாவது – அனைத்தையும் தெளிவாக அறிந்து கொள்ளுதல், புத்தர் போதித்த அனைத்தையும் முறைபடி புரிந்து கொள்ளுதல், பாஷ்யங்களைப் பற்றி அதி நுட்ப கருத்துரை வழங்குவோர், மற்றும் விவாதங்களை எதிர் கொண்டு வாதம் செய்வோர் - , பாடிசம்பிதா (*patisambhida*) என்ற நான்கு வழிகளில் வல்லுனர்களான எழுநூர்று பிட்குக்கள் *(700)* தம்மாவான சம்கரசாடகானத்தை (*Samkhatasarakattam*) தொகுத்து வழங்கிடுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

காலசோக (*Käläsoka*) மன்னனின் ஆட்சியில் இருந்த வாலிகராமாவில் (*Valikarama*), தேரா ரேவதாவின் தலைமையில் கூடியவர்கள் எட்டு மாதத்தில் அவற்றை விவாதித்து ஏற்கனவே ஏற்கப்பட்டு இருந்த தம்மா என்ற சம்கரசாடகானத்தை முறைப்படி மீண்டும் உறுதி செய்தனர். நமக்கு நற்போதனை செய்த புத்தரும், அவருடைய மூன்று முக்கிய கட்டளைகளான சிற்றின்பம், உலக ஆசைகள் போன்றவற்றை விட்டொழித்து பற்றற்று வாழ்ந்திருத்தலை

CLICK HERE TO VIEW ENGLISH VERSION

குடைபிடித்தபடி இருந்தவாறு உலக நன்மைக்கு பாடுபட்ட அனைத்து பிட்குக்களும் நம் வணக்கத்திற்குறியவர்கள்.

இப்படியாக புத்த பக்தர்களின் மனதில் பேரானந்தம் பொங்கிட வழி வகுத்த நான்காம் பாகமான 'இரண்டாம் ஆலோசனை சபை' முடிவுற்றது.

05: மூன்றாம் ஆலோசனை சபை

தம்ம சங்கயானா

தேரா மஹாகாசப்பாவினால் தொகுக்கப்பட்ட முதல் தம்மா என்ற தொகுப்பு தேராக்களின் போதனை எனப்பட்டது. முதல் நூறு வருடங்கள் அவர்களுடைய போதனைகளே அனைத்து புத்த சமய பாடசாலைப் பயிற்சிகளிலும் முதன்மையாக இருந்தன. ஆனால் மாற்றுக் கருத்துக்களைக் கொண்ட சுமார் பத்தாயிரம் பிக்குக்களால் (*bhikkhus*) ஏற்கப்பட்ட போதனைகள் இரண்டாம் ஆலோசனை சபையில் ஏற்கப்பட்ட போதனைகளுக்கு மாறாக மஹாசம்ஹிகா (*Mahasamghika*) என்ற பெயரில் வெளியாயின. இதில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட பள்ளிகள்தாம் கோகுலிகா (*Gokulika*) மற்றும் ஏக்வயோஹரிகா (*Ekavyoharika*) என்பவை. கோகுலிகாவில் இருந்து பன்னாட்டி (*Pannatti*) மற்றும் பஹுலிகா (*Bahulika*) என்ற பிரிவினர் தோன்ற, அவர்களில் இருந்து செடிகா (*Cetiya*) என்ற பிரிவினர் தோன்றினர். இப்படியாக மஹாசம்ஹிகா பிரிவை சேர்த்து தேரா போதனைகளை ஏற்காத ஆறு பிரிவினர் தோன்றினர். அதில் தேரா குழுவை விட்டு வெளியேறிய மஹிம்சசாகா (*Mahimsasaka*) மற்றும் வாஜிபுட்டக (*Vajjiputtaka*) என்ற பிட்குகளும் அடக்கம். அவர்களில் இருந்து மேலும் தம்முதாரியா (*Dhammuttariya*), பத்ரனாயனிகா (*Bhadrayänika*), சண்டகாரிகா (*Chandagarika*), சம்மிதி (*Sammiti*), மற்றும் வஜ்ஜிபுட்டய (*Vajjiputtiya*) போன்ற பிட்குக்கள் விலகினர். மஹிம்சசாகா பிக்குக்களில் இருந்து சப்பத்தா வழியினரும் (*Sabbattha*) மற்றும் தம்மகுட்டிக்கா

(*Dhammaguttika*) பிட்குக்களும் விலகினர். சம்பட்டா பிரிவில் இருந்து காசப்பீயா (*Kassapiya*) என்ற பிரிவு தோன்ற, அதில் இருந்து சம்கன்டிகா (*Samkantika*) என்ற பிட்குக்களும் அதில் இருந்து சுட்டா (*Sutta*) என்ற பிரிவினரும் தோன்றினர். ஆக இப்படியாகத் தோன்றிய பன்னிரண்டு பிரிவும், தேரா வழியினரின் ஆறு பிரிவுமாக சேர்த்து மொத்தம் பதினெட்டு போதனா வழி முறைகளைக் கொண்ட போதனை சாலைகள் தோன்றின.

இரண்டாம் நூற்றாண்டில் பதினேழு பாடசாலைகளும், மீதி அதற்குப் பின்னரும் தோன்றின. அவைகளில் இலங்காவில் ஜம்புதிபா (*Jambudipa),* தம்மருகி (*Dhammaruci*) மற்றும் சாகலிகா (*Sagaliya*) என்ற மூன்று இடங்களில் இருந்த ஹேமவாடா (*Hemavata*), இராஜகிரியா (*Rajagiriya*). சித்தாத்தகா (*Siddhatthaka*), முதலாம் செலியா பிட்குக்கள் (*first Seliya bhikkhus*), செலியா, (*Seliya*) மற்றும் வாஜிரியா (*Vajiriya*) போன்ற ஆறு பிரிவினரும் தனித்தனியே பிரிந்தனர்.

அகரிய (Acariya) பள்ளிகள் பற்றிய செய்தி இதனுடன் முடிந்தது.

கலசோகாவிற்கு (*Kalasoka*) பத்து பிள்ளைகள் இருந்தனர். அவர்கள் இருபத்தி இரண்டு ஆண்டு காலம் ஆட்சி செய்தனர். அவர்களுக்குப் பிறகு வந்த நந்தா வம்சத்தினர் (*Nanda*) இருபத்தி இரண்டு ஆண்டுகள் ஆண்டனர்.

கனக்கா (*Canakka*) என்ற பிராமணன், மௌரிய (*Moriyas*) வம்சத்தில் வந்த கண்டகுட்டா (*Candagutta*) என்ற அழகிய இளைஞனை ஜம்புதீபாவின் மன்னனாக நியமிக்க, தன்னுடைய

ஆட்சியின் பொழுது இருந்த ஒன்பதாவது தனநன்தா (*Dhanananda*) என்ற மன்னனை பரம எதிரியாக பாவித்து கொலை செய்து விட்டார். அவர் இருபத்தி நான்கு ஆண்டுகள் ஆட்சியில் இருந்தார். அவருடைய புதல்வர் அடுத்த இருபத்தி எட்டு வருடங்கள் ஆட்சி செய்தார். பின்துசாராவிற்கு (*Bindusära*) நூறு பிள்ளைகள் இருந்தனர். அவர்களில் அசோகா (*Asoka*) என்பவர் மாபெரும் வெற்றி வீரர், புத்திசாலி, பராக்கிரமசாலி. தன்னுடைய தற்தையின் பல்வேறு மனைவிகளுக்குப் பிறந்திருந்த தொன்னூற்றி ஒன்பது (99) சகோதரர்களையும் கொன்று விட்டு ஜம்புதீபாவில் ஆட்சிக்கு வந்தவர். அசோகன் ஆட்சி ஏறுகையில் புனிதர் நிபானாவை அடைந்து இருநூற்றி பதினேழு (218) வருட காலம் முடிந்திருந்தது.

தான் பதவி ஏற்ற நான்கு வருடங்களில் அசோகன் பாடலிபுரத்திற்கும் சென்று தன்னை மன்னனாக்கிக் கொண்டார். அவருடைய ஆட்சி மேலே ஆகாயம் முதல் பூமி எத்தனை ஆழம் உள்ளதோ அந்த அளவுக்கு பரந்து விரிந்திருந்தது.

தேவர்கள் (*devas*) தினமும் அனோடட்டா (*Anotatta*) ஏரியில் இருந்து நீர் கொண்டு வந்தனர். அதை அந்த மன்னன் மக்களின் உபயோகத்திற்குப் பயன்படுத்தினார். இமய மலையில் இருந்து தேவர்கள் மாம்பழம், விதவிதமான வண்ணமயமான பூக்கள், உடல் நலம் தரும் பழங்கள் போன்றவற்றைத் கொண்டு வர, அவற்றின் வாசனை அந்த இடத்தையே இரம்மியமாக்கியது. ஐந்து வண்ணமிகு தோற்றம் அழகூட்ட, சட்டான்டா (*Chaddanta*) ஏரியின்

அமிர்தமாய் இனித்த நீரின் மணம் அங்கு வீசிய காற்றுடன் மெல்ல மிதந்து வந்தது.

நாகா (*naga*) மன்னன் தம் நாட்டுப் பொருட்கள், தொடுக்காத மல்லிகைப் பூக்கள், தேவலோகப் பூவான தாமரை மலர், கண் மை, பிற வாசைன திரவியங்கள் போன்றவற்றைக் கொண்டு வந்து தர, சதன்த்தா (*Chaddanta*) ஏரிக் கரையில் இருந்து தொன்னுாறாயிரம் (90,000) வண்டியளவு அரிசியை கிளிகளும் கொண்டு வந்து கொட்ட, அவற்றின் மூலம் விளைந்த தானியங்கள் அரச குடும்பத்து உணவாயின. தேனிக்கள் தொடர்ந்து கூடு கட்டி தேன் கொடுத்தன. கரடிகளும் அதை உடைத்து தேன் அருந்தின. காரவிகா (*Karavika*) பறவைகள் இனிய கானம் எழுப்ப அவை அனைத்தும் மன்னனுக்கு மகிழ்ச்சியைத் தந்தன. இதற்கிடையே அசோகன் முடிசூட்டு விழாவில் தன்னுடன் பிறந்த இளைய சகோதரன் திஸ்ஸாவை (*Tissa*) தனக்கு அடுத்த பதவியில் அமர வைத்து பெருமை படுத்தினார்.

இப்படியாக மன்னன் அசோகனின் முடிசூட்டு விழா இனிதே முடிந்தது.

அசோகருடைய தந்தை அறுபதாயிரம் (60,000) பிராமணர்களுக்கு அவர்களுடைய தேவைகளுக்கேற்ப பல்வேறு உதவிகள் செய்து மூன்று வருட காலம் அவர்களை தன்னுடைய அரவணைப்பில் வைத்து இருந்தார். ஆனால் அவர் கொடுத்த தானத்தில் அவர்கள் திருப்தியுறாமல் பேராசை கொண்டு அலைவதைக் கண்ட அந்த புத்திசாலி மன்னர் இனி அவரவர் தகுதிக்கேற்பவே தானம் தர வேண்டும் என முடிவு செய்தார். பல்வேறு கொள்கைகளைப் பின்பற்றி வந்த அறிஞர் அனைவரையும் ஒரு சேர தன்னுடைய

சபைக்கு வரவழைத்து ஒவ்ஒருவருடைய திறமையையும் தானே சோதித்தப் பின் அவரவர்களுடைய திறமைக்கேற்ப அவர்களுக்கு தானம் கொடுத்து அனுப்பலானார்.

ஒரு நாள் அந்த மன்னன் அரண்மனை ஜன்னல் அருகே நிற்றிருந்தபடி வெளியில் வேடிக்கைப் பார்த்துக் கொண்டு இருந்த பொழுது சாமநீர நிக்ரோதா (*samanera Nigrodha*) என்ற ஒருவர் அமைதியாக சென்று கொண்டு இருப்பதைக் காண அவர் மீது தன்னையறியாமல் அன்பு வெளிப்பட்டது. அந்த இளைஞன் பிந்துசாராவின் (*Bindusära*) மூத்தப் பிள்ளையான இளவரசன் சுமன்னாவின் (*Sumana*) மகன்.

பின்துசாரா உடல் நலமின்றி படுக்கையில் விழுந்த பின் உஜ்ஜயினியை (*Ujjeni*) ஆண்டு வந்த மன்னன் அசோகன் அங்கிருந்துக் கிளம்பி, புப்பபுரா (*Pupphapura*) என்ற பாடலிபுரத்திற்கு வந்தார். அவருடைய தந்தை மரணம் அடைந்ததும் தன்னுடைய உடன் பிறந்த சகோதரனைக் கொன்று விட்டு அனைத்து இராஜ்யத்திற்கும் மன்னனாக தான் முடிசூட்டிக் கொண்டார்.

சுமன்னாவின் மனைவியான அவர் பெயரையே கொண்ட சுமன்னா (*Sumana*) என்பவள் கிழக்கு வாசல் வழியே தப்பி ஓடி கன்டலா (*candälas*) என்ற கிராமத்திற்கு சென்றாள். அங்கு நிக்ரோதா (*Nigrodha*) என்ற மரத்தடியில் தங்கியவளை அந்த மரத்தின் காவல் தெய்வம் பெயர் சொல்லி அழைத்து ஒரு குடிசையை கட்டித் தந்தது. அன்றே அவளுக்கு ஒரு ஆண் பிள்ளை பிறக்க அதற்கு நிக்ரோதா எனப் பெயரிட்டாள். அந்த கிராமத்தின் தலையாரி, அவளைக் கண்டு மனமிறங்கி தன்னுடன் அவளை அழைத்துப் போய்

தன் மனைவியாக்கிக் கொண்டு ஏழு வருடங்கள் அவளுடன் வாழ்ந்து வந்தார். அந்த கட்டத்தில் ஒரு நாள் தேரா மஹாவருணா (*Mahavaruna*) என்பவர் அந்த தாயுடன் இருந்த பிள்ளையைக் கண்டு அவனே தன்னுடைய வாரிசு என முடிவு கட்டிய பின் அவனை தன்னுடன் அழைத்துக் கொண்டு போய் மொட்டையடித்து அவனை ஒரு துறவியாக மாற்றினார். தன்னுடைய தாயாரைக் காண தெற்கு பக்க வாசல் வழியே சென்று கொண்டு இருந்த அவரைத்தான் அந்த மன்னன் பார்த்தான். அவரைக் கண்டவனுக்கு அவருடன் தான் முன்பே பழகியது போன்ற உணர்வு ஏற்பட்டது.

முன்னொரு காலத்தில் மூன்று சகோதரர்கள் தேன் வியாபாரம் செய்து வந்தனர். அவர்களில் ஒருவர் தேனை ஊருக்குள் கொண்டு சென்று விற்பனை செய்து வந்தார். மற்ற இருவரும் அங்கும் இங்கும் அலைந்து தேனை சேகரித்து எடுத்து வந்தனர். இதனிடையில் புத்த துறவி ஒருவருக்கு (*paccekabuddha*) ஏற்பட்ட காயத்திற்கு மருந்து போட சுத்தமான தேன் தேவைப் பட்டது. அவருக்காக மற்றொரு பேஸ்கபுத்தா என்பவர் ஊருக்குள் பிட்சை எடுக்கச் சென்று தன்னுடைய சகோதரருக்கு ஏற்பட்டிருந்த காயத்தை ஆற்ற தேன் கிடைக்குமா என அலைந்து திரிந்தார். அந்த நேரத்தில் தண்ணீர் எடுக்க வந்த ஒரு பெண்மணி எதேற்சையாக அவருடைய தேவையை அறிந்து கொண்ட பின் அவரிடம் தூரத்தில் இருந்த ஒருவரைக் காட்டிக் கூறினாள் 'அதோ அந்த இடத்தில் இருக்கின்றாரே அவரிடம் செல்லுங்கள். அவரிடம் தேன் கடையே உள்ளது' அந்த வியாபாரியும் கிண்ணத்துடன் தன்னிடம் வந்த புத்தமாரிடம் மருந்துக்கென தானமாக சிறிதளவு தேன் கொடுக்க அவர் கொண்டு வந்திருந்த பாத்திரத்தையும் மீறி தேன்

CLICK HERE TO VIEW ENGLISH VERSION

சிந்தியது. 'ஜம்புதீபாவில் இருந்து வந்து தானத்தைத் தர வழி வகுத்துள்ள என்னுடைய சம்ராஜ்யம் ஆகாயத்திலும், புமியிலும் நாலு யோசனை நீளத்திற்கு பரவி நிற்க வேண்டும் என ஆசைப் படுகின்றேன்' என்றார். 'என்னிடம் தேனைப் பெற்றுக் சென்றவர் நான் விரும்பியதை நிறைவேற்றினால் நீங்களும் அந்த அமுதத்தை அருந்தலாம்' எனக் கூறுவதாக அவருடன் வந்திருந்த சகோதரர்களிடமும் கூறினார். அதைக் கேட்ட அவருடைய மூத்த சகோதரர் 'எப்பொழுதுமே மஞ்சள் உடை அணிந்து காட்சி தரும் கண்டலாவாகத்தான் (*candalas*) மஞ்சள் உடையில் வந்திருந்த அவரும் இருக்க வேண்டும்' எனக் கூறினார். அடுத்த சகோதரர் கூறினார் 'புத்தர் வழி வந்தவருடன் (*paccekabuddha*), கடல் வழியே நானும் செல்வேன்' இப்படியாக அவர்கள் பேசிக் கொண்டு இருந்தாலும் அவருடைய ஆசிர்வாதத்தினால் தாம் அடைய இருக்கும் நன்மை பற்றி தெரிந்து கொண்டவர்கள் அந்த வேண்டுகோளுக்கு தம்முடைய பரிபூரண சம்மதத்தை தெரிவித்தனர். அதே நேரத்தில் புத்த துறவியை அந்த வியாபாரியிடம் அழைத்துச் சென்ற பெண்மணி கூறினாள் 'அவர் கூறியது நடந்து விட்டால் மன்னனின் முதல் மனைவியாக இருக்க நான் ஆசைப் படுகின்றேன்'.

அந்த தேன் வியாபாரி வேறு எவரும் அல்ல. அவர் மன்னன் அசோகனே. அந்த பெண்மணி அசம்திமித்தா (*Asamdhimitta*) என்பவள். கண்டலா என்று கூறியவர் கண்டலா என்ற இடத்தில் வசித்து வந்த நிக்ரோதா (*Nigrodha*) என்பவர். கடல் மீதேறி செல்வேன் எனக் கூறியவர் டிஸ்ஸா (*Tissa*) என்பவர். தான் விமோசனம் அடைய வேண்டும் என ஆசைபட்டதற்கு ஏற்ப ஏழு

ஏழு வருடத்தில் துறவியானார். நிக்ரோதாவைக் கண்டவர் அவர் மீது தன்னையறியாமல் அன்பு கொண்டு சற்றும் தாமதிக்காமல் அவரை தம் சபைக்கு வருமாறு அந்த மன்னன் அழைத்தார். அதை ஏற்று மௌனமாக எந்த வித சலனமும் இன்றி சபைக்கு வந்தவரிடம் அந்த மன்னன் கூறினார் ‘உங்கள் தகுதிக்கேற்ற ஆசனம் வைத்துள்ளேன். அதில் வந்து நீங்கள் அமர வேண்டும்.’ வேறு எந்த புத்த பிட்குக்களும் அங்கு இல்லை என்பதை அறிந்து கொண்ட பின் வந்தவர் அந்த ஆசனத்தில் சென்று அமர்ந்தார். பெரு மகிழ்சியுற்ற மன்னன் அசோகன், ஆசனத்தில் வந்து அமர்ந்தவருக்கு பலவிதமான உபசாரங்கள் செய்து, உணவு வகைகள் தந்து உபசரித்தார். அதன் பின்னர் அவர் அந்த மகானிடம் (*samanera*) சய்புத்தரின் போதனைகளைப் பற்றிய விளக்கங்கள் கேட்க, அந்த சாமனீராவும் அவருக்கு அப்பாமதவாகா (*Appamadavagga*) என்ற தத்துவத்தை உபதேசித்தார்.

அந்த போதனைகள் மன்னனின் மனதைத் தொட்டு விட அவர் நிக்ரோதாவிடம் கூறினார் ‘நான் உங்களுக்கு எட்டு விதமான உணவுப் பண்டங்களை படைக்கின்றேன்’ என்றவரிடம் ‘நான் அதை என் குருவிற்கு சமர்பிக்கின்றேன்’ என்றார் அந்த பிட்கு.

முதலில் அளித்த உணவு அனைத்தையும் அவர் தன்னுடைய குருவிற்குக் காணிக்கை ஆக்கி விட, மன்னன் இன்னும் அதே அளவு உணவு தந்தார். அதையும் தன்னுடன் வந்த பிட்குக்களுக்கு அவர் தந்துவிட சளைக்காமல் இன்னும் அதே அளவு உணவு தந்தார் மன்னன். அதையும் ஏற்றுக் கொண்டவர் அடுத்த நாளன்று தன்னுடன் வந்திருந்த

முப்பத்தி இரண்டு பிட்குக்களையும் அழைத்துக் கொண்டு துாய போதனைகளை முறையாக பெற்ற மன்னனின் இருப்பிடம் சென்றார். அங்கு அந்த மன்னன் தன் கையினாலேயே அவர்களுக்கு உணவு பறிமாறிட மனம் மகிழ்ந்த துறவி அவருக்கு ஒருவர் செய்ய வேண்டிய கடமைகளைப் பற்றிய போதனைகளை எடுத்துறைத்தார்.

இப்படியாக சமனீரா நிக்ரோதாவின் விஜயம் முடிவடைந்தது.

இன்னிலையில் அனுதினமும் பெறுகிக் கொண்டே போன பிட்குக்களின் எண்ணிக்கை அறுபதாயிரமாக *(60,000)* உயர்ந்தது. வந்தவர்களில் இருந்த போலி பிட்சுக்களை தவிர்த்து விட்டு அறுபதாயிரம் பிட்குக்களுக்கு தினமும் தானமும் பிட்சையும் தந்தவண்ணம் மன்னன் இருந்தார்.

சுவை மிக்க உணவு வகைகளை அறுபதாயிரம் பிட்குக்களுக்காக விரைவாக தயாரித்து வைக்குமாறும், அந்த நகரையே அலங்கரித்து வைக்குமாறும் தன்னுடைய ஆட்களுக்குக் கட்டளை பிறப்பித்தப் பின் பிட்குக்களிடம் சென்ற மன்னன் அவர்களை தம் அரண்மனைக்கு எழுந்தருளுமாறு வேண்டினான். அங்கு அவர்கள் வந்தப் பின் ‘உங்களுடைய மகானுடைய மகா தத்துவார்த்தமான போதனைகள் (*dhamma*) எந்த விதத்தில் உயர்ந்தவை என்பதை எடுத்துரைக்க வேண்டும்’. அதைக் கேட்ட மோகலிப்புட்டா-திஸ்ஸா (*Moggaliputta Tissa*) என்பவர் ‘மொத்தம் உள்ள எண்பதாயிரம் *(80,000)* போதனைகளின் தத்துவத்தையும் விளக்கமாக விவரிக்கின்றேன்’ என்றார்.

CLICK HERE TO VIEW ENGLISH VERSION

எண்பத்தி நாலாயிரம் *(84,000)* நகரங்களில் தொன்னூற்றி ஆறு கோடி *(96,00,00,000)* பணம் செலவு செய்து ஒவ்ஒரு நகரிலும் விகாரா என்ற பெயரில் புத்த மடங்களை நிறுவுமாறு கட்டளை இட்டப் பின் தானே அசோகரமா என்ற விகாராவை மன்னன் கட்டத் துவங்கினார்.

நிக்ரோதா மற்றும் அவருடன் கூட இருந்த மற்ற இருவருக்கும் ஒவ்ஒருவருக்கும் தலா ஒரு லட்சம் *(1,00,000)* நாணயத்தை அனுதினமும் கொடுத்தது மட்டும் இன்றி ஸ்துபாவில்(*thupa*) இருந்து கிடைத்த காணிக்கைகளை அந்தந்த விகாராக்களில் இருந்த பிட்சுக்களின் தேவைக்காக மன்னன் அளித்தார். அங்கிருந்த மக்களும் அந்த பிட்குக்களின் நான்கு கால தேவைகளையும் பூர்த்தி செய்து வந்தனர். அன்னோத்தட்தா ஏரியில் (*Anotatta-lake*) இருந்து கொண்டு வரப்பட்ட நீரில் இரண்டு பங்கை தனக்கும், ஒரு பங்கை பட்டத்து இராணி அசத்திமித்தாவின் (*Asamdhimitta*) உபயோகத்திற்கும் மீதியை அறுபது தேராக்களின் உபயோகத்திற்கும் தந்தார். அரண்மனையில் தங்கி இருந்த அறுபதாயிரம் *(60,000)* பிட்சுக்களுக்கும், பதினாறாயிரம் *(16,000)* பெண் பிட்சுணிகளுக்கும் அனு தினமும் நாகலத் (*nagalath*) என்ற பல் விளக்கும் குச்சிகளைத் தர ஏற்பாடு செய்திருந்தார்.

இப்படி இருக்கையில் ஒரு நாள் நான்கு புத்த பிட்சுக்ளை ஆதரித்து வந்த நாகர்களின் (*naga*) மன்னனான மஹாகாலா (*Mahakala*) என்பவரைப் பற்றிக் கேள்விப்பட்டு அவரை தங்கச் சங்கலி போட்டு தன் அரண்மணைக்கு அழைத்து வர ஏற்பாடு செய்தார். வந்தவரை உயரமான இடத்தில் வைக்கப்பட்டு இருந்த ஆசனத்தில் அமரச் சொல்லி, அவருக்கு புஷ்பார்சனை செய்து, பதினாறாயிரம் *(16,000)* பெண்

பெண் பிட்குணிகளையும் அவரை சுற்றி நிற்க வைத்து உபசாரம் செய்த மன்னன் கூறினார் ' அளவற்ற ஆற்றலும், அறிவும் கொண்ட , நல்வழி காட்டும் தத்துவ போதனைகளை நமக்கெல்லாம் தந்துள்ள புத்தருக்கு நான் வழிபடும் விதத்திற்கேற்ப ஒரு உருவம் அமைத்துக் கொடுத்து உதவிட வேண்டும்' அவருடைய வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட நாக மன்னன் முப்பத்தி இரண்டு அற்புதமான சின்னமும், எண்பது பிற சின்னங்களும் நிறைந்த, வெகு தொலைவிற்கு ஒளி வீசும் ஒரு அழகிய புத்தர் சிலையை அங்கே படைத்தார்.

அந்த அற்புத சிலையைக் கண்டு வியந்து போன மன்னன் நினைத்தார் 'இந்த சிலையே இப்படி அற்புதமாகக் காட்சி அளிக்கின்றது என்றால் உண்மையில் அந்த தாடகாதா எத்தனை அழகாக இருந்திருப்பார்?' அந்த சிலையின் அழகில் மயங்கிய மன்னன் உடனடியாக மறுநாளே 'விழிகளுக்கு விருந்து' என்ற பெயரில் ஏழு நாள் வைபவம் ஒன்றை துவக்கினார்.

புத்த தத்துவத்தில் இணைந்த அசோகர் பகுதி இதனுடன் முடிவு பெற்றது

இரண்டாம் ஆலோசனை சபை நடந்தேறிய பொழுது வருங்காலத்தைப் பற்றி கணித்த தேராக்களுக்கு அந்த மன்னனின் ஆட்சி காலத்தில் புத்த தத்துவம் பலவீனம் அடையப் போகின்றது என்ற உண்மை தெரிய வந்தது. அப்படிப்பட்ட நிலை ஏற்படாமல் அதை தடுத்து நிறுத்த தகுதியானவர் எங்கே இருப்பார் என அவர்கள் சிந்திக்கத்

துவங்கிய பொழுது பிரும்ம லோகத்தில் இருந்த பிரும்ம திஸ்ஸா (*Brahmä Tissa*) என்பவர் அவர்கள் எண்ணத்தில் தோன்றினார். இனி அதிக காலம் உயிரோடு இருக்க மாட்டார் என நம்பப்பட்ட அதி ஞானியான பிரும்ம திஸ்ஸாவிடம் அவர்கள் சென்று அவரிடம் வர இருக்கும் தீமையைப் பற்றிய விவரம் கூறி, அந்த நிலையை தடுக்க அவரால் மட்டுமே முடியும் என்பதினால் அந்த நாட்டு மன்னனின் மக்களில் ஒருவராக அவர் பிறந்து அந்த நிலையை தடுக்க வேண்டும் என்று வேண்டினர். அதை ஏற்றுக் கொண்ட அவரும் அந்த தத்துவம் இனி சுடர்விட்டு பிரகாசிக்கும் காலம் வரும் என உறுதி மொழி தந்தார். அவர்களில் இருந்த இரண்டு மாபெரும் முனிவர்களான சிக்கவா மற்றும் கண்டவாஜி என்பவர்கள் *(Siggava and Candavajji) பிட்குக்களிடம்* 'நூற்றி பதினெட்டு வருடங்கள் ஆன பின் இந்த மதம் அழியும். அதைக் காண நாங்கள் உயிருடன் இருக்க மாட்டோம். அதை பிக்குக்களாகிய உங்களால் தடுத்து நிறுத்த முடியாது. ஆனால் அதன் பின் அது மீண்டும் பிரும்ம திஸ்ஸாவினால் என்பவரினால் ஜொலிக்கத் துவங்கும். அவர் மொஹல்லி *(Moggali)* என்ற பிராமணர் வீட்டில் பிறப்பு எடுப்பார். சில காலம் கழிந்தப் பின் உங்களில் ஒருவர் அவர் வீட்டிற்கு சென்று எப்படியாவது அவரை இந்த மதத்தில் இணைத்து விட வேண்டும், இன்னொருவர் அவருக்கு சம்புத்தரின் (*Sambuddha*) தாத்பர்யத்தை எடுத்துரைக்க வேண்டும்.

வேசாலியில் *(Vesali)* தாசகா *(Dasaka)* என்ற ஒரு பிராமணர் வாழ்ந்து வந்தார். அவர் தேரா உபாலியின் சீடர் அவர் சுமார் பன்னிரண்டு வருடங்கள் வேத பாடம் கற்று அறிந்தார். அவருடன் இன்னும் முன்னூறு சீடர்களும் அதை கற்றனர். கற்று முடித்த பின் அவர்கள் வாலிகா *(Valika)* மடத்தை

நிறுவி அதை நிர்வாகித்து வந்த தேரா உபாலி *(Upali)* என்பவரிடம் சென்று வேதங்களில் தமக்கு புரியாத பல விஷயங்களைப் பற்றி கேட்டறிந்தனர். தன்னிடம் வந்த ஒரு எளியவரிடம் தேரா உபாலீ கேட்டார் ' ஓ... கற்றறிந்த பிராமணரே, அனைத்து போதனைகளும் ஒரு போதனையில் இருந்து வெளி வந்தவைதான். அது போல அனைத்து போதனைகளும் ஒரே போதனையுடன் சங்கமித்து விடுகின்றது. அப்படி என்றால் அந்த மூல போதனை எதுவாக இருக்கும் ?'

அப்படி ஒரு கேள்வியை கேட்ட தேராவிடம் அந்த எளிய பிராமணரினால் பதில் ஏதும் கூற முடியவில்லை. ஆகவே தேராவிடமே அப்படிப்பட்ட போதனை எது என வியப்புடன் கேட்க 'அதுவே புத்த மந்திரம்' என்று தேரா கூறினார். 'அப்படி என்றால் தனக்கும் அந்த மந்திரோபதேசம் செய்ய முடியுமா' என அந்த பிராமணர் கேட்க 'அதை கற்க வேண்டும் எனில் எங்களுடன் நீங்கள் இணைய வேண்டும்' என தேரா கூறினார்.

தாசகா என்ற அந்த பிராமணர் தன்னுடைய குரு மற்றும் தாயார், தந்தை என அனைவரிடமும் சென்று அந்த மந்திரத்தின் தத்துவம் பற்றிக் கேட்டார்.ஒருவருக்கும் தெரியவில்லை. பின்னர் சுமார் முன்னூறு பிராமணர்களுடன் அங்கிருந்த தேராவிடம் சென்று பாபஜ்ஜா *(pabbajjä)* என்ற உபதேசம் பெற்றனர். பிறகு அந்த பிராமணர் உபசம்பாதாவின் *(upasampada)* உபதேசம் பெற்றார். அதன் பின் தாசகாவுடன் சேர்ந்து வந்த ஆயிரம் பிராமணர்களுக்கு தேரா உபாலி திபிதகா *(tipitaka)* என்ற உபதேசத்தை அளித்தார். இடையே அவர்களுடன் இணையாமல் இருந்த மற்ற ஆரியர்கள்

அனைவரும் புத்த சாராம்சமான பிதகாவை *(pitakas)* தேராக்களிடம் இருந்துக் கற்று அறிந்தனர்.

காசியில் வரும் பிரயாணிகளுக்கு வழி காட்டுபவராக வேலை செய்து வந்த சோனகா *(Sonaka)* என்பவர் வியாபார விஷயமாக தன் பெற்றோருடன் கிரிபாபஜா *(Giribbaja)* என்ற ஊருக்கு வந்திருந்தார். பதினைந்து வயதான அவருடன் வேலுவான *(Veluvana)* மடத்துப் பிரிவை சேர்ந்த ஐம்பத்தி ஐந்து பிராமணர்களும் வந்திருந்தனர்.

அங்கு வந்த அவர், பல சீடர்களுடன் அங்கு இருந்த தாசகாவை பார்த்தார். தன்னையும் அறியாமல் அவர் மீது மரியாதை கொண்டார். அவரிடம் சென்று பப்பஜ்ஜா *(pabbajja)* உபதேசத்தைப் பற்றிய விளக்கம் கேட்டார். அதற்கு அந்த தேராவோ தன்னுடைய ஆசிரியரைக் கேட்குமாறு கூறினார். அதனால் சோனகா மூன்று வேளை விரதம் இருந்தப் பின் தன்னுடைய பெற்றோர்களுடைய சம்மதத்தையும் பெற்றுக் கொண்டு தாசகாவிடம் சென்று பப்பஜ்ஜா மற்றும் உபசம்பாதாவை நன்கு கற்றறிந்தது மட்டும் இன்றி மூன்று பீதகாக்களையும் கற்றறிந்தார். அனைத்து ஆசைகளையும் துறந்து அந்த பீதகாக்களை கற்றுக் கொள்ள வந்த ஆயிரம் சிஷ்யர்களில் சிறப்பு மிக்க முதல் நிலை மாணவராக சோனகா விளங்கினார்.

அதே சமயம் பாடலி மலரின் *(patali flower)* பெயரைக் கொண்ட பாடலிபுரத்தில் மூன்று காலத்திற்கும் ஏற்ப கட்டப்பட்டிருந்த மூன்று அரண்மனையில் வசித்து வந்தவர் சிக்கவா *(Siggava)* என்ற பதினெட்டு வயது இளைஞர். அவர் அங்கிருந்த ஒரு மந்திரியின் மகன். அவர் ஐநூறு

படைவீரர்கள் சூழ , இன்னொரு மந்திரியின் மகனும் தனது நண்பருமான கண்டவாஜி *(Candavajji)* என்பவருடனும் கிளம்பி குக்குதாரமா *(Kukkutarama)* என்ற இடத்தில் தங்கி இருந்த தேரா சோனகாவிடம் சென்றார்.

அவர்கள் சென்ற நேரத்தில் அந்த தேரா தன்னை மறந்த நெடிய தியானத்தில் (*trance*) ஆழ்ந்திருந்ததினால் சிக்கவா கேட்ட கேள்விகளுக்கு அவர் பதில் தரவில்லை. ஆகவே அங்கிருந்தவர்களிடம் அவர் எப்பொழுது பேசுவார் எனக் கேட்ட சிக்கவாவிடம் அந்த பிட்சுக்கள் எவர் ஒருவர் நெடிய தியானத்தில் உள்ளனரோ அவர்கள் பேச மாட்டார்கள் என்றனர். அப்படி என்றால் தியானம் கலைந்து எப்பொழுது அவர் எழுவார் எனக் கேட்டதிற்கு, தியானத்தில் மூழ்கியவர்கள் அதற்கான நேரம் முடிந்து விட்டாலோ, அல்லது ஆசானின் அழைப்பை ஏற்றோ, அல்லது கூட உள்ளோரின் வேண்டுகோளை ஏற்றோ அல்லது மரணம் அடையப் போகும் தருமணம் போன்ற காரணங்களால் மட்டுமே கண் விழித்து பதில் தருவார்கள் எனக் கூறினர்.

இப்படி பேசியபடி ஆவலுடன் காத்திருந்த அந்த இளைஞர்களுக்கு தெய்வ அருள் கிடைக்க வேண்டும் என்ற விதி இருந்தது. அந்த பிட்குக்கள் மனதளவில் கொடுத்த அழைப்பை ஏற்று கண் விழித்தவரிடம் அந்த இளைஞன் ‘மதிப்புக்குறிய நீங்கள் என்னுடன் பேச மறுத்தது ஏன் எனத் தெரிந்து கொள்ளலாமா ?’ எனக் கேட்க அவரும், ‘எந்த ஒன்று மனதிற்கு மகிழ்சியைத் தருமோ அந்த ஒன்றில் லயித்துக் கிடந்தேன்’ என்று கூற அவர், அப்படி என்றால் நானும் அந்த மகிழ்சியை சுவைக்க விரும்புகின்றேன் என்று

தன் ஆசையை வெளிப்படுத்த 'எங்களைப் போன்ற வாழ்கை முறையில் வாழ்பவர்களால் மட்டுமே அந்த மகிழ்ச்சியை அடைய முடியும்' என்றார் அந்த தேரா.

தங்களுடைய பெற்றோர்களுடைய சம்மதத்தைப் பெற்றுக் கொண்டு சிக்கவாவும், கண்டவாஜியும் அவர்களுடன் ஐநூறு நண்பர்களையும் அழைத்துக் கொண்டு சோனகாவிடம் சென்று பாபஜ்ஜா மற்றும் உபசம்பாதா உபதேசம் பெற்றனர். சிக்கவாவும், கண்டவாஜியும் அவற்றை நன்கு கற்றறிந்தது மட்டும் இன்றி சோனகாவிடம் இருந்து மூன்று பீதகா என்ற தர்கத்தையும் கற்றறிய, அதன் விளைவாக ஆறு சித்திகளையும் (*supernormal powers*) அவர்கள் பெற்றனர்.

அதன் இடையே திஸ்ஸா மானிட ஜென்மம் எடுத்துள்ளார் என்பதை உணர்ந்து கொண்ட சிக்கவா ஏழு வருட காலம் அவருடைய வீட்டிற்கு அடிக்கடி சென்று வரலானார். அதுவரை அவருடைய மனதில் 'இனி இன்னும் உள்ளே செல்' என்ற உணர்வு தோன்றாமல் இருந்தது. ஆனால் எட்டாவது வருடத்தில் அந்த மந்திரச் உணர்வு அவர் மனதில் எழ அவர் உடனடியாக மொகாலியின் *(Moggali)* வீட்டிற்குச் சென்றார். வீட்டினுள் சென்று விட்டு வெளியே வந்தவரை தேரா மொகாலி சந்திக்க அவரிடம் 'என் வீட்டில் இருந்து இதுவரை தானம் பெற்றீர்களா' எனக் கேட்டபொழுது 'பெற்றேன்' எனப் பொய் கூறினார். அந்த பதிலைக் கேட்ட பிராமணரும் திருப்தியுற்று அன்றைய தினத்தில் இருந்து தன்னுடைய உணவையும் அவருக்குக் கொடுக்கத் துவங்க, அவர்களுடைய வீட்டிற்கு சிக்கவா அடிக்கடி விஜயம் செய்யலானார். மெல்ல மெல்ல அந்த வீட்டில் இருந்த அனைவரும் அவருடைய போதனைகளை

ஏற்கத் துவங்கி அவரையும் தம் வீட்டினராகவே ஏற்கத் துவங்கினர்.

காலம் ஓடியது. திஸ்ஸாவிற்கு பதினாறு வயதாயிற்று. அதற்குள் அவர் மூன்று வேதங்களையும் சிறப்பாக கற்றறிந்து புலமை பெற்று விட்டார். அந்த தேராவும் மெல்ல மெல்ல அந்த வீட்டில் இருந்த அனைவரையும் ஒதுக்கிவிட்டு அந்த வாலிபருடன் விவாதிக்க வேதத்தை ஒரு மார்கமாக வைத்துக் கொண்டார். ஒரு நாள் திஸ்ஸாவின் ஆசனத்தைத் தவிற மற்றவர்கள் அமரும் ஆசனங்களை அவர் தம்முடைய சக்தியினால் மறைய வைத்துவிட்டார். பிரும்மலோகத்தில் *(Brahma-world)* இருந்து வந்திருந்ததினால் அந்த தேரா தான் அமரும் ஆசனத்தை துாய்மையாக வைத்திருக்க அப்படி ஒரு நிலையை ஏற்படுத்தி விட்டார்.

அந்த வீட்டில் இருந்தவர்கள் வீட்டில் நுழைந்த பொழுது தமக்கு அமரக் கூட ஆசனம் இல்லாததைக் கண்டனர். தேராவும் நின்று கொண்டே இருக்க வாலிபன் திஸ்ஸா அவருக்கு ஒரு ஆசனம் அமைத்துக் கொடுத்தார். இதன் இடையே தன்னுடைய குருவின் வீட்டிற்குச் சென்று திரும்பிய பிராமணன் வீட்டில் இருந்த நிலையைக் கண்டு கடும் கோபமுற்று அவரிடம் கடுமையாகப் பேசினார். அதற்கு அந்த தேரா அமைதியாக ‘உனக்கு அந்த மந்திரம் தெரியுமா’ என்று கேட்டார். அதையே அந்த பிராமணனும் தேராவிடம் திருப்பிக் கேட்க, தேரா ‘தனக்கு அது தெரியும்’ என்றவுடன் அவரை சோதிக்க எண்ணிய பிராமணன் வேதத்தில் இருந்து பல கடினமான பகுதிகளை அவரிடம் எடுத்துக் கூறி அது பற்றி விளக்கம் கேட்டார். தேரா அதை எதிர்பார்த்திருந்தார்.

அவர் அனைத்து வேதங்களையும் ஏற்கனவே கரைத்துக் குடித்திருந்ததினால் அந்த பிராமணன் கேட்ட அனைத்து கேள்விகளுக்கும் நிதானமாக விளக்கம் அளிக்க முடிந்தது.

ஒருவனுக்கு எண்ணங்கள் தோன்றலாம், அவை அழியாமல் இருக்கலாம் , அந்த எண்ணங்கள் அழியலாம், அவை திரும்பத் தோன்றாமலும் இருக்கலாம். அது போல ஒருவனுடைய எண்ணங்கள் மீண்டும் எழும்பாமல் அழியலாம். மீண்டும் அவனுக்கு எண்ணங்கள் எழம்பலாம், அவை அழியாமலும் இருக்கலாம்.

புத்த போதனையின் சிட்டயாமாகா *(Cittayamaka)* என்ற இந்த பகுதியைப் பற்றி அந்த தேரா கேட்டார். இருட்டில் இருப்பவருக்கு வெளிச்சம் தெரியாதது போல 'மதிப்பிற்குறிய பிக்கு அவர்களே , அந்த மந்திரத்தின் பொருள் என்ன என நீங்களே கூறுங்களேன்' என அவர் கேட்டார். 'அது புத்தரின் மந்திரம்' என்று தேரா கூற 'அப்படி என்றால் அதை எமக்கும் உபதேசிப்பீர்களா' என்று அந்த பிராமணன் கேட்க 'எங்கள் புனித சமயத்தை எவர் ஏற்றுக் கொண்டு எங்கள் உடையை அணிகின்றனரோ அவருக்கு மட்டுமே அதை போதிக்க முடியும்' என்றார் தேரா.

அதனால் அந்த இளைஞர் அவருடைய பெற்றோர்களின் அனுமதியைப் பெற்று, அவர்களை விட்டுப் பிரிந்து தேராவுடன் சென்றார். அவரிடம் இருந்து அந்த மந்திரோபதேசத்தைப் பெற்றுக் கொண்டார். தேராவும் அவருக்கு பப்பஜ்ஜாவில் இருந்த அனைத்தையும் உபதேசித்து அவர் செய்ய வேண்டிய கடமைகளை எடுத்துக் கூறும் கம்மட்டனாஸ்

(kammatthanas) என்கின்ற தத்துவத்தையும் எடுத்துறைத்தார். இப்படியாக அந்த பயிற்சியை முறையாகச் செய்து வந்த அந்த பிராமணன் சோடப்பட்டி *(sotapatti)* என்ற நிலையை அடைய, உடனே தேரா அவரை காண்டவ்வாஜியிடம் அனுப்பி அவரிடம் இருந்து சுட்டபீடகா *(suttapitaka)* மற்றும் அபிதம்மபீடிகா *(abhidhammapitaka)* போன்றவற்றைக் கற்றுக் கொள்ளச் சொன்னார்.

உபசம்பாதாவை *(upasampada)* நன்கு கற்றறிந்திருந்த துறவி சிக்கவாவும் தன்னிடம் வந்தவருக்கு வினயாக்களையும் *(vinaya)*, மேலும் இரண்டு பீதகாக்களையும் *(pitakas)* போதித்தார். அவை அனைத்தையும் கற்று நன்கு பயின்ற திஸ்ஸா , மற்ற ஆறு சித்திக்களையும் அவற்றின் மூலம் பெற்று மெல்ல மெல்ல தேரா என்ற நிலையை எட்டினார். சூரிய சந்திர ஒளியைப் போல அவருடைய புகழ் அனைத்து இடத்திலும் பரவிப் பிரகாசித்தன. அவருடைய சொற்பொழிவுகள் சம்புத்தருடைய *(Sambuddha)* போதனைகளாகக் கருதப்படும் அளவிற்கு அவர் மக்கள் மனதில் உயர்ந்து நின்றார்.

மொகால்லியின் புதல்வரான திஸ்ஸாவின் கதையைக் எடுத்துக் கூறும் பகுதி இப்படியாக முடிவுற்றது

ஒரு நாள் வேட்டைக்குச் சென்ற திஸ்ஸா அங்கு மிகவும் மகிழ்வுடன் அரபிய நாட்டு மான்கள் துள்ளி விளையாடுவதைக் கண்டு எண்ணினார் ‘புல்லைத் தின்னும் இந்த மான்களே இப்படி மன மகிழ்வோடு துள்ளித் திரியும் பொழுது எண்ணற்ற சுகங்களும், தங்க இடமும், சுவை மிக்க உணவும் குறைவின்றி கிடைத்து வந்தும் அனைத்து புத்த பிட்குக்களும்

ஏன் மன மகிழ்ச்சியுடன் வாழ்வதில்லை?

தான் கண்ட காட்சி பற்றி வீடு திரும்பியவர் மன்னனிடம் கூற, அவர் கூறினார் 'ஒரு வாரம் காலம் மன நிறைவோடு இருக்க நான் உனக்கு என்னுடைய பதவியைத் தருகின்றேன். பதவி தரும் சுகத்தை அனுபவித்துப் பார். அதற்குப் பின் உனக்கு மரணத்தை தருகின்றேன், அதையும் எடுத்துக் கொள்ள வேண்டும். சரியா?' அதை ஏற்றவர் மன்னன் பதவியில் அமர்ந்தார்.

ஒரு வார காலம் கழிந்தது. அவரிடம் 'ஒரு வாரம் எப்படிக் கழிந்தது' என மன்னன் கேட்க ' ஒரு வாரத்தில் இறந்து விடுவேன் என்ற மரண பயத்தில் என்னால் சுகத்தை அனுபவிக்க முடியவில்லை' எனறு கூறியவரிடம் மன்னன் சொன்னான் ' ஒரு வாரத்தில் இறந்து விடப் போகின்றோம் என்ற மரண பயத்தை மனதில் வைத்திருந்து எந்த சுகத்தையும் அனுபவிக்காமல் வாழ்ந்து கொண்டு இருந்த உனக்கு, மரணம் எப்பொழுது வேண்டுமானாலும் வரட்டும் என அதை எதிர் நோக்கி காத்திருக்கும் முனிவர்களுக்கும் துறவிகளுக்கும் கிடைக்கும் மன நிம்மதி எப்படி கிடைக்கும்?

அந்த வார்த்தைகளைக் கேட்ட பின்னரே திஸ்ஸாவிற்கு புத்த போதனையின் மகத்துவம் புரிந்தது, போதனைகள் மனதில் ஏறின. மீண்டும் ஒரு நாள் அவன் காட்டிற்கு சென்ற பொழுது அங்கு ஒரு மரத்தடியில் அமர்ந்திருந்த மஹாமாரக்கிட்தா *(Mahadhammarakkhita)* என்ற துறவியின் தலை மீது ஒரு பாம்பு படமெடுத்து ஆடிக் கொண்டு ஒரு மரக் கிளையை வாயில் வைத்துக் கொண்டு விசிறி போல அதை அவர் தலை மீது

வீசிக் கொண்டு இருந்தது. அந்த காட்சியைக் கண்டவர் மனதில் ' தனியொரு காட்டில் அமர்ந்தபடி இப்படி தனி சுகத்துடன் வாழும் இந்த துறவி பெற்றிருக்கும் அமைதியான வாழ்வை போல ஒரு வாழ்க்கையை நானும் ஏன் அடையக் கூடாது ?' என்ற எண்ணம் தோன்றியது.

அதுதான் தக்க சமயம் என அவரை புத்த மதத்தில் இணைக்க முயற்சி செய்து வந்த தேராவும் ஆகாயத்தின் வழியே பறந்தபடி வந்து அசோகராமா (*Asokarama*) என்ன இடத்தில் இருந்த ஒரு நீர் நிலையின் கரையில் நின்றார். அங்கு வந்தவர் கீழே இறங்கும் முன்னர் தான் அணிந்திருந்த உடுப்புக்களை ஆகாயத்திலேயே வைத்து விட்டுக் கீழ் இறங்கினார். அந்த அற்புதக் காட்சியைக் கண்ட இளைஞன் திஸ்ஸா ஆனந்தம் அடைந்து 'இந்த சக்தியை எப்படிப் பெற்றீர்கள்' எனக் கேட்டதற்கு 'பப்பஜ்ஜா (*pabbajja*) போதனைகளை முழுமையாக கற்று அறிந்து அதில் கூறப்பட்டவைகளை முறையாகக் கடைபிடித்ததினால் இந்த சக்தியைப் பெற்றேன்' என்றார் அந்த தேரா. உடனே அந்த இளைஞனும் மன்னனிடம் சென்று தனக்கும் அந்த பயிற்சியை பெற்றிட ஆசையாக உள்ளது எனத் தெரிவிக்க, அதை மறுக்க முடியாத அந்த மன்னன் தன் நாட்டில் இருந்த ஒரு விகாராவுக்கு *(மடம்)* அவரை அனுப்பினார். அவரையும் மேலும் நானுறாயிரம் மாணவர்களையும் அந்த மன்னன் தேரா மஹாதம்மராக்கிதாவிடம் (*Mahädhammarakkhita*) பப்பஜ்ஜாவைக் கற்க அனுப்பினார். அனைவரும் அதைப் பயின்றார் என்றாலும் அதில் எத்தனை மாணவர்கள் திறமை பெற்றுத் தேறினர் என்ற விவரம் கிடைக்கவில்லை. அந்த மன்னன் தன்னுடைய பெண் சம்மமித்தாவை தன்னுடைய

தன்னுடைய சொந்த மருமானுக்கே *(சகோதரியின் பிள்ளை)* மணம் முடித்திருந்தார். அவர்களுக்குப் பிறந்தவரே சுமன்னா என்பவர். அந்த பிரும்மச்சாரி *(Aggibrahma)* மகனும் மன்னனின் அனுமதி பெறறு அந்த போதனையை பயில அங்கு வந்திருந்தார்.

அசோகருடைய நான்காம் வருட ஆட்சியில் உபதேசம் பெற்ற அந்த இளவரசர் அதை மற்றவர்களுக்கும் போதிக்கத் துவங்கினார். அதே வருடத்தில் உபசம்போத உபதேசமும் பெற்று , கடுமையாக பயிற்சி செய்து துறவியாகி ஆறு சித்திகளையும் பெற்றார்.

மூன்று வருடங்களில் அசோகன் விரும்பியபடியே தேரா இந்திரகுப்தாவின் *(Indagutta)* அற்புதமான உழைப்பினால் அனைத்து நகரங்களிலும் அழகிய விகாராக்கள் எனப்பட்ட மடங்கள் தோற்றுவிக்கப்பட்டன. எந்தெந்த இடங்களுக்கெல்லாம் அந்த மன்னன் விஜயம் செய்தாரோ அங்கெல்லாம் விகாராக்களை சுற்றி அழகிய செடி கொடி, மரம் போன்றவற்றை வளர்க்க ஏற்பாடு செய்தார். அனைத்து பகுதிகளில் இருந்த சுமார் எண்பத்தி நாலாயிரம் *(84,000)* நகரங்களில் விகாராக்கள் கட்டி முடிக்கப்பட்டு விட்டன என்ற செய்தி ஒரே நேரத்தில் மன்னனிடம் வந்தது. அதைக் கொண்டாடும் விதத்தில் தன் ஆதிக்கத்தில் அனைத்து பகுதிகளிலும் பரவி இருந்த விகாராக்களில் அன்றில் இருந்து ஏழு நாட்களுக்கு விழா நடத்த ஏற்பாடு செய்தார். விழாவின் ஏழாம் நாளன்று பல யோசனை தூரத்திற்கு பரந்து விரிந்திருந்த பூமியில் தாராளமாக தானம் தரப்படும் என்ற செய்தியை தண்டோரா போட்டு பரப்ப ஆணையிட்டார். எத்தனை பூக்கள் கிடைக்குமோ அத்தனை வகையான

CLICK HERE TO VIEW ENGLISH VERSION

பூக்களைக் கொண்டு வீதிகளில் தோரணங்கள் கட்டி, அங்கும் இங்கும் அலங்காரம் செய்து, முடிந்த அளவு இசை நிகழ்சிகளை நடத்தி விழாவை ஆடம்பரமாகக் கொண்டாட வேண்டும் என ஆணையிட்டார். அது மட்டும் அல்ல அனைத்து விகாராக்களிலும் கிடைக்கப்பட்ட பொருட்கள் அங்கிருந்தவர்களுக்கே பரிசாக வழங்கப்படும், ஓவ்ஒருவரும் தாமே பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டு தானம் கொடுத்து, விழாவின் அனைத்து நிகழ்சிகளில் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும் என ஆணையிட்டார். அதன்படி தேவலோகத் திருவிழா போல அனைத்து இடங்களிலும் அந்த விழா கொண்டாடப்பட, மன்னர் கொடுத்திருந்த கட்டளைக்கும் அதிகமாக அனைத்து இடங்களிலும் பல்வேறு நிகழ்சிகள் நடத்தி விழாவை வெகு விமர்ச்சையாகக் மக்கள் கொண்டாடினர்.

உலகப் பற்று மிக அதிகமாக இருந்தவர், ஜொலிக்கும் பல்வேறு ஆபரணங்களை அணிந்து கொண்டு, தன்னுடன் இருந்த பெண்மணிகள் மற்றும் பரிவாரங்களுடன் தன் ஆளுமைக்குட்பட்ட இடத்தில் இருந்த எண்பது கோடி *(80,00,00,000)* புத்த பிட்சுக்கள் மற்றும் உலக சுகங்கள் அனைத்தையும் துறந்து துறவியான சுமார் ஒரு லட்ச பிட்குக்களின் (*1,00,000)* மத்தியில் சென்று அவர்களை வணங்கும் விதத்தில் தன் தலையை குனிந்தபடி நின்று கொண்டார். அவர்கள் அனைவரும் எதாவது ஒரு அதிசயம் நடந்து தம்மசோகா *(Dhammasoka)* மதம் மாறி தங்களுடன் இணைய மாட்டாரா என ஏங்கி நின்றனர். முன்னர் பெரும் கொடுமையானவராக இருந்து, கண்டசோகா *(Candasoka)* என்ற பெயர் பெற்றிருந்த அசோகன், பின்னர் தம்மசோகா *(Dhammäsoka)* என அன்புடன் அழைக்கப்பட்டதின் காரணம்

அவர் செய்து வந்த பல்வேறு புனித, மனிதாபிமானமிக்க உதவிகள்தான். பல விகாராக்களை உள்ளடக்கி, எல்லையை சுற்றி கடலும் சூழ்ந்து நின்ற ஜம்புதீபா *(Jambudipa)* நாட்டின் அனைத்து பகுதிகளையும் சற்றே நோக்கிய மன்னன் கேட்டான் 'என் மதிப்பிற்குரியவர்களே, என்னைத் தவிற உங்களுக்கெல்லாம் பல நன்மைகளையும் செய்துள்ள கொடையாளி எவர் எனக் கூற முடியுமா ?'

தேரா மோகலிப்புட்டா *(Moggaliputta)* கூறினார் 'என் வாழ்நாளில் உன்னைப் போன்ற ஒரு கொடையாளியை நான் இதுவரை கண்டதில்லை'

அதைக் கேட்டு மனம் நெகிழ்ந்து போன மன்னன் 'அது சரி, அப்படியானால் என்னைப் போன்று புத்த மதத்தையே தன் மதமாக நினைக்கும் வேறு தலைவன் *(kinsman)* இருக்கின்றாரா?. தேரா உடனடியாக பதில் கூறவில்லை.

அசோகனின் பிள்ளை மஹிந்தா *(Mahinda)* மற்றும் மகள் சம்ஹமித்தாவின் *(Samghamitta)* வருங்காலம், புத்த மதக் கொள்கைகளை பெருமளவு பரப்ப மெத்த தகுதியான அவர்கள் வருங்காலத்தில் செய்ய இருக்கும் காரியங்கள் போன்ற அனைத்தையும் அந்த தேரா எண்ணிப் பார்த்தார். அவர்களால் மட்டுமே புத்த போதனைகளை பெரும் அளவில் பரப்ப முடியும் என்பதை தீர்கமாக உணர்ந்தவர் அசோகரிடம் 'மாபெரும் கொடை வள்ளலான நீ கூட புத்த மதத்தை சொந்தம் கொண்டாட முடியாது. எவனொருவன் தன்னுடைய மகனையும், மகளையும் தான் நேசிக்கும் மதத்திற்கு மாறி விட அனுமதிக்கின்றானோ அது மட்டுமே அவன் அந்த

மதத்திற்கு தரும் மாபெரும் பரிசு என்பது மட்டும் அல்ல அப்படிப்பட்டவனே அந்த மதத்துடன் உறவு கொண்டாட முடியும்' என அவரிடம் கூறினார்

மனதாற புத்தமதத்தில் இணைய விருப்பம் கொண்டிருந்த மன்னன் உடனடியாக தன் பக்கத்தில் நின்று கொண்டு இருந்த தன் மகனையும் மகளையும் பார்த்து 'அருமை செல்வங்களே, நீங்கள் மிகவும் போற்றத்தக்க பப்பஜாவை ஏற்க விரும்புகின்றீர்களா ?'

அந்த வாரிசுகள் சற்றும் தயங்காமல் ' நீங்கள் விரும்பினால், அது உங்களையும் சேர்த்து அனைவருக்கும் நன்மை பயக்கும் என்றால் இந்த நிமிடம் முதலே பப்பஜாவை ஏற்க நாங்கள் சம்மதிக்கின்றோம்' என்றனர்.

இதுவே விதி. முன்பிறவியில் திஸ்ஸாவாக இருந்தவர் புத்த மதத்தை தழைக்கச் செய்ய தற்பொழுது அசோகனுடைய மகனாக பிறந்து இருந்தார். அது போலவே அகிபிரும்மாவாகவே *(Aggibrahma)* அவருக்கு சம்ஹமித்தா என்ற மகளாக பிறந்திருந்தாள். தன்னுடைய மகன் மஹீன்தாவை தன்னுடைய பட்டத்து இளவரசராக நியமிக்க ஆசை கொண்டிருந்த அசோகனோ, கிடைக்க இருந்த பெருமையை இழக்க விரும்பவில்லை. ஆகவே தான் மிக அதிகம் நேசித்து வந்தாலும் அழகும் , பராக்கிரமமும், புத்தி கூர்மையும் கொண்ட மகனையும், மகளையும் அந்த உபதேசங்களைப் பெற்றிட முறைப்படியான சடங்குகளை நடத்தி அனுப்பினார்.

மஹிந்தாவிற்கு வயது இருபது. மகளின் வயதோ பதினெட்டு. அந்த உத்தரவு கிடைத்த அன்றே உபசம்பதா மற்றும் பப்பஜா போதனை ஏற்க தனக்கு ஒதுக்கப்பட்ட குருவிடம் இருவரும் சென்றார்.

அவருடைய குருவின் பெயர் தேரா மொகல்லி *(Moggali).* தேரா மஹாதேவா என்பவர் பப்பஜாவை *(Mahädeva)* உபதேசிக்க, உபசம்பாதாவை பயின்று பல அற்புத சித்திகளைப் பெற்று துறவியான (அரஹன்த்) மஜ்ஜான்திகா *(Majjhantika)* என்பவர் மற்ற சடங்குகளை நடத்தி முடித்தார்.

சம்ஹமித்தாவிற்கு உபதேசம் செய்தவர் ஆயுபாலா என்ற பெண்மணி. அவளும் தன்னுடைய இளம் வயதிலேயே ஆசாபாசங்களைத் துறந்து அசவியானார். *(asava).* தம்மசோகாவின் ஆறாவது ஆண்டு ஆட்சி காலத்திலேயே அந்த தீபகற்பத்திற்கு நன்மை தரத் தோன்றிய இருவரும் பப்பஜ்ஜாவை நன்கு கற்றறிந்தனர். ஸ்ரீலங்கா தீபகற்பத்தில் மாற்றம் கொண்டு வந்த மஹீன்தா *(Mahinda)* மூன்று வருடங்களில் மூன்று பீதகாக்களான *(pitakas)* தர்ம போதனைகளை கற்றறிந்தார். சூரியன் போன்று ஒளி தந்த பிக்கு மஹீன்தாவும், சந்திரன் போன்று ஒளி வீசிய சம்ஹமித்தா என்ற பிக்குனியும் சம்புத்தாவின் போதனைகளை தீபகற்பம் முழுவதும் பரப்பி ஒளி வீசச் செய்தனர்.

முன்னொரு காலத்தில் பாடலிபுரத்தில் இருந்த ஒருவன் காட்டில் வேட்டையாடச் சென்றான். அங்கு குந்தி *(Kunti)* என்ற விறகு பொறுக்கும் பெண்ணைக் கண்டு காதல் கொண்டு அவளுடன் உறவு கொள்ள அதன் மூலம் அவளுக்கு இரண்டு மகன்கள் பிறந்தனர். அவர்களில் மூத்தவர் திஸ்ஸா *(Tissa)*

என்பவர், இளையவர் சுமித்தா *(Sumitta)*. அவர்கள் வயதுக்கு வந்ததும் அவர்களுக்கு தேரா மஹாவருணா *(Mahavaruna)* என்பவர் பப்பாஜி போதனையை உபதேசித்தார். அவர்களும் அதைக் கற்றறிந்து ஆறு சித்திகளையும் பெற்று அரஹன்த் ஆயினர்.

ஒரு முறை மூத்தவருக்கு காலில் எதோ விஷப்பூச்சி கடித்து விட்டதினால் வலி ஏற்பட அதைக் குறைக்க ஒரு பிடியளவு சுத்த நெய் *(ghee)* வேண்டும் எனக் கேட்டார். இளையவரும் மதியம் பிட்சைக்குத் போகையில் அதை பெற்று வருவதாக கூறிச் சென்றார். துரதிஷ்டவசமாக அன்று அவருக்கு எங்குமே நெய் கிடைக்கவில்லை. அதனால் சிகிச்சை அளிக்க முடியாமல் போய் வலி இன்னும் அதிகம் ஆகி நூற்றுக்கணக்கான பெட்டி அளவு நெய்யை ஊற்றினாலும் நிவாரணம் பெற முடியாத நிலைமை ஏற்பட்டது. சிகிச்சை பெற முடியாமல் மரணத்தின் தருவாயை எட்டிய அந்த தேரா வலி பொறுக்காமல் தன்னை தானே மாய்த்துக் கொள்ள நிப்பனா என்ற நிலையை எடுக்க *(nibbana)* முடிவு செய்தார்.

தான் பெற்றிருந்த சக்தியினால் மரணத்தை தானே தழுவும் நிப்பானா என்ற நிலையை எடுத்தவர் ஆகாயத்தில் பறந்து அமர்ந்து கொண்டு தன்னைத்தானே எரித்துக் கொண்டார். அந்த தீ அவருடைய உடலையும், தோலையும் எரித்துவிட எலும்புகள் மட்டும் சேதம் அடையாமல் இருந்தது.

அந்த செய்தியைக் கேள்வியுற்ற மன்னன் உடனே தன்னுடைய பரிவாரங்களுடன் கிளம்பிச் சென்று யானை முதுகில் கட்டப்பட்ட பெட்டியில் அந்த புனித எலும்புகளை எடுத்து வந்தார். அவர் நிம்பனா நிலையை எடுத்ததின்

காரணத்தையும் அவருடைய சகோதரர் மூலம் அறிந்து கொண்டவர் மிகவும் வருத்தம் அடைந்தார். அதன் விளைவாக அனைத்து நகர எல்லைகளிலும் உடனடியாக வைத்தியசாலைகளை நிறுவி, பஞ்சம் இன்றி இருக்க வியாதிகளுக்கு சிகிச்சைப் பெறும் வசதியை செய்தார். இனி தமக்கு வரும் வியாதிகளுக்கு மருத்துவ உதவி கிடைக்காது என எந்த பிட்சுவும் எண்ணக் கூடாது என அந்த மருத்துவசாலைகளை பிட்குக்களும் பயன் படுத்தும் வகையில் அமைத்தார்.

அதுபோல கன்கம்மா *(cankama)* என்ற பொது மண்டபத்தருகில் தான் நடந்து கொண்டு இருக்கையிலேயே தேரா சும்மிதா *(Sumitta)* நிபாதனாவை ஏற்றுக் கொள்ள, அந்த நிகழ்ச்சியே மேலும் பலர் அவர்களுடைய தத்துவங்களை ஏற்கும் வகைக்கு வழி வகுத்தது. அசோகனின் எட்டாவது ஆட்சி காலத்தில் குந்தியின் இரு புதல்வர்களும் இப்படியாக நிபானாவை (ஆத்ம சமாதி) அடைந்தனர்.

மெல்ல மெல்ல பிட்குக்களின் வருமானம் பெருகத் துவங்கியது. அனு தினமும் வந்த புதியவர்களினால் தாராளமாக நன்கொடைகள் கிடைத்தன. அதன் விளைவாக வருமானம் குறையத் துவங்கிய வேறு பிரிவைச் சேர்ந்த பல துறவிகள் இங்கு வந்து சேர்ந்தனர். புதியதாக வந்து சேர்ந்தவர்களும் தங்களுடைய தத்துவமும் புத்தரின் தத்துவமும் ஒன்றே என பறை சாற்றியபடி தம் வழியையே கடைபிடித்துக் கொண்டு மக்களை குழப்பியபடி மனம் போன போக்கில் வாழ்ந்து வரலாயினர்.

அந்த நிலையைக் கண்ட தேரா மோஹலிப்புட்டா

(*Moggaliputta*), இப்படிப்பட்ட தவறான செயல்கள் தடுத்து நிறுத்தப்படாவிடில் அது விஷக் கிருமிகள் போல அனைத்து இடங்களிலும் பரவி தீமை விளைவிக்கும் என பயந்து அதைத் தடுக்க வேண்டிய மாற்று நடவடிக்கையை எடுக்கத் துவங்கினார். தன்னுடன் இருந்த பிக்குகளுக்குத் தலைவராக மஹீன்தாவை நியமனம் செய்த பின் அஹோகங்கா மலை வழியாக கங்கைக் கரை வரை தனியே பயணம் செய்து போலிகளுக்கு எதிரான மாற்றுப் பிரசாரம் செய்து விட்டு திரும்பினார்.

இன்னிலையில் பெருமளவில் புதியதாக வந்து சேர்ந்த பிட்குக்களை நீதி மன்றங்களின் மூலம் வெளியேற்ற முடியாமல் போனதினாலும், அவர்கள் செய்து வந்த அட்டகாசங்கள் அளவிற்கு மீறி போனதினாலும் ஜம்புதீபாவில் இருந்த மடத்தில் அடுத்த ஏழு வருடங்கள் உபசோதா (*uposatha-ceremony*) மற்றும் பாவரனா (*pavarana*) என்ற சடங்குகள் நடைபெறவில்லை.

அந்த நிலைமையை பற்றி கேள்விப்பட்ட தம்மசோகா (*Dhammasoka*) தன்னுடைய மந்திரி ஒருவரை தன் அரியணைக்கு உட்பட்ட பகுதியில் இருந்த அந்த மடத்திற்கு அனுப்பி உடனடியாக அந்த நிலைக்கு ஒரு முடிவு கட்டுமாறும், அந்த ஆண்டு நடத்தப்படாமல் நின்றிருந்த உபசோதா விழாவை உடனடியாக நடத்தும்படியும் அவர்களுக்குக் கட்டளை பிறக்கும்படி கூறினார். அங்கு சென்ற மந்திரியும் ‘மன்னனின் கட்டளையை ஏற்று உடனடியாக உபோசாதா விழாவை நடத்தவும்’ என புத்த பிட்குக்களுக்கு கட்டளை பிறப்பித்தார்.

தவறான போக்கைக் கடைபிடிக்கும் பிட்குக்கள் இங்குள்ளவரை எம்மால் உபோசதாவை நடத்த முடியாது என உண்மையான பிட்குக்குள் கூற, கோபமுற்ற அந்த மந்திரி பல தேராக்களை தனது வாளினால் வெட்டிக் கொன்ற பின் 'நான் உங்களை கட்டாயப்படுத்தி அதை செய்ய வைக்கின்றேன் பாருங்கள்' என சூளுரைக்க, அந்த செய்தியைக் கேள்விப்பட்ட மன்னனின் சகோதரர் திஸ்ஸா உடனடியாக அங்கு சென்று மந்திரியின் பக்கத்தில் அமர்ந்து கொண்டு நிலைமையைக் கட்டுப்படுத்தினார். அங்கிருந்த நிலைமை பற்றிய செய்தி மன்னனின் காதுகளை எட்டியது.

அந்த குழப்பமான நிலையைப் பற்றிக் கேள்விப்பட்ட மன்னனின் மனம் வருத்தமுற்றது. உடனே அவர் அங்கு கிளம்பிச் சென்று 'அத்தகைய குழப்பத்திற்கு உண்மையான காரணமும் காரணகர்தாவும் யார்?' என்று அவர்களிடம் கேட்டார்.

அந்த கூட்டத்தில் இருந்த சிலர், 'நீங்களே இதற்குக் காரணம்' எனக் கூற வேறு சிலர் 'நீங்கள் அனைவருமே இதற்குக் காரணம்' என்று எதிர் கருத்து கூற வேறு சிலர் 'நீங்கள் எந்த விதத்திலும் இந்த நிலைமை ஏற்பட்டதற்குக் காரணம் அல்ல என்றனர். அதைக் கேட்ட மன்னனும் ' இங்கு எதாவது ஒரு பிட்கு என் சந்தேகங்களை தீர்த்து வைத்து நம் மதத்தைக் காக்க முன் வருவார்களா' எனக் கேட்டார். 'தேரா மொகால்லியின் மகனான திஸ்ஸாவே அதற்குத் தகுதியானவர்' என அவர்கள் கூற, அதைக் கேட்ட மன்னன் பெரும் மகிழ்ச்சி அடைந்தார்.

ஆகவே அந்த மன்னன் மீண்டும் எட்டு தேராக்கள், அவர்கள் ஒவ்ஒருவருடனும் ஆயிரம் ஆயிரம் பிக்குக்கள், எட்டு மந்திரிகள், அவர்கள் ஒவ்ஒருவருடனும் ஆயிரம் படைவீரர்கள் என ஒரு பட்டாளத்தை அனுப்பி வைக்க அப்பொழுதும் அவர்களுடன் அந்த தேரா வரவில்லை.

'அப்படி என்றால் அவரை எப்படித்தான் அழைத்து வருவது' என சலனமுற்றுக் கேட்ட மன்னனிடம் பிட்குக்கள் கூறினார், 'மன்னா நீதான் எங்களிடையே ஏற்பட்டுள்ள குழப்பத்தைத் தீர்த்து வைக்க அங்கு வந்து உதவ வேண்டும், மதம் செழிக்க துணை புரிய வேண்டும் என்று கேட்டால் மட்டுமே அவர் வருவார்' என்றனர்.

ஆகவே அந்த மன்னன் மீண்டும் பதினாறு தேராக்கள், அவர்கள் ஒவ்ஒருவருடனும் ஆயிரம் ஆயிரம் பிக்குக்கள், பதினாறு மந்திரிகள், அவர்கள் ஒவ்ஒருவருடனும் ஆயிரம் படைவீரர்கள் என ஒரு பட்டாளத்தை அனுப்பி 'அவரை அழைத்து வருகையில் கவனமாக இருங்கள். அவர் வயதானவர். நான்கு சக்கர வண்டியில் வர இயலாது என்பதினால் கங்கை நதி மூலம் கப்பலில் அழைத்து வாருங்கள் என்று ஆணையிட்டார்.

மன்னன் அனுப்பிய செய்தியைக் கேட்ட அந்த தேரா மறுப்பு ஏதும் தெரிவிக்காமல் அவர்களுடன் கிளம்பிச் சென்றார். வந்த அவரை மன்னனே நேரில் சென்று வரவேற்றார். முழங்கால்வரை இருந்த தண்ணீரில் தானே இறங்கி கப்பலருகே நடந்து சென்ற மன்னன் தனது வலது கரத்தை நீட்டி அவரை பிடித்துக் கொள்ளச் சொல்லி கப்பலை விட்டு

இறங்க அவருக்கு உதவி செய்து அரண்மனைக்கு அழைத்து வர அவனுடைய தயாள குணத்தைக் கண்ட தேரா அவரை வெகுவாகப் பாராட்டினார்.

அந்த தேராவை அழைத்துக் கொண்டு இரதிவதனா என்ற தோட்டத்திற்கு அழைத்துச் சென்ற மன்னன் அவருடைய கால்களை அலம்பி விட்டு, அசனத்தில் அமர வைத்தப் பின் அவருடைய சக்தியை சோதிக்க எண்ணி 'ஸ்வாமி உங்களிடம் இருந்து எதாவது ஒரு அதிசயத்தை எதிர் பார்க்கின்றேன்' என்றார். 'என்ன செய்ய வேண்டும்' என வினவியரிடம் 'பூகம்பத்தை ஏற்படுத்திக் காட்ட வேண்டும்' என்று மன்னன் கூற மீண்டும் அந்த தேரா, 'அனைத்து இடத்திலுமா இல்லை எதாவது ஒரு இடத்தில் மட்டும் அதை நடத்திக் காட்டட்டுமா' என்று கேட்க 'அவற்றில் எது கடினம்' என்று மன்னன் கேட்க மீண்டும் தேரா கூறினார் 'ஒரு இடத்தில் மட்டும் அதை நடத்திக் காட்டுவதே கடினம்'

ஒரு யோஜனை துாரத்தில் நகர எல்லையில் ஒரு பெரிய வண்டியை நிறுத்தி வண்டியின் நான்கு புறமும் பெரிய பாத்திரத்தில் நீர் நிறப்பி வைத்தப் பின் அந்த வண்டியில் குதிரையை பூட்டி, அதன் மீது வண்டியோட்டியை அமர அந்த வண்டியில் மன்னனையும் அமரச் சொல்லி இருந்தார் தேரா. தன்னுடைய சக்தியினால் அந்த யோஜனை துார அளவில் இருந்த பூமியை அதிரச் செய்தார். மன்னன் வியந்தான்.

அதன் பின் அந்த தேராவிடம் 'தன்னுடைய மந்திரியின் மூடத்தனத்தினால் இறந்து போன புத்த பிட்குக்களின்

மரணத்தினால் (பாபத்திற்கு) தனக்கும் தீமை வருமா' என்ற தன் சந்தேகத்தை கேட்க 'அப்படி செய்யத் துாண்டாத அதற்கும் அவனுக்கும் எந்த சம்மந்தம் இல்லை என்று கூறியவர் தித்திர ஜாதகா *(Tittira-jataka)* என்ற பகுதியை படித்துக் காட்டினார்.

அதன் பின் அந்த வனத்தில் ஒரு வார காலம் தங்கி இருந்து சம்புத்தாவின் போதனைகளின் சாரத்தை மன்னனுக்கு எடுத்துரைத்தார். அந்த மன்னன் இரண்டு செய்திகளை உலகெங்கும் இருந்த புத்த பிட்குக்களுக்கு அனுப்பி விட்டு ஏழாவது நாளன்று தன்னுடைய அரண்மனையிலேயே பிட்குக்களின் சங்கமத்தைக் கூட்டினார்.

ஒரு பெரிய திரைக்குப் பின்னால் எவரும் பார்க்க முடியாதபடி தேராவை அமரச் சொல்லிய பின் திரைக்கு முன் புறம் அங்கிருந்த பிட்குக்களை ஒருவரொருவராக வரிசையாக அழைத்து அவர்களிடம் புனிதர் போதித்தது என்ன என்ற கேள்வியை எழுப்பினார். தவறான பதிலைக் கூறிய அறுபதாயிரம் *(60,000)* புத்த பிட்குக்களை அங்கிருந்து வெளியேற்றினார். மற்ற உண்மையான பிட்குக்கள் அவர் கேட்ட கேள்விக்கான பதிலாக 'புத்தர் போதித்தது விப்பஜ்ஜா என்ற போதனையே *(Vibhajja-doctrine)* ' என்று கூறினர்.

அதைக் கேட்ட மன்னன் அந்த தேராவிடம் சென்று 'புத்தர் போதித்தது விப்பஜ்ஜா போதனையா' என்று கேட்க அவரும் 'ஆமாம்' எனக் கூற அதைக் கேட்ட மன்னன் மனம் மகிழ்ந்து 'போலித் துறவிகளை களைந்து விட்டதினால் இனி உபோசாதா விழாவை நீங்கள் நடத்தலாமே' என்ற தனது

ஆசையை வெளியிட்டார். அந்த தேராவை அவர்களுக்கு தலைமை தாங்குமாறு வேண்டிக் கொண்டப் பின் தலைநகருக்குத் திரும்பிச் சென்றார். இதற்கு இடையே அங்கு நடந்த விழா இனிதே நடந்தேறியது.

அந்த தேராவும் அங்கு குழுமி இருந்த பிட்குக்களில் ஆறு சக்திகளையும் பெற்ற ஆயிரம் புத்தி நுட்பம் கொண்ட தேராக்களின் குழு ஒன்றை நியமித்து, மீண்டும் போதனையின் உண்மையான தத்துவங்களை கோர்வையாகத் தொகுக்கக் கூறி தானும் அவர்களுடன் இருந்து கொண்டு தக்க அறிவுறைகளை தந்தபடி இருந்தவண்ணம் தம்மாவை முறைப்படி தொகுக்க உதவினார். தேரா மஹாகாசப்பா மற்றும் தேரா யாசாவைப் போன்றே இவரும் (திஸ்ஸா) ஆலோசனை சபையின் நடவடிக்கைகளை அமைத்திருந்தார். அந்த சபையின் நடவடிக்கைகளுக்கு இடையில் மற்ற பிரிவின் தவறான போதனைகளை சாடும் விதத்தில் கதாவாத்துப்பர்க்கர்ணா *(Kathavatthuppakarana)* என்ற சொற்பொழிவை ஆற்றினார். இப்படியாக அசோக மன்னனின் ஆதரவுடன் நடைபெற்ற மூன்றாவது ஆலோசனை சபை ஒன்பது மாதங்களில் முடிவடைந்தது.

அந்த மன்னனின் பதினேழாவது ஆண்டு ஆட்சி முடிந்த பொழுது தேராவின் வயது எழுபத்தி இரண்டாயிற்று. அவர் பாவனா சடங்கை அந்த பூமியே அதிர்ந்திடும் வகையில் விமர்சையாக நடத்தி முடித்தார்.

பிரும்ம சொர்கத்தில் இருந்து மனிதர்களுடைய நலனுக்காக போதனைகளை போதிக்க வந்து தன்னுடைய கடமையை செவ்வனே செய்து முடித்த அவரைப் போல தன்னுடைய

கடமை தவறாமல் செவ்வனே செய்ய எத்தனை மனிதர்களால் முடியும் ?

புனிதரின் பக்தி மார்கத்தில் இணைந்த புத்த பக்தர்களின் மனதில் பேரானந்தம் பொங்கிட வழி வகுத்த கருணா மூர்த்தியின் ஐந்தாம் பாகமான ‘மூன்றாம் ஆலோசனை சபை’ இப்படியாக நிறைவுற்றது.



ஓவியர் பார்வையில் ஸ்ரீலங்காவின் பண்டைய கால தோற்றம்

06: விஜயாவின் விஜயம்

குழந்தைகளின் தீவு என அழைக்கப்பட்ட வங்கா (*Vanga*) என்ற நாட்டில் ஒரு மன்னன் இருந்தான். அவனுடைய மனைவி கலிங்க (*Kalingas*) நாட்டு மன்னனின் மகள் ஆவர். அவர்களுக்கு ஒரு குழந்தைப் பிறந்தது. அதன் ஜாதகத்தைக் கணித்த ஜோதிடர்கள் (*soothsayers*) அவள் ஒரு முறை விலங்குகளின் தலைவனுடன் (சிங்கம்) உறவு கொள்வாள் எனக் கூறினர். அதைக் கேட்டு வெட்கம் அடைந்த பெற்றோர் அது குறித்து எவரிடமும் கூறவில்லை.

தான் சுதந்திரமாக நடமாட வேண்டும் என்று ஆவல் கொண்ட அந்த இளவரசி ஒரு நாள் தன்னந்தனியே வீட்டை விட்டுக் கிளம்பி வெளியில் சென்றாள். முன்பின் தெரியாத வழிப்போக்கர்கள் கூட்டம் ஒன்று மகாதா (*Magadha*) நாட்டை நோக்கிச் சென்று கொண்டு இருந்தது. அவளும் அந்த கூட்டத்தைத் தொடர்ந்து சென்றாள். லாலா (*Lala*) நாட்டருகில் அந்த கூட்டத்தை ஒரு சிங்கம் வழிமறித்தது. அனைவரும் அலறி அடித்துக் கொண்டு இங்கும் அங்கும் ஓடத் துவங்க அவள் செய்வதறியாது அந்த சிங்கத்தைப் பின் தொடர்ந்து ஓடினாள்.

அவளை கவ்விக் கொண்டு தன் இருப்பிடத்தில் போட்ட சிங்கமும் என்ன காரணத்தினாலோ அவளை ஒன்றும் செய்யாமல் கருணையோடு பார்த்தவண்ணம் வாலை சுருட்டி வைத்துக் கொண்டும் காதுகளை மடித்துக் கொண்டபடியும் இருந்தவாறு நின்றது. அவளுக்கு ஜோதிடர்கள் கூறியது நினைவிற்கு வந்தது. ஆகவே சற்றும் கவலைப்படாமல் அந்த சிங்கத்தைத் தடவிக் கொடுக்கத் துவங்கினாள்.

CLICK HERE TO VIEW ENGLISH VERSION

அவள் ஸ்பரிசம் பட்டதும், காம வெறி கொண்ட சிங்கம், அவளை தன்னுடைய முதுகில் வைத்துக் கொண்டு தனிமையில் இருந்த தன்னுடைய குகைக்குள் கொண்டு போய் அவளுடன் உடல் உறவு கொண்டு விட்டது. அதனால் கற்பமுற்ற அந்தப் பெண்ணுக்கு ஒரு ஆண் குழந்தையும், ஒரு பெண் குழந்தையும் பிறந்தன.

பிறந்த அந்த ஆண் குழந்யின் கால்களும் கைகளும் சிங்கத்தின் கால் கைகள் போன்ற தோற்றம் தந்ததினால் அதற்கு சிஹபாபு (*Sihabahu*) எனவும் மகளுக்கு சிஹாசிவாலி (*Sihasivali*) எனவும் பெயரிட்டாள். அந்த சிறுவனுக்கு பதினாறு வயதான பொழுது தன்னுடைய தோற்றத்தைக் கண்டு சந்தேகம் கொண்டு அவளிடம் தன்னுடைய தாயாரும், தந்தையும் தன்னை போல இல்லாமல் ஏன் இத்தனை மாறுபட்டு இருக்கின்றனர் எனக் கேட்க, அவளும் தயங்காமல் நடந்த உண்மைகளைக் கூறி விட்டாள். 'இங்கிருந்து நாம் போய்விடலாமே ' என மகன் கெஞ்ச 'உன்னுடைய தந்தை இந்த குகையின் வாசலை ஒரு பாறையால் மூடி வைத்துள்ளார்' என அவள் கூறினாள். அவன் அந்த பாறையைத் தூக்கி தன் தோள் மீது வைத்துக் கொண்டு ஐம்பது யோஜனை தூரம் நடந்து சென்று பார்த்தப் பின் திரும்பி வந்தான்.

இதற்கிடையில் ஒரு நாள் அந்த சிங்கம் இறை தேடப் போன பொழுது சிஹபாபு, தன் தங்கையையும், தன்னுடைய தாயாரையும் தன்னுடைய தோளின் இருபுறமும் ஏற்றி வைத்துக் கொண்டு அங்கிருந்துத் தப்பி ஓடினான். அவர்கள் இருவரும் தம் உடலை இலைகளால் மூடிக் கொண்டு இருந்தனர். அந்த

காட்டின் எல்லையை ஒட்டிய ஒரு கிராமத்தை அவர்கள் அடைந்த பொழுது அங்கு ஒரு அரச மரத்தின் அடியில் அமர்ந்து கொண்டு அங்கு நடைபெற்றுக் கொண்டு இருந்த வேலைகளை தானே கண்காணித்துக் கொண்டு இருந்த இளைஞன் ஒருவனைக் கண்டனர். அவன் யங்கா நாட்டு (*Yanga*) அரசனின் படை தலைவனாக இருந்தவரின் மகன் இருந்தான். அவனுக்கு அந்த எல்லைப் பகுதியை ஆள அதிகாரம் கொடுத்து இருந்தனர்.

தப்பி வந்திருந்த அவர்களைக் கண்ட அந்த இளைஞன் அவர்கள் எங்கிருந்து வருகின்றனர் என விஜாரிக்க அவர்களும் தாம் காட்டுவாசிகள் (*forest-folk*) எனக் கூறினார். அவர்களுடைய நிலையைக் கண்டவன் அவர்களுக்கு நல்ல உடைகள் தந்து அதை உடுக்கச் சொன்னான். பசித்திருந்த அவர்களுக்கு இலைகளில் உணவை வைத்துக் கொடுத்த பொழுது, அந்த இலைகளை அவர்கள் தொட்டவுடன் அவை தங்கமாக (*gold*) மாறிவிட்டன. அதைக் கண்டு வியந்து போனவன் மீண்டும் அவளிடம் அவர்களைப் பற்றிய விவரம் கேட்கவும், அவள் தன்னுடையக் கதையைக் கூறினாள். ஆகவே அந்த இளைஞன் அந்த சிஹபாபுவின் தங்கையை அரண்மனைக்கு அழைத்துப் போய் அவளை தானே மணம் செய்து கொண்டான்.

தன்னுடைய குகைக்குத் திரும்பிய சிங்கம், அந்த மூவரும் அங்கு இல்லை என்பதை அறிந்து கொண்டு துக்கம் தாங்காமல் எதையும் உண்ணாமல் இருந்தது. அவர்களைத் தேடி அது அந்த இடத்தின் அனைத்து எல்லைப் பகுதிகளுக்கும் சென்று பார்த்தும், எவரும் அந்த இடங்களில் தென்படவில்லை. மூர்கத்தனமாகத் திரிந்த அந்த

சிங்கத்தை பிடிக்க எவருக்கும் தைரியம் இல்லை என்பதினால் எவரும் அதற்கு முன் வரவில்லை. ஆதனால் அந்த மன்னன் யானை ஒன்றின் முதுகில் ஆயிரம் நாணயம் கொண்ட பெட்டியை ஏற்றி நகர் முழுவதும் அதை உலாவ விட்டு ‘எவன் அந்த சிங்கத்தைப் பிடித்து வருவார்களோ அவர்கள் இந்த பணத்தை எடுத்துக் கொள்ளலாம்’ என்ற அறிவிப்பு வெளியிட்டான். அப்படியும் அதை செய்ய எவரும் முன் வராததினால் அறிவிக்கப்பட்ட பரிசுத் தொகை ஆயிரத்தில் இருந்து இரண்டாயிரம் எனவும், மேலும் மூவாயிரம் எனவும் உயர்தினார். இருமுறை அந்த காரியத்தை செய்யக் கிளம்பிய தன்னுடைய மகன் சிஹபாபுவை அவன் தாய் தடுத்து நிறுத்தினாள். ஆனால் பரிசுத் தொகை மூவாயிரம் என அறிவிக்கப்பட்டதும் தன்னுடைய தாயாரிடமும் கூறாமல் தன்னுடைய தந்தையான சிங்கத்தைக் கொல்ல சிங்கபாபு கிளம்பி சென்றான்.

அந்த வேலையை ஏற்றுக் கொள்ள முன் வந்த சிஹபாபுவை அந்த நாட்டு மன்னனிடம் அழைத்துச் சென்றனர். ‘அந்த சிங்கத்தை நீ அடக்கி விட்டால் உனக்கு இந்த இராஜியத்தைத் உடனே தருகின்றேன்’ என மன்னன் கூற, அவன் காட்டிற்குச் சென்று அந்த சிங்கம் மறைந்திருந்த குகை வாயிலை திறந்தான். குகைக்குள் இருந்த சிங்கம் தன்னுடைய மகனைக் கண்டு ஆனந்தம் அடைந்து அன்புடன் அவன் முன் வர, அதைக் கொல்லும் நோக்கத்தில் அதன் மீது அம்பு எய்தான்.

அந்த அம்பு அந்த சிங்கத்தின் நெற்றிப் பொட்டில் பட்டு விழுந்தது. நெற்றியை துளைத்துக் கொண்டு அந்த அம்பு

செல்ல முடியாததின் காரணம் தன்னுடைய மகன் மீது சிங்கம் வைத்திருந்த பாசமே . மூன்று முறையும் அவன் எய்த அம்பு அதைக் கொல்லவில்லை. ஆனால் திடீர் என அதற்கு கோபம் ஏற்பட, கடைசியில் அவன் எய்த அம்பு அதன் உடலில் ஊடுருவிச் சென்று அதைக் கொன்றது.

சிஹபாபு இறந்து போன சிங்கத்தின் தலையை எடுத்துக் கொண்டு ஊர் திரும்பிய பொழுது வெங்கா நாட்டு மன்னன் இறந்து ஏழு நாட்கள் ஆகி இருந்தது. அந்த மன்னனுக்கு வாரிசு ஏதும் கிடையாது. ஆனால் சிங்கத்தைக் கொன்று விட்டு ஊர் திரும்பிய சிஹபாபுவே அந்த மன்னனின் பேரன் என்பதை அறிந்து கொண்ட மந்திரிகள், அவனுடைய தாயாரை தேடிப் பிடித்து அவளை அடையாளம் கண்டு கொண்டனர். அவர்கள் அனைவரும் சிஹபாபுவிடம் 'நீங்களே இந்த அரச பதவியில் அமர வேண்டும்' என வேண்டினர்.

அவர்களுடைய வேண்டுகோளை ஏற்றுக் கொண்டவன் தன்னுடைய இராஜியத்தை தன்னுடைய தாயாரின் கணவருக்கே (*தந்தைக்கே*) கொடுத்து விட்டு தான் பிறந்த சிஹாசிவாலி (***Sihasivali***) என்ற இடத்திற்குச் சென்று பல நூறு யோசனை அளவுக்குப் படர்ந்திருந்த காட்டை சிஹபுரா (***sihapura***) என்ற நகரமாக மாற்றி அமைத்து அந்த இடத்தில் ஆட்சி புரியலானான். சிஹபாபுவின் ஆளுமையில் இருந்த லாலா (***lala***) நாட்டில் இருந்த சிஹாசிவாலி என்பவளை மணந்து கொண்டு அவளை பட்டத்து இராணியாக்கினார். காலம் ஓடியது. அவர்களுக்கு பதினாறு முறை இரட்டைக் குழந்தைகள் பிறந்தன. அவர்களில் மூத்தவர் விஜயா (***Vijaya***) என்பவர். இரண்டாமவர் சுமித்தா (***Sumitta***) என்பவர் . நாளடைவில் விஜயாவை தன் பட்டத்து வாரிசாக சிஹபாபு நியமித்தார்.

விஜயா மிகவும் கொடூரமானவராக இருந்தார். அவரை சுற்றி கொடுமைகள் புரிந்தவர்களே நிறைய இருந்தனர். அவனுடைய கொடுமைகளைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் போன மக்கள் மன்னனிடம் சென்று அவன் செய்த கொடுமைகளைப் பற்றிக் கூறி அவனை அடக்கி வைக்க வேண்டும் என வேண்டினர். மன்னனும் தன் மகனிடம் பல விதத்திலும் அவனுடைய தவறை எடுத்துக் கூறினார். பலமுறை அவனை திருத்த முயன்றார். ஆனாலும் அவன் திருந்தவில்லை என்பதினால் கோபமுற்ற மக்கள் மன்னனிடம் சென்று 'உங்கள் பிள்ளையைக் கொல்ல வேண்டும்' என வேண்டினர்.

ஆகவே அந்த மன்னன் விஜயாவையும், அவனுடன் அவனுடைய எழுநூறு ஆட்களையும் பிடித்து அனைவரின் தலையையும் பாதி மொட்டை (*half the head*) அடித்து அவர்களுடைய குடும்பத்துடன் மூன்று கப்பலில் ஏற்றி நாடு கடத்தினார். அந்த கப்பல்கள் தனித்தனி இடங்களில் தரையிறங்கின. அவர்களுடைய குழந்தைகள் இருந்த கப்பல் தரையிறங்கிய இடம் நாகதீபா (*Naggadipa*) என்பது. பெண்களுடைய கப்பல் தரை இறங்கிய இடம் மஹிலாதீபகா (*Mahiladipaka*) என்பது. விஜயா சென்ற கப்பல் சொர்க பூமியான சுப்பராகா (*Suppäraka*) என்ற இடம். ஆனால் அங்கும் அவனுடன் சென்ற ஆட்கள் கலவரத்தில் ஈடுபட்டதினால் அங்கிருந்துக் கிளம்பி மீண்டும் பயணத்தைத் துவக்கினான்.

பராக்கிரமசாலியான விஜயா கடைசியாக இலங்கையில் (*lanka*) இருந்த தாம்பபன்னி (*Tambapanni*) என்ற இடத்திற்கு

வந்து சேர்ந்த பொழுது அங்கு இரண்டு சால் மரங்கள் (*saal trees*) இடையே அமர்ந்து இருந்த தாதகாடா (*Tathagata*) நிப்பானா நிலையை (*nibbana*) எடுத்திருந்தார்.

புனிதரின் பக்தி மார்கத்தில் இணைந்த புத்த பக்தர்களின் மனதில் பேரானந்தம் பொங்கிட வழி வகுத்த கருணா மூர்த்தியின் ஆறாம் பாகமான ‘விஜயாவின் விஜயம்’ இப்படியாக நிறைவுற்றது.

07: விஜயாவின் முடிசூட்டு விழா

உலகத்தின் வழிகாட்டி தான் நிப்பானாவில் சென்று தமது இறுதிப் பயணத்தைத் தொடங்கிய பொழுது அங்கு அவர் எதிரில் நின்று கொண்டு இருந்த கடவுட்கள் மற்றும் முனிவர்கள் முன்னிலையில் தன்னருகில் நின்று கொண்டு இருந்த பேராற்றல் மிக்க சாகா *(Sakka)* என்ற முனிவரிடம் 'சிஹபாகுவின் மகனான விஜயா என்பவர் லாலா நகரில் இருந்து கிளம்பி எழுநூறு வீரர்களுடன் இங்கு வந்துள்ளார். ஸ்ரீ லங்காவில் என்னுடைய சமயம் தழைத்தோங்க வேண்டும். ஆகவே அவரையும் அவருடன் வந்துள்ளவர்களையும் காப்பாற்றுவது உங்கள் பொறுப்பு' என்று தாடகாதா கூறினார்.

தாதகாடாவின் (*Tathagata)* கூறிய அறிவுறையைக் கேட்ட சாகா தாமரைப் போன்ற நிறத்திலிருந்த கடவுளான தேவர்களின் தலைவரிடம் சென்று தாதகாடாவின் விருப்பத்தைக் கூறி அவரிடம் அந்த பொறுப்பை ஒப்படைத்தார்.

சாகாவிடம் இருந்து அந்த பொறுப்பை ஏற்ற கடவுள் உடனடியாக ஸ்ரீலங்காவிற்கு வந்து ஒரு மரத்தினடியில் ஒரு துறவியைப் போல அமர்ந்து கொண்டார். அந்த இடத்திற்கு வந்த விஜயாவும் அவருடன் வந்தவர்களும் ' இந்த தீபகற்பத்தின் பெயர் என்ன ?' என்று கேட்க அவர் ' இந்த தீபகற்பத்தில் ஒருவரும் இல்லை. ஆகவே எந்த அபாயமும் இல்லை' என்று மட்டும் கூறிவிட்டு தன் கையில்

வைத்திருந்த குடுவையில் இருந்து தண்ணீரை எடுத்து அவர்களுடைய தலையில் தெளித்தப் பின் அவர்கள் கைகளில் கயிறு ஒன்றையும் கட்டி விட்டு வானத்தில் பறந்து சென்று மறைந்து விட்டார். அவர் சென்ற உடனேயே அந்த அந்த இடத்தில் ஒரு காட்டு நரியைப் போன்ற உருவத்தில் யாக்கினி (*yakkhini*) ஒருவள் தோன்றி நடக்கலானாள். (*குவன்னாவின் வேலையாள்).*

விஜயாவின் ஒரு படை வீரர் அவளை பின் தொடர்ந்து சென்றார். எங்கு ஒரு கிராமம் இருக்குமோ அங்கு நாய்களையும் காண முடியும் என்பது பழமொழி. அந்த யாக்கினியின் தலைவியான குவன்னா என்ற குவானி ((*Kuvani*) ஒரு மரத்தடியில் துறவி (*hermit*) போல அமர்ந்திருந்தபடி நூல் நூற்றுக் கொண்டு இருந்தாள்.

யக்கினியின் பின் சென்றவன் அவள் அருகில் இருந்த குளத்தில் இறங்கி குளித்து விட்டு சிறிது தண்ணீர் பருகினான். அதன் பின் அந்த குளத்தில் இருந்த தாமரை மலர்களைப் பறிக்கத் துவங்கினான். 'நில், எனக்கு இரையாக வந்தவனே' என கத்தியவளுடைய குரலைக் கேட்டவுடன் கயிற்றால் கட்டிப் போட்டிருந்தது போல அவன் அங்கு நின்றிருந்தான். என்றாலும் அவன் கையில் கட்டப்பட்டு இருந்த மந்திரக் கயிற்றின் (*magic thread*) சக்தியினால் அந்த யட்சிணியினால் அவனை விழுங்க முடியவில்லை. அவள் எத்தனை கெஞ்சிக் கேட்டும் அந்த கயிற்றை கயற்றித் தர அவன் சம்மதிக்கவில்லை என்பதினால் அவனை துரத்திச் சென்று ஒரு பாதாளத்தில் (*chasm*) தள்ளி விட அவன் பெரும் கூச்சலிட்டான். அந்த

பெரும் கூச்சலிட்டான். அந்த யட்சினி மீண்டும் மற்ற எழுநூர்று ஆட்களையும் ஒவ்ஒருவரையாக அந்த இடத்திற்கு ஏமாற்றி அழைத்து வந்து பாதாளத்தில் தள்ளியது.

யட்சினியை பின் தொடர்ந்து சென்ற தன்னுடைய ஆட்கள் எவருமே திரும்பி வராததினால் கலக்கமுற்ற விஜயா அந்த குளத்தருகே சென்று அங்கு துறவி போல அமர்ந்திருந்தவளைக் கண்டார். அங்கு எவருடைய கால் சுவடும் தெரியவில்லை. அதனால் அவள்தான் தன்னுடைய ஆட்களை கொன்றிருப்பாள் என்ற சந்தேகம் வந்தது. அவளிடம் 'என்னுடைய ஆட்களைப் நீ பார்க்கவில்லையா' என்று கேட்க 'உன்னுடைய ஆட்களுடன் எனக்கு என்ன தொடர்பு உள்ளது ' என்று கூறியவள், 'சரி உன்னுடன் என்ன பேச்சு அந்த குளத்து நீரை பருகி விட்டு, குளித்து விட்டுப் போ' என்றாள் .

அப்படி அவள் கூறியதுமே அவருக்கு நன்கு விளங்கிவிட்டது 'இவள் யட்சிணியேதான் என்பதில் சந்தேகமே இல்லை. இல்லயெனில் நான் யார் என்பது இவளுக்கு எப்படி தெரிந்திருக்கும்?' அவர் மனதில் புனிதரை நினைத்துக் கொண்டே இருந்த பொழுது கீழே வைத்திருந்த தன்னுடைய வில்-அம்பை எடுத்துச் செல்ல முயன்றவளிடம் அதிரடியாக ஓடிச் சென்றார். ஒரு கையால் அவளது தலை முடியை பற்றிக் கொண்டு மறு கையால் தன் உறையில் இருந்த வாளை உறுவி எடுத்து அவள் கழுத்தில் வைத்து 'எங்கே என் வீரர்கள்?, கூறாவிடில் உன்னைக் கொன்று விடுவேன் ' என கத்தியதும் பயந்து போன அந்த யட்சிணி தன்னை விட்டு விடுமாறும், அதற்காக அவருக்கு ஒரு இராஜ்ஜியத்தை

அளித்து ஒரு பெண் சேவகியாக தானும் பணி புரிவதாக கூறினாள்.

தன்னை ஏமாற்றி விடக் கூடாது என்பதினால் அந்த யட்சிணியை சத்தியம் செய்யச் சொல்லி அவளிடம் இருந்து வாக்குறுதியை பெற்றுக் கொண்ட பின் 'உடனடியாக என்னுடைய ஆட்களை கொண்டு வா' என அவளுக்கு ஆணையிட்டார். அந்த யட்சிணியும் அவர்கள் அனைவரையும் பள்ளத்தில் இருந்து வெளியே கொண்டு வந்து அவரிடம் ஒப்படைத்தாள். 'அவர்கள் பசியோடு இருக்கின்றனர், எதாவது உண்ணக் கொடு' என அவர் கட்டளை இட, முன்னர் தான் கொன்று விழுங்கிய வியாபாரிகளிடம் (*traders*) இருந்து அபகரித்து வைத்திருந்த உணவுப் பண்டங்களையும் பிற பொருட்களையும் அவரிடம் கொடுத்தாள். விஜயாவின் ஆட்கள் அந்த பண்டங்களைக் கொண்டு உணவு தயாரித்து அவருக்குக் கொடுத்தப் பின் தாமும் உண்டனர்.

அந்த யட்சிணிக்கும் விஜயா உணவு கொடுக்க அதை உண்டவள் மகிழ்ச்சியுற்றாள். தன் உடலில் பலவிதமான நகைகளை அணிந்து கொண்டு ஒரு பதினாறு வயதுப் பெண் போல உருமாறினாள். அந்த மரத்தின் அடியில் தங்க மேற்கூறையுடன் கூடிய ஒரு இடத்தையும், படுக்க படுக்கையையும் அமைத்துக் கொடுத்தாள். அதைக் கண்ட அந்த மன்னன் அவள் மீது காதல் கொண்டு அவளை மனைவியாக ஏற்று தன்னுடன் அழைத்துச் சென்று அந்த படுக்கையில் படுத்துக் கொண்டார். மற்ற அனைவரும் அந்த இடத்தை சுற்றி படுத்துக் கொண்டு இளைப்பாறினர்.

அன்று இரவு அந்த இடத்தின் அருகில் இருந்துவந்து கொண்டிருந்த இனிய இசையையும், கூத்தையும் கேட்டவன், அதை பாடுவது யார் எனக் கேட்டவுடன் அந்த யட்சிணி யோசித்தது 'நான் இவனிடம் யட்சிணிகளான யாக்காக்களைப் (*yakkhas*) பற்றிக் கூறி அவைகளைக் கொன்று விடுமாறு கோரிக்கை வைக்கின்றேன். இல்லை எனில் இந்த மக்களுக்கு இங்கு தங்க ஏற்பாடு செய்து தந்துள்ள என்னை அந்த யக்கா (*ஆண் யட்சினி*) கொன்று விடும்.'

அவள் இளவரசனிடம் கூறினாள் ' இங்குதான் சிரிசாவத்தா *(Sirisavatthu)* என்ற யட்சிணிகளான யக்காக்களின் நகரம் உள்ளது. யக்காக்களின் தலைவனுடைய மகள் லங்காவில் இருந்து வந்து இங்குதான் வசிக்கின்றாள். அவளுக்கு திருமணம் நடத்தி வைக்க அவளுடைய தாயார் இன்று வருகின்றாள் என்பதினால் ஏழு நாட்கள் தொடர்ந்து இப்படித்தான் திருமண கூத்துக்கள் நடக்கும். இன்று இரவு அந்த இடத்தில் அனைத்து யக்காக்களும் கூடுவார்கள். அப்பொழுது அவர்களை நீ அழிக்காவிடில் பின்னர் உன்னால் அவர்களை அழிக்கவே முடியாது.'

'கண்ணுக்கு புலப்படாமல் உள்ள அவர்களை நான் எப்படி அழிப்பது?' எனக் கேட்டவனிடம் ' நான் அவர்கள் உள்ள ஒவ் ஒரு இடமாகச் சென்று குரல் தருகின்றேன். நீ அந்த குரல் வந்த திசையை நோக்கி அம்பு எய்தால் என்னுடைய மந்திர சக்தியினால் அந்த அம்புக்களை அவர்கள் மீது பாய வைக்க அவர்களைமரணம் அடையச் செய்கின்றேன். அதன் பிறகு நமக்கு கவலை இருக்காது ' என்றாள்.

அவள் கூறியபடியே அவர் அனைத்து யக்காக்களையும் அழித்துவிட்டு யக்காக்களின் தலைவனுடைய ஆடையை தான் உடுத்திக் கொண்டு மற்றதை தன்னுடன் வந்தவர்களுக்கு அளித்தார்.

அந்த இடத்தில் சில நாட்கள் தங்கி இருந்த பின் தாம்பபன்னி (***Tambapanni***) என்ற நகருக்கு அவர்கள் சென்றனர். அந்த இடத்தில நகரம் ஒன்றை விஜயா அமைத்து தன் மனைவியான யட்சிணியுடனும் மந்திரிகளுடனும் தங்கினர்.

விஜயாவுடன் கப்பலில் வந்திறங்கியவர்கள் அசதியாலும் களைப்பினாலும் அந்த இடத்திற்கு வந்து அமர்ந்து பூமியில் தமது கைகளை அழுத்தி வைத்துக் கொண்டு இருந்த பொழுது அவர்களுடைய கைகளில் அந்த பூமியின் சிவப்பு நிற மண் ஒட்டிக் கொண்டது. அதனால் அந்த இடத்திற்கு தாம்பபன்னி எனப் பெயரிட்டனர். ஆனால் சிங்கத்தைக் கொன்றதினால் சிஹலா என்ற பெயர் பெற்ற சிஹபாஹுவிற்கும் (***Sihabähu***) இவருக்கும் இருந்த உறவு முறையினால் *(தந்தை-மகன்)* விஜயாவின் இராஜ்யத்தில் இருந்த மக்கள் அனைவரையும் சிகலா (***Sihala***) என்றும் அழைத்தனர்.

விஜயாவின் மந்திரிகள் இங்கும் அங்குமாக பல கிராமங்களை அமைத்தனர். கடம்பா (***Kadamba***) நதிக்கரையில் அனுராதகாமா (***Anuradhagama***) என்பவரின் பெயரால் அனுராதகாமா என்ற கிராமம் உருவானது. அதன் வடக்குப் பக்கத்தில் இருந்த கம்பீரா (***Gambhira***) நதிக்கரையில் படைத் தலைவன் உபடிஸ்ஸா (***Upatissa***)

என்ற கிராமத்தை அமைத்தார். அதன் பின் அமைச்சரவையில் இருந்த மூன்று மந்திரிகள் மூன்று இடங்களில் உஜ்ஜினி, உருவிலா (*Ujjeni, Uruvela*) மற்றும் விஜிதா (*Vijita*) என்ற பெயர்களில் மூன்று நகரங்களை உருவாக்கினர்.

நகரங்களை நிறுவியப் பின் அவர்கள் அனவரும் இளவரசனிடம் சென்று அவரை அந்த அனைத்துப் பகுதிகளையும் ஒன்றடக்கிய இராஜ்யத்தின் மன்னனாக முடிசூட்டிக் கொள்ளுமாறு அவரிடம் வேண்டினர். ஆனால் அவரோ நல்ல ஒரு குடும்பத்துப் பெண் தன்னுடைய மனையாகி பட்டத்து இராணியானால்தான் தன்னால் அந்த பதவியை ஏற்க முடியும் என்று கூறி அவர்களுடைய கோரிக்கையை நிராகரித்து விட்டார்.

என்ன ஆனாலும் சரி, அவரை மன்னனாக முடிசூட்ட வேண்டும் என தீர்மானித்தவர்கள் அதற்கான கடினமான பல வழிகளையும் ஆராய்ந்து பார்த்த பின் பல்வேறு பரிசுப் பொருட்களாக முத்து, நகைகள் மற்றும் பல்வேறு உயர்ந்த பொருட்களை ஒரு குழுவிடம் கொடுத்து தங்கள் வீட்டுப் பெண்களையும் அவர்களுடன் அனுப்பி தென் இந்தியப் பகுதியில் மதுரா (*Madhura*) என்ற நகரை ஆண்டு வந்த பாண்டு (*Pandu*) மன்னனிடம் அவற்றைக் கொடுத்து அவருடைய மகளை தம் மன்னனுக்கு மணம் முடிக்க கோரிக்கை விடுமாறு கூறி அனுப்பினர்.

மதுராவிற்கு கப்பலில் வந்த தூதுவர்கள் பட்டாளம் அரசனிடம் சென்று அனைத்து பரிசுகளையும் கொடுத்தனர். தன்னுடைய மந்திரி சபையினருடன் அவர்கள் விடுத்த

வேண்டுகோளை நன்கு ஆலோசித்த அரசனும், விஜயாவின் மந்திரிகளுடன் வந்திருந்த பெண்கள் கூட்டத்தையும் பார்த்தப் பின் கீழ் கண்ட செய்தியை தண்டோரா போட்டு அறிவித்தார். ‘இந்த ஊரில் இருந்து எவர் தமது பெண்களை மன்னனுடைய மகளுடன் அனுப்பி வைத்து அவள் மணமுடிக்க உள்ள இடத்தில் உள்ள அமைச்சர்களை மணந்து கொள்ள சம்மதிக்கின்றனரோ, அவர்கள் தம் பெண்களுக்குத் தேவையான இரு மடங்கு உடைகளை கொடுத்து தமது வீட்டு வாசலில் நிற்க வைத்தால் அவர்களை அழைத்துச் செல்லலாம் என்ற பெற்றோரின் சம்மதம் கிடைத்து விட்டதாக நினைக்கப்படும்’

இப்படியாக பலர் வீட்டில் இருந்தும் தயாராக வந்த பெண்களின் வீட்டினருக்கு தேவையான பணம் தந்து கௌரவித்தப் பின் நன்கு அலங்கரிக்கப்பட்ட தன்னுடைய மகளுடன் அவர்களை அனுப்ப ஏற்பாடுகளை செய்தார். அவர்களுடன் யானைகள், குதிரைகள், பல கலைஞர்கள், பதினெட்டு கலைகளில் சிறந்த குடும்பத்தினர் போன்ற பட்டாளத்துடன் மன்னன் விஜயாவிற்கு கடிதமும் கொடுத்து அனுப்பினார். அவர்களும் மஹாதித்தா (*Mahatittha*) என்ற இடத்தில் சென்று கரை இறங்க அந்த இடத்தின் பெயர் மஹாதித்தா (*Mahatittha*) என்று ஆயிற்று.

யட்சினி மூலம் விஜயாவிற்கு ஒரு மகனும், ஒரு மகளும் பிறந்திருந்தனர். மகத நாட்டு இளவரசி வந்து இறங்கியதைக் கேள்விப்பட்ட மன்னன் யட்சிணியிடம் ‘இந்த இரு செல்வங்களையும் என்னிடம் விட்டுவிட்டு உடனடியாக நீ வேறு எங்கேனும் சென்று விடு. ஏன் எனில் உங்களைப் போன்ற யட்சினிகளைக் கண்டால் சராசரி மனிதர்கள் பயம்

அடைவார்கள்' என்றார். ஆனால் அப்படி தான் சென்றால் யட்குக்களால் தமக்கு ஆபத்து ஏற்படும் என அவள் பயந்து தயங்கியதினால் 'சீக்கிரம் இங்கிருந்து கிளம்பு. உனக்கு எத்தனை பணம் வேண்டுமோ அதை நான் தருகின்றேன்' என மன்னன் அவளை அவசரப்படுத்த அவரிடம் எத்தனை மன்றாடியும் அவளை அங்கு தங்க அனுமதிக்காததினால் மன்னனின் மாளிகையில் இருந்து தன் இரு குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு அந்த யட்சிணி லங்காபுரா (*Lankapura*) என்ற இடத்திற்கு சென்று விட்டாள்.

அவள் தன்னுடைய குழந்தைகளை வீட்டில் விட்டு விட்டு வெளியில் சென்ற பொழுது அவளை அடையாளம் கண்டு கொண்ட யட்சிணிகளான யாக்குக்கள் அவளை உளவாளி என சந்தேகித்து ஒரே அடியில் அடித்துக் கொன்று விட்டன. வெளியில் சென்று விட்டு ஊர் திரும்பிய அந்த யட்சிணியின் சகோதரன் அவள் விட்டிற்குச் சென்று அங்கிருந்த குவன்னாவின் (*Kuvanna*) குழந்தைகளைப் பார்த்தான். அவர்களை யட்சிணிகளான யாக்குக்கள் பார்த்து விட்டால் அவர்களையும் விட்டு வைக்காமல் கொன்று விடுவார்கள் என பயந்ததினால் அவர்களை உடனே அங்கிருந்து தப்பி ஓடும்படிக் கூறினார்.

அங்கிருந்து தப்பி ஓடியவர்கள் சுமனகுட்டா (*Sumanaküta)* என்ற இடத்தை அடைந்தனர். அங்கு அவர்கள் இருவரில் மூத்த சகோதரன் தன்னுடைய சகோதரியையே மனைவியாக்கிக் கொண்டு பல பிள்ளைகளையும், பெண்களையும் பெற்றுக் கொண்டான். அவர்கள் அனைவரும் மலாயாவிற்கு (*malaya*) சென்று அங்கு வசித்தனர்.

அவர்களிடம் இருந்தே புலிந்தா (*Pulinda*) இனம் தோன்றியது.

பாண்டு மன்னன் அனுப்பிய பரிசுப் பொருட்களுடனும், அவனுடைய மகளுடன் வந்தவர்களும் விஜயாவிற்கு அவற்றைத் தர அதைக் கண்டு மகிழ்ந்து போன மன்னன் அவர்களை விமர்சையாக உபசரித்து பாண்டுவின் மகளுடன் வந்திருந்த பெண்களை தம் அரச சபையில் இருந்த அமைச்சர்களுக்கு அவரவர் தகுதிக்கேற்ப மணம் செய்து கொள்ள அனுமதித்தார். வழக்கத்தை மீறாமல் எல்லாவித சடங்குகளும் செய்த பின் முறைப்படி விஜயாவை மன்னனாக முடிசூட்டிக் கொண்டாடினர்.

மன்னனும் பாண்டுவின் மகளை மணந்து கொண்டு அவளை பட்டத்து இராணியாக்கி, தன்னுடைய அமைச்சர்களுக்கு பெருமளவு வெகுமதிகள் தந்து கௌரவித்தார். அது முதல் ஒவ்ஒரு வருடமும் தன்னுடைய மாமனாருக்கு இரண்டாயிரம் பண மதிப்பிற்கு கடல் முத்துக்களை (*shell-pearl*) அனுப்பி வந்தார்.

முன்னர் கொடுங்கோலராக தமது வாழ்க்கை முறையை வைத்திருந்தவர், அதை மாற்றிக் கொண்டு தாம்பபன்னி இராஜியத்தை முப்பத்தி எட்டு வருடங்கள் தர்மம் பிழறாமல், அமைதியாக, நேர்மையாக ஆண்டு வந்தார்.

புனிதரின் பக்தி மார்கத்தில் இணைந்த புத்த பக்தர்களின் மனதில் பேரானந்தம் பொங்கிட வழி வகுத்த கருணா மூர்த்தியின் ஏழாம் பாகமான 'விஜயாவின் முடிசூட்டு விழா' இப்படியாக நிறைவுற்றது.

08: பாண்டுவாசுதேவா முடிசூடல்

தன்னுடைய ஆட்சியின் கடைசி கால கட்டத்தில் இருந்த மன்னன் விஜயா யோசனை செய்தார் 'எனக்கு வாரிசு என கூறிக் கொள்ள எந்த மகனும் இல்லை. நான் இறந்து விட்டால் இந்த நாடு பல்வேறு பிரச்சனைகளில் மூழ்கி விடும். ஆகவே என்னுடைய சகோதரனான சுமித்தாவை இங்கு அழைத்து அவனிடம் ஆட்சியை ஒப்படைப்பதை விட வேறு வழியே இல்லை.' தன்னுடைய அமைச்சர்களுடன் தீவீரமாக ஆலோசனை செய்த பின் மன்னன் விஜயா தன் சகோதரனுக்கு அது குறித்து கடிதம் எழுதி அனுப்பிய சில நாட்களிலேயே அவர் மரணம் அடைந்து விட்டார்.

அந்த மன்னன் இறந்து ஒரு வருடத்திற்கு ஸ்ரீலங்கா எந்த மன்னனின் ஆட்சிமையிலும் இல்லை. விஜயனின் அமைச்சரைவையே உபாதிசாகம் (*Upatissagama*) என்ற இடத்தில் இருந்தவாறு கூட்டுப் பொறுப்பில் இராஜ்ய பரிபாலனம் செய்து கொண்டு வந்தது.

அதற்கு முன் அங்கு சிஹாபுராவில் இருந்த சிஹபாபுவின் மரணத்திற்குப் பிறகு அவருடைய மகனான சுமிதா ஆட்சியில் அமர்ந்தார். அவருக்கு தற்பொழுதைய சென்னை நகரமான மத்தா (*madda*) என்ற இடத்தில் ஆட்சி செய்து வந்த மன்னனின் மகள் மூலம் மூன்று பிள்ளைகள் பிறந்து இருந்தனர். சிஹாபுராவிற்கு விஜயனின் கடிதத்துடன் வந்த தூதுவர்கள் (*Sihapura*) கொடுத்த கடிதத்தை படித்தவர் தன்னுடைய மூன்று பிள்ளைகளையும் அழைத்துக் கூறினார்

உங்களில் எவராவது முன் வந்து என்னுடைய சகோதரர் ஆண்ட அற்புத பூமியான ஸ்ரீலங்காவிற்குச் சென்று அவருடைய மறைவிற்குப் பின் அந்த ஆட்சியை ஏற்றுக் கொள்ள வேண்டும்'.

அந்த மன்னனின் இளைய புதல்வர் பாண்டுவாசுதேவா என்பவர் (*Panduvasudeva*) யோசித்தார் 'நான் அங்கு சென்று ஆட்சிப் பொறுப்பை ஏன் ஏற்கக் கூடாது?' அதன்படி தன் தந்தையின் ஆட்சியில் அமைச்சர்களாக இருந்தவர்களுடைய முப்பத்தி மூன்று மகன்களை தன்னுடன் அழைத்துக் கொண்டு ஆண்டிப் பண்டாரங்களைப் போல வேடம் அணிந்து கொண்டு அந்த ஊருக்கு கிளம்பினார். தற்பொழுதைய மன்னார் பகுதியில் இருந்த மஹாகண்டாரா (*Mahakandara*) என்ற நதிக் கரையில் இருந்த இடத்தை சென்றடைந்த பொழுது அவர்களை உள்ளூர் மக்கள் மிக அன்புடனும் மரியாதையுடனும் வரவேற்றனர்.

தேவதைகள் (*devatas*) பின் தொடர்ந்து வர, உபாதிசாகமா (*Upatissagama*) என்ற இடத்தை அவர்கள் வந்தடைந்தனர். அதற்கு முன் அங்கிருந்த அமைச்சர்கள் ஒரு ஜோதிடரிடம், இந்த நாட்டை ஆளப்போகும் இளவரசர் எப்பொழுது வருவார் என்ற ஆலோசனையில் ஈடுபட்டிருந்தனர். ஜோதிடரும் 'இந்த நாட்டை ஆள் ஏழு நாட்களில் புயல் போல ஒருவர் வந்து புத்த சம்ராஜ்யத்தை நிறுவ இருக்கின்றார்' என கணித்துக் கூறினார். அவர் கூறியபடியே மாறு வேடத்தில் எழாவது நாளன்று ஊருக்குள் நுழைந்த ஆண்டிப் பண்டாரங்களிடம் அவர்கள் அங்கு வந்ததின் காரணத்தைக் கேட்டறிந்து அவர்களை யார் எனவும் அடையாளம் கண்டு கொண்டு

அவர்களை அன்புடன் அழைத்து ஆட்சியை ஏற்குமாறு கூறினாலும் முடிசூட்டு விழாவை உடனடியாக வைத்துக் கொள்ள முடியாமல் போனதின் காரணம் அவருக்குத் திருமணம் ஆகவில்லை.

சச்க அமிதோதனா (*Sakka Amitodana*) என்பவரின் பிள்ளை சக்க பாண்டு என்பவர் (*Sakka Pandu*) புத்தரின் மரணத்திற்கு முன் கோசலா நாட்டு மன்னனினால் ஆட்சி மாறப் போகிறது என்பதை அறிந்து கொண்டதும், தன்னுடைய ஆதரவாளர்களை அழைத்துக் கொண்டு கங்கைக் கரையின் மறு பகுதிக்குச் சென்று அங்கிருந்த ஒரு நகரத்திற்கு மன்னனாக முடிசூட்டிக் கொண்டார். அவருக்கு மூன்று மகன்கள் பிறந்தனர்.

அவருடைய கடைசிப் பெண்ணின் பெயர் பத்தகாச்சனா (*Bhaddakaccana*) என்பது. தங்கம் போன்று மின்னிய பேரழகியான அவள் மீது ஆசை கொண்டு அவளை மணம் செய்து கொள்ள விரும்பிய ஏழு மன்னர்கள் பாண்டுவிற்கு பரிசுகளை அனுப்பினர். ஆனால் அந்த மன்னர்களினால் ஆபத்து ஏற்படலாம் என்பதினாலும், அவளுக்கு அங்கு திருமணம் நடந்தால் அவனுடைய ஆட்சி கவிழ்ந்து விடும் என ஜோதிடர்கள் கூறி இருந்ததினாலும் அவளுடன் முப்பத்தி இரண்டு பெண்களை ஒரு கப்பலில் ஏற்றி கங்கை நதியில் அனுப்பி விட்டான். 'எவருக்கு விருப்பமோ அவர்கள் தன்னுடைய பெண்ணை மணந்து கொள்ளலாம்' எனவும் அறிவிப்பு செய்தான். பரிசுகளை அனுப்பிய மன்னர்களினால் கப்பலை கைப்பற்ற முடியவில்லை.

கப்பல் இரண்டாம் நாளன்று மஹாகண்டார நதிக்கரைக்கு

அருகில் இருந்த கோனகமாகா (*Gonagamaka*) என்ற இடத்தை சென்றடைய அங்கு இறங்கியவர்கள் கன்யாஸ்திரீகளைப் போல தம்மை உரு மாற்றிக் கொண்டு அந்த ஊரின் தலை நகரமான உபத்திகசாமா என்ற அந்த ஊரை அடைந்தனர். அவர்களுக்குத் தெரியாமல் தேவதைகள் அவர்களைப் பாதுகாக்க பின் தொடர்ந்து வந்திருந்தனர்.

வந்திறங்கிய அவர்களை ஒரு மந்திரி அடையாளம் கண்டு கொண்டு மன்னனிடம் அழைத்துச் சென்றார். அனைத்து மந்திரிகளும் ஜோதிடர்களுடன் கலந்தாலோசனை செய்து பாண்டுவாசுதேவாவை அவளுக்கு மணமுடித்து வைத்து முடிசூட்ட பாண்டுவாசுதேவாவின் ஆசையும் நிறைவேறியது.

பத்தகாச்சனா மணந்து கொண்டு அவளுடன் வந்திருந்த பெண்களுக்கும் மணமுடித்து வைத்தப் பின் அந்த நகரை பாண்டுவாசுதேவா மிகவும் மகிழ்சியுடன் ஆண்டு வந்தார்.

புத்த பக்தர்களின் மனதில் பேரானந்தம் பொங்கிட வழி வகுத்த கருணா மூர்த்தியின் எட்டாம் பாகமான 'பாண்டுவாசுதேவாவின் முடிசூட்டு விழா' இப்படியாக நிறைவுற்றது.

09: அபய்யா முடிசூடல்

அந்த பட்டத்து இராணி பத்து மகன்களையும் ஒரு மகளையும் பெற்றெடுத்தாள். மூத்த மகனுடையப் பெயர் அபய்யா (*Abhaya*) என்பது. கடைசி மகளுடையப் பெயர் சிட்டியா என்பது. அந்த அரசவைப் பண்டிதர்கள் வருங்காலத்தை கணித்து அந்த பெண்ணுடைய மகன் தன்னுடைய மாமாக்கள் அனைவரையும் கொன்று விட்டு பதவியை கைபற்றுவான் எனக் கூற அது நடக்கும் முன்னரே அவளைத் தாமே கொன்று விடலாம் என அவளுடைய சகோதரர்கள் முடிவெடுக்க அவர்களை , அபய்யா தடுத்து நிறுத்தி விட்டார்.

மன்னனுடைய படுக்கை அறையை ஒட்டினாற்போல் இருந்த ஒரு அறையில் அவளை சிறை வைத்து துணைக்கு ஒரு பெண்ணையும், அவள் எங்கும் தப்பி ஓட முடியாமல் இருக்க பாதுகாப்பிற்கு நூறு வீரர்களையும் வைத்தனர். அவள் தன்னுடைய அழகினால் அனைத்து வீரர்களையும் சுண்டி இழுக்க அவளுக்கு ‘உமாதசிட்டா’(*Ummadacitta*) என அடைமொழிப் பெயர் ஏற்பட்டது.

பட்டக்காச்சனா (*Bhaddakaccana*) ஸ்ரீலங்காவிற்கு சென்றதைக் கேள்விப்பட்ட அவளுடைய சகோதரர்களில் ஒருவரைத் தவிற மற்றவர்கள் பட்டத்து இளவரசியின் யோசனையை ஏற்று அங்கு சென்றனர்.

அங்கு வந்தவர்களை பாண்டுவாசுதேவாவும், அவர்களுடைய சகோதரியும் வரவேற்று உபசரிக்க, அவர்கள் உமாதசிட்டாவின் நிலையை நினைத்து கலங்கியது போல

நடித்து அழுது புலம்பினர். பிறகு ஸ்ரீலங்காவில் அங்கும், இங்கும் சென்று தம் மனதிற்கு பிடித்திருந்த இடத்தில் சென்று தங்கினர். ரமா (**Rama**) என்பவர் இராமகோனாவிலும் (**Ramagona**), உருவிலா, அனுராதா, விஜிதா, திகயு மற்றும் ரோஹன்னா (**Uruvela, Anurädha Vijitagama, Dighayu, and Rohana**) போன்ற மற்றவர்கள் அவரவர் பெயர்களினால் அமைந்த ஊர்களிலும் தங்கினர்.

அனுராதா தாம் தங்கிய இடத்தில் ஒரு அரண்மனையையும், குளத்தையும் கட்டிய பின் அங்கு தங்கினான். அதனிடையே பாண்டுவாசுதேவா தன்னுடைய மூத்த மகனான அபய்யாவை தன் பிரதிநிதியாக முடிசூட்டினார்.

திக்கயூவின் (***Dighayu***) மகனான திகாமணியினி (***Dighagamani***) என்பவர் உமாதசித்தாவின் (***Ummadacitta***) அழகைக் கேள்விப்பட்டு அவளைக் காண உபதிசாகம்மாவிற்கு சென்று அங்கிருந்த மன்னனிடம் சென்றார். அந்த மன்னனும் அவன் மனதை அறியாமல் அவனை தன்னுடைய பிரதிநிதியின் உதவியாளராக நியமித்தான்.

இதனிடையே ஒரு நாள் ஜன்னலருகே நின்றிருந்தபடி வேடிக்கைப் பார்த்துக் கொண்டு இருந்த சித்தா (***Citta***), அங்கிருந்த கமானியை (***Gamani***) எதேற்சையாகப் பார்த்து அவன் மீது காதல் கொண்டு தனக்குக் காவலாக இருந்தவளிடம் அவனைப் பற்றிய விவரம் கேட்டறிந்தாள். அந்த இளைஞன் அவளுடைய மாமனின் மகன்தான் என்ற உண்மை தெரியவர அவர்கள் இருவரின் காதலும் வளர்ந்தது. ஒரு நாள் அவன் எவருக்கும் தெரியாமல் இரவில் உடும்பு

என்ற சுவர் ஏறும் பிராணியை உபயோகித்து அதை சுவர் மீது ஏற விட்டு அதன் மீது கயிற்றை கட்டி ஏணி போல (*hookladder*) பயன் படுத்தி மேலே ஏறிச் சென்று அவளை சந்தித்து வரலானான். நாளடைவில் அவளுடன் உடலுறவும் கொண்டு விட்டான். இப்படியாக அவர்கள் சந்திப்பு எவருக்கும் தெரியாமல் தொடர்ந்தது.

கர்பமுற்றவளின் நிலைக் குறித்த செய்தி அங்கு வேலை செய்பவள் மூலம் அவள் தாயை சென்றடைய அவளும் தன்னுடைய மகளிடம் கர்பம் அடைந்ததின் காரணத்தை கேட்டுத் தெரிந்து கொண்டு சற்றும் தாமதிக்காமல் மன்னனிடம் அது குறித்துக் கூறினாள். தன்னுடைய அமைச்சர்களிடம் நன்கு ஆலோசனை செய்த மன்னனும் அவனுடைய மகளுக்கும் திகாமணி என்ற அந்த இளைஞனுக்கும் திருமணம் செய்து வைக்க முடிவு செய்து விட்டான். அதற்கு ஒப்புக் கொண்ட அவளுடைய சகோதரர்கள் அதற்கொரு நிபந்தனை போட்டனர். 'ஒருவேளை பிறக்கும் குழந்தை ஆணாக இருந்து விட்டால் அதை நாங்கள் கொன்று விடுவோம்'

பிரசவ வேளை வந்ததும் அவளை உள் அறைக்கு அழைத்துச் சென்றனர். அதற்கு முன் அவளுடைய சகோதரர்கள் போட்ட கொடிய சதிக் குற்றத்திற்கு (*ஆண் சிசு கொலைக்கு*) துணை புரிய மறுத்த சித்தா மற்றும் கமானியின் உதவியாளன் காலவேலா (*Kalavela*) என்ற இருவரையும் அந்த இளவரசர்கள் கொன்று விட்டனர். இறந்து விட்ட அந்த இருவரும் யட்சிணிகளாகப் (*yakkhas*) பிறந்து அவளுடைய கருவில் இருந்த குழந்தைக்கு பாதுகாப்பாக இருந்தனர். அதற்கிடையில் சித்தா தன்னுடைய தோழி மூலம் வேறு ஒரு

ஒரு கர்பிணிப் பெண்ணையும் வரவழித்து தன்னுடன் வைத்துக் கொண்டு விட்டாள். ஒரே நேரத்தில் அவர்கள் இருவருக்கும் குழந்தைகள் பிறந்தன. சித்தாவுக்கு ஆண் குழந்தையும், மற.றொரு பெண்ணுக்கு பெண் குழந்தையும் பிறந்து விட்டன. சித்தா அந்த பெண்ணுக்கு ஆயிரம் நாணயம் பணம் கொடுத்து எவருக்கும் தெரியாமல் அவள் குழந்தையை தன் பக்கத்திலும், தன்னுடைய குழந்தையை அவள் பக்கத்திலும் மாற்றி வைத்து விட ஏற்பாடு செய்து விட்டாள். தங்களுடைய தங்கைக்கு பிறந்தது பெண் குழந்தையே என நினைத்து மகிழ்ந்தனர் சகோதரர்கள். பிறந்திருந்த ஆண் குழந்தைக்கு இரு தாயார்களும், அவளுடைய பாட்டியுமாக சேர்ந்து பாண்டுகபாயா (*Pandukabhaya*) என பெயரிட்டனர்.

லங்காவை ஆண்டு வந்த பாண்டுவாசுதேவா முப்பது ஆண்டுகள் ஆட்சியில் இருந்தார். பாண்டுகபாயா பிறந்தவுடன் அவர் மரணம் அடைந்து விட்டார். அவர் மறைவுக்குப் பின்னர் அவருடைய மகன்கள் ஒன்று கூடி ஆலோசனை செய்து அவர்களுடைய சகோதரர்களில் ஒருவரான அபய்யாவுக்கு வெகு விமர்சையாக முடிசூட்டினர்.

புனிதரின் பக்தி மார்கத்தில் இணைந்த புத்த பக்தர்களின் மனதில் பேரானந்தம் பொங்கிட வழி வகுத்த கருணா மூர்த்தியின் ஒன்பதாம் பாகமான 'அபய்யாவின் முடிசூட்டு விழா' இப்படியாக நிறைவுற்றது.

10: பாண்டுகபாயா முடிசூடல்

உம்மாதசிட்டா கூறியது போல பிறந்திருந்த ஆண் குழந்தையை அவளுடைய தோழி ஒரு கூடையில் வைத்து எடுத்துக் கொண்டு துவாரமண்டலாகா (*Dvaramandalaka*) என்ற இடத்திற்குச் சென்று விட்டாள்.

அவள் காட்டின் வழியே சென்று கொண்டு இருக்கையில் அங்கு வேட்டையாட வந்த அரசன் அவளைப் பார்த்து அந்த கூடையில் என்ன இருக்கின்றது என்று கேட்க அவளும் அதில் பணியாரம் உள்ளது என்றும் துவாரகாமண்டலத்தில் உள்ள தன்னுடைய மகளுக்கு அதை எடுத்துச் செல்வதாகவும் கூறினாள். ஆதை நம்ப மறுத்து அதைத் திறந்து காட்டு என அவன் வற்புறுத்த, குழந்தைக்குக் காவலாக கண்ணுக்குத் தெரியாமல் தொடர்ந்து வந்து கொண்டு இருந்த இரு யாக்ககாக்களும் அவனை திசை திருப்ப ஒரு கரடி போல உருவம் எடுத்து கத்தினர். கரடி வந்து விட்டதே என அதை கொல்ல துரத்திக் கொண்டு அந்த மன்னன் ஓடினான். ஆந்த குழந்தையை தூக்கிக் கொண்டு சென்றவளோ வெகு தொலைவு ஓடிச் சென்று அப்போது பிறந்திருந்த ஒரு ஆண் குழந்தையின் பெற்றோரை இரகசியமாக சந்தித்து ஆயிரம் பொன் நாணயம் கொடுத்து அந்த குழந்தையைக் காப்பாற்றுமாறு வேண்டினாள். அந்த ஆட்டிடயனும் (*herdsmen*) தனக்கு இரட்டை ஆண் குழந்தைகள் பிறந்தள்ளது என கூறிக் கொள்வதாகக் கூறிவிட்டான்.

அந்த சிறுவனுக்கு (*பாண்டுகபாயா*) ஏழு வயதான பொழுது

அவன் உயிருடன் உள்ள இடத்தை எப்படியோ தெரிந்து கொண்டு விட்ட அவன் மாமன்கள் அந்த ஆண் குழந்தையை தேடிப் பிடித்துக் கொன்று விடுமாறு ஆட்களை அனுப்பினர். அந்த சிறுவனும் தன்னுடைய நண்பர்களுடன் ஒரு ஏரியில் விளையாடிக் கொண்டு இருக்கையில் அவனைக் கொல்ல அவர்கள் வந்த பொழுது ஏரிக்குள் இருந்த பெரிய மரத்தின் பொந்தில் அவன் (*பாண்டுகபாயா*) மறைந்து கொண்டு தப்பித்து விட்டான்.

அவனைக் கண்டு பிடிக்க முடியாமல் போனவர்கள் அவனுடைய நண்பர்களிடம் அவன் மறைந்திருக்கும் இடத்தைப் பற்றிக் கேட்டாலும் அவர்கள் ஒவ்ஒரு சமயமும் ஒவ்ஒரு பதிலை தந்து வந்தவர்களை திசைத் திருப்பி அனுப்பினர். ஒரு நாள் அந்த அரசனே நேரில் வந்து குழந்தை பாண்டுகபாயாவை தேடிய பொழுது அந்த சிறுவனும் மற்றவர்களும் ஏரிக் கரையில் தங்களுடைய துணிகளை அவிழ்த்து வைத்துவிட்டு ஏரியில் குதித்து விட்டனர். ஆனால் தன்னுடைய துணிகளை கயற்றாமலேயே பாண்டுகபாயா தண்ணீரில் குதித்து மரப் பொந்தில் ஒளிந்து கொண்டான். வந்தவர்கள் நீரில் குதித்து அங்கிருந்த மற்ற சிறுவர்கள் அனைவரையும் கொன்ற பின் ஏரிக்கரையில் போடப்பட்டு இருந்த துணிகளை எண்ணினர். அவை அனைத்தும் தாம் கொன்று போட்டவர்களின் எண்ணிக்கையுடன் ஒத்து இருந்ததினால் அவர்கள்தாம் கொல்ல வந்த குழந்தையை கொன்று விட்டதாக நினைத்துத் ஊருக்குத் திரும்பி விட்டனர். சிறுவன் பாண்டுகபாயா அவர்கள் சென்ற பின் தன்னை வளர்தவர்களிடம் சென்று அவர்களுடைய மடிந்து போன குழந்தைகளுக்காக ஆறுதல் கூறினான். காலம் ஓடியது. அவன் வயது பன்னிரண்டாயிற்று.

சிறுவன் பாண்டுகபாயா இன்னமும் மரணம் அடையவில்லை என்பதை தெரிந்து கொண்ட மாமன்கள் அவனை வளர்த்தவரைக் கொல்ல அவனுடைய வீட்டிற்கு சென்றனர். அந்த நேரத்தில் அந்த ஆட்டு இடையன் ஒரு மானை பிடித்திருந்தான். தன் வளர்ப்பு மகனான பாண்டுகபாயாவை உள்ளுருக்குச் சென்று அடுப்பெறிக்க விறகு வாங்கி வருமாறு அனுப்பி இருந்தான். பாண்டுகபாயாவும் அந்த இடையனின் மகனிடம் அவற்றை எடுத்துக் கொண்டு வந்து கொடுத்து 'என் கால் புண்ணாகி விட்டது. ஆகவே நீ இதை வீட்டிற்கு எடுத்துச் சென்று தந்தையிடம் தந்து விடு. உன் பசிக்கு வறுத்த கறியையும் சாப்பிட முடியும்' என்று கூறி அனுப்பினான். அவன் வீட்டிற்கு சென்றான். ஆதன் பின் அரண்மனையில் இருந்து வந்தவர்கள் இடையனையும், வீட்டில் இருந்த அனைவரையும் கொன்று போட்டு விட்டு பாண்டுகபாயின் மாமன்களுக்கும் செய்தி அனுப்பினர்.

அந்த சிறுவன் பாண்டுகபாயாவுக்கு பதினாறு வயதான பொழுது அவன் இன்னமும் உயிரோடுதான் இருக்கின்றான் என்பதைத் தெரிந்து கொண்ட மாமன்கள் அவனைக் கொல்ல மீண்டும் ஆட்களை அனுப்பியதைத் தெரிந்து கொண்ட அவனுடைய தாயார் ஆயிரம் நாணயத்தை ஒரு சேவகனிடம் தந்து தன்னுடைய மகனை பத்திரமாக வேறு இடத்திற்கு அழைத்து செல்லும்படி அனுப்பினாள். அவனும் அந்த சிறுவனை சந்தித்து அவன் தாயாருடைய செய்தியை தெரிவித்தப் பின் அவனுடன் ஒருவனை துணையாக அனுப்பி அங்கிருந்து வெளியேறச் சொன்னான். பாண்டுலாவில் (*Pandula*), பாண்டுலாகமாகா (*Pandulagamaka*) என்ற இடத்தில் வேதங்களை திறமையுடன் கற்றறிந்திருந்த சிறந்த பண்டிதர் இருந்தார். எங்கெங்கோ சுற்றிவிட்டு அந்த சிறுவனும் அந்த பிராமணரிடம் சென்றான்.

அவனைக் கண்டவர் 'நீ இந்த நாட்டின் மன்னனாகப் போகின்றாய். அதன் பின் எழுபது வருடங்கள் ஆட்சி செய்வாய். ஆகவே நீ அனைத்து கலைகளையும் கற்றுக் கொள்' என்று கூறி அவனுக்கு தான் மட்டும் அல்ல தன்னுடைய மகனான சிப்பம் சமபீட பிரிவை சேர்ந்த கண்டா (*Canda*) மூலமும் பல கலைகளையும் கற்றுத் தந்தார்.

அந்த பண்டிதர் மேலும் அவனுக்கு பெரும் தொகையைக் கொடுத்து படை வீரர்களை திரட்டிக் கொள்ளச் சொன்னார். அதன்படி அவனும் (பாண்டுகபாயா) ஐநூறு படைவீரர்களைத் திரட்டினான். பண்டிதர் ' எந்த பெண் மர இலையைத் தொட அந்த இலைகள் தங்கமாகி விடுமோ அவளை மணந்து பட்டத்து இளவரசியாக்கி, என்னுடைய மகன் கண்டாவை உன் படைத் தலைவனாக்கு' என ஆசிர்வதித்து அந்த படைவிரர்களுடன் பாண்டுகபாயாவை அனுப்பினார். தானே அந்த நாட்டின் அதிபதி என பறைசாற்றிக் கொண்டு கிளம்பியவன் தற்பொழுதைய அனுராதபுரத்தில் இருந்து சுமார் 17 கிலோ மீடர் தொலைவில் உள்ள காசா (Kasa) மலைக்கு அருகில் இருந்த பனா (Pana) என்ற இடத்திற்குச் சென்று படை வீரர்களை எழுநூறாக *(700)* பெருக்கினான். அதன் பின் கிரிகண்டா (Girikanda) என்ற மலைப் பகுதியை அடைந்த பொழுது அவனுடைய படைபலம் ஆயிரத்தி இருநூறாக *(1200)* உயர்ந்திருந்தது.

பாண்டுகபாயாவின் ஒரு மாமனான கிரிகண்டசிவா (*Girikandasiva*) என்பவர் பாண்டுவாசுதேவா கொடுத்திருந்த ஊரில் வரி வசூலித்துக் கொண்டு இருந்தார். ஒரு நாள் அவர் தன்னுடைய ஆட்களுடன் அன்று சதுர அடிகளைப் போன்ற ஒரு வித அளவில் இருந்த வயலை உழுது

கொண்டு இருந்தார். பாலி (*Pali*) என்ற அழகு சொட்டும் அவருடைய மகள் அந்த மன்னனுக்கும் அவருடைய பரிவாரங்களுக்கும் உணவு எடுத்துக் கொண்டு ஒரு வாகனத்தில் வந்து கொண்டு இருந்தாள். அதே நேரத்தில் அங்கு வந்து கொண்டு இருந்த இளவரசன் (*பாண்டுகபாயா*) அவளைத் தடுத்து நிறுத்தி 'நீ யார், எங்கு போகின்றாய் ?' எனக் கேட்க அவளும் தான் வந்த காரணத்தை எடுத்துரைத்தாள். அவளைக் கண்ட உடன் அவள் மீது காதல் வெறி கொண்டவன் தங்களுக்கும் அந்த உணவில் பங்கு வேண்டும் எனக் கேட்டான்.

சற்றும் அஞ்சாத அந்த மங்கையும் வாகனத்தில் இருந்து இறங்கி வந்து ஒரு ஆல மர நிழலில் அனைவரையும்அமர வைத்து இலையில் உணவு பறிமாறினாள். என்ன அதிசயம், அவள் கைபட்டவுடன் இலைகள் அனைத்தும் தங்கமாக மாறின. வந்த இளவரசனுக்கு பண்டிதர் கூறியது நினைவுக்கு வந்தது. அவன் நினைத்தான் ' எனக்கு மாலையிடத் தகுதியான மங்கையை நான் பார்த்து விட்டேன்'. மேலும் அவள் அனைத்து வீரர்களுக்கும் உணவு கொடுத்தும் கொண்டு வந்திருந்த உணவு குறையவில்லை. ஒருவர் மட்டுமே சாப்பிட்ட அளவுக்கு உணவு குறைந்திருந்தது. அதிலிருந்து அவள் பெயர் சௌர்ணபாலி (*Suvannapali*) என மாறியது.

அவ்வளவுதான், சற்றும் பயமின்றி, தன்னை சுற்றிலும் இருந்த பராக்கிர சேனையருடன் அவளைத் தூக்கி தன்னுடைய வாகனத்தில் வைத்துக் கொண்டு வந்தவன் பறந்தான். அதைக் கேட்ட அந்த மங்கையின் தந்தை தன்னுடைய படை விரர்களை அனுப்பி அவளை மீட்க முயல இரு படையினரும்

காலஹநாகரா (Kalahanagara) என்ற கிராமத்துக்கருகில் யுத்தம் செய்தனர். துரத்தி வந்த படை வீரர்கள் தோற்று ஓடினர். அதைக் கேள்விப்பட்ட ஐந்து சகோதரர்களும் இன்னும் ஒரு பெரும் படையை அனுப்பி அவளை மீட்டு வர அனுப்பினர். லோஹிதவாஹகண்டா (*Lohitavahakhanda*) என்ற இடத்தில் நடந்த யுத்தத்தில் பண்டிதரின் மகனான கண்டா வந்த அனைவரையும் கொன்று குவித்தான்.

அங்கிருந்து கிளம்பிய பாண்டுகபாயா கங்கை நதிக்கரை வழியே சென்று மஹாவேலிகங்கா எனும் நதியின் (*Mahawaeliganga*) அருகில் இருந்த டோலா (*Dola*) என்ற மலைக்கருகில் சென்றார். அந்த இடத்தில் அவர் நான்கு வருடங்கள் ஆட்சி செய்து கொண்டு இருந்த பொழுது அவன் அங்கிருப்பதைக் கேள்விப்பட்ட அவனுடைய ஐந்து மாமன்களும், மன்னனை மட்டும் நாட்டில் இருக்கச் சொல்லிவிட்டு (*அவர்களுடைய ஒரு சகோதரர்*) பெரும் படையுடன் துமாரக்கா (Dhümarakkha) என்ற மலைப் பகுதியை அடைந்து தங்களுடைய மருமகனுடன் பெரும் யுத்தம் புரிந்தனர். அவர்களை தன் பக்கத்துப் பகுதிக்கு ஓடும்படித் துரத்தி அடிததவர், அவர்கள் அங்கு சென்றதும் அவர்களை வென்று இரண்டு வருடங்கள் அவர்களுடைய பகுதியை தன்னுடன் இணைத்துக் கொண்டார்.

உபாடிசகாமா (*Upatissagama*) என்ற இடத்திற்கு அவருடைய மாமன்கள் தப்பி ஓடி தங்களுடைய மன்னனுக்கு செய்தியை அனுப்ப அவர் உடனடியாக ஆயிரம் பணத்தை ஒரு தூதுவனிடம் கொடுத்து பாண்டுகபாயாவிடம் அனுப்பி 'நீ பிடித்து வைத்துள்ள பகுதிகளை நீயே எடுத்துக் கொள்,

ஆனால் நதியின் இந்தப் பக்கம் வரக்கூடாது' என்ற செய்தியை அனுப்பினார். அந்த செய்தியைக் கேட்ட ஒன்பது சகோதரர்களும் கொதித்து எழுந்து 'நீ உயிர் வாழ வேண்டும் எனில் உடனடியாக உன்னுடைய ஆட்சியை அவருக்குக் கொடுத்த விடுங்கள், இல்லை என்றால் மரணம்தான் உங்களுக்குக் கிடைக்கும்' என்ற செய்தியை அனுப்பினர். அதைக் கேட்ட மன்னனும் அவரிடம் (*பாண்டுகபாயாவிடம்*) தன்னுடைய ஆட்சியை கொடுத்து விட்டதோடு தன்னுடைய ஒரு சகோதரரான திஸ்ஸா என்பவரை படை தளபதியாக்கிக் கொள்ள வேண்டும் என்ற ஒரு ஒப்பந்தத்தையும் செய்து கொண்டார்.

இந்த தற்காப்பு ஒப்பந்தத்தினால் அபய்யா உபாடிசசாகமாவை இருபது ஆண்டுகள் ஆண்டார். இதற்கிடையே துமாரக்கா (***Dhumarakkha***) மலைப் பகுதியில் நடமாடிக் கொண்டு இருந்த சிடியா (*Cetiya*) என்ற யட்சிணி ஒரு பெண் குதிரைப் போல தன்னை உரு மாற்றிக் கொண்டு அங்கு உலவி வந்தது. அந்த அழகிய பெண் குதிரையைக் கண்ட ஒரு வீரன் மன்னனிடம் சென்று அதன் அழகை விவரித்தான்.

உடனே அந்த மன்னனும் ஒரு கயிற்றை எடுத்துக் கொண்டு அந்த குதிரையை பிடிக்க ஓடி வந்தார். அவர் வரும் தோரணையைக் கண்டு பயந்து போன யட்சிணி தன்னை மறந்து தன்னை மறைத்துக் கொள்ளாமல் அங்கிருந்து ஓடத் துவங்க அவளைத் துரத்திச் சென்றான் மன்னன். அங்கிருந்த ஏரியை ஏழு முறை சுற்றி ஓடினாள், மஹாகங்கா (*Mahaganga*) நதியில் முழுகினாள், வெளியில் வந்தாள், முழுகினாள், வெளியில் வந்தாள் எனப் பலமுறை அப்படி செய்த பின் துமரக்கா

CLICK HERE TO VIEW ENGLISH VERSION

(***Dhumarakkha***) மலைப் பகுதியை ஏழு முறை சுற்றி ஓடிய பினனர் மீண்டும் மும்முறை அந்த குளத்தினை சுற்றி ஓடிவிட்டு கச்சாகாபோர்ட் (***Kacchaka-ford***) என்ற இடத்தினருகில் ஓடிக் கொண்டு இருந்த கங்கையில் குதித்தாள். அவள் எங்கு ஓடிச் சென்றாலும் விடாது அவளை துரத்தி, துரத்தி அவள் பின் ஓடி வந்த மன்னனும் அந்த நதியில் குதித்து அவளுடைய கழுத்தைப் பிடித்துக் கொண்டு நதியில் மிதந்து வந்த இலை ஒன்றை அவன் தன் கைகளால் பற்றியவுடன் அது வாளாக மாறியது. 'உன்னைக் கொல்லப் போகின்றேன்' என அந்த வாளுடன் அவள் மீது பாய்ந்தவரிடம்' என்னைக் கொல்லாதே, விட்டு விடு. உனக்கு இந்த இராஜியத்தை நான் பிடித்துத் தருகின்றேன்' எனக் கதறிக் கூறிய அவளை கயிற்றால் கட்டி, அவளுடைய மூக்கு நுனியில் வாளின் முனையை வைத்து இழுத்துச் செல்ல, அவர் அழைத்துப் சென்ற அனைத்து இடத்திற்கும் மறுப்பு காட்டாமல் சென்றாள்.

அந்த யட்சிணி குதிரையுடன் துமுரக்கா (***Dhumarakkha***) மலைப் பாகுதிக்கு சென்று அந்த இடத்தில் நான்கு வருடங்கள் இருந்தப் பின், அரித்தா (***Arittha***) என்ற பகுதியை அடைந்து ஏழு வருடங்கள் இருந்தவர் யுத்தத்தைத் துவக்க தகுந்த தருமணத்தை எதிர் பார்த்து நின்றான்.

அவருடைய மாமன்களில் அபயா மற்றும் கிரிகண்டசிவா (***Abhaya and Girikandasiva***) என்ற இருவரைத் தவிற எட்டு மாமன்களும் ஒரு படைத் தலைவனின் தலைமையில் பெரும் படையுடன் அரித்தா மலைப் பகுதிக்கு வந்து அவருடைய சைனியத்தை அனைத்துப் பக்கத்தில் இருந்தும் முற்றுகை இட்டனர்.

அந்த யட்சிணின் ஆலோசனைப்படி இளவரசன் பாண்டுகபாயா தூதுவர்களிடம் அரச உடைகளையும், ஆயுதத்தையும் பல பரிசுப் பொருட்களுடன் கொடுத்தனுப்பி, தான் அவர்களுடன் சமாதானமாகப் போகத் தயார் என்ற செய்தியை சொல்லி அனுப்பினார். அவர்களோ பாதுகாப்பைக் கருதி, அவன் தங்களிடம் வந்து சரண் அடைந்தால் மட்டுமே யுத்தம் நிற்கும் எனக் கூறி விட அவரும் அந்த யட்சிணிக் குதிரை முதுகில் ஏறி யுத்த முனைக்குச் சென்றார். அங்கு சென்ற அவரை எக்காளமாக எதிரிப் படையினர் பார்த்துக் கொண்டு நிற்க, குதிரை திடீரென பெரும் கத்தல் போட்டு கனைக்க சற்றும் தாமதிக்காமல் அவள் முதலிலேயே கூறி இருந்தபடி அந்த எதிரிகள் முகாமிற்கு சென்று மாறுவேடத்தில் தங்கி இருந்த சேனையினர் அதிரடியாக எதிரிப் படைகள் மீது பாய்ந்து தாக்கினர். அதை சற்றும் எதிர் பாராத எதிரிகள் கடுமையாக நடந்த தாக்குதலில் நிலை குலைந்து போக எட்டு மாமன்களுடன் வந்த அனைத்துப் படையினரும் மடிந்து வீழ்ந்தனர். அந்த இடத்தில் கிடந்த சடலங்களில் இருந்து விழுந்த எலும்புக் குவியல் மலை போல குவிந்தது. படைத் தளபதி தப்பி ஓடி ஒரு அடர்ந்த பகுதியில் பதுங்கிக் கொண்டான். ஆகவே அந்த இடம் சேனாதிகும்பகா *(Senapatigumbaká)* என்ற பெயர் பெற்றது. யுத்தம் நடந்து எலும்புக் குவியலாக இருந்த இடத்தில் அந்த எலும்புக் குலியலுக்கு மேல் காலலாளி போலக் கிடந்த தன்னுடைய மாமன்களின் எலும்புக் கூட்டைக் கண்ட மன்னன் அந்த இடத்திற்கு லுபுகமாகா *(Labugamaka)* என்ற பெயர் சூட்டினார்.

இப்படியாக பெரும் வெற்றி பெற்ற பாண்டுகபாயா தன்னுடைய பெரிய மாமன் இருந்த அனுராதாவுக்கு கிளம்பிச் சென்றார். வந்தவரிடம் தன்னுடைய நாட்டை கொடுத்து விட்டு அவர்

தனக்கு வேறு ஒரு இடத்தில் வசிக்க ஏற்பாடு செய்து கொண்டாலும், இவருடனேதான் வசிக்க நேரிட்டது. ஜோசியருடைய ஆலோசனையின் பெயரில் அவர் இருந்த கிராமத்திற்கு அருகிலேயே ஒரு நகரத்தை உருவாக்கி அதை தலை நகரமாக்கினார். இருவரும் - அனுராதரான மாமன்-மருமகன்- இணைந்து இருந்த இடமான அதுவே அனுராதபுரம் (*Anuradhapura*) என்ற பெயர் கொண்டது. அது மட்டும் அல்ல அந்த நகரை அனுராதா உருவாக்கியதாலும் அதற்கு அந்தப் பெயர் ஏற்பட்டது. அதன்பின் பாண்டுகபாயா தன்னுடைய மாமன்களின் ஆட்சியில் இருந்த இடங்கள் அனைத்தையும் ஒரே குடையின் கீழ் கொண்டு வந்து அந்த ஊரில் இருந்த புனித ஏரித் தண்ணீரை சுத்தப் படுத்தி சௌர்ணபாலியை பட்டத்து இராணியாக்கிக் கொண்டு தன்னை அந்த இராஜியத்தின் மன்னனாக முடிசூட்டிக் கொண்டார். அது மட்டும் அல்ல கண்டாவை தனது ஆஸ்தான குருவாகவும், மற்றவர்களை அவரவர் தகுதிக்கேற்ப பல்வேறு பதவிகளில் அமர்த்தினார்.

அவனுடைய தாயாருடன் அவனை இணைய வழி வகுத்த மாமன் அபய்யாவை கொல்லாமல், அவரிடம் அந்த நகரின் இரவுப் காவல் பணியை ஒப்படைக்க அதுவே நாகரகுட்டிகா (**Nagaraguttika**-நகரத் தலைவர்) என்ற பெயர் பெற்றது. அது போல அவருடைய மாமனாரான கிரிகண்டசிவாவையும் கொலை செய்யாமல் அவரிடம் கிரிகண்டா நகரப் பொறுப்பைத் தந்தார். அனுராதபுரத்திலிருந்த ஏரியை சுத்தப்படுத்தி, நீர் நிறப்ப வைத்து அவர் வெற்றி பெற்ற பொழுதெல்லாம் அந்த அந்த புனித நீரை பயன் படுத்திக் கொண்டதினால் அதன் பெயர் ஜெயவாபி (*Jayavapi*) என ஆயிற்று. ஆனால் அது தற்பொழுது எங்கு உள்ளது எனத் தெரியவில்லை.

CLICK HERE TO VIEW ENGLISH VERSION

தான் குழந்தையாக இருந்த பொழுது தன்னைக் பாதுகாத்து வந்த யட்சிணி காலவேலாவை *(Kalavela)* கிழக்குப் பகுதியிலும் யட்சிணி சிட்டராஜாவை *(Cittaraja)* அபயா ஏரியின் *(Abhayatank)* கீழ் பகுதியிலும் தங்க வைத்தார். அதுபோல தனக்கு உதவிய மற்றொரு யாக்கினியை நகரின் எல்லைப் பகுதியில் தங்க வைத்தார். மேலும் தனது அரண்மனையில் அந்த யாக்கினியை குதிரைப் போன்ற உருவிலும் வைத்துக் கொண்டார். ஒவ்வொரு வருடமும் அந்த யட்சினிகளுக்கும் மற்ற யட்சினிகளுக்கும் பலி கொடுத்து மகிழ்வித்து வந்தாலும், பண்டிகை தினத்தில் சிட்டராஜாவை தனக்குப் பின்னால் அதே அளவு உயரத்தில் உட்கார வைத்து தேவதைகளும், மக்களும் நடனமாடி கேளிக்கைகள் செய்ததை மனநிறைவோடு பார்த்து மகிழ்ந்தார்.

அபய்யா ஏரியின் நான்கு கரைகளிலும் நான்கு புற நகர்களை உருவாக்கினார், அனைவரும் பயன்படுத்தும் வகைக்கான சுடுகாடு, மரண தண்டனைகளை நிறைவேற்றும் இடம், மேற்கத்தைய குருமாரிணிகள், வேசவனாவில் ஆலமரம், மாலத் தீவுக்களில் பால்மையா மரங்கள் என பலவற்றை அமைத்தார். அதைத் தவிற கிழக்குப் பகுதியில் பலி பீடம், யாக சாலைகள் போன்றவற்றையும் அமைத்தார்.

நகரத்தை சுத்தப்படுத்த ஐநூறு சண்டாளாக்கள் *(candalas),* கழிப்பிடத்தை சுத்தப்படுத்த இருநூற்று சண்டாளாக்கள், இறந்து போனவர்களை தூக்கிச் செல்ல நூற்றி ஐம்மது சண்டாக்கள் மற்றும் சுடுகாட்டுப் பணிக்கென நூற்றி ஐம்பது சண்டாக்கள் என நியமித்தார். அவர்களுடைய பணிகளை தவறாமல் செய்வதற்கும் அவர்கள் வசிப்பதற்கும் சுடுகாட்டின் வட

வட மேற்குப் பகுதியில் கிராமத்தை உருவாக்கினார். சுடுகாட்டின் வடகிழக்குப் பகுதியில் அந்த சண்டாக்களுக்கும் தனி சுடுகாடு அமைத்தார். பாசனா (*Pasana*) மலைக்கும் சுடுகாட்டிற்கும் இடையில் வேட்டைக்காரர்கள் தங்க இடம் அமைத்தார். அங்கிருந்து கிழக்குப் பகுதியில் இருந்த கமானி (*Gamani-tank*) ஏரிவரை துறவிகள் தங்கிக் கொள்ள பல குடில்களையும், கிழக்குப் பகுதியில் நிகங்க ஜோதிகா என்ற பெயரில் நிர்வாண சாமியார்கள் தங்கும் (*nigantha* Jotiya*) இடம் அமைத்தார். அந்த இடத்தில்தான் நிகன்தா கிரி (*nigantha giri*) என்பவர் பல பிரிவுகளைச் சார்ந்த துறவிகளுடன் வசித்து வந்தார். நிகன்தா கும்பந்தாவிற்கு (*Kumbhanda*) அவர் நினைவாக தொழுகை இடமும், வேட்டைக்காரர்கள் தங்கிய இடத்தின் கிழக்குப்புறம் ஐநூறு மாற்று மதக் கருத்துக்கள் கொண்டவர்கள் வசிக்கும் இடமும் அமைத்தார். மேலும் கமானி ஏரியின் பக்கத்தில் ஆண்டிகள் மடம், பிராமணர்கள் தங்க இடங்கள், அஜிவாக்கர்கள் (*äjïvakas*) தங்கும் இடம், நோயுற்றவர்கள் தங்கும் இடம் என பலவற்றையும் அமைத்தார்.

அவர் ஆட்சியில் ஏறிய பத்து ஆண்டுகளில் கிராமங்களில் தடுப்புச் சுவர்கள் எழுப்பப்பட்டன. காலதேவாவும், சிட்டாரஜாவும் அவருக்கு நல்ல நண்பர்கள் ஆயினர். மேலும் பல பூதங்களும் நண்பர்கள் ஆயின. பாண்டுகபாயா மற்றும் அபய்யாக்களுக்கு இடையே சுமார் பதினேழு வருடங்கள் எந்த மன்னரும் இன்றி லங்கா இருந்தது. பாண்டுகபாயா பதினேழு வயதில் ஆட்சிப் பொறுப்பேற்ற பின், அனுராதபுராவையும் எழுபது ஆண்டுகள் ஆண்டார்.

புனிதரின் பக்தி மார்கத்தில் இணைந்த புத்த பக்தர்களின் மனதில் பேரானந்தம் பொங்கிட வழி வகுத்த கருணா மூர்த்தியின் பத்தாம் பாகமான 'பாண்டுகபாயாவின் முடிசூட்டு விழா' இப்படியாக நிறைவுற்றது.

CLICK HERE TO VIEW ENGLISH VERSION

11: தேவனாம்பியதிஸ்ஸா முடிசூடல்

அமைதி நிலவிய நாட்டில் சுவனபாலியின் (*Suvannapäli*) மகனான மூதசிவா (*mutasiva*), அவருடைய தந்தையின் மரணத்திற்குப் பின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். மன்னன் தன்னுடைய ஆட்சி காலத்தில் முன் நீர்த் தேக்கங்கள், குளுமையான, பச்சைப் பசேல் என்ற செடி கொடிகள் அடர்ந்த, பல விதமான பழ மரங்கள், பூக்கள் போன்ற இயற்கை அழகுகள் கொண்ட மாபெரும் தோட்டத்தை அனுராதபுரத்தின் தென் பகுதியில் மஹாமேஹவனா (*Mahameghavana*) என்ற பெயரில் அமைத்திருந்தார். அது மட்டும் அல்ல அந்த தோட்டத்தில் பருவம் தவறாமல் மழை பெய்து அந்த பிரதேசத்தையே குளுமையாக வைத்திருந்தது.

மூதசிவா அறுபது ஆண்டுகள் அனுராதபுரத்தில் ஆட்சி செய்தார். அவருக்கு பத்து மகன்களும், அனுகுலாத்தி மற்றும் சாமனவன்னா (*anukulati, samanavanna*) என்ற சம அழகு மிக்க இரு மகள்களும் இருந்தனர். அவருடைய மகன்களில் இரண்டாமவரான தேவனாம்பியதிஸ்ஸா (**Devanampiyatissa**) என்பவரே அவர்களில் மிக புத்திசாலியாகவும், அனைத்து நற்குணங்களும் பெற்றவராக இருந்தார்.

தந்தையின் மரணத்திற்குப் பிறகு தேவனாம்பியதிஸ்ஸா பதவி ஏற்ற பொழுது பல அதிசயங்கள் நிகழ்ந்தன. பூமிக்கு அடியில் புதைபட்டிருந்த நகைகளும், ஆபரணங்களும் லங்காவின் அனைத்து இடங்களிலும் தாமாகவே பூமிக்கு மேலே மிதந்து வந்தன. கடலில் புதைந்திருந்த கப்பலில் இருந்தும், இயற்கையாகவே தோன்றி கடலில் மூழ்கி இருந்த விலை

CLICK HERE TO VIEW ENGLISH VERSION

மதிப்பற்ற நவரத்தினக் கற்களும், ஆபரணங்களும் கடலுக்கு மேலே மிதந்தன.

சாட்டா (*Chata*) மலைக்கடியில் தெய்வ இரதங்களை இழுக்கப் பயன்படும் பருமனான சணல் கயிற்றைப் போல சுற்றிக் கொண்டு வெள்ளியைப் போல மின்னிய விழுதுகளுடன் கூடிய மூங்கில் மரங்கள் வளர்ந்திருக்க அதை சுற்றி தங்கம் போல் மின்னும் இன்னும் பல செடி கொடிகளும், பல்வேறு வண்ணமிகு பூக்கள் குலுங்கிய செடி கொடிகளும் தோன்றின. கண்களைப் பறிக்கும் வண்ணங்களில் பறவைகள் கூடி அமர்ந்திருந்த மரங்கள் அங்கு இருந்தன. எட்டு வித முத்துக்கள் கடலுக்குள் இருந்து வெளி வந்து மிதந்தன. அதைத் தவிற மாணிக்கம், வைரம், பவளம் என பல்வேறு நவரத்தினக் கற்கள் கிடைத்தன. இவை அனைத்திற்கும் காரணம் தேவனப்பியதிஸ்ஸாவின் மகிமைதான்.

அவற்றைக் கண்டு மகிழ்ந்து போன மன்னன் நினைத்தார் ‘விலை மதிப்பற்ற இவற்றைப் அடைய என்னுடைய நண்பன் தம்மகோசாதான் (*Dhammasoka*) தகுதியானவர்’ இப்படியாக நினைத்தவர் அவை அனைத்தையும் தம்மகோசாவுக்கே அனுப்பி விட்டார். தம்மகோசாவும், தேவனாம்பியதிஸ்ஸாவும் அதுவரை ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொண்டதே இல்லை என்றாலும், இருவரும் மன்னர்கள் என்ற முறையில் நல்ல நண்பர்களாக இருந்தனர்.

தன்னுடைய தூதுவர்களாக மருமகன் மஹாரிட்டா (*Maharittha*), தலைமை அமைச்சர், சேனாதிபதி மற்றும் பொருளாளர் என நான்கு பேரை அவர் அனுப்பினார். அவர்களில் ஒருவரான மஹாரிட்டா என்பவர் அவருடைய

அவருடைய மருமகன். அவர்களிடம் விலை மதிப்பற்ற அத்தனை பொருட்களையும், எட்டு வித முத்துக்கள், வலது பக்கம் சுழியிருந்த சங்கு போன்ற பொருட்களைத் தந்து அனுப்பி இருந்தார். அவர்கள் முதலில் சிலோனின் வடக்குப் பகுதியில் இருந்த ஜம்புகோலா (*Jambukola*) என்ற இடத்தை அடைந்து அங்கிருந்து ஏழு நாட்கள் பயணம் செய்து தாமலிட்டி (*Tamalitti*) என்ற துறைமுகத்தை அடைந்து , அங்கிருந்து இன்னும் ஏழு நாட்கள் பயணம் செய்து பாடலிபுரத்தை சென்றடைந்தனர். அங்கு சென்றவர்கள் தம்மகோசாவிடம் தம்முடைய மன்னன் கொடுத்து அனுப்பி இருந்த அனைத்து பரிசுப் பொருட்களையும் தந்தனர். அவர்களைக் கண்டதும் 'விலை மதிப்பற்ற இவை எதுவுமே நம்மிடம் இல்லை' என்பதால் மனம் மகிழ்ந்த மன்னன் வந்த அந்த நான்கு தூதுவருக்கும் ஐந்தாம் நூற்றாண்டுகளில் அந்த காலத்தில் வந்த விருந்தினர்களை கௌரவிக்கக் கொடுக்கப்பட்டு வந்த அரச பட்டப் பெயர்களை கொடுத்து கௌரவித்தார்.

வந்த தூதுவர்களுக்கு பல பரிசுப் பொருட்களை கொடுத்து கௌரவித்த பின் ஒரு மன்னனின் பட்டாபிஷேகத்திற்கு தேவையான மிகவும் அத்யாவசியமான பொருட்களான கிரீடம், கவரி எருதின் வால் மயிரில் இருந்து செய்த பெரிய கை விசிறி, தலைப்பாகை, தோடுகள், மாலை, நிழற் குடை, வாள், மாலைகள், மஞ்சள் சந்தனம், துவைக்கத் தேவை இல்லாத இரண்டு ஆடைகள், மிக விலை உயர்ந்த கைக்குட்டைகள், நாகர்கள் தயாரித்த அபூர்வ முலிகைத் தைலம், விஷேசமான சங்கில் ஊற்றப்பட்ட அனோட்டட்டா (*Anotatta*) மற்றும் கங்கையில் இருந்து கொண்டு வந்த தண்ணீர், குடம், சிவப்பு மண், தங்க தாம்பாளங்கள், விலை உயர்ந்த பல்லக்கு, தேவ

மூலிகைகள், இளம் மங்கை, பட்டாபிஷேகத்திற்கென அறுபது முறை நூறு வண்டி அரிசி போன்றவற்றை தன்னுடைய பரிசாக அவர்களுடன் சென்ற தன்னுடைய தூதுவர்களிடம் கொடுத்தனுப்பினார். அது மட்டும் அல்ல வந்தவர்களிடம் ' நான் புத்தருடைய தத்துவத்தில் அடைக்கலம் ஆனவன். சாக்காவின் வம்சத்தில் வந்த புனிதருடைய உண்மையான சீடராக இருப்பேன் என சபதம் செய்து கொண்டவன் 'அறிவு ஜீவிகளே, உங்கள் ஆலோசனையை இதயபூர்வமாக ஏற்று உங்களிடம் இத்தனை இரத்தினங்களைக் கொடுத்து அனுப்பி உள்ள என் நண்பரின் பட்டாபிஷேகத்தை மிகச் சிறப்பாக நீங்கள் நடத்தி வைத்து அவரை கௌரவிக்க வேண்டும்' என்று தன் தரப்பில் கேட்டுக் கொண்டு அவர்களை அன்புடன் உபசரித்து வழி அனுப்பினார்.

வந்த இடத்தில் ஐந்து மாதங்கள் தங்கி இருந்தப் பின் மன்னனின் அளவற்ற உபசாரங்களை பெற்று மகிழ்ந்த தூதுவர்கள் விசாக மாதத்தின் (*Vesakha*) முதல் பௌர்ணமியில் அங்கிருந்துக் கிளம்பி பன்னிரண்டு நாட்களில் கங்கை நதியின் வாய் பகுதியில் இருந்த தாமலிட்டி (*Tamalitti*) என்ற இடத்தை அடைந்து, அங்கிருந்து ஜம்புகோலாவுக்குச் சென்று, பதினைந்தாம் நாள் தம் மன்னனை சந்தித்து தம்மகோசா கொடுத்தனுப்பிய பரிசுப் பொருட்களைக் கொடுத்தனர்.

அதன் பின் மாகசீரா (*Maggasira*) மாதத்தில் லங்காவின் மன்னனனுக்கு தம்மசோகா அறிவுறுத்தியபடியே மிக சிறப்பாக பட்டாபிஷேகம் செய்து லங்காவின் வருங்கால நன்மைக்கு வழி வகுத்தனர்.

கடவுளின் நண்பனாக கருதப்பட்ட அந்த மன்னனின் பட்டாபிஷேகம் விசாக மாதத்தில் பௌர்ணமியில் ஒரு பண்டிகைப் போல அனைவரும் கொண்டாடும் விதத்தில் அமைந்து இருந்தது.

புனிதரின் பக்தி மார்கத்தில் இணைந்த புத்த பக்தர்களின் மனதில் பேரானந்தம் பொங்கிட வழி வகுத்த கருணா மூர்த்தியின் பதினொன்றாம் பாகமான 'தேவனாமபியதிஸ்ஸாவின் முடிசூட்டு விழா' இப்படியாக நிறைவுற்றது.

ஓவியர் பார்வையில்
ஸ்ரீலங்காவின் பண்டைய கால மன்னர்களின் தோற்றம்

12: அண்டை நாட்டில் மதமாற்றங்கள்

மூன்றாவது ஆலோசனை சபை மகாநாடு முடிந்ததும், புத்தரின் தத்துவங்களை பரப்பத் துவங்கிய புத்த சமய ஒளி விளக்கான தேரா மொகாலிபுட்டா (*Moggaliputta*) என்பவர் இனி வருங்காலத்தில் பக்கத்து நாடுகளிலும் புத்த சமயத்தைப் பரப்ப வேண்டும் என முடிவு செய்த பின் கார்த்திகா (*Kattika*) மாதத்தில் நான்கு தேராக்களை அங்கும் இங்கும் என பல இடத்திற்கும் அனுப்பினார்.

(*Majjhantika*) காஷ்மீரா என்று அன்று அழைக்கப்பட்ட இன்றைய காஷ்மீர், வடக்கு பஞ்சாப்பில் பெஷாவர் மற்றும் இராவல்பிண்டி நகரங்களுக்கு இடையில் இருந்த அன்றைய கந்தவாவுக்கு (*இன்று கந்தார் எனப்படுவது*) தேரா மாஜ்ஹன்திகாவையும் , மஹாதேவா என்பவரை (*Mahadeva*) மஹிசமண்டலாவிற்கும் (*Mahisamandala*), வனவாசாவிற்கு (*Vanaväsa*) ரக்கிஹிதா (*Rakkhita*) என்ற தேராவையும் , அபரான்தகாவிற்கு (*Aparantaka*) யோனா தம்மராக்கித்தா (*Dhammarakkhita*) என்பவரையும், மஹாதம்மராக்கித்தா (*Mahadhammarakkhita*) என்பவரை மஹாரத்தாவிற்கும் (*Maharattha*), மஹாரக்கித்தா (*Maharakkhita*) என்பவரை யோனாக்கள் இருந்த தேசத்திற்கும் அனுப்பினார். இமயமலை அடிவாரத்து நாடுகளுக்கு தேரா மஜ்ஜிமாவையும் (*Majjhima*), சுவன்னபூமிக்கு (*Suvannabhümi*) சோனா மற்றும் உத்தரா (*Sona and Uttara*) என்ற இரு தேராக்களையும் அனுப்பிய பின் தேராக்களான மஹின்தா (*Mahinda*), இதியா (*Itthiya*), உதியா (*Uttiya*), சம்பலா (*Sambala*) மற்றும் பத்தசாலா (*Bhaddasala*) என்பவர்களை ‘ நீங்கள் லங்கா முழுவதும் விஜயம் செய்து

நம்முடைய புனிதரின் சமயத்தை மேலும் பரப்ப வேண்டும்' என கட்டளை இட்டார்.

அந்த நேரத்தில் காஷ்மீரிலும், வடக்கு பஞ்சாப்பில் உள்ள பெஷாவர் மற்றும் இராவல்பிண்டி நகரங்களுக்கு இடையிலும் இருந்த கந்தரா *(Gandhära)* என்ற பகுதியிலும் இருந்த நாகாக்களின் *(பாம்புக்களின்)* மன்னனான அரவாலா *(Araväla)* என்பவர் தன்னுடைய சக்தியினால் பெரும் மழை பெய்யச் செய்து, வெள்ளத்தை ஏற்படுத்தி விளை நிலங்களில் இருந்த தானியங்களை நாசம் செய்ய வைத்திருந்தார். தேரா மஜ்ஹான்திகா *(Majjhantika)* தன்னுடைய சக்தியினால் ஆகாயத்தில் பறந்து சென்று, அரவலா ஏரியின் பக்கத்தில் இருந்த நதி மீது நடந்தே சென்றார். அதைக் கண்ட மன்னனுடைய சேவகர்கள் உடனே சென்று மன்னனிடம் அந்த வியப்பான செய்தியைக் கூற அவன் கடும் கோபமுற்றான்.

கோபமடைந்த மன்னன் இன்னமும் பெரும் மழை, பயங்கரமாக இடியுடன் கூடிய மின்னல், சூறாவளி, மலைப் பகுதிகள் இடிந்து விழுதல், மரங்கள் வேரோடு சாய்தல் போன்ற இயற்கை சீற்றங்களை செயற்கையாக ஏற்படுத்தி மக்களிடையே பீதியை ஏற்படுத்த முயன்றான்.

ஆனால் தேராவோ தன்னுடைய சக்தியை பயன்படுத்தி அவன் செயற்கையாக ஏற்படுத்திய அனைத்தையும் தடுத்து நிறுத்தினார். அதன் பின் அவனிடம் 'இந்த உலகமே அனைத்துக் கடவுட்களையும் அழைத்துக் கொண்டு வந்து பயமுறுத்தினாலும் இந்த இடத்தில் என்னை ஒன்றும் உன்னால் செய்ய முடியாது. ஓ நாக மன்னனே, இந்த மலையையே

பெயர்த்து, கடலையே வாரி எடுத்து வந்து, ஏன் பூமியையே வெட்டி எடுத்து வந்து என் மீது நீ போட்டாலும் அவை எனக்கு எந்தவிதமான பயத்தையும் ஏற்படுத்தாது. மாறாக நீயேதான் அவற்றினால் பெரும் இழப்பை அடைவாய்' என அவனிடம் கூறினார்.

அதைக் கேட்டு பயந்து போய் சரணடைந்தவனிடம் அவர் புத்த தத்துவங்களை எடுத்துரைத்தார். அது போல இன்னமும் எண்பத்தி நான்காயிரம் பாம்புகளுக்கும் *(84,000)* , யட்சிணிகள் மற்றும் வடக்கு, தெற்கு உலகங்களுக்கு அதிபதியான தத்தரத்தாவிடம் *(Dhataratttha)* சேவகம் செய்து வந்த தேவதைகளான கன்தப்பாக்கள் *(gandhabbas*), மற்றும் விருல்ஹுகா *(Virulhaka)* என்ற இடத்தை ஆண்டு வந்த மகிமைகள் பலவற்றைப் பெற்றிருந்த கும்பாந்தா என்ற பிரிவினருக்கும் *(kumbhandakas)* போதனைகளை செய்தார். ஆனாலும் அவருடைய போதனைகளின் பயனை முதன் முதலாக யட்சிணிகளான பண்டகாவும் *(Pandaka)* அதனுடைய மனைவி ஹரிதாவும் *(Harita)* மட்டுமே அடைந்தனர்.

'பழையவற்றை எண்ணிப் பார்த்து இனி கோபப்படக் கூடாது, பயிர்களை நாசமாக்க நினைக்கக் கூடாது, பூமியில் பிறந்து உள்ளவர்கள் மன மகிழ்ச்சியோடு வாழவே பிறந்திருப்பதினால் அவர்கள் மீது அன்பு செலுத்தி அவர்கள் மகிழ்ச்சியுடன் வாழ உதவ வேண்டும்' என்ற போதனைகளை செய்தார். அவர்களும் அந்த போதனை வழிப்படி நடப்பதாக சபதம் ஏற்றனர். வந்த தேராவை ஒரு பெரிய இரத்தின சிம்மாசனத்தில் அமரச் சொல்லிய பின் அவர் தலைக்கு மேல் தான் படம் எடுத்து விசிறிக் கொண்டு இருப்பது போல நாகர்களின் மன்னன்

காஷ்மீரா மற்றும் கந்தாவில் இருந்து வந்து நாகா மன்னனை வணங்கி நின்றவர்கள், தேராவின் அற்புதங்களைக் கண்டதும் அவரே நாக மன்னனை விட மிக சக்தி வாய்ந்தவர் என்பதைப் புரிந்து கொண்டு அவரை வணங்கி அவர் பாதத்தின் அருகில் சென்று அமர்ந்து கொண்டனர். தம்மாவுடன் அசிவிசுபாமா *(Asivisupama)* என்ற நாக உபதேசத்தை ஒப்பிட்டுக் பேசி அவர்களுக்கு புத்த போதனைகளை விளக்கினார். எண்பதாயிரம் மக்கள் (*80,000*) புத்த சமயத்தை ஏற்றனர். ஒரு லட்சம் பேர் (*1,00,000*) பப்பஜ்ஜா உபதேசத்தை ஏற்றனர். காஷ்மீராவும் கந்தாவும் புத்தா, தம்மா, சங்கமம் என்ற கோஷத்துடன் கூடிய மஞ்சள் நிற துண்டு போர்த்திய புத்த புமியாக மாறியது.

தற்பொழுதைய மைசூர் எனப்படும் மஹிசமண்டலாவிற்குச் சென்ற தேரா மஹாதேவா அங்கு முதுமையில் ஏற்படும் நோய் நொடிகள் மற்றும் யமதர்மரின் கடமை போன்றவற்றை விளக்கும் தேவதுத்தனசுத்தா *(Devadütasuttanta)* என்ற தத்துவ போதனை செய்து நாற்பதாயிரம் மக்களை நல்வழிப்படுத்தி இன்னும் நாற்பதாயிரம் மக்களுக்கு பப்பஜ்ஜா உபதேசம் செய்தார்.

வனவாசாவுக்குச் சென்ற தேரா ஆகாயத்தில் பறந்தவாறே அனாமதகாஸம்யுத்தா *(Anamataggasamyutta)* என்ற போதனைகளை செய்த விழாவில் அறுபதாயிரம் மக்கள் (*60,000*) கலந்து கொள்ள முப்பத்தி ஏழாயிரம் (*37,000*) மக்கள் பப்பஜ்ஜா உபதேசத்தைப் பெற்றனர். ஐநூறு விகாராக்கள் நிறுவப்பட்டன. இப்படியாக அங்கு புனிதரின் சமயத்தை அந்த தேரா வெற்றிகரமாக நிறுவினார்.

தேரா தம்மராக்கிதா *(Dhammarakkhita)* குஜராத்தில்

கத்தியவார், கட்ச் மற்றும் சிந்த் மாகாணத்தில் அன்று இருந்த அபரான்தகா (Aparantaka) என்ற இடத்திற்குச் சென்று அங்குள்ள முப்பத்தி ஏழாயிரம் (*37,000*) மக்களுக்கு அமிர்தம் போன்ற உண்மைகளைக் உள்ளடக்கிய அக்கிக்கண்டஹோபம சுத்தா *(Aggikkhandhopama-sutta)* என்ற நீதிக் கதையை கூறினார். அதன் பின் வசதி பெற்ற நிலையில் இருந்த பல்லாயிரக்கணக்கான குடும்பத்தினர் பப்பஜ்ஜா உபதேசத்தைப் பெற்றனர்.

மஹாதம்மராக்கிதா *(Mahadhammarakkhita)* இன்றைய மஹாராஷ்டிராவில் அன்று மஹாரட்டா *(Maharattha)* என்ற பெயரில் இருந்த இடத்திற்குச் சென்று மஹானாரகதாகாசப்பா *(Mahanaradakassapa)* என்ற ஜாதகா கதைகளைக் கூறி, அவர்களை நல்வழிக்குத் திருப்பிய பின் எண்பத்தி நாலாயிரம் (*84,000*) மக்களுக்கு பப்பஜ்ஜா உபதேசம் செய்தார்.

வடமேற்குப் பிராந்தியத்தில் இருந்த யோனாக்களின் நாட்டிற்கு மஹாரத்திட்டா *(Maharakkhita)* சென்று அங்கிருந்த மக்களுக்கு காலகாரம சூத்தனா (*Kalakarama-suttanta)* என்ற பெயரில் போதனைகள் செய்ய ஒரு லட்சத்தி எழுபதாயிரம் (*1,70,000*) மக்கள் அதை கேட்டு மனமாற்றம் அடைய, சுமார் பத்தாயிரத்துக்கும் (*10,000*) அதிகமானோர் பப்பஜ்ஜா உபதேசம் பெற்றனர். காசபகோட்டா, மூலதேவா, சஹாதேவா மற்றும் துன்டுபிசாரா *(Kassapagotta, Muladeva, Sahadeva, and Dundubhissara)* போன்ற தேராக்களை தன்னுடன் அழைத்துக் கொண்டு இமய மலை அடிவாரத்தில் இருந்த தேசங்களுக்குச் சென்ற மஜ்ஜிமா *(Majjhima)* தம்மகாப்பவட்டனபவட்டனா சுத்தனா *(Dhammacakkappavattana-suttanta)* என்ற பெயரில் தமது போதனைகளை எண்பது கோடி (*80,00,00,000*)

மக்களிடையே பரவ விட்டார். அந்த ஐந்து தேராக்களும் ஐந்து நாடுகளுக்கும் விஜயம் செய்து ஒவ் ஒரு இடத்திலும் ஒரு இலட்ச மக்களுக்கு (*1,00,000*) சம்புத்தரின் போதனைகளில் ஒன்றான பப்பஜ்ா உபதேசத்தைக் கொடுத்தனர்.

பர்மா எனவும், பெங்கால் எனவும், மத்திய இந்தியப் பகுதி எனவும் கருதப்படும் சுவன்னபூமி *(Suvannabhumi)* என்ற இடத்திற்கு சென்றார் தேரா உத்தரா. அந்த சமயத்தில் அந்த நாட்டில் ஒரு சம்பவம் நடந்து கொண்டு இருந்தது. எப்பொழுது அந்த நாட்டு மன்னனின் அரண்மனையில் ஆண் குழந்தைப் பிறந்தாலும், உடனேயே பெண் பூதம் ஒன்று வந்து அந்தக் குழந்தையை விழுங்கி விடும். ஆகவே அங்கு வந்த தேராக்களைக் கண்ட மக்கள் அவர்கள் அனைவரும் அந்த பூதத்தின் ஆட்களே என நினைத்துக் கொண்டு அவர்களை கொலை செய்ய ஓடி வந்த பொழுது அவர்களை தடுத்து நிறுத்திய தேரா, தாம் அமைதி காக்க வந்த மனிதர்கள் என்று கூறி அவர்களுக்கு அந்த பூதத்திடம் இருந்து விடுதலை பெற்றுத் தருவதாக வாக்குறுதி தந்தார். அது போல மீண்டும் ஒரு ஆண் குழந்தை அரண்மனையில் பிறந்த பொழுது அந்தக் குழந்தையை விழுங்க வந்த பூதத்தினைப் விட இரு மடங்கு பெரிய பூதத்தை அந்த தேரா உருவாக்க அதைக் கண்டு பயந்த பூதம் ஓடி ஒளிந்தது.

அதன் பின் அந்த நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்று பிரும்மஜலா *(Brahmajala)* என்ற பெயரில் பிரசங்கங்கள் நிகழ்த்தினார்.

பலரும் அவருடைய போதனைகளைக் கேட்டாலும் அறுபதாயிரம் மக்கள் சமய மாற்றம் அடைந்தனர். பெரிய குடும்பத்தை

பெரிய குடும்பத்தை சேர்ந்த மூவாயிரத்து ஐநூறு ஆண்கள் பப்பஜ்ஜா உபதேசம் பெற்றனர். அதன் பின் அந்த அரச குடும்பங்களில் பிறந்த குழந்தைகளுக்கு சோனுட்டரா *(Sonuttara)* என்ற பெயரும் இணைக்கப்பட்டது. அங்கிருந்த தேராக்கள் அரஹன்தாக்களாக இருந்ததினால் புத்தரைப் போலவே ஞான வழிக்கு செல்லும் ஆத்ம சமாதியான நிப்பனாவை ஏற்று மற்றவர்களுக்கும் வழி காட்டினர்.

புனிதரின் பக்தி மார்கத்தில் இணைந்த புத்த பக்தர்களின் மனதில் பேரானந்தம் பொங்கிட வழி வகுத்த கருணா மூர்த்தியின் பன்னிரண்டாவது பாகமான 'அண்டை நாடுகளில் மத மாற்றங்கள்' இப்படியாக நிறைவுற்றது.

13: மஹின்தாவின் வருகை

தன்னுடைய குருவிடம் போதனை ஏற்று தேராவாக மாறி பன்னிரண்டு வருடத்தில் லங்காவை புத்த சமயத்தில் இணைத்த பெரும் அறிவாளியான மஹின்தா நினைத்தார் 'மன்னன் மூதசிவாவிற்கு வயதாகி விட்டதினால் அவருடைய மகன் இனி ஆட்சிப் பொறுப்பை ஏற்க வேண்டிய தருமணம் வந்து விட்டது'

தன்னுடைய உற்றார் உறவினரையும் தம் சமயத்திற்கு அழைத்து வர வேண்டும் என்பதினால் தன்னுடைய குருவிடமும் மன்னனிடம் இருந்தும் விடை பெற்றுக் கொண்டு இன்றைய உஜ்ஜயினி எனும் தக்கினகிரிக்கு *(Dakkhinagiri)* கிளம்பிச் சென்றார். அவருடன் நான்கு தேராக்கள், சம்ஹமித்தாவின் *(Samghamitta)* மகன், சிறப்பான அம்சங்கள் பெற்றிருந்தவரும் ஆறு வித சித்த சக்திகளையும் பெற்றிருந்த சாமனீர சுமன்னா *(Sumana)* போன்றவர்களையும் அழைத்துச் கொண்டு சென்று இருந்தார். இப்படியாக ஆறு மாதம் கழிந்தது.

அவர் தற்பொழுதைய போபாலுக்கு அருகில் உள்ள குவாலியர் எனும் இடத்தில் இருந்த வேதகிரிக்கு *(Vedisagiri)* சென்று அங்கிருந்த தன்னுடைய தாயார் தேவி *(Devi)* என்பவரை சந்தித்தார். அவருக்கும் அவருடன் வந்தவர்களுக்கும் தாயாரும் மற்றவர்களும் சிறப்பான வரவேற்பு தந்தனர்.

தன்னுடைய தந்தைக்குப் பின் அவன்தியை ஆண்டு வந்த மன்னர் அசோகன் உஜ்ஜயினிக்குப் போகும் முன் வேதகிரிக்கு வந்த பொழுது ஒரு வணிகருடைய புதல்வியான தேவியை கண்டு அவள் அழகில் மயங்கி அவளைத் திருமணம்

செய்து கொண்டார். அவள் உஜ்ஜயினியில் ஆண் மகனாக மஹிந்தாவையும், இரண்டு வருடம் பொறுத்து சங்கமித்தா என்ற மகளையும் பெற்றெடுத்தாள்.

மஹின்தா வோகிரிக்கு வந்த பொழுது அவள் அங்குதான் இருந்தாள். அங்கிருந்த நேரத்தில் தேரா மஹின்தா நினைத்தார் 'என்னுடைய தந்தை பட்டாபிஷேகம் செய்து கொண்ட பொழுது தேவனாம்பியதிஸ்ஸாவும் அதில் கலந்து கொண்டு அவை எப்படி நடைபெறுகின்றன என்பதை அவருடைய தூதுவர்களிடம் இருந்து கேட்டறிந்துள்ளார். அனுராதபுரத்தின் கிழக்கில் உள்ள ஜெட்டா *(Jettha)* மாதத்தில் மிஸாக மலை மீது *(Missaka-mountain)* ஏறப்போகும் அன்று *(தண்ணீர் திருவிழா)* அந்த அற்புத தீபகற்பமான ஸ்ரீலங்காவிற்கு நாமும் செல்ல வேண்டும்'

மஹின்தாவை வழியில் சந்தித்த தேவர் தலைவன் இந்திரா கூறினார் ' லங்காவை சென்றடைந்து அதை புத்த பூமியாக மாற்றுவாய் என முதலிலேயே சம்புத்தர் கூறி உள்ளார். உனக்கு நாங்களும் அங்கு வந்து உதவுவோம்'

'தேராவிற்கு அடுத்த பிறவி இனி கிடையாது, அவர் தெய்வமாகி விடுவார்' என நம்பிய தேவியின் சகோதரியுடைய பாண்டுகா *(Bhanduka)* என்ற ஒரு மகன், தேரா மஹிந்தா தம் குடும்பத்தினருக்கு போதித்தவற்றை கேட்டப் பின் அவருடனேயே இருக்கலானார்.

அந்த தேராவுடன் ஒரு மாதம் இருந்தப் பின் ஜெட்டா மாதத்தில் அரச விழா நடக்க இருந்த தினத்தில் மஹிந்தா

மஹிந்தா தன்னுடைய விஷேச சக்தியை உபயோகித்து தன்னுடன் நான்கு தேராக்கள், சுமன்னா மற்றும் தன்னுடைய சிஷ்யரான பாண்டுகாவை அழைத்துக் கொண்டு ஆகாயத்தில் பறந்து வந்து மிசாக மலையின் சிலா உச்சி *(Sila-peak)* மீது இருந்த அம்பத்தாலா *(Ambatthala)* என்ற இடத்தில் இறங்கினார்.

புத்தர் தான் மரணம் அடையும் முன்னரே லங்காவிற்கு இவர் மூலமே நற்கதி கிடைக்க உள்ளது என அவரை அடையாளம் காட்டி இருந்தார். மேலும் லங்காவின் தெய்வங்கள் அனைவராலும் புகழ்ந்து பாராட்டப்பட்டவர் தேரா மஹிந்தா. அவர் லங்காவிற்கு விமோசனம் தரவே அங்கு வந்து இறங்கினார்.

புனிதரின் பக்தி மார்கத்தில் இணைந்த புத்த பக்தர்களின் மனதில் பேரானந்தம் பொங்கிட வழி வகுத்த கருணா மூர்த்தியின் பதிமூன்றாம் பாகமான ‘மஹின்தாவின் வருகை’ இப்படியாக நிறைவுற்றது.

14: தலைநகர் விஜயம்

தேவனாம்பியதிஸ்ஸா தன்னுடைய நாட்டில் வசிப்பவர்களின் மகிழ்சியோடு இருக்க வேண்டும் என்பதற்காக தண்ணீர் திருவிழா என்ற ஒரு உற்சவத்தை மிசாக மலை *(Missaka-mountain)* மீது நடத்த ஏற்பாடு செய்திருந்தார். அவருடன் நாற்பதாயிரம்போகள் (*40,000*) அந்த மலைக்குப் பயணம் செய்தனர். அந்த மலையில் இருந்த தேவர்கள் அந்த மன்னனை தேராவிடம் அழைத்துச் செல்ல வேண்டும் என விரும்பியதினால் கவரி மான்கள் *(elk-stag)* போல தம்மை உருமாற்றிக் கொண்டு அந்த மன்னன் இருந்த இடத்தை சென்றடைந்து அவன் பார்வையில் படுமாறு அங்கிருந்த வனத்தில் மேய்ந்து கொண்டு இருந்தனர். அந்த மான்களைக் கண்டவன் அவற்றை அம்பு எய்து கொல்ல மனம் இன்றி அவற்றை பிடிக்க நினைத்து அவற்றைத் துரத்திச் சென்றான். அந்த மான்களும் தேரா இருந்த இடம்வரை ஓடிச் சென்று மன்னனின் பாரர்வையில் தேரா விழுந்ததும் மறைந்து விட்டன.

தேரா நினைத்தார் ‘என்னுடன் வந்துள்ள இந்த கூட்டத்தை மன்னன் பார்த்து விட்டால் பயந்து விடுவார்’. அதற்கேற்ப அந்த தேராவைக் கண்டே மன்னன் பயந்து போய் நின்றார். ‘இங்கே வா திஸ்ஸா’ என தன்னை பெயர் சொல்லி அவர் அழைத்ததைக் கண்ட திஸ்ஸா நினைத்தார் ‘இவர் யட்சிணியாக இருப்பாரோ ? ஆனால் தேரா அவரை நோக்கி ‘பயப்படாதே மன்னா, நாங்கள் சாமன்யர்கள். உண்மையின் சீடர்கள். உன் மீது கருணைக் கொண்டு ஜம்புதீபாவில் இருந்து இங்கு வந்துள்ளோம்’ என்றார். அந்த மன்னனுக்கு தன்னுடைய

நண்பன் சாமனர்களைப் பற்றிக் கூறிய பழைய நினைவுகள் எழுந்தன. மனதில் இருந்த பயம் விலகியது. தன்னுடைய ஆயுதங்களைக் கீழே வைத்து விட்டு அவரை வணங்கிய பின் அவர் எதிரில் சென்று அமர்ந்தார்.

அவர் அமர்ந்ததும் அந்த தேராவுடன் வந்திருந்து அதுவரை கண்களுக்குப் புலப்படாமல் இருந்த மற்றவர்களும் அவர் முன் தோன்றினர். அவர்களைக் கண்டு பயந்தவர் ‘இவர்கள் அனைவரும் இங்கு எப்பொழுது வந்தனர்?’ எனக் கேட்டார். அதற்கு தேரா கூறினார் ‘அவர்கள் என்னுடன்தான் வந்திருந்தனர்’ அதைக் கேட்ட மன்னன் ‘ அப்படி என்றால் ஜம்புதீபாவில் இன்னும் பல துறவிகள் உள்ளனரா’ என தேராவிடம் வினவ, ‘மூன்று வேதங்களையும் கற்றறிந்த, பல சித்திகளைப் பெற்றுள்ள, ஒருவரை பார்த்த மட்டிலேயே அவர் மனதை புரிந்து கொள்ளும் ஆற்றல் மிக்க, தேவர்களுடைய செவிகளைப் போன்றதை பெற்றுள்ள மஞ்சள் நிறத் துண்டு அணிந்தவர்களினால் ஜம்புதீபா சூழப்பட்டு உள்ளது. அவர்கள் அனைவரும் புத்தரின் சீடர்கள்’ எனக் கூறினார்.

‘நீங்கள் அனைவரும் இந்த இடத்திற்கு எப்படி வந்தீர்கள்?’ என மன்னன் வினவ ‘தரை மார்கமாகவோ, இல்லை தண்ணீர் மீதோ பயணம் செய்து நாங்கள் இங்கு வரவில்லை’ என்று தேரா கூற அப்படி என்றால் அவர்கள் ஆகாயத்தில் பறந்து வந்திருக்க வேண்டும் என்பதை புரிந்து கொண்டார் மன்னர்.

அந்த மன்னனின் அறிவாற்றலை சோதிக்க எண்ணிய தேரா மன்னனிடம் கேள்விகள் கேட்க அவரும் பதில் கூறினார்.

ஒரு மரத்தை சுட்டிக் காட்டிய தேரா ' மன்னா, இந்த மரத்தின் பெயர் என்ன ?' என்றார்.

'இது மாமரம்' என்றார் மன்னர்.

'இதைத் தவிற வேறு மாமரம் உள்ளதா ?' என்றார் தேரா.

'இங்கு பல மாமரங்கள் உள்ளன' என்றார் மன்னர்.

'மாமரங்களைத் தவிற வேறு மரங்கள் உள்ளனவா ?' என்று கேட்டார் தேரா.

'இந்த மாமரத்தைத் தவிற மாமரமற்ற வேறு பல மரங்களும் உள்ளன' என்றார் மன்னர்.

'வேறு பல மரங்களும் உள்ளனவா ? மற்ற மாமரத்தைத் தவிற வேறு பல மரங்களும் உள்ளனவா' என மீண்டும் கேட்டார் தேரா.

'இந்த மாமரத்தைத் தவிற என்று சொன்னேன்' என்றார் மன்னர்.

'நீ உண்மையில் சிறந்த அறிவாளிதான்' என்றார் தேரா

'மன்னா உனக்கு உற்றார் உறவினர் உள்ளனரா? என்று கேட்ட தேராவிடம் 'நிறையவே உள்ளனர் ஐயா' என்றார் மன்னர்.

'உறவினர் அல்லாதோரும் உள்ளனரா ? எனக் கேட்ட தேராவிடம் 'என் உறவினர்களைத் தவிற அதிக எண்ணிக்கையில் உறவினர் அல்லாதோரும் உண்டு' என்றார் மன்னர்.

'உற்றார் உறவினர் மற்றும் உறவினர் அல்லாதோரைத் தவிற வேறு எவரும் உண்டா? எனக் கேட்ட தேராவிடம் ' ஏன், நான் இருக்கின்றேன் ஐயா' என்ற மன்னனை 'நல்லது. நீ உண்மையில் சிறந்த அறிவு ஜீவீ' எனப் பாராட்டினார் தேரா.

CLICK HERE TO VIEW ENGLISH VERSION

அந்த மன்னன் உண்மையிலேயே சிறந்த அறிவாளி என்பதைத் தெரிந்து கொண்ட தேரா அவருக்கு குலஹத்திப்பாடுபாமசூத்தனா (*Cülahatthipadüpamasuttanta*) என்ற சூத்திரத்தை போதிக்க அந்த மன்னனுடன் வந்திருந்த நாற்பதாயிரம் பேரும் அவரிடம் சரணடைந்தனர்.

அன்று மாலை மன்னனுக்கு உணவு வந்தது. ஆனால் பிக்குக்கள் அப்பொழுது உணவு சாப்பிட மாட்டார்கள் என நினைத்த மன்னன் எதற்கும் கேட்டு விடலாம் என எண்ணிச் அவர்களை உணவருந்த அழைத்த பொழுது அவர்கள் தாம அந்த நேரத்தில் சாப்பிட மாட்டோம் என மறுத்து விட்டனர்.

அப்பொழுது சாப்பிட முடியாது எனக் கூறிய பின் தாம் உணவு அருந்தும் நேரத்தை மன்னனிடம் கூறினர். அதனால் அவர்களை நகருக்குள் செல்லலாமே என மன்னன் அழைத்தார்.

'இல்லை மன்னா, நாங்கள் இப்போதைக்கு இங்கேயே இருக்கின்றோம்' என பிட்குக்கள் கூறிவிட்டனர்'.

'அப்படி என்றால் இந்த இளைஞரையாவது என்னுடன் அனுப்புவீர்களா' என பாண்டுவைக் காட்டிக் கேட்டார் மன்னர்.

'இந்த இளைஞர் தான் செல்ல வேண்டிய பாதையை அறிந்து கொண்டு விட்டார். ஆகவே அவருக்கு நாங்கள் பப்பஜ்ஜா உபதேசத்தை செய்ய வேண்டி இருப்பதினால் அவர் எங்களுடன்தான் இருக்க வேண்டும். அவருக்கு பப்பஜ்ஜா உபதேசத்தை போதிக்க தேவையானவை தயாராக வைக்கப்பட்டு உள்ளதினால் இருப்பதினால், நீ கிளம்பிச் செல் ' என அந்த மன்னனிடம் கூறி விட அவரும் ' அப்படி என்றால் நான் நாளைக்கு ஒரு வண்டியை அனுப்புகின்றேன். அதில் ஏறி

நீங்கள் அனைவரும் என் நாட்டிற்கு வவர வேண்டும்' என அன்புக் கட்டளை இட்ட பின் பாண்டுவை தனியே அழைத்துச் சென்று அந்த தேராக்கள் வந்த விஷயம் பற்றி கேட்டறிந்து கொண்டார். அவரும் அந்த மன்னனுக்கு அனைத்தையும் கூறினார். அப்பொழுதுதான் அந்த மன்னருக்கு வந்துள்ளவர்கள் மனிதப் பிறவிகள்தான் , தான் முதலில் எண்ணியதைப் போல அவர்கள் மாயப் பிறவிகள் அல்ல, அவர்களுடைய வருகை தமக்கு நன்மை தர உள்ளது என்பதை அறிந்து கொண்டு மன மகிழ்ச்சி அடைந்தார். அவர் சென்றதும் பாண்டுகாவிற்கு பப்பஜ்ஜா மற்றும் உபசம்பாதா உபதேசங்களை அந்த கிராமத்துக்குள்ளேயே, பிட்குக்களுக்கு மத்தியிலேயே தேரா செய்வித்ததின் காரணம் அதைப் பெற்றுக் கொண்டவுடன் பாண்டுகா அரஹன்தாகி விடுவார் என்பதனால்தான்.

அதற்குப் பிறகு சாமனேர சுமன்னாவிடம் 'தம்மாவை போதிக்கப் போகும் நேரத்தை அறிவிக்குமாறு தேரா கூற எந்த பகுதி வரை அந்த செய்தியை தாம் பரப்ப வேண்டும் என்று கேட்டவரிடம், தாம்பபன்னி முழுவதும் அது கேட்கப்பட வேண்டும் என்று கூறியவர் தம்மா துவங்க இருக்கும் நேரத்தை தம்முடைய விஷேச சக்தியைக் கொண்டு தாம்பபன்னி முழுவதும் அது கேட்கப்படும் அளவுக்கு உரத்த குரலில் அறிவித்தார்.

அப்பொழுது அம்பத்தாலா *(Ambatthala)* என அழைக்கப்படும் நகரில் இருந்த நாககாட்டுக்கா (*Nagacatukka*) என்ற ஒரு இடத்தில் மன்னன் இருந்தான். உரத்த குரலில் வெளியான தேராவின் அறிவிப்பு அவன் இருந்த இடத்திலும் எதிரொலித்தது. அந்த அறிவிப்பாளருடைய குரல் எவருடையது எனத் தெரியாமல் பயந்து போய் எதாவது தீய சம்பவம் தன்

நாட்டில் நடக்கப் போகின்றதா என தேராவிடம் கேட்டு அனுப்பினார். அதற்கு அவர் 'எந்த தீமையும் நாட்டில் விளையப் போவது இல்லை. மாறாக சம்புத்தரின் சடயத்தை அனைவரும் ஏற்கப் போகும் காலம் வந்து விட்டது என்பதை அறிவிக்கவே அந்த செய்தி அனைத்து இடங்களையும் சென்றடையும் வகையில் அறிவிக்கப்பட்டது எனக் கூறி அனுப்பினார்.

சாமனேராவின் அந்த அறிவிப்பைக் கேட்ட புமித்தாயும் அந்த செய்தியை பிரும்மனின் சுவர்கலோகம் வரை எதிரொலிக்கும்படி செய்தாள். அதைக் கேட்ட தேவர்களும் அந்த ஆன்மீக அமைதி என்ற போதனையான சுாமசிட்ட சுத்தானாவை (*Samacitta-vagga*) கேட்க விரைந்து வந்தனர்.

எண்ணிலடங்காத தேவர்களும் அந்த சமய போதனையை கேட்டனர். அது போல எண்ணற்ற நாகாக்களும், சுபன்னா (*supannas*) என்ற பிரிவினரும் புத்தருடைய சமயத்தில் (மதம்) இணைந்தனர். சரிபுட்டா (*Sariputta*) என்பவர் அதை போதிக்க மஹிந்தா மூலம் தேவர்களும் அதை கேட்டறிந்தனர்.

மறுநாள் காலை மன்னன் ஒரு வண்டியை அனுப்பி இருந்தார். வண்டியோட்டி அவர்களிடம் சென்று 'வண்டியை எடுத்து வந்துள்ளேன். இதில் உங்கள் அனைவரையும் ஏற்றிக் கொண்டு நகருக்கு அழைத்து வருமாறு மன்னர் கூறி உள்ளார்' என்று கூற அவர்கள் வண்டியில் ஏற மறுத்து விட்ட பின் 'நீ போ, நாங்கள் பின்னால் வருகின்றோம்' என்று கூறீ தமது சக்தியை பயன்படுத்தி வானத்தில் பறந்து சென்று முதல் ஸ்துாபி அமைந்திருந்த நகரின் கிழக்குப் பகுதிக்குச்

சமீபத்தில் சென்று இறங்கினர். அதனால் அந்த பகுதிக்கு முதலாவது இடம் என அர்த்தம் தந்த 'பதம செட்டியா' *(Pathamacetiya)* என்ற பெயர் ஏற்பட்டது.

வந்திருந்த தேராக்களின் மகிமைகளைப் பற்றிக் கேள்வியுற்ற அரச குடும்பத்துப் பெண்கள் தாமும் அவர்களை சந்திக்க வேண்டும் என விரும்பியதினால் அவர்கள் தேராவை தரிசிக்க வசதியாக இருக்குமாறு வெள்ளை துணிகளினால் அலங்கரிக்கப்பட்டு, பூ மாலை தோரணங்கள் கட்டப்பட்ட அற்புதமான திடலை அரண்மனை வளாகத்திற்குள் அமைத்தார்.

தேராக்கள் எவரும் உயரமான ஆசனங்களில் *(நாற்காலி போன்றவை)* அமர மாட்டோம் எனக் கூறி இருந்ததினால் அவர்களை எப்படி அமரச் செய்வது என்ற யோசனையில் இருந்த மன்னனிடம் தேராக்கள் ஏற்கனவே வந்து விட்ட விவரத்தை வண்டியோட்டி வந்து கூற, அவரும் உடனே விலை உயர்ந்த இரத்தினக் கம்பளங்களை வரவழைத்து அதைக் கீழே விரிக்கச் சொல்லி தானே தேராவிடம் சென்று பண்டைய கால மரியாதைக்குறிய பழக்கத்தின்படி அவருடைய கையில் இருந்து பிட்சை பாத்திரத்தை வாங்கி எடுத்துக் கொண்டு அவர்களை உள்ளே அழைத்து வந்தார்.

அந்த வைபவத்தைக் கண்ட ஜோதிடர்கள் 'வந்துள்ள பிட்புக்கள் அமருவதற்காக வரவில்லை. அவர்கள் இந்த பூமியை தமது சமய ஆதிக்கத்தின் கீழ் வைக்கவே வந்துள்ளனர்' என்றனர். அவர்களை அரண்மனைக்குள் அழைத்துச் சென்ற மன்னன் அவரவர் தகுதிக்கேற்ற

ஆசனங்களில் *(இடத்தில்)* அமரச் செய்த பின் அவர்களுக்கு அரிசியில் செய்த உணவும் மற்ற உணவையும் கொண்டு வந்து தானே பரிமாறினார். அவர்கள் உணவு அருந்தி முடித்ததும் அவர்கள் பாதத்தின் கீழ் தான் சென்று அமர்ந்து கொண்டு, தன்னுடைய இளைய சகோதரரின் மனைவி அனுலா *(Anulä)* என்பவரையும், தன்னுடைய அரண்மனையில் தனக்குக் கீழ் இருந்த மன்னனான மஹானஹாவையும் *(Mahanaga)* அழைத்து வரச் சொன்னார். அனுலா தன்னுடன் ஐநூறு பெண்களை அழைத்து வந்து அவர்களை வணங்கிய பின் ஒரு ஓரமாகப் போய் நின்றாள். ஒருவர் செய்யும் தீமைகளுக்கு ஏற்ப அவரவர் அடையப் போகும் நரக வாழ்வைப் பற்றிக் கூறும் பீடலாட்டு *(Petavatthu)* மற்றும் அவரவர் செய்யும் நன்மைகளுக்கு ஏற்ப அவர்கள் பெறும் பெறும் சுவர்க வாழ்வைப் பற்றிக் கூறும் விமானவாத்து *(Vimänavatthu)* என்பவற்றை போதித்தார். அதனால் அந்தப் பெண்கள் ஆன்மீக மார்கத்தின் முதல்படியில் ஏறினர்.

அந்த தேரா பெற்றிருந்த அற்புத சக்தியைப் பற்றியும், தாம் பெற்ற போதனைகளின் சாரத்தையும் மற்றவர்களுக்கும் அவர்கள் கூற, நகரத்தில் இருந்த அனைவரும் அவரை தரிசிக்க வேண்டும் என்று விரும்பி அரண்மனை வாயிலுக்கு வந்து கலவரம் போன்ற நிலைமையை ஏற்படுத்தினர். அதைக் கேள்விப்பட்ட அரசனும் போதிய இட வசதியற்ற அந்த இடத்தில் தேராவை தரிசிக்க வருபவர்கள் சிரமத்திற்கு ஆளாவார்கள் என்பதால் யானைகள் கோட்டத்தை சுத்தப் படுத்தி அந்த இடத்தில் அவர்கள் தரிசனம் பெற ஏற்பாடு செய்து கொள்ளலாம் என கட்டளை இட்டார். அதன்படி யானைகள் தங்குமிடம் சுத்தப்படுத்தப்பட்டு ஆசனங்கள் போடப்பட்டு அனைத்துத் தேராக்களின் தகுதிக்கேற்ப

அவரவர்கள் அமர வைக்கப்பட்டனர். அதன் பின் தேரா அங்கு சென்று தம் ஆசனத்தில் அமர்ந்து கொண்டப் பின் அவர்களில் முதியவரும் அனுபவசாலியுமான ஒரு தேரா மிகவும் ஆனந்தத்தைத் தரும் தேவதுாத சுத்தனா *(Devadüta-suttanta)* என்பதைப் பற்றி எடுத்துரைக்க நகரில் இருந்து வந்த பெருவாரியான மக்கள் ஆனந்தக் கடலில் முழ்கினர். ஆயிரக்கணக்கானோர் ஆன்மீக மார்கத்தின் முதல்படியில் ஏறினர்.

அந்த தேராவிற்கு இணையாக ஒருவரும் இல்லாத அந்த பூமியில் தன்னுடைய குருவைப் போலவே லங்காவின் இரு இடங்களில் சமய போதனைகள் செய்து அங்கிருந்த மக்களின் நல்லெண்ணத்தைப் பெற்றார்.

புனிதரின் பக்தி மார்கத்தில் இணைந்த புத்த பக்தர்களின் மனதில் பேரானந்தம் பொங்கிட வழி வகுத்த கருணா மூர்த்தியின் பதினாலாம் பாகமான ‘ தலைநகர் விஜயம்’ இப்படியாக நிறைவுற்றது.

15: மஹாவிஹாரா ஏற்பு

யானைத் கோட்டமும் மிகவும் சிறியதாக இருந்ததினால் உற்சாக மிகுதியினால் அங்கு வந்திருந்த மக்கள் அரண்மனை தோட்டத்தில் இருந்த இயற்கை அழகு மிக்க, குளுமையான நந்தனா தோட்டத்தின் *(Nandana-garden)* தெற்குப் பகுதியில் தேராக்கள் அமர ஒரு இடத்தை சுத்தம் செய்து கொடுக்க தேராக்கள் அந்த இடத்திற்குச் சென்று அமர்ந்தனர். அங்கு வந்திருந்த வசதி படைத்த குடும்பத்தை சார்ந்த பல பெண்களும் தேராக்களின் காலடிப் பக்கத்தில் சென்று அமர்ந்து கொண்டனர். முட்டாளும் அறிவாளியும் *(discourse of the fool and the wise man)* என்று அர்த்தம் தரும் 'பாலபாண்டித சுத்தனா'*(Balapandita-suttanta)* என்ற சூத்திரத்தை தேரா அவர்களுக்கு உபதேசிக்க சுமார் ஆயிரம் பெண்கள் அதை ஏற்றனர்.

அது முடிந்ததும் 'நாங்கள் திரும்ப மலைக்கு திரும்புகின்றோம்' என தேராக்கள் கூறினர். அதைக் கேட்ட மன்னன் உடனே ஓடி வந்தான். ' இது மாலை நேரம் அல்லவா. அந்த மலை வெகு துாரத்தில் உள்ளதே. இந்த நந்தனா தோட்டம் குளுமையாக உள்ளதினால் இங்கு இளைப்பாறி விட்டு செல்லலாமே' என மன்னன் கூற அவர்களோ ' நாங்கள் நகரத்தின் அருகில் இருப்பதை விரும்பவில்லை' என்று கூறி விட்டனர். அதற்கு மன்னன் அவர்களிடம் '. மஹாமேஹ பூங்கா *(Mahamegha-park)* என்ற ஒரு இடம் உள்ளது. அது இங்கிருந்து வெகு தொலைவிலும் இல்லை, அதே சமயம் மிக அருகிலும் இல்லை. இயற்கை அழகு சொட்டும், மனதிற்கு இனிமையும்

இடமான அங்கு தண்ணீர், இளைப்பாற மர நிழல் தரும் பல இடங்களும் உள்ளன. அது உங்களுக்குப் பிடித்த இடம் என்றால் அங்கு சென்று நீங்கள் இளைப்பாறுங்கள்' என்றார். அதைக் கேட்ட தேராக்கள் அந்த இடத்திற்கு கிளம்பிச் சென்றனர். கடம்பா நதிப் பக்கத்தில் *(Kadamba-river)* அவர்கள் சென்று தங்கிய அந்த இடம் நிவத்த சிடியா *(Nivatta-cetiya)* என்று அழைக்கப்பட்டது.

நந்தனா தோட்டத்தின் தென் பகுதியில் இருந்துக் கிளம்பி கிழக்குப் புறம் சென்று அந்த பூங்காவில் அவர்களை தங்க வைத்தப் பின் 'இந்த இடத்தில் வசதியாக இளைப்பாறுங்கள்' என கூறிவிட்டு விட்டு தன் தன்னுடைய அமைச்சர்களுடனும் பரிவாரங்களுடனும் அரண்மனைக்குத் திரும்பினார் மன்னன். அதற்கு முன் அந்த இடத்தில் அவரவர் தகுதிக்கேற்ப அவர்களுக்கு படுக்க இருக்கைகளும், அமர ஆசனங்களையும் வைத்திருக்க ஏற்பாடு செய்திருந்தார். தேராக்கள் அந்த இடத்தில் அன்று இரவு தங்கினர்.

மறு நாள் காலை அங்கு சென்ற மன்னன் அவர்ளுக்கு பலவிதமான பூக்கள் கொடுத்து உபசரித்து வணங்கிய பின் 'இந்த இடம் உங்களுக்குப் பிடித்திருந்ததா ? இது உங்களுக்குத் தகுதியான இடமா தோன்றுகின்றதா' எனக் கேட்டார்.

'மன்னா, துறவிகள் தங்க சரியான இடம் இது , இந்த இடம் எங்களுக்கு மன நிறைவைத் தந்தது' என்றனர் தேராக்கள்.

'தோப்புக்களை ஏற்றுக் கொள்வதில் சகோதரர்களுக்கு

CLICK HERE TO VIEW ENGLISH VERSION

ஒப்புதல் உண்டா' என்று கேட்ட மன்னனிடம், எது ஏற்கக் கூடியது , எது ஏற்க கூடியதல்ல என்பதை நன்கு உணர்ந்திருந்த தேரா 'அதை ஏற்பதில் தவறு இல்லை'. என கூறினார். இராஜகாஹா *(Rajagaha)* என்ற இடத்தில் இருந்த வேலுவனா (*Veluvana*) மூங்கில் தோப்பை *(Bamboo-grove)* மகாதா நாட்டு மன்னன் முன் ஒரு முறை புத்தருக்கு வழங்கிய பொழுது அதை அவர் ஏற்றுக் கொண்டிருந்தார் என்பதினால் அவர் அப்படி கூறி இருக்கலாம்! அதைக் கேட்ட அனைவரும் மிக்க மகிழ்ச்சி அடைந்தனர்.

அந்த மன்னனுடன் வந்திருந்த வந்திருந்த அனுலா *(Anula)* என்ற பட்டத்து இராணி தன்னுடன் ஐநூறு பெண்களையும் அழைத்து வந்திருந்தாள். அவளுக்கு இரண்டாம் நிலை ஆன்மீக விமோசனமான 'சகடகாமிபாலா' *(sakadagamiphala)* என்ற சூத்திரத்தை கற்க வேண்டும், அதாவது மரணத்திற்குப் பிறகு ஒரு முறை மட்டுமே பிறப்பு எடுத்தல் என்ற நிலையை அடைய வேண்டும் என ஆசைப்பட்டாள். ஆகவே அவள் மன்னனிடம் சென்று தமக்கும் பப்பஜ்ஜா உபதேசம் செய்யும்படி தேராவிடம் வேண்டுகோள் விடுமாறு கூறினாள். மன்னனும் அது குறித்து தேராவிடம் கேட்க, அதை தன்னால் அவர்களுக்கு உபதேசிக்க முடியாது என தேரா மறுத்து விட்டார். 'மன்னா, நாங்கள் பெண்களுக்கு உபதேசம் செய்யக் கூடாது. பாடலிபுரத்தில் என்னுடைய இளைய சகோதரியும், துறவியினிமான சங்கமித்தா *(Samghamitta)* என்பவள் இருக்கின்றாள். அவள்தான் இவர்களுக்கு அத்தகைய போதனைகளை செய்ய அனுமதிக்கப்பட்டவள். அவள் இங்கு வரும் பொழுது தன்னுடன் தெற்குப்புறமாகப் படர்ந்துள்ள போதி மரக் கிளையையும், சாமனாக்களையும் இங்கு அழைத்து

வந்தால் அவள் பெண்களுக்கு பப்பஜ்ஜா உபதேசம் செய்வாள். நீ என் தந்தையான அந்த நாட்டு மன்னனிடம் அதற்கான வேண்டுகோளை அனுப்பு' என்று அவர் கூறினார்.

'அப்படி என்றால் சரி' எனக் கூறிய மன்னன் ஒரு குவளையில் நீர் எடுத்து அதை தேரா மஹின்தாவின் கைகளில் ஊற்றி 'இன்று முதல் இந்த மஹாமேகா தோட்டம் உங்களுக்கே சொந்தம்' என்றார்.

அந்த தேராவின் கைகளில் ஊற்றிய தண்ணீர் பூமியில் விழுந்த பொழுது பூமி குலுங்கியது. அதைக் கண்ட மன்னன் இப்படி பூமி இங்கு ஏன் குலுங்கியது என தேராவிடம் கேட்ட பொழுது அவர் 'அது ஒன்றும் இல்லை. இந்த தீபகற்பத்தில் புத்தருடைய சமய தத்துவங்கள் இன்று முதல் பதிக்கப்பட்டு விட்டது என்பதைக் காட்டவே பூமி குலுங்கியது' என்றார்.

உடனே அந்த மன்னன் தான் கொண்டு வந்திருந்த மலர்ந்திருந்த மல்லிகைப் பூக்களை தேராவிடம் கொடுக்க அதில் இருந்து எட்டு கைகள் நிறைய பூக்களை எடுத்துக் கொண்டு அரண்மனையின் தென் பகுதிக்குச் சென்ற தேரா அங்கிருந்த பிகுலா *(picula-tree)* என்ற ஒரு மரத்தின் அடியில் அவற்றைத் தூவ பூமி குலுங்கியது. அதற்குக் காரணம் கேட்ட மன்னனிடம் 'மூன்று புத்தர்கள் வாழ்ந்திருந்த பொழுது இங்குதான் மாலகா *(malaka)* என்ற பெயரில் புனித சடங்குகள் செய்யப்படும் இடம் அமைந்து இருந்தது. மன்னா, இனி அடுத்த புனித சடங்கும் இங்கு நடக்கப் போகின்றது' என்பதைக் குறிக்கவே பூமி குலுங்கியது என்றார்.

அரண்மனையின் வடக்குப்புறத்தில் அழகிய குளியல் குளம் இருந்தது. மல்லிகைப் பூக்களை எடுத்துப் போன தேரா அந்த குளத்திலும் பல இடங்களில் அவற்றைத் தூவ பூமி அங்கும் குலுங்கியது. அதற்குக் காரணம் கேட்ட மன்னனிடம் ' மன்னா, இனி புனிதர்கள் குளிக்க உள்ள குளம் இது என்பதைக் குறிக்கவே பூமி குலுங்கியது' என்றார் தேரா.

அங்கிருந்து அரண்மனையின் வாயில் அருகே சென்ற தேரா ஒரு குறிப்பிட்ட இடத்திற்குச் சென்று தாம் எடுத்துப் போன மல்லிகைப் பூக்களை அங்கும் தூவி வணங்க, அப்போதும் பூமி குலுங்கியது. அதற்குக் காரணம் கேட்ட மன்னனிடம் 'மன்னா காகுசன்தா, கோனகாமா மற்றும் காசப்பா (*Kakusandha, Konagamana and Kassapa*) போன்ற மூன்று புத்தர்கள் தாம் எடுத்து வந்திருந்த தென் பகுதி போதி மரக் கிளையை இங்குதான் நட்டிருந்தனர். அது போலவே நம்முடைய தாதகாடாவின் (*Tathagata*) போதி மர தென் பகுதிக் கிளையையும் இங்குதான் நடப்போகின்றோம் என்பதைக் குறிக்கவே பூமி குலுங்கியது' என்றார் தேரா. பல்லாயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்னர் வரலாற்று சிறப்பு மிக்க மூன்று பெரும் புத்தர்கள் அன்றைய சிலோன் என்ற இந்த இந்த இடத்திற்கு வந்த பொழுது தற்பொழுது நடந்த சம்பவங்களைப் போன்றே நிகழ்ச்சிகள் நடந்தன என பழங் காலத்திய கட்டுக் கதைகளில் கூறப்படுகின்றன.

அது போல மஹாமுகாலமாலகா *(Mahamucalamalaka)* என்ற இடத்திற்குச் சென்ற தேரா ஒரு குறிப்பிட்ட இடத்தில் தாம் எடுத்துப் போன மல்லிகைப் பூக்களை போட்டு வணங்க அப்போதும் பூமி குலுங்கியது. அதற்குக் காரணம்

மன்னனிடம் 'இங்குதான் நம்முடைய உபதேசம் செய்யும் மண்டபம் *(uposatha-hall)* அமைய உள்ளது' என்பதைக் குறிக்கவே பூமி குலுங்கியது' என்றார் தேரா.

அதன் பின் தேரா பன்ஹம்மாலகா *(Pañhambamalaka)* என்ற இடத்திற்குச் சென்றார். அந்த இடத்தில் ஒரு பெரிய மாமரத்தில் இனிமையான மணம் வீசியவாறு பெரிய அளவிலான மாம்பழங்கள் காய்த்துத் தொங்கின. அதில் இருந்து பறித்த மாம்பழத்தை அந்த தோட்டக்காரன் மன்னனுக்கு கொடுத்தான். மன்னன் ஒரு பெரிய கம்பளத்தை வரவழித்து அதை பூமியில் விரித்து தேராவை அதில் அமர வைத்து மாம்பழத்தை அவருக்குக் கொடுத்தார். அதை வாங்கிக் கொண்டு மாம்பழத்தைத் தின்றவர் அந்த மாம்பழத்துக் கொட்டையை மன்னன் தேராவிடம் தந்து அதை அங்கு புதைக்குமாறு கூறினார். மாம்பழக் கொட்டையை பெற்றுக் கொண்ட மன்னனும் தானே அங்கு அதை புதைக்க அதன் மீது தண்ணீரால் தன் கைகளை தேரா கழுவினார். என்ன வினோதம், அடுத்த சில கணங்களில் கொட்டை செடியாக மாறி, மரமாகி காய்கள் பூத்துக் குலுங்கிய பெரும் மாமரமாயிற்று. அங்கு நின்றிருந்தவர்கள் வாயடைத்துப் போய் அதைப் பார்த்தவாறு நின்றிருந்த பொழுது அவர்களுடைய தலை மயிர் ஆச்சரியத்தினால் குத்திட்டு நின்றன.

அந்த மரத்தின் அடியில் தேரா தான் எடுத்து வந்த மல்லிகைப் பூக்களைத் தூவ, மீண்டும் புமி குலுங்க, அதற்கான காரணத்தைக் கேட்டார் மன்னர் ' மன்னா இந்த இடத்திற்கு வர இருக்கும் அனைத்து புத்த சகோதரர்களுக்கும் *(பிக்குக்கள்)* பல்வேறு பரிசுக்கள் வழங்கப்பட உள்ளன'

என்பதைக் காட்டும் வகையில் பூமி குலுங்கியது என்றார். அங்கிருந்து கிளம்பிய தேரா சட்டுசாலா *(Catussälä)* என அழைக்கப்பட்ட அன்னசாலைக்கு சென்று அங்கும் பூக்களைத் தூவ, அப்போதும் பூமி குலுங்கியது. அதன் காரணத்தைக் கேட்ட மன்னனிடம் ' அரண்மனைப் பூங்காவை தானமாகப் பெற்றுக் கொண்ட மூன்று புத்தர்களும், அந்த தீபகற்பத்தின் அனைத்துப் பகுதிகளிலும் இருந்து வந்தவர்கள் கொடுத்த பரிசுப் பொருட்களை அந்த இடத்தில்தான் பெற்றுக் கொண்டனர். இப்பொழுது மீண்டும் இந்த இடத்தில் அன்னதானசாலை அமையப் போகின்றது என்பதைக் குறிக்கும் வகையில் பூமி குலுங்கியது' என்றார்.

தீபகற்பத்தில் எந்த இடம் தமக்கு ஏற்றது, எது தேவையற்றது என்பதை நன்கு உணர்ந்திருந்த மகா தேரா மஹிந்தா, அங்கிருந்துக் கிளம்பி வெகு காலத்திற்குப் பின்னர் நிறுவப்பட்ட ஸ்துாபி உள்ள இடமான ருவன்வேலி-தாகபா *(Ruwanwaeli-dagaba)* என்ற இடத்தினை சென்றடைந்தார்.

அரண்மனை வளாகத்தில் இருந்த காகுடா குளத்தின் *(Kakudha-pond)* மேல் முனைப் பகுதியே ஸ்துாபி அமைக்க சிறந்த இடமாக இருந்தது.அந்த இடத்திற்கு சென்றடைந்த தேராவிடம் எட்டு கூடை நிறைய செண்பகப் பூவைக் கொண்டு வந்து மன்னன் தந்தார். அவற்றை தேரா அந்த இடத்தில் போட்டு வணங்கினார். உடனே பூமி குலுங்க அதன் காரணத்தையும் மன்னன் கேட்க தேரா இப்படியாகக் கூறலானார்.

'மன்னா இந்த இடத்திற்கு பண்டைய காலத்தில் வாழ்ந்திருந்த

வாழ்ந்திருந்த இருந்த நான்கு புத்தர்களும் வந்தனர். ஆகவே இங்கு ஸ்துாபி அமைத்தால் அனைவருக்கும் அது நன்மை தரும் என்பதை குறிக்கவே பூமி குலுங்கியது' தேரா மேலும் தொடந்து கூறலானார் 'மன்னா, எங்களுடைய முன்னோர் காலத்தில் கருணை மிக்கவரும், சிறந்த அறிவாளியுமான காகுசண்டா *(Kakusandha)* என்ற ஒரு குரு இங்கு வசித்து வந்தார். அந்த காலத்தில் இந்த மஹாமேஹ பூங்காவிற்கு மஹாடிட்டா *(Mahatittha)* என்று பெயர். கடம்பா நதியின் *(Kadamba-river)* அந்தப் பக்கத்தில் கிழக்குப் புறம் அபய்யா *(Abhaya)* என்ற தலை நகரம் இருந்தது. அபய்யாவின் மன்னின் பெயரும் அபய்யா என்பதே. அந்த தீபகற்பத்தின் அன்றையப் பெயர் ஓஜதீபா *(Ojadipa)* என்பது.

சில தீய சக்திகளினால் அவருடைய நாட்டில் பிளேக் *(pestilence)* என்ற கொடிய நோய் பரவி இருந்தது. பத்து விதமான அபூர்வ சக்திகளைப் பெற்றிருந்த காகசண்டா *(Kakusandha)* அந்த கொடுமையின் காரணத்தை கண்டறிந்தார். ஆகவே மக்களை அந்தக் கொடுமையில் இருந்துக் காப்பாற்றுவதற்கனாக நாற்பதாயிரம் (*40,000*) சிஷ்யர்களுடன் ஆகாயத்தில் பறந்து அங்கு வந்து தேவகூடா மலை *(Devakuta)* மீது இறங்கினார். சம்புத்தரின் சக்தியினால் பிளேக் நோய் முற்றிலும் மறைந்தது.

அந்த இடத்தில் நின்று கொண்டிருந்த மன்னபதி மன்னர், அறிவாளிகளுக்கெல்லாம் அறிவாளியானவரான முனிவர் *(காகுசண்டா)* அறிவித்தார் 'ஓஜதீபாவில் எவருக்கு விருப்பம் உள்ளதோ அவர்கள் எந்த தடையும் இன்றி உடனே இங்கு வந்து என்னை பார்கலாம். அந்த மலையே ஜொலித்து நிற்பது

போல தோற்றம் தந்தவண்ணம் ஒளிப் பிழம்பாய் நின்று கொண்டு இருந்தவரைப் பார்த்த மன்னரும் மற்றவர்களும் அங்கு விரைவாக வந்தனர்.

ஆகாயத்தில் இருந்து வந்திருந்தவர்கள் தேவ துாதர்கள் என நினைத்து பலவிதமான பரிசுப் பொருட்களை துாக்கிக் கொண்டு மக்கள் அங்கு சென்றனர். அங்கு வந்த மன்னனும் பெரும் மகிழ்ச்சி அடைந்து வந்திருந்த அறிவாளிகளின் மன்னரை *(புத்தர்)* உணவருந்த அழைத்து விட்டு தனது நாட்டிற்கு அழைத்துச் சென்றார். அவர்களை அழைத்து வந்த மன்னன் நினைத்தார் 'அறிவாளிகளுக்கிடையே மன்னாதி மன்னனாக இருக்கும் இந்த துறவிக்கும் அவருடைய சகோதரர்களுக்கும் ஓய்வெடுக்க இந்த இடம் அனைத்து வகையிலும் பொருத்தமாக இருக்கும்' அவர்களுக்கு அமர ஆசனங்கள் போட்டிருக்க அந்த இடத்தில் வந்த சம்புத்தர் தமக்கு ஒதுக்கப்பட்டிருந்த ஆசனத்தில் அமர்ந்தார்.

அந்த தீவின் பல இடங்களிலும் இருந்து வந்திருந்த மக்கள் பல விதமான பரிசுப் பொருட்களை அவர்களுக்கு தந்தனர். அரசனும் அமர்ந்திருந்தவர்களுக்கு தன் அரண்மனையில் செய்த உணவையும் மற்றும் பல இன மக்கள் கொண்டு வந்திருந்த பலவிதமான உணவுப் பொருட்களையும் தானே பறிமாறினார்.

உணவு அருந்திய பின் எந்த இடத்தில் புனிதர் அமர்ந்திருந்தாரோ அதே இடமான மஹாடிட்டகா *(Mahatitthaka)* என்ற இந்த இடத்தை மன்னன் அவருக்குத் தானமாக வழங்க அதை புனித புத்தர் பெற்றுக் கொண்டதும் பூமி குலுங்கியது. பிறகு அந்த இடத்தில் அமர்ந்து கொண்டு நாற்பதாயிரம்

மக்களுக்கு (*40,000*) முக்திக்கு வழி வகுக்கும் சமய போதனைகளை புனித புத்தர் செய்தார்'.

மஹாடிட்டகாவில் நாள் முழுவதும் இருந்தப் பிறகு அன்று மாலை போதி மரம் இன்று உள்ள இடத்திற்கு சென்று அமர்ந்த சம்புத்தர் அங்கு நீண்ட தியானத்தில் அமர்ந்தார். தியானம் கலைந்து எழுந்தவர் அந்த தீபகற்பத்தின் மக்களுடைய நன்மையைக் கருத்தில் கொண்டு நினைத்தார் 'சிரிசாவில் *(sirisa)* இருந்து பிக்குனி ருகனதாவை *(Rucanada)* அவளுடைய சிஷ்யைகளுடன் இங்கு வரச் சொல்லி தெற்குப் பக்க போதி மரத்தின் கிளை ஒன்றையும் எடுத்து வரச் சொல்ல வேண்டும். அந்த கிளையை இங்கு நட வேண்டும்'.

இப்படியாக அவர் மனதில் மானசீகமாக எண்ணிக் கொண்டு இருந்த பொழுது அந்த எண்ண அலை அந்த பிக்குனியை சென்றடைய அவள் உடனே அந்த நாட்டு மன்னனை தன்னுடன் அழைத்துப் போய் தெற்குப் புறம் படர்ந்திருந்த போதி மரத்தின் ஒரு கிளையின் அடியில் பென்சிலினால் மூன்று கோடுகள் போட அது தானாக தன்னை மரத்தில் இருந்து விடுவித்துக் கொண்டு அவளுடைய சக்தியினால் வரவழிகீகப்பட்ட தங்கக் குடுவையில் தன்னை புதைத்துக் கொள்ள அவள் அதை இங்கு எடுத்து வந்தாள். தன்னுடன் ஐநூறு பிக்குனிகளையும் அழைத்துக் கொண்டு வந்தவள் நீண்டிருந்த புனிதரின் வலது கையில் போதி மரத்தின் கிளை இருந்த அந்த தங்கக் குடுவையை வைத்தாள்.

அதை பெற்றுக் கொண்ட தாதகடா அதை அபயாவிடம் தந்து மஹாடிட்டா தோப்பில் ஒரு இடத்தில் புதைக்குமாறு கூறினார்.

அந்த மன்னனும் அந்த கிளையை அங்கு நட்டார். அதன் பின் சிரிசமாலகாவில் இருந்து வடக்கு நோக்கிப் நாகமாலகா என்ற இடத்திற்குப் போன சம்புத்தா அந்த இடத்தில் அமர்ந்தவாறு தன்னைச் சற்றி இருந்த அனைவருக்கும் சமய போதனைகளை செய்தார். மன்னா, அதன் பயனாக அங்கிருந்த சுமார் பத்தாயிரம் மக்கள் (*10,000*) சமய மாற்றம் அடைந்தனர்.

அதன் பின் தான் வைத்திருந்த புனித நீர் நிறம்பிய குடுவையை மக்களின் வழிபாட்டிற்கென அந்த பிக்குனியிடம் கொடுத்து விட்டு தன்னுடைய சீடரான மஹாதேவாவுடன் ஆயிரம் பிக்குக்களையும் (*1000*) அழைத்துக் கொண்டு சம்புத்தர் கிழக்கு நோக்கிச் சென்று இரத்னமாலா (*Ratanamala*) என்ற இடத்தை அடைந்தார். அங்கு மக்களுக்கு பலவிதமான புத்திமதிகளைத் தந்தப் பின் தன்னுடைய சகோதர புத்த சீடர்களுடன் ஆகாயத்தில் பறந்து சென்று ஜம்புதீபாவை அடைந்தார்.

அதன் பின் தோன்றியவர் அனைத்தையும் கற்றறிந்தவரும், கருணையின் உருவமுமான கோனகாமனா (*Lord Konagamana*) என்பவர். அந்த சமயத்தில் மஹாமேஹா தோட்டத்தின் பெயர் மஹாநோமா (*Mahänoma*) என இருந்தது. வாரதீபா (*Varadipa*) என்ற பெயர் கொண்ட அந்த நாட்டு மன்னனின் பெயர் சம்மித்தா (*Samiddha*) என்பது. அந்த நகரின் தலை நகரம் வத்தமானா (*Vaddhamana*). அதுவும் தெற்குப் புறத்தில் இருந்தது.

வாரதீபாவில் கடுமையான வறட்சி (*drought*) தோன்றியது. அந்தக் கொடுமையில் இருந்து மக்களைக் காப்பாற்றவும், புத்த சமயத்தின் போதனைகளை மக்களிடையே பரப்பவும் கோனகாமா

தன்னுடன் முப்பதாயிரம் (*30,000*) சிஷ்யர்களை அழைத்துக் கொண்டு ஆகாயத்தில் பறந்து சுமனகூடகா ***(Sumanakütaka)*** என்ற மலைப் பகுதிக்கு வந்தார். அவருடைய சக்தியினால் நாட்டில் வறட்சி விலகியது. நல்ல மழை பெய்து நாடு செழிக்கத் துவங்கியது.

அந்த இடத்தில் நின்று கொண்டிருந்த மன்னபதி மன்னர், அறிவாளிகளுக்கெல்லாம் அறிவாளியானவர் அறிவித்ததார் 'வாரதீபாவில் ***(Varadipa)*** உள்ளவர்களில் எவரெவருனேனும் என்னைக் காண விருப்பம் இருந்தால் அவர்கள் எந்த விதமான தடையும் இன்றி உடனே என்னை இங்கு வந்து பார்கலாம்' அந்த மலையே ஜொலித்தது போல தோற்றம் தந்தவண்ணம் ஒளிப் பழம்பாய் நின்று கொண்டு இருந்தவரைப் பார்த்த மன்னரும் மற்றவர்களும் அவரைக் காண அங்கு விரைவாக வந்தனர்.

பலவித பரிசுப் பொருட்களை தூக்கிக் கொண்டு அங்கு சென்றவர்கள், அந்த இடத்தில் ஆகாயத்தின் மூலம் வந்திருந்தவர்கள் உலக வழிகாட்டியான தேவ தூதர்கள் என நினைத்தனர். அங்கு வந்த மன்னனும் பெரும் மகிழ்ச்சி அடைந்து வந்திருந்த உலக வழிகாட்டியினரை (*புத்தர்*) உணவருந்த அழைத்து தனது நாட்டிற்குள் அழைத்துச் சென்றார். அவர்களை அழைத்து வந்த மன்னன் நினைத்தார் 'அறிவாளிகளுக்கிடையே மன்னாதி மன்னனாக இருக்கும் இந்த துறவிக்கும் அவருடைய சகோதரர்களுக்கும் ஓய்வெடுக்க இந்த இடம் அனைத்து வகையிலும் பொருத்தமாக இருக்கும்'. அவர்களுக்கு அமர ஆசனங்கள் போட்டிருக்க அந்த இடத்தில் வந்த சம்புத்தர் தமக்கு ஒதுக்கப்பட்டிருந்த ஆசனத்தில்

அமர்ந்தார். அந்த தீவின் பல இடங்களிலும் இருந்து வந்திருந்த மக்கள்பலவிதமான பரிசுப் பொருட்களை அவர்களுக்கு தந்தனர். அரசனும் அமர்ந்திருந்தவர்களுக்கு தன் அரண்மனையில் செய்த உணவையும் மற்றும் பல இன மக்கள் கொண்டு வந்திருந்த பலவிதமான உணவுப் பொருட்களையும் தானே பறிமாறினார்.

உணவு அருந்திய பின் எந்த இடத்தில் அந்த புனிதர் இருந்தாரோ அந்த இடத்தை மன்னன் அவருக்குத் தானமாக வழங்க அதை புனிதர் பெற்றுக் கொண்ட பொழுதும் பூமி குலுங்கியது. பிறகு அந்த இடத்தில் அமர்ந்து கொண்டு முப்பதாயிரம் மக்களுக்கு முக்திக்கு வழி வகுக்கும் சமய போதனைகளை சம்புத்தர் செய்தார்.

மஹாநாம தோட்டத்தில் நாள் முழுவதும் இருந்தப் பிறகு, மாலையில் போதி மரம் இன்று உள்ள இடத்திற்குப் போய் அமர்ந்த சம்புத்தர் அங்கு தியானத்தில் ஆழ்ந்தார். தியானம் கலைந்து எழுந்தவர் அந்த தீபகற்பத்தின் மக்களுடைய நன்மையைக் கருத்தில் கொண்டு நினைத்தார் 'உடும்பராவில் *(udumbara)* இருந்து பிக்குனி கன்டகானந்தாவை *(Kantakananda)* அவள் சிஷ்யைகளுடன் இங்கு வரச் சொல்லி தெற்குப் பக்க போதி மரத்தின் கிளையையும் எடுத்து வரச் சொல்லி அதை இங்கு நடவேண்டும்'

இப்படியாக அவர் மனதில் மானசீகமாக எண்ணிக் கொண்டு இருந்த பொழுது அந்த எண்ண அலை அந்த பிக்குனியை சென்றடைய அவள் உடனே சோபாவதி *(Sobhavati)* என்ற அந்த நாட்டு மன்னன் சோபனாவையும் *(Sobhana)* தன்னுடன்

அழைத்துக் கொண்டு போய் தெற்குப் புறம் படர்ந்திருந்த போதி மரத்தின் ஒரு கிளையின் அடியில் பென்சிலினால் மூன்று கோடுகள் போட அது தானாக தன்னை மரத்தில் இருந்து விடுவித்துக் கொண்டு அவளுடைய சக்தியினால் வரவழிக்கப்பட்ட தங்கக் குடுவையில் தன்னை புதைத்துக் கொள்ள அவள் அதை இங்கு எடுத்து வந்தாள். தன்னுடன் ஐநூறு பிக்குனிகளையும் அழைத்துக் கொண்டு வந்தவள் நீண்டிருந்த புனிதரின் வலது கையில் போதி மரத்தின் கிளை இருந்த அந்த தங்கக் குடுவையை வைத்தாள். அதை பெற்றுக் கொண்ட தாதகடா அதை சம்மித்தாவிடம் தந்து மஹநோமா தோப்பில் ஒரு இடத்தில் புதைக்குமாறு கூற அந்த மன்னனும் அந்த கிளையை அங்கு நட்டார்.

அதன் பின் சிரிசமாலகாவில் இருந்து வடக்கு நோக்கிப் நாகமாலகா என்ற இடத்திற்குப் போன சம்புத்தா அந்த இடத்தில் அமர்ந்தவாறு தன்னைச் சற்றி இருந்த அனைவருக்கும் சமய போதனைகளை செய்தார். மன்னா, அதன் பயனாக அங்கிருந்த சுமார் இருபதாயிரம் (*20,000*) மக்கள் சமய மாற்றம் அடைந்தனர். பிறகு அங்கிருந்து வடக்கு நோக்கி நகர்ந்து தமக்கு முன் இருந்த புத்தர் சென்ற இடத்திற்குப் போய் தியானத்தில் அமர்ந்தார். தியானத்தில் இருந்து எழுந்தவர் தன்னைச் சுற்றி இருந்த அனைவருக்கும் சமய போதனைகளை செய்தார். அதன் பயனாக மேலும் பத்தாயிரம் மக்களின் (*10,000*) விமோசனத்திற்கு வழி கிடைத்தது.

தான் இடுப்பில் கட்டி இருந்த ஒட்டியாணம் *(girdle)* போன்ற ஒன்றை மக்களின் வழிபாட்டிற்கென அந்த பிக்குனியிடம் கொடுத்து விட்டு தன்னுடைய சீடரான மஹாசும்பாவுடன்

(Mahasumba) ஆயிரம் பிக்குக்களையும் அழைத்துக் கொண்டு சம்புத்தர் கிழக்கு நோக்கிச் சென்று சுதாசாமனமாலாவில் *(Sudassanamala)* இருந்த இரத்னமாலா *(Ratanamala)* என்ற இடத்தை அடைந்தார். அங்கு மக்களுக்கு பலவிதமான அறிவுறைகளைத் தந்தப் பின் தன்னுடைய சகோதர புத்த சீடர்களுடன் ஆகாயத்தில் பறந்து சென்று ஜம்புதீபாவை அடைந்தார்.

மூன்றாம் புத்தராக அவதரித்தவர் காசப்பா பிரிவில் வந்தவரும் கருணை வள்ளளுமான மாபெரும் அறிவாளியாவார். அவருடைய காலத்தில் இந்த மஹாமேக தோட்டத்தின் பெயர் மஹாசாகரா எனறு இருந்தது. மண்டதீபா *(Mandadipa)* என்ற பெயர் கொண்ட நாட்டை ஆண்டு வந்த மன்னனின் பெயர் ஜெயன்தா *(Jayanta)* என்பது. அவருடைய தலை நகரம் விசாலா *(Visãla)* என்ற இடம்.

அந்த நேரத்தில் மன்னன் ஜெயன்தாவிற்கும், இளவரசனான அவருடைய இளைய சகோதரனுக்கும் இடையே வாழ்வா சாவா என்று செல்லும் அளவுக்குப் கொடூரமான யுத்தம் நடந்து கொண்டு இருந்தது. அந்த மூடத்தனமான யுத்தத்தினால் ஏற்பட இருந்த நிலையை எண்ணிப் பார்த்த பத்து சித்திகளையும் முழுமையாகப் பெற்றிருந்த முனிவரும் கருணை வள்ளலுமான காசப்பா தன்னுடன் இருபதாயிரம் (*20,000*) சிஷ்யர்களை அழைத்துக் கொண்டு ஆகாயத்தில் பறந்தவாறு சுபகுடா *(Subhakuta)* என்ற மலைப் பகுதியில் வந்து இறங்கினார்.

அந்த இடத்தில் நின்று கொண்டிருந்த மாபெரும் முனிவர், அறிவாளிகளுக்கெல்லாம் அறிவாளியானவர் அறிவித்தார்

'மண்டதீபாவில் *(Mandadipa)* உள்ளவர்களில் எவரெவருக்கு விருப்பம் உள்ளதோ அவர்கள் எந்த விதமான தடைகளும் ' இன்றி என்னை இங்கு வந்து பார்க்கலாம்' அந்த மலையே ஜொலித்து நிற்பது போல தோற்றம் தந்தவண்ணம் ஒளிப் பிழம்பாய் நின்று கொண்டு இருந்தவரைப் பார்த்த மன்னரும் மற்றவர்களும் அவரைக் காண அங்கு விரைந்து வந்தனர். மலை மீது இருந்து இறங்கி வந்திருந்த அவரை தேவதூதர் என எண்ணிக் கொண்டு தம்முடைய படையினர் வெற்றி பெற வேண்டும் என பலவித காணிக்கைகளை ஏந்திச் சென்ற மக்களைக் கண்டு வியந்து போன மன்னனும், இளவரசனும் சண்டையை நிறுத்தினர். அங்கு வந்த மன்னனும் பெரும் மகிழ்ச்சி அடைந்து வந்திருந்த உலக வழி காட்டியை *(புத்தர்)* உணவருந்த தனது நாட்டிற்குள் அழைத்துச் சென்றார். அவர்களை அழைத்து வந்த மன்னன் நினைத்தார் 'வந்திருக்கும் சகோதரர்களுக்கு ஓய்வெடுக்க இந்த இடம் அனைத்து வகையிலும் பொருத்தமாக இருக்கும்'. அவர்களுக்கு அமர ஆசனங்கள் போடப்பட்டு அலங்கரிக்கப்பட்டிருந்த அந்த இடத்தில் சென்ற சம்புத்தர் தமக்கு ஒதுக்கப்பட்டிருந்த ஆசனத்தில் அமர்ந்தார்.

அந்த தீவின் பல இடங்களிலும் இருந்தும் வந்திருந்த மக்கள் பலவிதமான பரிசுப் பொருட்களை உலக வழிகாட்டியான அவர்களுக்கு *(புத்த சகோதரர்களுக்கு)* தந்தனர். அரசனும் அமர்ந்திருந்தவர்களுக்கு தன் அரண்மனையில் செய்த மற்றும் பல இன மக்கள் கொண்டு வந்திருந்த பலவிதமான உணவுப் பொருட்களைப் பரிமாறினார்.

உணவு அருந்திய பின் எந்த இடத்தில் அந்த புனிதர்

ஆமர்ந்து இருந்தாரோ அதே இடமான மஹாசாகரா தோட்டம் *(Mahasagara)* என்ற இஅ்த இடத்தை மன்னன் அவருக்குத் தானமாக வழங்க அதை புனிதர் பெற்றுக் கொண்ட பொழுதும் பூமி குலுங்கியது. பிறகு அந்த இடத்தில் அமர்ந்து கொண்டு இருபதாயிரம் மக்களுக்கு (*20,000*) புத்தர் முக்திக்கு வழி வகுக்கும் சமய போதனைகளை செய்தார்.

மஹாசாகரா தோட்டத்தில் நாள் முழுவதும் இருந்தப் பிறகு மாலையில் போதி மரம் இன்று உள்ள இடத்திற்குப் போய் அமர்ந்த சம்புத்தர் அங்கு தியானத்தில் ஆழ்ந்தார். தியானம் கலைந்து எழுந்தவர் அந்த தீபகற்பத்தின் மக்களுடைய நன்மையைக் கருத்தில் கொண்டு நினைத்தார் 'பிக்குனி சூதம்மாவை *(Sudhammã)* அவள் சிஷ்யைகளுடன் இங்கு வரச் சொல்லி தெற்குப் பக்க 'நிக்ரோதா (*nigrodha)* என்ற போதி மரத்தின் கிளை ஒன்றை எடுத்து வரச் சொல்லி அதை இங்கு நடவேண்டும்'

இப்படியாக அவர் மனதில் மானசீகமாக எண்ணிக் கொண்டு இருந்த பொழுது அந்த எண்ண அலை அந்த பிக்குனியிடம் சென்றடைய அவள் உடனே பனாரசி *(Baranasi)* என்ற அந்த நாட்டு மன்னான திக்கா கிக்கி *(Tika king Kiki)* என்பவரை தன்னுடன் அழைத்துப் போய் தெற்குப் புறம் படர்ந்திருந்த போதி மரத்தின் ஒரு கிளையின் அடிப்புறத்தில் மூன்று கோடுகள் போட, அந்தக் கிளை தன்னை மரத்தில் இருந்து விடுவித்துக் கொண்டு அவளுடைய சக்தியினால் வரவழிக் கப்பட்ட தங்கக் குடுவையில் போய் புதைந்துக் கொள்ள அதை அவள் இங்கு எடுத்து வந்தாள். தன்னுடன் வந்திருந்த ஐநூறு பிக்குனிகள் உடன் சூழ சம்புத்தரின்

சம்புத்தரின் நீண்டிருந்த வலது கையில் போதி மரத்தின் கிளை இருந்த அந்த தங்கக் குடுவையை வைத்தாள். அதை பெற்றுக் கொண்ட தாதகடா அதை சம்மித்தாவிடம் தந்து மஹாசாகரா தோப்பில் ஒரு இடத்தில் அதை நட்டு வைக்குமாறு கூற அந்த மன்னன் ஜெயன்தாவும் அந்த கிளையை அங்கு நட்டார்.

அதன் பின் நாகமாலகாவில் இருந்து வடக்கு நோக்கிப் அசோகமாலகா என்ற இடத்திற்குப் போன சம்புத்தா அந்த இடத்தில் அமர்ந்திருந்தவாறு தன்னைச் சற்றி இருந்த அனைவருக்கும் சமய போதனைகளை செய்தார். மன்னா, அதன் பயனாக அங்கிருந்த சுமார் நான்காயிரம் (*4000*) மக்கள் சமய மாற்றம் அடைந்தனர். பிறகு அங்கிருந்து வடக்கு நோக்கி நகர்ந்து தமக்கு முன் இருந்த புத்தர் சென்ற இடத்திற்குப் போய் தியானத்தில் அமர்ந்தார். தியானத்தில் இருந்து எழுந்தவர் தன்னைச் சுற்றி இருந்த அனைவருக்கும் சமய போதனைகளை செய்தார். அதன் பயனாக பத்தாயிரம் மக்களின் (*10,000*) விமோசனத்திற்கு வழி கிடைத்தது.

தான் மழைக்காக அணியும் மேலங்கியை மக்களின் வழிபாட்டிற்கெனக் அந்த பிக்குனியிடம் கொடுத்து விட்டு தன்னுடைய சீடரான சுபானந்தாவுடன் (*Sabbananda*), ஆயிரம் பிக்குக்களையும் அழைத்துக் கொண்டு கிழக்கு நோக்கிச் சென்ற சம்புத்தர் சுதாசாமனமாலா (*Sudassanamala*) என்ற இடத்தில் இருந்த சோமனசாமலாகா (*Somanassamalaka*) என்ற இடத்தை அடைந்தார். அங்கு மக்களுக்கு பலவிதமான அறிவுறைகளைத் தந்தப் பின் தன்னுடைய சகோதர புத்த சீடர்களுடன் ஆகாயத்தில் பறந்து ஜம்புதீபாவை அடைந்தார்.

CLICK HERE TO VIEW ENGLISH VERSION

அந்த வழியில் வந்தவரே நான்காவது புத்தரான கௌதம புத்தர். அனைத்து உண்மைகளின் மொத்த உருவமும் கருணை வள்ளளுமானவர், முதலில் இங்கு வந்த பொழுது மக்களை துன்பத்தில் ஆழ்த்தி வந்த யட்சிணிகளைத் துரத்தியடித்தார். இரண்டாம் முறை வந்த பொழுது நாகங்களின் கொட்டத்தை அடக்கினார். கல்யாணி *(Kalyani)* என்ற இடத்தில் இருந்த நாகர்களின் மன்னன் மனியக்கியின் *(Maniakkhi)* அழைப்பை ஏற்று மூன்றாம் முறையாக வந்த பொழுது மன்னனுடன் அமர்ந்து உணவு அருந்திய பின் போதி மரங்கள் முதலில் இருந்த இடங்களுக்குச் சென்றும், தற்பொழுது ஸ்துாபி உள்ள இடத்திற்கும் சென்று தன் மூதைய புத்தர்கள் விட்டுச் சென்றிருந்த புனித சின்னங்களைப் பார்த்தார். அதன் பின் தனக்கு முந்தைய புத்தர்கள் நின்றிருந்த இடத்திற்கும் சென்று பார்த்தப் பின் மனிதர்களே இல்லாத லங்கா தீபகற்பத்திற்குச் சென்று அங்கிருந்த தேவர்கள், நாகங்கள் போன்றவர்களுக்கும் அறிவுறைக் கொடுத்தப் பின் தன்னுடைய சகோதர புத்தமாரை அழைத்துக் கொண்டு வானத்தில் பறந்து சென்று ஜம்புதீபாவை அடைந்தார்.

இப்படித்தான் மன்னா, இந்த இடம் நான்கு புத்தர்கள் வந்து சென்ற இடமாக உள்ளது. ஆகவே மன்னா, இந்த இடத்தில் ஹேமமாலி *(Hemamali)* என்ற பெயரில் சுமார் நூற்றி எண்பது *(180)* அடி உயர ஸ்துாபியும், புத்தர்களுடைய உடலில் இருந்து எடுக்கப்பட்ட புனிதப் பொருட்களையும் வைத்துப் பாதுகாத்து வரத் தேவையான அளவில் சிறிய அறையும் எழுப்பப்பட வேண்டும்'

அதைக் கேட்ட மன்னன் தானே அந்த ஸ்துாபியை எழுப்ப முன்வர அவரிடம் தேரா கூறினார் 'மன்னனே, உனக்கு

அதை விட முக்கியமான பல வேலைகள் உள்ளன. ஆகவே உன் வழித் தோன்றல்கள் அதாவது உன்னுடைய சகோதரனின் படைவீரனாக உள்ள மஹானமா *(Mahanama),* உனக்குப் பின் மன்னனாகப் போகின்ற யத்தலயாகதிஸ்ஸா *(Yatthalayakatissa)* என்பவர், அவருக்குப் பின் மன்னனாக இருக்கும் அவருடைய மகன் கோதபைய்யா *(Gothabhaya),* அவருக்குப் பின் மன்னனாக இருக்கும் அவருடைய மகன் காகவானதிஸ்ஸா *(Kakavannatissa),* தத்தகாமியிடம் *(Dutthagamini)* பயின்றவரும் பலசாலியும் சிறந்த அரசனுமான உன்னுடைய மகனான அபய்யா *(Abhaya)* போன்றவர்கள் இந்த காரியத்தை நிறைவேற்றுவார்கள்'.

தேராவின் அறிவுறைகளைக் கேட்ட மன்னன் அந்த இடத்தில் கல்வெட்டு ஒன்றை வைத்தார். அதில் தேரா மேற்கூறிய அனைத்து செய்திகளும் கட்டளைப் போல பதிக்கப்பட்டன.

அதி அற்புதமான சக்திகளைப் பெற்றிருந்த தேரா மஹாமேஹா மன்னனிடம் இருந்து தோப்பினை பெற்றுக் கொண்டதும் பூமியை எட்டு இடங்களில் குலுங்கச் செய்தார். கடலே ஊருக்குள் புகுந்து வந்தது போல காட்சி தரும் வகையில் ஊருக்குள் சென்று பிட்சை பெற்றார். அதன் பின் அரசனின் வீட்டிற்குச் சென்று உணவு அருந்திய பின் நந்தனா தோப்பிற்குச் சென்று அங்கிருந்த ஆயிரம் மக்களுக்கு அக்கிக்கண்டோபாமா *(Aggikkhandhopama)* என்ற சூத்திரத்தை போதித்த பின் அருகில் இருந்த மஹாமேஹா தோப்பிற்குச் சென்று ஓய்வு எடுத்தார்.

மூன்றாவது நாளும் மன்னனின் இருப்பிடத்தில் உணவு அருந்திய பின் நந்தனா தோப்பிற்குச் சென்று ஆயிரம்

CLICK HERE TO VIEW ENGLISH VERSION

அசிவிசுபாமா *(Asivisupama)* என்ற சூத்திரத்தை போதித்தப் பின் திஸ்ஸரமாவுக்கு *(Tissäräma)* கிளம்பிச் சென்றார்.

அத்தனை போதனைகளையும் அவர் பக்கத்தில் இருந்து கேட்ட மன்னன் அவரிடம் கேட்டார் ' புனிதரே, நீங்கள் இத்தனை போதனைகள் செய்து உள்ளீர்களே , அவற்றின் பயனாக நம் சமயம் இங்கு நிலைத்து நிற்குமா?' அதற்கு அந்த தேரா கூறினார் 'அது இப்பொழுது நடக்காது. ஆனால் நாட்டின் எல்லைகள் எழுப்பப்பட்டு , உபோஸ்தா *(uposatha)* விழா நடந்து முடிந்ததும், மற்ற மதத்தினருடைய நடைமுறைகளைப் பார்த்தும் நம்முடைய புனிதர் நினைத்தது போல நம் சமயம் இங்கு நிலைத்து நிற்கும்'

'அறிவாளியே, நான் புத்தருடைய ஆணையை ஏற்கின்றேன். இந்த நாட்டின் எல்லையை நீங்களே வகுத்துத் தாருங்கள்' என மன்னன் கேட்க 'மன்னா, அதை நீயேதான் செய்ய வேண்டும். எதுவரை எல்லையை வைத்திருக்க விரும்புகின்றாய் எனக் கூறினால் நாம் சமயத்தை நிலை நாட்டுவோம்' என்றார் தேரா. அதைக் கேட்ட மன்னன் ' நன்றி' என்று கூறிவிட்டு சற்றும் தாமதிக்காமல் தேவர்களின் தலைவனைப் போல நந்தனா தோப்பில் இருந்துக் கிளம்பி மஹாமேகவனராமா *(Mahameghavanarama)* என்ற இடத்திற்குச் சென்றார்.

நான்காம் நாள் மன்னனின் வீட்டில் உணவருந்திய பின் நந்தனா தோப்பிற்குச் சென்ற தேரா அங்கு மூவாயிரம் பேர்களுக்கு அனாமாட்டகா *(Anamatagga)* என்ற போதனையை, அதாவது அழிவற்ற வாழ்வின் நிலையைப் பற்றிய போதனை செய்தார்.

தமிழில் சாந்திப்பிரியா
ஆங்கிலத்தில் ஜார்ஜ் டர்னர் மற்றும் வில்லியம் கீஜர்
பின்னர் மாற்றி எழுதியது மேபில் ஹேனஸ் போடே

அதன் பின் அங்கிருந்து கிளம்பியவர் மஹாமேகவனராமாவுக்குச் சென்றார். அன்று காலையில்தான் நகர் முழுவதும் அந்த விகாராவுக்குள் நடக்க இருந்த விழா பற்றிய செய்தி தண்டோரா போட்டு அறிவிக்கப்பட்டு இருந்தது. பல்வேறு ஆபரணங்களை அணிந்து கொண்டு இரதத்தில் ஏறிய மன்னன் தன்னுடைய அமைச்சர்கள், குடும்பத்தினர் போன்ற அனைவருடனும் ஊர்வலமாக வர, அவருடைய இரதமும் பல வீதிகளையும் கடந்து அந்த விகாராவுக்குள் சென்றது.

மன்னன் ஒரு வட்ட வடிவமான கடம்பா நதியின் *(Kadamba-river)* ஒரு பகுதியில் ஆரம்பித்து இன்னொரு பக்கமாக மறு முனையை அடைந்த *(நாட்டின் எல்லைப் பகுதியை அறிவிப்பது போல)* பின் விகாராவை அடைந்து தேராவை வணங்கி நின்று மரியாதைகளை செய்தார்.

முப்பத்தி இரண்டு மாலக்கா என்ற அளவில் நகரின் எல்லைகளைக் குறிக்கும் விதத்தில் தானே எல்லைகளில் பூமியை சிறிது தோண்டி கல்வெட்டுக்களைப் பதித்தார். அதன் பின் துாபராமா *(Thuparama)* என்ற மாபெரும் தேராவின் அறிவுறைப்படி உள்ளூர் எல்லைகளையும் முறைப்படி பதித்தப் பின் விகாராவுக்குச் செல்ல , எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு விட்டதைக் குறிக்கும் வகையில் பூமி குலுங்கியது.

ஐந்தாம் நாளன்றும் மன்னனின் வீட்டில் உணவு அருந்திய பின் தேரா நந்தனா தோப்பிற்குச் சென்று கஜ்ஜனீய சுத்தனா என்பதை *(Khajjaniya-suttanta)* போதித்தார். அதை ஆயிரக்கணக்கானவர்களுக்கு போதித்து அவர்களுடைய அறிவு தாகத்தை நீக்கிய பின் மஹாமேஹா தோப்பிற்குச் சென்று ஓய்வெடுத்தார்.

CLICK HERE TO VIEW ENGLISH VERSION

ஆறாம் நாளும் நாளன்று மன்னனின் வீட்டில் உணவு அருந்திய பின் நந்தனா தோப்பிற்குச் சென்ற தேரா அங்கு கோமயாபிண்டி சுத்தனாவை *(Gomayapindi-sutta)* போதித்தார். அதையும் ஆயிரக்கணக்கானோர்கு போதித்து அவர்களுடைய அறிவு தாகத்தை நீக்கியப் பின் மஹாமேஹா தோப்பிற்குச் சென்று ஓய்வெடுத்தார். அது போலவே ஏழாவது நாளும் நாளன்று மன்னனின் வீட்டில் உணவு அருந்திய பின் தேரா நந்தனா தோப்பிற்குச் சென்று தம்மக்காக்கப்பாவாட்டனா *(Dhammacakkappavattana-suttanta)* என்ற சூத்தாவை போதித்தார். அதையும் ஆயிரக்கணக்கானோர்க்குப் போதித்த பின் மஹாமேஹா தோப்பிற்குச் சென்று ஓய்வெடுத்தார். இப்படியாக எழு நாட்களில் அந்த தேரா எட்டாயிரத்து ஐநூறு (*8500*) பேர்களை சமய மாற்றம் செய்தார்.

புனித போதனைகளை செய்த அந்த நந்தனா தோப்பு பின்னர் ஜோதிவனா *(Jotivana)* என அழைக்கப்பட்டது. அதற்கிடையில் திஸ்ஸராமாவில் *(Tissäräma)* தேரா தங்குவதற்கு ஒரு பாசறை அவசரமாகக் கட்டப்பட்டது. அதற்கென புது செங்கல்கள் சுடப்பட்டன. தங்கும் இடம் வெளிர் நிறத்தில் இல்லாமல் சற்று கரிய நிறத்தில் இருந்ததினால் அதன் பெயர் காலபாசதாபரிவினா *(Kalapasadaparivena)* என ஆயிற்று. அதன் பின் போதி மரம் வைக்க அங்கு ஒரு இடத்தையும், தங்கும் இடமாக லோகபாசதாவையும் *(Lohapasada),* உணவு அருந்த சாலகா *(salaka-house)* என்ற கட்டிடத்தையும் கட்டினார். லோகபாசதாவை முதலில் தேவநாம்பியதிஸ்ஸாதான் *(Devanampiyatissa)* நிறுவியதாகவும், அதன் பின்னரே அதை மாற்றி பித்தளைக்கட்டிடம் *(House of Bronze)* என்ற பெயரில் தத்தகாமனி *(Dutthagamani)* என்பவர் கட்டியதாக ஒரு செய்தியும் உள்ளது. அந்த மன்னன் அதைத் தவிற அங்கு

அற்புதமான பிற கட்டிடங்கள், இரவும் பகலும் ஓய்வெடுக்கும் வகைக்கான அறைகள், குளியல் இடம் போன்றவற்றைக் கட்டினார். அந்த குளியல் அறை அருகில் தேராவிற்காக கட்டப்பட்ட குளியல் அறைக்கு சன்ஹுதபரிவனா *(Sunhätaparivena)* என்ற பெயர் வைக்கப்பட்டது. அந்த தேரா நடைப் பயிற்சி செய்து கொண்டு இருந்த இடத்தின் பெயர் திககங்கமன்னா *(Dighacañkamana)* எனவும், தேரா தியானம் செய்ய பயன் படுத்திய, அனைவருக்கும் மன நிம்மதியை தந்த இடத்தின் பெயர் பாலக்கபரிவனா *(Phalagga-parivena)* எனவும், தேரா சுவற்றில் சாய்ந்து கொண்டு அமர்ந்திருந்த இடத்தின் பெயர் தேராபாசய்ய பரிவனா *(Therapassaya-parivena)* எனவும், தேராவிடம் பல தேவர்களும் வந்து உறையாடி விட்டுச் சென்ற இடத்தின் பெயர் முருகான பரிவனா *(Marugana-parivena)* எனவும் ஆயின. அதைத் தவிற தேராவிற்காக அந்த மன்னனுடைய படைத் தளபதி எட்டு தூண் கொண்ட தனி மண்டபம் கட்டினார். அறிவாளிகள் வந்து தங்கிய அந்த இடம் திகசந்தனசேனாபதி *(Dighasandasenapati-parivena)* பரிவனா என்ற பெயரை அடைந்தது.

பெரும் அறிவாளியும், குறையற்ற குணமும் கொண்ட அந்த நாட்டு மன்னன் தேரா மஹிந்தாவை இப்படியாக கௌரவித்து முதன் முதலில் லங்காவில் புத்த விகாராவை அமைத்தார்.

புனிதரின் பக்தி மார்கத்தில் இணைந்த புத்த பக்தர்களின் மனதில் பேரானந்தம் பொங்கிட வழி வகுத்த கருணா மூர்த்தியின் பதினைந்தாம் பாகமான ' மஹாவிஹாரா ஏற்கப்பட்டது ' என்ற பகுதி இப்படியாக நிறைவுற்றது.

16 : செடியபப்பதா விஹாரா ஏற்பு

மஹாமேஹா தோப்பில் இருந்த தேரா, அந்த நாட்டு மன்னனின் வீட்டில் உணவருந்தியும், நகருக்குள் சென்று பிட்சை எடுத்தும் மக்களுக்கு போதனைகளை செய்தவாறும் இருபத்தி ஆறு நாட்களைத் கழித்தார். அசல்தா *(Asalha)* மாதத்தின் பௌர்ணமி பிறை தினத்தில், அவர் அங்கு வந்து தங்கிய பதிமூன்றாம் நாளன்று மன்னனுக்கு விழிப்புடன் இருக்க வேண்டியதின் அவசியத்தை உணர்த்தும் மஹாபாமத சுத்தனா *(Mahappamada-suttanta)* என்ற போதனையை செய்த பின் அங்கிருந்துக் கிளம்பி மிசாக மலை எனப்படும் அன்றைய சிடியா மலை *(Cetiya-mountain)* பகுதியிலும் ஒரு விகாராவை நிறுவ ஆசை கொண்டு கிழக்கு வாசல் வழியே அங்கு சென்றார்.

மன்னனுக்கு தேரா கிளம்பிச் சென்ற செய்தி தெரிய வர அவர் தன்னுடைய இரண்டு மனைவிகளையும் அழைத்துக் கொண்டு வண்டியில் ஏறி அவரை பின் தொடந்தார். அதற்கு முன் அங்கு சென்றிருந்த தேரா நாககாட்டுக்கா என்ற *(Nagacatukka-tank)* என்ற குளத்தில் குளித்தப் பின் மலை ஏறி உச்சிக்குச் சென்றிருந்தார். அங்கு அவரை சந்தித்த மன்னன் அவருக்கு வணக்கங்களைத் தெரிவிக்க 'மன்னா, இத்தனை கடுமையான வெய்யிலில் எங்களைத் தொடர்ந்து நீயும் ஏன வந்துள்ளாய்?' எனக் கேட்ட தேராவிடம் 'நீங்கள் திடீர் எனக் கிளம்பி விட்டதினால் வருத்தமுற்று உங்களைப் பின் தொடர்ந்து வந்தேன் ' என்றார் மன்னர். 'நாங்கள் இந்த இடத்தில்

மழைக் காலத்தைக் கழிக்க வந்தோம்' என்ற தேரா ' புத்த பிக்குக்கள் மழைக் காலத்தில் ஒன்றிணைந்து எதாவது ஒரு விகாராவில் தங்கி இருக்க வேண்டும். அந்த காலத்தில் வெளியில் பயணம் மேற்கொள்ளக் கூடாது என்ற புத்த சமயத்தின் விதி முறையை எடுத்துக் காட்டினர்.

இதனிடையே மன்னனின் மருமகனும், மஹாரிட்டா *(Maharittha)* நாட்டின் முதலமைச்சருமானவர் தன்னுடன் வந்திருந்த ஐம்பத்தி ஐந்து இளைய மற்றும் மூத்த சகோதரர்களுடன் பப்பஜ்ஜா உபதேசத்தை அங்கேயே பெற்றுக் கொண்டு துறவியாயினர்.

அங்கு வந்த அந்த மன்னனும் அங்கு கண்டகா சிடியா *(Kantaka-cetiya)* என பிற்காலத்தில் அழைக்கப்பட்ட, பாறைகளைப் பயன்படுத்தி கட்டப்பட்ட அறுபத்தி எட்டு குகை இல்லங்களை அமைத்துக் கொடுத்தார்.

பாறைகளினால் கட்டப்பட்ட அந்த தங்கும் இடங்கள் தயாரானதும் அசல்தா *(Asalha)* மாத பௌர்ணமி தினத்தில் அந்த மன்னன் அங்கு வந்து அவற்றை தேராவிடம் தானமாகக் கொடுத்தார். அதன் பின் மன்னன் தன் அரண்மனைக்குத் திரும்பிச் சென்றார். கருணை மிக்க தேராக்களும் அங்கு தங்கி இருந்தவாறு ஊருக்குள் சென்று பிட்சை எடுத்து வந்தனர்.

வாழ்வின் அனைத்து நிலைகளையும் கடந்து நின்ற தேரா முப்பத்தி இரண்டு மாலக்காவிற்கும் *(mälakas)* , விகாராவிற்கும் எல்லைகளை அமைத்தப் பின், அவற்றில் முதலாவதாக நிறுவப்பட்ட தம்பாரு *(Tumbaru)* என்ற

மாலக்காவில் பப்பஜ்ஜா உபதேசத்தை ஏற்க முடியாமல் போன பலருக்கும் உபசம்பாதாவை போதித்திருந்தார். அது போல சிடியா மலையில் மழை காலத்தில் மன்னனுடன் அங்கு வந்திருந்த அறுபத்தி இரண்டு பேர் அரஹன்தாக *(துறவி)* மாறி மன்னனின் மதிப்பைக் கூட்டினர். அதனால் அங்கு கூடி இருந்த தேவர்களுக்கும் மனிதர்களுக்கும் அந்த தேராவின் மீது இருந்த மரியாதையுடன் கூடிய மதிப்பு இன்னும் உயர்ந்தது.

புனிதரின் பக்தி மார்கத்தில் இணைந்த புத்த பக்தர்களின் மனதில் பேரானந்தம் பொங்கிட வழி வகுத்த கருணா மூர்த்தியின் பதினாறாம் பாகமான 'செடியபப்பதா விஹாரா ஏற்பு' என்ற பகுதி இப்படியாக நிறைவுற்றது.

17: புனித சின்னங்கள்

மழைக் காலம் முடிந்தது. கார்த்திகா மாதத்தின் பௌர்ணமியில் பாவரானா சடங்கை (*pavarana-ceremony*) செய்து முடித்தார் மாபெரும் தேரா. பின்னர் மன்னனை அழைத்துக் கூறினார் ' மன்னா, நாம் புனிதர் சம்புத்தர் இன்றி பல ஆண்டுகளைக் கழித்து விட்டோம். அவர் நினைவாக இங்கு நமக்கு வணங்குவதற்கு அவருடைய எந்த சின்னமும் இல்லை' என்றவரிடம் 'சம்புத்தர் நிப்பானாவை பெற்றுவிட்டதை தாங்கள் எனக்குக் கூறவில்லையே ' எனக் கேட்ட மன்னனிடம் 'அவருடைய புனிதச் சின்னங்களை நாம் வைத்துக் கொண்டாலே அவரை நம்முடன் வைத்துக் கொண்டு உள்ளது போலாகி விடும்' என்றார் தேரா. 'நான்தான் அவருடைய நினைவாக ஸ்துாபியை அமைப்பதாகக் கூறினேன் அல்லவா. ஆகவே நீங்கள் அவருடைய புனிதச் சின்னங்கள் எங்கிருக்கும் என்பதைக் கண்டறிய வேண்டும்' என்ற மன்னிடம் 'இது குறித்து சுமன்னாவிடம் ஆலோசனை கேள்' என்றார் தேரா. 'பெரும் மதிப்பிற்குறியவரே, புனித சின்னங்கள் எப்பொழுது கிடைக்கும் என்று கூறுங்கள்' என மன்னன் கேட்டார். அதற்கு சாமனேர சுமன்னா கூறினார் 'நகரத்தையும், வீதிகளையும் அழகு படுத்தி அந்த விழா நடக்க நீதான் பொறுப்பு எற்றுக் கொள்ள வேண்டும். பட்டத்து யானை மீதேறி, வெண் சாமர குடையுடனும், மேளதாளங்கள் முழங்க , உன் பரிவாரங்களுடன் மஹானஹா பூங்காவிற்கு இன்று மாலையில் செல். தன்னை எப்படி இவ்வுலகின் பஞ்சபூத நிலகளில் இருந்து விடுதலை பெற்றுக் கொள்வது என்பதை நன்கு உணர்ந்திருந்தவருடைய புனிதச் சின்னங்கள்

அங்கு உனக்குக் கிடைக்கும்' அங்கிருந்துக் கிளம்பி சிடியா மலைக்குச் சென்ற தேரா தனக்கு இட்ட வேலையை செவ்வனே செய்து முடிக்கும் சாமேர சுமன்னாவை அங்கு வருமாறு அழைத்தார். அவரிடம் கூறினார் 'புப்பப்புரா *(Pupphapura)* விழாவுக்கு சென்று அங்குள்ள உன்னுடைய பாட்டனாரும், மன்னருமானவரிடம் நாங்கள் கூறியதாக இந்த செய்தியைக் கூறு ':- முதலில் நீ புத்த சமயத்தில் இணைந்தப் பின்தான் ஸ்துாபியை நிர்மாணிக்க வேண்டும். அதன் பின் பல காலம் அவர் உபயோகித்து வந்த பிட்சைப் பாத்திரம், மற்றும் உன்னிடம் இருக்கும் புத்தரின் பிற புனிதச் சின்னங்களையும் என்னிடம் தர வேண்டும்:- '

அவரிடம் இருந்து அதைப் பெற்றுக் கொண்ட பின் அந்த புனித பாண்டத்தில் அவருடைய அனைத்து புனித சின்னங்களையும் வைத்துக் கொண்டு அதை நீ தேவர்களின் தலைவரான சாக்காவிடம் (*Sakka*) எடுத்துச் சென்று எங்களுடைய இந்த வேண்டுகோளைக் கூறு ':- தேவர்களின் மன்னா, உங்களிடத்தில் உள்ள மூவுலகமும் போற்றும் புத்தரின் வலது கண் புறத்தின் கீழ் உள்ள பல், மற்றும் வலது தோள்பட்டை எலும்பு போன்றவை எமக்கு வேண்டும். லங்காவிற்கு தாங்கள் செய்ய வேண்டிய இந்தக் கடமையை மறந்து விடாதீர்கள்:-'

அதைக் கேட்ட சாமனீரா ' அப்படியே செய்கின்றேன்' எனக் கூறிவிட்டு கட்டிகா விழா *(Kattika-festival)* நடந்த இடத்தில் சாலா மரத்தின் அடியில் நின்றிருந்தபடி புத்தரின் போதி மரத்திற்கு மரியாதைகளை செலுத்திக் கொண்டு இருந்த தம்மகோசாவிடம் சென்று தேரா கூறி அனுப்பிய செய்தியைத்

தெரிவித்தப் பின் அவரிடம் இருந்து புத்தருடைய புனித சின்னங்களை அந்த பிட்சை பாத்திரத்துடன் பெற்றுக் கொண்டப் பின் இமய மலை அடிவாரத்துக்கு கிளம்பிச் சென்றார். அங்கு சென்றவர் தேரா சொல்லி அனுப்பிய செய்தியை தேவர்களின் தலைவரிடம் கூறினார்.

அதைக் கேட்ட சாக்காவும், தேவலோகத்தில் இருந்த புனித ஆலயத்திற்குள் சென்று புத்தருடைய வலது புற தோள் பட்டை எலும்பை எடுத்து வந்து அவரிடம் கொடுக்க அதை எடுத்துக் கொண்டு அவர் தேராவிடம் விரைந்தார்.

அன்று மாலை மன்னன் தன்னுடைய பரிவாரங்களுடன் மஹாநாக பூங்காவிற்கு சென்றார். தேரா அந்த புனித சின்னங்கள் அனைத்தையும் அந்த மிசாக மலையில் மன்னனிடம் கொடுத்தார். அதனால் அதற்குப் பெயர் சிடியாமலை என ஆயிற்று.

புனித சின்னங்களுடன் இருந்த பாத்திரத்தையும் தோள் பட்டை எலும்பையும் எடுத்துக் கொண்டு முதலிலேயே ஏற்பாடு செய்யப்பட்ட இடத்திற்குச் சென்றார்.

‘இந்த புனித சின்னம் உண்மையில் புனிதருடையது என்றால் இதைக் கண்டவுடன் என்னுடைய யானை முட்டி போட்டுக் கொண்டு அமரும், வெண் சாமரக் குடை தானே சிரம் தாழ்ந்தது குனியும், அந்த பாத்திரம் என் தலை மீது வந்து அமரும்’ என எண்ணியவாறு மன்னன் பயணித்தார். தேவபானமான அமிருதத்தை தன் மீது தெளித்தது போல மன்னன் அளவற்ற ஆனந்தத்தில் இருந்தார். அந்த புனித

சின்னங்கள் கொண்ட பாத்திரத்தை வாங்கிக் கொண்டு தன் தலை மீது வைத்துக் கொண்டு போய் யானையின் முதுகில் இருந்த அம்பாரியில் அந்த புனித சின்னங்கள் இருந்த பாத்திரத்தை வைத்தார்.

அவ்வளவுதான். அந்த பட்டத்து யாளை பிளிரியது. பூமி அதிர்ந்தது. அங்கிருந்து கிளம்பிய யானை தேராக்கள், பரிவாரங்கள் மற்றும் பிற வாகனங்கள் பின் தொடர கிழக்குப்புற வாயில் வழியாக உள்ளே சென்று மீண்டும் தெற்குப்புற வாயில் வழியே நந்தனா தோப்பில் மேற்குப்புறம் இருந்த துபராமா (*Thūpārāma*) என்ற இடத்திலிருந்த போதி மரத்தை நோக்கிச் சென்றது.

அப்பொழுது ஸ்தூபா உள்ள இடம் கடம்பா மரங்களினாலும் செடி கொடிகளினாலும் புதர் போல படர்ந்து இருந்தது. அந்த இடத்தில் புனித சின்னங்கள் வைக்கப்பட இருந்ததினால், தேவதூதர்கள் காத்து நின்ற அந்த இடத்தை முற்றிலுமாக சுத்தப்படுத்துமாறு தேரா கூற அதுவரை அந்த புனித சின்னங்களை எந்த இடத்தில் இறக்கி வைப்பது என மன்னன் கேட்க, உயரத்தில் இருந்ததை கீழே இறக்கி வைக்க மனம் இல்லாத தேரா, அந்த யானை எத்தனை உயரம் உள்ளதோ அந்த அளவு உயரமான இடத்தில் தற்காலிகமாக அதை வைத்திருக்க அறிவுறுத்தினார்.

ஒரு பக்கம் அந்த இடம் சுத்தப் படுத்தப்படத் துவங்க, இன்னொருபுறம் அபய்யா குளத்தில் இருந்து களிமண்ணை

எடுத்து வரச் சொல்லிய மன்னன் யானைக்கு அருகிலேயே அதன் உயரத்திற்கு ஒரு களிமண் தூணை எழுப்பினார். அதன் பின் அந்த யானை முதுகில் இருந்து அந்த புனித சின்ன பாத்திரத்தை உயரமான அந்த தூணின் மீது வைத்தார்.

அந்த யானையை அந்த தூணுக்கு காவலாக அங்கேயே நிற்க வைத்தப் பின் அந்த புனித சின்னத்தை வைக்க இருந்த ஸ்துாதுாபியை உடனடியாகக் கட்டத் துவங்குமாறு ஆணையிட்டார். அதன்படி வேலையாட்கள் ஸ்துாபியைக் கட்டத் துவங்க, மன்னன் அந்த சிறப்பான சடங்கை செய்து முடிக்கத் தேவையான ஏற்பாடுகள் செய்ய தன்னுடைய மந்திரிகளை அழைத்துக் கொண்டு சென்றார். இதற்கிடையே தேராவும் தன்னுடைய சக பிட்குக்களுடன் மஹாமேக தோப்பிற்குச் சென்று ஓய்வெடுத்தார்.

காலையில் அதன் பக்கத்திலேயே நின்று கொண்டிருந்த யானை இரவு முழுதும் புனிதச் சின்னம் இருந்த இடத்தை சுற்றி காவல் காத்திருந்தபடி நிதானமாக நடந்து கொண்டே இருந்தது. தேராவின் கட்டளைப்படி அந்த மன்னன் ஸ்துாபியை அந்த களிமண் துாணை விட உயரத்தில் கட்டி முடித்து அனைத்து பக்கங்களிலும் இருந்த மக்களுக்கு புனிதச் சின்னம் வைக்கப்பட்டு இருந்த செய்தியை சொல்லி அனுப்ப அன்றைய தினத்தன்று பெரும் திரளான மக்கள் பல பக்கத்தில் இருந்தும் வந்து குமிழி இருந்தனர்.

அனைவரும் வந்திருந்த பொழுது திடீர் என புனிதச் சின்னம் இருந்த பாத்திரம் யானையின் முதுகில் இருந்து மேலே எழும்பி ஏழு தலா துார அளவில் (*seven tälas*) ஆகாயத்தில் நின்றது.

CLICK HERE TO VIEW ENGLISH VERSION

அந்த அதிசயக் காட்சியைக் கண்டவர்கள் மெய் சிலிர்த்துப் போய் நின்றனர். அதில் இருந்து கொட்டிய மழையும், மின்னலும் லங்காவை ஆக்ரமித்தன.

ஐந்து கண்களையும் முழுமையாகப் பெற்றிருந்த புனித புத்தர் தான் நிபாமா நிலையை எட்டிய பொழுது ஐந்து தீர்மானங்களை செய்தார். அது என்ன எனில் ':- போதி மரத்தின் தென் பகுதிக் கிளை தானாக பிரிந்து ஒரு குடுவையில் வந்து அமரும். அப்படி அமர்ந்த அதன் கிளைகளில் இருந்து வெளிவரும் இலைகளும், பழங்களும் ஆறு வண்ணமயமாக காட்சி அளிக்கும். அதிலிருந்து தானாக வெளியேறும் அந்தக் கிளை கண்களுக்குத் தெரியாமல் ஒரு பனி படர்ந்த பிரதேசத்தில் ஏழு நாட்களுக்கு இருக்கும். என்னுடைய தோள்பட்டை எலும்பை துாபராமாவில் *(Thuparama)* வைத்தவுடன் அது ஆகாயத்தில் எழும்பி மிதந்தவாறு இரண்டு தோற்றம் தரும் அதிசயத்தை வெளிப்படுத்தும். என்னுடைய உண்மையான புனிதச் சின்னத்தை ஒரு குடுவையில் வைத்து எடுத்து வரப்பட்டு ஹேமமாலிகா சிடியாவில் வைக்கப்பட்டால் அது ஆகாயத்தில் எழும்பி மிதந்தவாறு புத்தராக மாறி இரண்டு தோற்றம் தரும் அதிசயத்தை வெளிப்படுத்தும்:-'

தாடகதாவின் அந்த எண்ணத்தின்படியே அந்த புனிதச் சின்னம் அற்புதத்தை வெளிப்படுத்தியது. அது மட்டும் அல்ல மேலெழும்பி ஆகாயத்தில் மிதந்த அது பின்னர் கீழ் இறங்கி வந்து மன்னனின் தலை மீது அமர, அவர் பேரானந்தம் கொண்டு மகிழ்ச்சி வெள்ளத்தில் முழுகினார். அந்த சின்னத்தை சிடியாவில் வைத்த பொழுது அதுவரை அதிர்ந்த பூமியின் ஆட்டமும் நின்றது. புத்தர்களின் அற்புதங்கள் புரிந்து கொள்ள முடியாதவை, அது போல அவர்களுடைய

உள் மனதும் புரிந்து கொள்ள முடியாதவை, அவர்கள் மீது ஒருவர் நம்பிக்கைக் வைப்பதினால் என்ன பயன் கிடைக்கும் என்பதை அவர் மீது நம்பிக்கை வைத்துள்ளவர்களினால் கூட புரிந்து கொள்ள முடியாது என்ற உண்மையை ஒருவராலும் புரிந்து கொள்ள முடியாது.

அந்த அற்புதத்தைக் கண்டவர்கள் புனிதர் மீது இருந்த நம்பிக்கை மேலும் அதிமாயிற்று. மன்னனின் இளைய சகோதரர் மாட்டபைய்யாவோ *(Mattabhaya)* தன்னுடன் ஆயிரம் நபர்களை அழைத்துப் போய் பப்பஜ்ஜா உபதேசத்தைப் பெற்றுக் கொண்டு அரண்மனை வாசத்தைத் துறந்தார்.

அது போல சீடவிகாமா (**Cetävigäma**), துவாரமண்டலா (**Dvaramandala**), விஹாரபீஜா ***(Viharabija)***, கல்லபப்பீதா ***(Gallakapitha)*** மற்றும் உபடிஸ்ஸாகாமா ***(Upatissagama)***, போன்ற இடங்களில் எல்லாம் வந்திருந்த ஐநூறு பேர்கள் பப்பஜ்ஜா உபதேசத்தைப் பெற்றுக் கொண்டு தாடகதாவின் மீது தமது நம்பிக்கையை வெளிப்படுத்தினர். இப்படியாக அரண்மனைக்கு உள்ளிருந்தும், வெளியில் இருந்தும் பப்பஜ்ஜா உபதேசத்தைப் பெற்றுக் கொண்டவர்களுடைய எண்ணிக்கை முப்பதாயிரத்தைத் (*30,000*) தாண்டியது

அந்த மன்னன் துர்பராமாவில் அற்புதமான ஸ்துாபியை கட்டி முடித்தப் பின் நகைகள் போன்ற பலவிதமான பரிசுப் பொருட்களை கலைஞர்கள், அமைச்சர்கள், நகர மக்கள், நாட்டு மக்கள், என அனைவருக்கும் வழங்கினார்.

முன்பு அதே இடத்தில் இருந்த விகாரைப் போலவே மீண்டும்

பல காலத்திற்குப் பிறகு துாபராமாவில் அதே பெயரில் *(துாபராமா)* ஒரு விகாராவையும் மன்னன் அமைத்தார்.

இப்படியாக மனித குலத்தின் மேம்பாட்டிற்கும், விமோசனத்திற்கும் வழி காட்டும் நிபானாவை அடைந்து விட்ட புத்தரின் புனிதச் சின்னங்கள் அங்கு வைக்கப்பட்டிருக்கையில் அவர் நம்முடன் வசிக்கவில்லை என எப்படி நினைக்க முடியும்.

புனிதரின் பக்தி மார்கத்தில் இணைந்த புத்த பக்தர்களின் மனதில் பேரானந்தம் பொங்கிட வழி வகுத்த கருணா மூர்த்தியின் பதினேழாம் பாகமான 'புனித சின்னங்கள்' என்ற பகுதி இப்படியாக நிறைவுற்றது.

18: போதி மரம் வந்த கதை

தேரா கூறியது அனைத்தும் மன்னன் நினைவில் இருந்தன. போதி மரத்தைக் கொண்டு வரவும், தேரியை அழைத்து வரவும் ஏற்பாடு செய்ய வேண்டும். அது மழைக் காலம். தன்னுடைய மந்திரிகளுடன் அமர்ந்திருந்து ஆலோசனை செய்த மன்னன் அந்த காரியத்தை முடிக்க தன்னுடைய மருமானும், அமைச்சருமான அரிஹித்தாவை அனுப்ப முடிவு எடுத்தார்.

அப்படி முடிவு செய்த பின் அவரை அழைத்துக் கூறினார் 'அன்புடையவனே, உன்னால் முடியும் என்றால் தம்மகோசாவிடம் சென்று அவருடைய அனுமதியுடன் போதி மரத்தைப் பெற்றுக் கொண்டு, தேரி சங்கமித்தாவையும் அழைத்து வர முடியுமா? ' சற்றும் மறுப்பு கூறாமல் 'மேன்மை மிக்க மன்னா, நான் நிச்சயமாக அவரிடம் சென்று இரண்டையும் பெற்றுக் கொண்டு வந்த பின் பப்பஜ்ஜா உபதேசத்தையும் ஏற்பேன்' என்றார்.

அதைக் கேட்டு மகிழ்வடைந்த மன்னன் அவரை உடனேயே அங்கு அனுப்பினார். அந்த அஸ்ஸயுஜ்ஜ மாதத்தின் *(Assayuja)* வளர் பிறையில் தேராவிடம் இருந்தும் மன்னனிடமும் விடை பெற்றுக் கொண்டு ஜம்புகோலாவில் இருந்து மிக்க ஆர்வத்துடன் கிளம்பி, பெரும் கடலைக் கடந்து தேரா கொடுத்திருந்த சக்தியினால் அன்றைக்கே புப்பாபுராவை அடைந்தார்.

'—: எந்த உயிரையும் கொல்லக் கூடாது, மற்றவர்களுடைய சொத்தை அபகரிக்கக் கூடாது, கற்பை இழக்கக் கூடாது, பொய்

சொல்லக் கூடாது, போதை பானங்கள் அருந்தக் கூடாது, குறிப்பிட்ட வேளைகளில் மட்டுமே உணவு அருந்த வேண்டும், உலக இன்பங்களைத் துறக்க வேண்டும், நகைகள் அணியக் கூடாது, அலங்கரிக்கப்பட்ட சுகமான படுக்கையில் உறங்கக் கூடாது மற்றும் எந்த விதத்திலும் பொன், வெள்ளிப் பொருட்களை பரிசாகப் பெற்றுக் கொள்ளக் கூடாது :—' போன்ற பத்து புத்த சபதங்களை ஏற்கனவே கடை பிடிக்கத் துவங்கிஇருந்த பட்டத்து இராணி பப்பஜ்ஜா உபதேசத்தைப் பெற்று தானும் மஞ்சள் உடையணிந்து அந்த நகரின் எதாவது ஒரு பகுதியில் அமைதியான துறவி வாழிவை மேற் கொள்ள வேண்டும் என்ற ஆவலில் தன்னுடைய ஐநூறு பணிப் பெண்களுடன் அவர் திரும்பி வரும் நாளை எதிர் பார்த்து ஆவலுடன் காத்திருந்தாள். பின்னர் அந்த கன்னிமாடத்தில் அந்த சகோதரிகள் வாழ்ந்து வந்ததினால் உபசிகா விகாரா (*Upäsikä-vihärä*) என்ற பெயர் பெற்றது.

மஹாரித்தா அங்கு சென்று மன்னன் தம்மகோசாவை சந்தித்து தேரா மற்றும் தன்னுடைய மன்னன் அனுப்பிய செய்தியைத் தெரிவித்தப் பின் 'யானையைப் போன்ற பலம் மிக்க மன்னா, என் நாட்டில் உன்னுடைய நண்பரின் மனைவியானவள் கடுமையான கட்டுப்பாட்டை மேற்கொண்டு பப்பஜ்ஜா உபதேசத்தைப் பெற்றுக் கொள்ள ஆவலுடன் காத்திருக்கின்றாள். அவளுக்கு அது கிடைக்க என்னுடன் பிக்குணி சம்ஹமித்தாவை அனுப்பி, போதி மரத்தின் தென் பகுதியின் ஒரு கிளையையும் எடுத்துச் செல்ல அனுமதி தர வேண்டும்' என்றார்.

அதே செய்தியை தேரியிடமும் சென்று கூற அவளும்

தன்னுடைய தந்தை அசோகனிடம் அந்த தேரா தன்னை அழைத்ததின் காரணத்தைக் கூறினாள். அதைக் கேட்டவர் 'ஏற்கனவே என்னுடைய பேரன்களான மஹிந்தா மற்றும் சுமன்னாவையும் பிரிந்து விட்ட சோகத்தில் இருக்கும் என்னால் உன்னையும் பிரிந்திருக்க முடியும்' என்றார்.

அவள் கூறினாள் ' என்னுடைய சகோதரரின் வார்த்தைக்கு மதிப்புக் கொடுக்க வேண்டும் மன்னா, ஆகவே பப்பஜ்ஜா உபதேசத்தைப் பெற்றுக் கொள்ள ஆவலுடன் காத்திருக்கும் பெண்களுக்கு அதை உபதேசம் செய்ய உடனே நான் கிளம்ப வேண்டும். அது மட்டும் அல்ல தெய்வீக போதி மரத்தின் கிளையை வெட்டி எடுக்காமல் எப்படி அதைக் கொண்டு செல்வது' எனக் கவலையுடன் கேட்க அந்த மன்னன் தன்னுடைய அமைச்சர் மஹாதேவாவின் அறிவுறையின்படி புத்த பிக்குக்களை அழைத்து அவர்களுடைய அறிவுறையை நாடினார். அந்த போதி மரத்தை முழுவதும் அனுப்பி விடலாமா எனக் கேட்வரிடம் அப்படி அனுப்ப அவசியம் இல்லை என்ற தேரா மொகலிப்புட்டா புத்தர் தான் நிப்பனாவை எடுத்த பொழுது செய்திருந்த தீர்மானத்தைப் பற்றீ அவருக்கு விளக்கிக் கூறினார்.

அதைக் கேட்டு மிக்க மகிழ்ச்சியுற்ற மன்னன், அந்த போதி மரத்திற்குச் செல்லும் ஏழு யோசனை நீளமான சாலைகளை துப்புறப்படுத்தச் சொல்லிய பின் பலவிதத்திலும் அவற்றை அழகு படுத்தீ மரக் கிளையை வைக்க ஒரு குடுவையை செய்ய தங்கத்தை எடுத்து வரச் சொன்னார். அதை விஸ்வகர்மா என்ற அழைக்கப்பட்ட தட்டானிடம் தந்து போதி மரக் கிளையை வைக்க குடுவையை தயாரிக்குமாறு கூறினார்.

எத்தனை பெரியதாக அந்த குடுவையை செய்ய வேண்டும் எனக் கேட்டவனிடம் உன் மனதுக்கு எந்த அளவு தோன்றுகின்றதோ அந்த அளவில் செய் என மன்னன் கூறினார். அவனும் தன் மனதுக்கு தோன்றிய அளவில் ஒரு தங்கக் குடுவையை செய்து கொடுத்து விட்டுச் சென்றான்.

அந்த குடுவையின் அளவு ஒன்பது கியூபிக்கிற்கு *(ஒரு குறிப்பிட்ட அளவு)* சுற்றளவும் ஐந்து கியூபிக் ஆழமும் கொண்டதாக இருந்தது. அதன் வாய் ஒரு குட்டி யானையின் அளவில் இருக்க சூரியனைப் போல மின்னி தகதகத்தது அந்த தங்கக் குடுவை. ஏழு யோசனை நீளமும் மூன்று யோசனை அகலமும் கொண்ட பாதையில் அவருடைய நான்கு அணிச் சேனையினர் அணி வகுத்து நிற்க மன்னன் பிக்குனியை அழைத்துக் கொண்டு போதி மரம் இருந்த இடத்தை அடைந்தார். அந்த மரத்தினை சுற்றி இருந்த பகுதியை சுற்றி தடுப்புக்கள் போட்டு, அதற்கு அளவற்ற அலங்காரம் செய்து வணங்கிய பின் அவருடைய சேனையினர் பல்வேறு வண்ணப் பூக்களை அதன் மீது தூவி வணங்க முதலிலேயே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தபடி பல்வேறு இசை கருவிகள் கானம் முழங்க, ஆயிரம் பிக்குக்கள் மற்றும் ஆயிரம் பட்டத்து இளவரசர்கள் என பலரும் தன்னை சுற்றி நிற்க இரு கைகளையும் கூப்பி வைத்திருந்தபடி போதி மரத்தின் முன் சென்று நின்றார் மன்னன்.

என்ன அதிசயம். போதி மரத்தின் தென் பகுதியில் இருந்த நாலு கியூபிக் நீள அளவு கிளையில் இருந்த இலைகள் மறைந்தன. அந்த அற்புதக் காட்சியைக் கண்ட மன்னன் ‘உன்னை வணங்கி உனக்கு என் நாட்டையே தருகின்றேன்’ என மகிழ்ச்சியுடன் உரத்த குரலில் போதி மரத்தை நோக்கிக்

கூவினார் மன்னன். அடுத்து அந்த போதி மரத்தை இடமிருந்து வலமாக மும்முறை சுற்றி வந்து, எட்டு இடங்களில் நின்று வணங்கி, பூக்கள், தங்கம் போன்றவற்றை மரத்தின் மீது போட்டு வணங்கினார். அதன் பின் அந்த கிளை தொங்கிய உயரத்திற்கு ஒரு மேஜை தருவித்து அதை தங்கதினால் அலங்கரித்து அதன் மீது தங்கக் குடுவையை வைத்தப் பின் எந்த அளவு வேண்டுமோ அந்த அளவு கிளையின் அடிப்புறததைச் சுற்றி ஒரு சிவப்பு பென்சிலினால் கோடு போட்டப் பின் அந்த மரத்தின் அடியில் சென்று நின்று வணங்கினார்.

‘புனிதரின் போதனைகள் வலுவாக நிறுவப்படவும் ஸ்ரீலங்காவின் நன்மைக்கும் நீங்கள் அங்கு செல்ல வேண்டும்’ என பிரார்தனை செய்தபடி மன்னன் நின்று கொண்டு இருக்க அந்த மரத்தின் கிளை தானாக மரத்தில் இருந்து விலகி அங்கு வைக்கப்பட்டு இருந்த தங்கக் குடுவையில் தன் அடிப்புறத்தை வைத்துக் கொண்டது.

அந்த மன்னன் பென்சினால் போட்ட கோடுடன் தன்னை வெட்டிக் கொண்டு வாசனையான மண்ணால் நிறப்பி வைக்கப்பட்ட குடுவையில் சென்று அமர்ந்த கிளையின் கீழ் போடப்பட்டிருந்த மூன்று கோடுகள் ஒவ்ஒன்றில் இருந்தும் பத்து தடிமனான வேர்களும், அந்த ஒவ்ஒன்றில் இருந்தும் பத்து-பத்து மெல்லிய வேர்களும் தோன்றி வலைப் போன்ற வேர்களை அந்த கிளைக்கு ஏற்படுத்தியிருந்தது. அந்த அற்புதத்தைக் கண்ட மன்னன் அளவற்ற சந்தோஷத்தில் போதி மரத்தைப் போற்றி குரல் எழுப்ப அது போலவே அங்கு கூடி இருந்த புத்த பிட்குக்களும், மக்களும் கோஷம் எழுப்பினர்.

CLICK HERE TO VIEW ENGLISH VERSION

இப்படியாக பத்து கியூபிட் உயர அளவிலான அந்த போதி மரத்து கிளை நூறு வேர்களுடன் தன்னை தங்கக் குடுலையில் வைத்துக் கொண்டது. அந்த செடியில் இருந்து நான்கு கியூபிட் நீள அளவில் ஐந்து கிளைகள் தோன்றி அதில் இருந்து வந்திருந்த ஆயிரக்கணக்கான சிறு கிளைகளில் இலைகளும், பழங்களும் தோன்றின. அதுவே போதி மரத்தின் மகிமைக்கு எடுத்துக் காட்டாக அமைந்து மக்களிடையே நம்பிக்கையை மேலும் வலுப்படுத்தியது.

அந்த நிகழ்சி நடைபெற்றவுடன் பூமி குலுங்கியது. பல்வேறு அற்புதங்கள் நடந்தன. ஒரே சமயத்தில் தெய்வங்கள் இசைத்த நாத ஒலி, பிரும்மா மற்றும் பிற தேவதைகள் வாழ்த்தி எழுப்பிய கோஷங்கள், யட்சிணிகளின் ஆரவார கோஷம், பறவைகள் எழுப்பிய கானங்கள், ஆரவாரம், ஆகாயத்தில் மேகங்களில் மின்னல் அடித்து இடி இடிக்கப்பட்ட பொழுது எழுந்த ஓசை மற்றும் பூமியின் அதிர்வின் ஓசை என அனைத்தும் ஒருசேர ஒரே சுருதியில் அமைந்து இருந்தது. அந்த போதி மரத்துக் கிளையில் இருந்து வெளி வந்த ஆறு வித வண்ணங்கள் சூரிய கிரணத்துடன் கலந்து ஜொலிக்க, புத்தர் விருப்பப்படியே அந்த போதி மரம் தங்கக் குடுவையுடன் ஆகாயத்தில் பறந்து சென்று ஏழு நாட்களுக்கு பனி படந்த அந்த பிரதேசத்தில் எவருடைய கண்களுக்கும் புலப்படாமல் இருந்தது.

தன்னுடைய ஆசனத்தில் இருந்து இறங்கி வந்து அந்த இடத்தில் ஏழு நாட்கள் முகாமிட்டிருந்த மன்னன் பல பரிசுகளை அந்த போதி மரத்திற்குக் காணிக்கையாக்கினார். அடுத்த ஏழு நாட்களுக்குப் பின் பனிப்புகை மறைந்தவுடன் அந்த போதி மீண்டும் வெளியில் வந்து அனைவரும்

காணும்படி தெரிந்தது. அந்த அற்புதமான காட்சிகள் மக்களின் மனதில் ஆச்சரியத்தை ஏற்படுத்தின.

தன்னுடைய நாட்டில் இப்படிப்பட்ட அதிசய நிகழ்ச்சியை வெளிப்படுத்திய போதி மரத்தை கண்ட மன்னன் பெரும் மகிழ்ச்சி அடைந்து இன்னும் ஒரு வார காலத்திற்கு அதற்கு பூஜைகள் செய்து தானங்கள் வழங்கியும் ஒரு விழாவாகவே அந்த நிகழ்சியை கொண்டாடி மகிழ்ந்தார்.

அசயுஜா மாதத்தில் உபோத்சவா உற்சவம் முடிந்து பதினாலு நாட்கள் ஆன பின் அங்கிருந்து கிளம்பிச் சென்ற மஹாரித்தா போதி மரத்தின் கிளை கொண்ட தங்கக் குடுவையை தேவனாம்பியதிஸ்ஸவிடம் கொடுக்க அவரும் அதைப் பெற்றுக் கொண்டு தேரில் வைத்து பவனியாக தன் நகருக்குள் எடுத்துச் சென்றார். பலவித பரிசுக்களை அனைவருக்கும் வழங்கினார். காத்திகா மாதத்தின் வளர்பிறையில் அந்த தோப்பில் இருந்த சாலா மரத்தின் அருகில் கிழக்குப் புறத்தில் அந்த போதி மரத்தை பதித்து பூஜைகள் செய்தார். பதினேழாம் நாளன்று அதில் இருந்து மேலும் பல கிளைகள் தோன்ற குதுகலித்துப் போன மன்னனும் பெரிய விழா போல அதை நடத்தி போதி மரத்தை வணங்கலானார். இப்படியாக அந்த அற்புதமான போதி மரம் தெய்விகத்தை அந்த தீவில் தன்னுடன் கொண்டு வந்திருந்தது.

புனிதரின் பக்தி மார்கத்தில் இணைந்த புத்த பக்தர்களின் மனதில் பேரானந்தம் பொங்கிட வழி வகுத்த கருணா மூர்த்தியின் பதினெட்டாம் பாகமான ‘ போதி மரம் வந்த கதை’ என்ற பகுதி இப்படியாக நிறைவுற்றது.

19: போதி மரம் ஸ்தாபனம்

போதி மரத்தை பெற்றுக் கொண்டு வந்த இளவரசர் அதை பயணத்தின் பொழுது பாதுகாத்து கண்காணித்து தண்ணீர் ஊற்றி வர ஒரு குழுவை நிறுவினார். அதற்காக அவர்கள் ஒவ்ஒருவருக்கும் எட்டுக் கிண்ணம் தங்கம் மற்றும் வெள்ளியைத் தந்தார். அதில் அரச குடும்பத்தில் இருந்து பதினெட்டு பேர், அமைச்சர்கள் குடும்பத்தில் இருந்து பதினெட்டு பேர், பிராமணர்கள் குடும்பத்தில் இருந்து எட்டு பேர், வியாபாரிகள் எட்டு பேர், ஆடு-மாடு மேய்ப்பவர் எட்டு பேர், கழுதை மற்றும் பறவை பிடிப்பவர், மண்பாண்டம் செய்பவர், நெசவாளி, பிற தொழில் கலைஞர்கள், நாகர்கள், யட்சிணிகள் போன்ற பிரிவுகளில் ஒவ்ஒன்றில் இருந்தும் ஒவ்ஒருவர் என பல பிரிவைச் சேர்ந்தவர்களும் இருந்தனர். தான் வந்த கப்பலில் அந்த போதி மரத்தை வைத்து, சங்கமித்தாவுடன் வந்த பதினெட்டு பிக்குணிகளையும் ஏற்றிக் கொண்டு விஞ்சரா மலை வழியாக *(Viñjhä-mountains)* ஒரு வாரத்தில் தாமலிட்டிக்கு *(Tamalitti)* வந்து சேர்ந்தார்.

ஸ்ரீலங்காவில் அனுராதபுரத்தில் உள்ள ஆலமரம் போதி மரத்தை சார்ந்தவைதான். ஆறாம் நூற்றாண்டில் புத்தர் எந்த மரத்தின் அடியில் ஞானமடைந்தாரோ அந்த மரத்தின் கிளையை நட்டு வளர்க்கப்பட்டதே அந்த ஆலமரம். கி:மு 288 ஆம் ஆண்டில் அசோகருடைய மகளினால் எடுத்து வரப்பட்டு அனுராதபுரத்தில் நடப்பட்ட அந்த மரமே தற்பொழுது உயிர் வாழும் மரங்களில் முதன்மையானதும் மிகப் பழமையானதும் ஆகும்.

CLICK HERE TO VIEW ENGLISH VERSION

நாகர்கள், தேவதைகள் மற்றவர் என பலரும் வழிபட்ட அந்த போதி மரம் ஒரு வார கடல் பயணத்திற்குப் பின் தரை இறங்கியது. அதை கப்பலில் ஏற்றி அனுப்பி வைத்தப் பின் அதைக் கொடுத்த மன்னாதி மன்னன் விந்திய மலைஅடிவாரத்தில் இருந்த கங்கையில் தான் பயணம் செய்து கொண்டு இருந்த பொழுது, மீண்டும் வழியில் அந்த போதி மரத்துடன் சென்று கொண்டு இருந்த கப்பலைக் காண அந்த அதற்கு தன் வணக்கங்களை மீண்டும் தெரிவித்தார்.

மாகசீரா மாதத்தின் வளர் பிறையில் அந்த போதி மரத்தை அங்கிருந்து எடுத்துப் போகச் சொன்ன மன்னாதி மன்னன் அதனுடன் வழித் துணைக்கு அனுப்பியிருந்த எட்டு உயர் குலத்தை சார்ந்தவர்களை அந்த மரம் கழுத்தளவு வளர்ந்து வரும் வரை அதை பராமரிக்கும்படிக் கூறி இருந்தார். தேரி மற்றும் அவருடன் வந்திருந்த எட்டு பிக்குணிகளை கப்பல் அடித்தளம் வரை தானே அழைத்துச் சென்ற மன்னர் முக்கிய மந்திரி மஹாரிட்டாவிடம் கூறினார் ' நான் மூன்று முறை அந்த மரத்திற்கு பூஜைகள் செய்தேன். அது போல என் நண்பரான உங்கள் நாட்டு மன்னனும் அதற்கு உரிய மரியாதையை அளித்து வணங்குவார் என நம்புகின்றேன்' இப்படியாகக் கூறிய பின் மேலும் 'சூரிய கிரண ஒளி போல பத்து சித்திகளையும் வைத்திருந்து ஜொலித்த போதி மரம் இன்று இங்கிருந்து கிளம்பிச் செல்கின்றதே' என கண்களில் கண்ணீர் வழிய நதிக் கரையில் நின்று மன்னன் புலம்பினார்.

போதி மரத்தை அனுப்பிவிட்டு வருகின்றோமே என அழுது புலம்பிய தம்மகோசா தன் தலைநகருக்குத் திரும்பினார். அந்த கப்பலில் மிதந்தவாறு போதி மரம் செல்லத் துவங்க

ஒரு யோசனை தூர அளவிற்கு நதியின் நீர் அமைதியாக ஓடிக் கொண்டிருக்க, ஐந்து வண்ண தாமரைப் பூக்கள் வழி எங்கும் பூத்துக் குலுங்கி அது சென்ற பாதைக்கு அழகூட்ட, இயற்கை எழுப்பிய இன்ப நாதத்தில் மெல்ல அந்த கப்பல் நகர்ந்தது.

வழி எங்கும் பல தேவதைகள் தமது வணக்கங்களை அந்த போதி மரத்திற்கு தெரிவித்துக் கொண்டு இருக்க, கடலில் இருந்த நாகங்கள் தமது மந்திர சக்தியை உபயோகித்து அந்த போதி மரத்தினை தாம் எடுத்துக் கொள்ள முயற்சி செய்ய, சங்கமித்தா தன்னை ஒரு ஒரு கருடன் போல உரு மாற்றிக் கொண்டு அவற்றை பயமுறுத்தித் துரத்தினாள். அந்த கருடனைப் பார்த்து பீதி அடைந்த போன நாகங்கள், மிக கஷ்டப்பட்டு தேரியை சந்தித்து தம்மை மன்னிக்கும்படி மன்றாடின. பின் சர்பங்கள் இருந்த பிரதேசத்தை அது நெருங்கியவுடன் நாகர்களின் தலைவர் அந்த மரத்திற்கு பலவிதமான பூஜைகள் மற்றும் வணக்கங்களைத் தெரிவித்து பல விதப் பரிசுப் பொருட்களையும் அதற்குக் கொடுத்து மரியாதை செய்து தம்முடைய பிரதேசத்தை விட்டு பாதுகாப்பாகச் செல்ல வழி வகுத்தார். அதன் பின் போதி மரம் அப்பொழுதைய சிலோன் என்ற ஜம்புகோலாவிற்கு வந்து சேர்ந்தது

தேவனாம்பியதிஸ்ஸாவிற்கு சாமனீய சுமன்தா தான் வந்து கொண்டிருப்பதின் விவரத்தை முன்னரே அறிவித்து இருந்தார். அதனால் பெரும் மகிழ்ச்சியில் இருந்த மன்னன் போதி மரம் வந்திறங்கும் நாள் குறைவாக இருந்ததினால் மாகசீரா மாதத்தின் ஆரம்பத்தில் இருந்தே ஒரு மாதமாக சமுத்திரக் கரையில் இருந்து ஜம்புகோலாவிற்கு வந்தடைந்த பாதைகளை சீரமைக்கும்படிக் கூறி இருந்தார். தேரியின் சக்தியினால்

சமுத்திரக்கரையில் தோன்றிய சமுத்தனபாடசாலா *(Samuddapannasälä)* என்ற இடத்தில் போதி மரத்தை வரவேற்க அற்புதமான கூடத்தையும் அமைத்தார். அதன் பின்னர் அந்த தேரி, மற்ற தேராக்கள், தன்னுடைய பரிவாரங்களுடன் அன்றைக்கே தேரியின் சக்தியினால் ஜம்புகோலாவுக்குத் திரும்பினார்.

போதி மரம் வந்தவுடன் பெரும் ஆரவார கோஷங்களுக்கு இடையே கழுத்தளவு நீரில் இறங்கி கப்பலை அடைந்த மன்னன், அந்த போதி மரத்துடன் வந்திருந்த பதினாறு உயர்குல மக்கள் சூழந்திருக்க அதை தன் தலை மீது வைத்துக் கொண்டு கடற்கரைக்கு வந்து அங்கிருந்த மைதானத்தில் அதை இறக்கி தன்னுடைய அரசின் சார்பாக வணக்கங்களை அளித்தார். அதன் பின் அந்த நிகழ்சியை கொண்டாடும் வகையில் மூன்று நாட்களுக்கு விழா எடுக்குமாறு கூறிய பின் அந்த போதி மரம் உள்ள இடத்தைப் பாதுகாக்க தன்னுடைய நாட்டில் இருந்து பதினாறு பேரை நியமித்த பின் தன்னையும் நுழைவாயிலில் காவலுக்கு உள்ள ஒரு காவலராக நியமித்துக் கொண்டார்.

பத்தாவது நாளன்று போதி மரத்தை ஒரு இரதத்தில் ஏற்றி வைத்துக் கொண்டு ஊர்வலமாக எடுத்துச் சென்றார். அதில் தானும் கலந்து கொண்டார். பின்னர் கிழக்குப் பகுதியில் அமைந்த இராஜாங்கம் உள்ள இடத்தை அந்த இரதம் அடைந்தது. அந்த இடத்தில் அனைவரும், மக்கள் முதல் அனைத்து புத்த சகோதரர்கள் வரை, உணவு அருந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தது. அந்த நேரத்தில் புத்தர் இரண்டாம் முறையாக சிலோனுக்கு வந்த பொழுது எப்படி நாகங்களின் கொட்டத்தை தன்னுடைய பத்து சக்தியினால்

அடக்கினார் என்ற விவரத்தை தேரா மஹீன்தா மன்னனுக்கு எடுத்துரைத்தார்.

அதைக் கேட்டு மகிழ்ந்து போன மன்னனும் எங்கெல்லாம் புத்தர் விஜயம் செய்திருந்தாரோ அந்த இடங்களில் எல்லாம் அவருக்கு நினைவுச் சின்னங்களை அமைக்குமாறு கூறினார். போதி மரத்தை எடுத்து வந்த ஊர்வலம் பிராம்மன் தவக்கா என்ற கிரதாமத்தில் நுழைந்து அங்கும் இங்குமாக இருந்த பல இடங்களைக் கடந்து பதினான்காம் நாள் அனுராதபுராவிற்கு அருகில் இருந்த ஊரை அடைந்தது. இரவும் பகலும் அந்த ஊர்வலம் வந்த வழி முழுவதும் கோலங்கள் போடப்பட்டு, இரதத்தின் மீது பூக்கள் தூவப்பட்டு, வழிகள் அனைத்திலும் தோரணங்கள் கட்டப்பட்டு அலங்கரிக்கப்பட்டு இருந்தது. ஊர்வலம் மாலை பொழுது சாயும் வேளையில் அனுராதபுரத்தின் வடக்குப்புற நுழை வாயில் வழியே நுழைந்து, தெற்குப்புற நுழை வாயில் வழியே வெளியேறி மஹாமேஹவானராமா என்ற இடத்தில் புத்த பிக்குக்கள் போதி மரத்தை வைக்க முன்னரே அமைத்து இருந்த இடத்தை அடைந்தது. அந்த இடத்தை அடைந்ததும் பல்வேறு நகைகள் அணிந்து ஜொலித்தபடி வந்திருந்த அரச வம்சத்தை சார்ந்த பதினாறு பேர்களுடன் சேர்ந்து மன்னன் அந்த போதி மரத்தை இரதத்தில் இருந்து இறக்கி முன் காலத்தில் போதி மரம் இருந்த இடமான ஒரு குறிப்பிட்ட இடத்தில் வைத்தார்.

அதை கீழே வைத்ததுதான் தாமதம், அந்த மரம் எண்பது கியூபிக் உயரத்துக்குப் பறந்து சென்று அங்கு நின்றிருந்தபடி ஆறு வண்ண மிகு ஒளிக்கதிரை வீசிற்று. அந்த தீவைத் தவிற அந்த ஒளி பிரும்மலோகம் வரை பரவி சூரியன் மறையும் வரை இருந்தது. அங்கு கூடி இருந்த பத்தாயிரம் மக்கள் அந்த

அற்புதமான காட்சியை அனுபவித்து பார்த்தபடி நின்றனர். அவர்கள் பப்பஜ்ஜா உபதேசத்தைப் பெற்றுக் கொண்டு அரஹன்தாக மாற இருந்தனர்.

மாலையில் சூரிய அஸ்தமனம் துவங்க போதி மரம் கீழ் இறங்கி வந்து புமியில் தன்னைப் பதித்துக் கொண்டது. அது ரோஹிணி நட்சத்திரத்தின் தினம். குடுவையில் இருந்து வெளி வந்த அதனுடைய கெட்டியான வேர்கள் குடுவையுடன் நிலத்திற்குள் செல்ல இருப்பது போல அந்த குடுவையை சூழ்ந்து கொண்டு இருந்தன. அந்த நேரத்தில் பூமி குலுங்கியது. அந்த போதி மரம் தன்னை ஸ்தாபித்துக் கொண்டவுடன் பல திசைகளில் இருந்தும் வந்தவர்கள் அந்த மரத்திற்கு தீபாராதனை செய்து, பூக்கள் தூவி, வாசைன திரவியங்கள் படைத்து வழிபட்டனர். அதன் பின் கரு மேகங்கள் சூழு பெரும் மழை வந்தது. அடுத்து அந்த மரத்தை சுற்றி பனி மழை பொழிய அந்த மரம் கண்களுக்குத் தெரியாமல் முழுமையாக மறைந்தது. ஏழு நாட்களுக்கு அந்த மரமே கண்களுக்குப் புலப்படாமல் இருந்த பின் எட்டாவது நாள் பனி விலக, ஆறு வண்ணங்களை வாரி இறைத்தபடி போதி மரம் மக்களுடைய கண்களுக்குத் தெரிந்தது.

போதி மர ஸ்தாபன விழாவில் கலந்து கொள்ள தரா மஹீன்தாவும், பிக்குனி சங்கமித்தாவும் அந்த இடத்திற்கு சென்றனர். அது போல மன்னனும் தன் பரிவாரங்களுடன் அங்கு சென்றார். கஜரகாமா *(Kajaragama)*, கண்டனகாமா *(Candanagama)* , பிரம்மன் திவக்கா *(Brabman Tivakka)* , குடி மக்கள், போன்ற அனைவரும் அதே இடத்தில் வந்திருந்தனர். அப்படி வந்தவர்கள் பார்த்துக் கொண்டு இருக்கையிலேயே

அந்த மரத்தின் கிழக்குப் பகுதிக் கிளையில் பழும் காய்த்துத் தொங்கிய அதிசயத்தையும் அவர்கள் கண்டனர்.

தேரா அந்த தங்கக் குடுவையுடன் கூடிய மரத்தை மன்னனிடம் தந்தார். அதைப் பெற்றுக் கொண்ட மன்னனும் அதை மஹாசானா *(Mahääsana)* என்று பின்னர் அழைக்கப்பட்ட இடத்தில் நட்டார். அனைவருடைய முன்னிலையிலும் அந்த மரம் எட்டு வேர்களுடன் நான்கு கியூபிக் உயரமாக தோன்றியது.

அந்த இளம் செடி நிழலில் இருக்குமாறு அதன் தலை மீது ஒரு பெரிய வெண்சாமரக் குடையை அமைத்தார். வந்திருந்த எட்டு போதி மரக் கிளைகளில் (*கன்று*) முதலில் போதி மரம் இருந்த இடமான ஜம்புகோலாவில் ஒன்றையும், பிரும்மன் தவக்காவின் கிராமத்தில் ஒன்றையும், துாபராமாவில் ஒன்றையும், இஸ்ஸாரசாம்னராமாவில் *(Issarasamanäräma)* ஒன்றையும், ஸ்துாபி இருந்த இடத்தில் ஒன்றையும், சிடியா மலை, கஜாரகாமா, மற்றும் கண்டகாமாவில் ஒவ்ஒன்றுமாக நடப்பட்டது. ஆனால் பின்னர் அந்த போதி மரத்தின் நான்கு பழங்களில் இருந்து வந்த முப்பத்தி இரண்டு கன்றுகளை ஒரு யோஜனை துாரத்தில் இருந்த பல்வேறு விகாராக்களில் நட்டனர்.

சம்மசம்புத்தாவின் முயற்சியினால் அந்த தீபகற்பத்தின் நலனுக்காக போதி மரம் நடப்பட அனுலாவும், அவருடன் மேலும் பலரும் சங்கமித்தாவிடம் இருந்து பப்பஜ்ஜா உபதேசத்தைப் பெற்றுக் கொண்டு அரஹன்தாக மாறினர். அது போல இளவரசர் அரிட்டாவும் தன்னுடன் ஐநுாறு பேர்களை அழைத்துப் போய் பப்பஜ்ஜா உபதேசம் பெற்று

அரஹன்த் ஆயினர். போதி மரத்தை எடுத்து வந்த பொழுது அதனுடன் வந்த எட்டு வியாபாரிகள் சங்கமம் 'போதி மர சங்கம்' என்ற பெயர் பெற்றது.

உபசீகவிஹாரா *(Upäsikävihära)* என்ற பெயரில் அமைந்திருந்த கன்னி மாடத்தில் சங்கமித்தா தன்னுடைய சகோதர துறவினிகளுடன் இருந்து வந்தாள். அவள் முயற்சியினால் அங்கு பன்னிரண்டு கட்டிடங்கள் கட்டப்பட்டன. அதில் மூன்று முக்கியத்துவம் வாய்ந்தது. அவற்றில் ஒன்றில் போதி மரத்தைஎடுத்து வந்த கப்பலின் பாய் மரம், மற்றொன்றில் திசை திருப்பும் சுக்கான் மற்றும் மூன்றாவதில் கவசம் போன்றவற்றை அந்த கப்பலின் நினைவாக வைத்திருக்கும்படிக் கூறினாள். மேலும் பின்னர் தோன்றிய பல ஹட்டஹலாகா பிக்குணிகளின் *(Hatthälhaka-bhikkhunis)* உபயோகத்திற்காக மற்றவை பயன் படுத்தப்பட்டன.

கடம்பா *(Kadamba)* மலர்க் கொடிகள் புத்துக் குலுங்கிய குளுமையான இடத்தில் வைக்கப்பட்டு இருந்த அந்த நாட்டு மன்னனின் பட்டத்து யானை அங்கு தன் இஷ்டம் போல் நடந்து திரிந்து கொண்டு இருந்தது. அந்த குளுமையான இடம் யானைக்கு ஒத்துப் போய் இருந்ததினால் அந்த இடத்தில் யானைக் கோட்டத்தை அமைத்து இருந்தனர். ஒரு நாள் அந்த யானை தனக்கு போடப்பட்ட உணவை உண்ண மறுத்த பொழுது அதைக் கேள்விப்பட்ட மன்னன் அதற்கான காரணத்தைப் தேராவிடம் கேட்ட பொழுது அவர் யானை இருந்த இடத்தில் ஸ்துாபியை கட்டினால் மட்டுமே இனி உணவை உண்ணும் என்று கூறி விட மன்னன் சற்றும் தயங்காமல் அந்த இடத்தில் ஸ்துாபி ஒன்றை நிர்மாணித்து

புனிதரின் புனிதச் சின்னம் ஒன்றையும் வைக்க ஏற்பாடு செய்தார்.

தேரி சங்கமிதாதா ஒரு அமைதியான இடத்தில் சென்று வசிக்க விரும்பினாள். தொடர்ந்து அந்த விகாராவில் போதனைகளை ஏற்க வந்த கூட்டத்தினால் ஏற்பட்ட தொந்தரவே அதற்குக் காரணம். ஆகவே அந்த பிக்குணி சிடியா வீட்டிற்குச் சென்று ஒரு நாள் தங்கிவிட்டாள்.

பிக்குணிக்கு என்றும் போல் தன் வணக்கங்களைத் தெரிவிக்க வந்த மன்னனுக்கு பிக்குணி அங்கு இல்லை எனத் தெரிய வர அதற்கான காரணத்தை மற்றவரிடம் இருந்து தெரிந்து கொண்ட தேவனாம்பியதிஸ்ஸா உடனடியாக யானைக் கோட்டமும் துாபாவும் இருந்த இடத்தில் அவர்கள் தங்கிக் கொள்ள அருமையான ஒரு குடில் அமைத்துத் தந்தார். அதனால் அது ஹடல்ஹகாக *(Hatthālhaka)* விகாரா என்ற பெயர் பெற்றது.

அப்படிப்பட்ட அந்த அற்புதமான அமைதியான விகாராவில் தேரிணிகள் தங்கிக் கொண்டனர். பல அற்புதங்களைக் கண்ட மேகமேகா பூங்காவில் இப்படியாக அமைந்த அனைத்து இடங்களும், ஸ்ரீலங்காவின் மேன்மைக்காக கொண்டு வரப்பட்ட போதி மரம் மற்றும் புத்தருடைய போதனைகள் என அனைத்தும் வெகு காலத்திற்கு மக்களினால் பெருமையாகப் பேசப்பட்டு வந்தது .

புனிதரின் பக்தி மார்கத்தில் இணைந்த புத்த பக்தர்களின் மனதில் பேரானந்தம் பொங்கிட வழி வகுத்த கருணா மூர்த்தியின் பத்தொன்பதாம் பாகமான ‘ போதி மர ஸ்தாபனம்’ முடிவுற்றது.

20: புத்த தேரா சமாதி அடைந்தார்

தம்மகோசா ஆட்சிக்கு வந்த பதினெட்டாம் ஆண்டு மஹாமேஹவானரமாவில் போதி மரம் நடப்பட்டது. சம்புத்தரிடம் பெரும் நம்பிக்கைக் கொண்ட அவருடைய அன்பான மனைவி அதற்கு பன்னிரண்டு வருடங்களுக்குப் பின் இறந்து போனாள். அதற்கு அடுத்த நான்கு ஆண்டுகளில் நம்பத்தகுந்தவள் அல்ல எனத் தெரியாமல் திஸ்ஸராக்கா *(Tissarakkha)* என்ற பெண்ணை தன் பட்டத்து இராணியாக்கினார். அதற்கு மூன்று ஆண்டுகளுக்குப் பின் தன்னுடைய அழகை நினைத்து கர்வப்பட்ட அந்த இராணி பொருமினாள். 'என்னை விட போதி மரத்தை இந்த அரசன் அதிகம் நேசிக்கலாமா'. மாம்பழக் கொட்டையை மாண்டு என்ற முள்ளால் *(mandu-thorn)* குத்தி விட்டால் அது பின்னர் புதைத்தாலும் செடியாக வெளி வராது. அதை மீண்டும் விதைத்தாலும் செடியாக முளைக்காது என்பதை தெரிந்து கொண்டு அதே வழியைப் பின்பற்றி போதி மரத்தை சாகடித்து விட்டாள். அதற்கு அடுத்த நான்கு ஆண்டுகளில் தம்மகோசா மரணம் அடைந்து விட்டார். இப்படியாக அவர் முப்பத்தி ஏழு வருடங்கள் ஆட்சியில் இருந்தார்.

அதற்கு மாறாக தேவனாம்பியதிஸ்ஸா புத்த போதனைகளை நன்கு கற்றுணர்ந்து தூபராமாவிலும், சிடியா மலையிலும் மகா விகாராக்களை கட்டி முடித்தப் பின் தேராவிடம் சென்று ' நான் பல விகாராக்களை கட்டி முடித்து விட்டேனே, இனி புத்தருடைய புனித சின்னங்கள் எப்பொழுது எனக்குக் கிடைக்கும் ' என்று கேட்டார்.

CLICK HERE TO VIEW ENGLISH VERSION

சம்புத்தருடைய சின்னங்களை சுமனா எடுத்து வந்து என்னிடம் கொடுத்த பாத்திரத்தை சிடியா மலை மீது வைத்து உள்ளேன். அவற்றை யானையின் முதுகில் ஏற்றி இங்கு கொண்டு வர ஏற்பாடு செய்.' அப்படியே கொண்டு வரப்பட்ட புனிதச் சின்னங்கள் ஒவ்வொரு யோசனை தூரத்தில் இருந்த ஒவ்வொரு விகாராக்களிலும் தேரா கூறி இருந்தபடி வைக்கப்பட்டது. ஆனால் அந்த புனித சின்னங்களை வைத்து எடுத்து வரப்பட்டிருந்த குடுவையை மட்டும் அரண்மணையில் வைத்து அதற்குப் பலவிதமான பூஜைகளை செய்து மன்னன் வழிபட்டார்.

உயர் குடியினரில் ஐநூறு பேர் தேராவிடம் பப்பஜ்ஜா உபதேசம் பெற்று தங்கி இருந்த விகாராவுக்கு ஈஸராஸமானகா *(Issarasamanaka)* என்ற பெயர் உண்டு. அது போல அந்த விகாராவின் தென் பகுதியில் அனுராதபுரத்திற்கு அருகில் இருந்த வேசகிரி விகாராவில் தங்கி இருந்த வெசாஸ் *(vessas- அந்த காலத்தில் ஜாதியின் மூன்றாம் பிரிவினராக இருந்த வைஷ்யாக்கள்)* எனப்பட்ட பிரிவினரில் ஐநூறு பேர் பப்பஜ்ஜா உபதேசத்தை பெரிய தேராவிடம் இருந்து பெற்று இருந்தனர். சிடியா மலையில் அமைக்கப்பட்டிருந்த செயற்கை குகைகளில் வசித்து வந்த மாபெரும் தேரா மஹீந்தா இருந்த இடம் மஹீந்தா குகை என அழைக்கப்பட்டது.

தேவனாம்பியதிஸ்ஸா தன்னுடைய நாற்பது வருட ஆட்சி காலத்தில் லங்காவிற்கு அனைவரும் பாராட்டும் வகையில் பலரும் பயன் படுத்தும் விதத்தில் தன்னால் முடிந்த அளவு வசதிகளை செய்து கொடுத்திருந்தார். அவர் நிர்மாணித்த இடங்களில் முதலாவதாக மஹா விஹாரா, அடுத்து சிடியா மலையில் தங்கும் குகை, அடுத்து ஸ்துாபி, அடுத்து போதி

மர ஸ்தாபனம் , அடுத்து ஸ்துாபிக்குப் போக வழி காட்டும் கல்வெட்டு , அடுத்து சம்புத்தரின் தோள் பட்டை எலும்பை புனித சின்னமாக அமைத்தது , அடுத்து ஈசராசாமனா, அடுத்து திஸ்ஸா ஏரி, அடுத்து பாதமதுாபா, அடுத்து வேசகிரி உபசிகா மற்றும் ஹதால்ஹகா போன்றவை அடங்கும். பிக்குணிகளுக்கு அமைக்கப்பட்டிருந்த ஹதால்ஹகா என்ற குடிலுக்குச் சென்று அங்கிருந்துதான் அவர்களுடைய சகோதர பிக்குக்கள் உணவு பெற்று வந்தனர். ஆகவே அதற்கு மாற்றாக புதிய மையம் ஒன்றை மஹாபாலி என்ற பெயரில் மன்னன் நிறுவி வருடம் முழுவதும் பிக்குக்களுக்கு குறைவின்றி உணவு கிடைக்க வேண்டிய வசதிக்காக ஏராளமான சமையல் பாத்திரங்கள், குறைவில்லாத உணவுப் பண்டங்கள் போன்றவற்றை அமைத்து இருந்தார். அவற்றைத் தவிற லங்கா மக்களின் ஞான மார்கத்திற்கு வழிகோலும் வழிபாட்டுத் தலங்களை ஜம்புகோலவிகாரா, திஸம்மவிகாரா மற்றும் பாச்சினராமா என்ற பெயர்களில் அமைத்து இருந்தார்.

அந்த மன்னனின் மரணத்திற்குப் பின் பட்டத்திற்கு வர அவருக்கு பிள்ளை இல்லாததினால் அவருடைய சகோதரர் உத்தியா பதவி ஏற்றார். சிடியா மலை குகையில் தங்கி இருந்தவர், பரிபூரண கல்வி அறிவு பெற்றவர், அனைத்திலும் சிறப்பானவர், பலருக்கும் ஞான அறிவு புகட்டியவர், தன்னுடைய குருவின் *(புத்தர்)* போதனைகளை அனைவருக்கும் வழங்கியவர்,தாமே நேரிடியாக வந்திருந்து ஸ்ரீலங்கா மக்களின் நன்மைக்கு பாடுபட்டவர் என்ற அனைத்துப் பெருமைகளையும் பெற்றிருந்த மாபெரும் தேரா மஹின்தா, அந்த மன்னனின் எட்டு வருடகால ஆட்சி முடிந்திருந்த பொழுது அஸயுஜா *(Assayuja)* மாதத்தின் வளர் பிறையின் எட்டாவது நாளன்று தமது எண்பதாம் வயதில், நிபானாவை எய்தினார்.

அதைக் கேள்விப்பட்ட மன்னன் உத்தயா மிக்க துயரம் அடைந்து உடனே அவர் மறைந்த இடத்திற்குப் போய் அஞ்சலி செலுத்தி அவருடைய பெருமையை வெகுவாகப் பாராட்டினார். அது மட்டும் அல்லாது அவருடைய உடலை அலங்கரிக்கப்பட்ட ஒரு தங்கப் பேழையில் வைத்து , நறுமணங்கள் தெளித்து, படை வீரர்கள் மரியாதை செலுத்தி வர, ஊர்வலத்தில் பெரும் திரளான மக்களும் வந்து கலந்து கொள்ள, பல சடங்குகளுக்கு இடையே அந்த பேழையை வண்டி ஒன்றில் ஏற்றி அனைத்துத் தலை நகரங்களுக்கும் இடையே இறுதிப் பயண ஊர்வலமாக எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்தார்.

இப்படியாக கொண்டு வரப்பட்ட சவப் பெட்டியை ஒரு வார காலத்திற்கு பன்ஹம்பமாலகா *(Pañhambamälaka)* என்ற இடத்தில் வைத்திருந்தார். அந்த இடத்தை சுற்றி மூன்று யோசனை துாரத்திற்கு தீபகற்பத்தின் நகரெங்கும் இருந்த வீதிகள் அலங்கரிக்கப்பட்டு இருந்தன. பூத் தோரணங்கள் கட்டப்பட்டு மரத்திலான வளைவுகள் கட்டப்பட்டன. ஏழு நாட்கள் முடிந்தப் பின் அந்த இடத்தின் கிழக்குப்புறம் இருந்த தேரனாம்பந்தகஹமாலகா *(Theränambandhamälaka)* என்ற இடத்தில் உயரமான பீடம் அமைக்கப்பட்டு அதில் சந்தனக் கட்டைகள் அடுக்கி வைக்கப்பட்டு அந்த தேராவின் உடல் இருந்த பேழை இறக்கி வைக்கப்பட அவருடைய இறுதிக் கடன்களை முறையாக செய்த மன்னன் சிதைக்கு தீ மூட்டினார்.

சிடியா மலையிலும் மற்ற விகாராக்களிலும் அந்த புனித தேராவின் புனித சின்னங்கள் வைக்கப்பட்டன. அது மட்டும் அல்லாது அவருடைய இறுதிக் கடன்களை செய்த

இடத்திற்கும் இசிபுமன்கனா *(Isibhumangana)* என்று பெயர் சூட்டப்பட்டு அங்கு அவருக்கு நினைவு மண்டபம் அமைக்கப்பட்டது.

அது முதல் அந்த இடத்தின் மூன்று யோசனை தூர அளவுக்கு பெரியோர்கள் எவர் மறைந்தாலும் மறைந்தவர்களுடைய உடல் அங்கு தகனம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது.

உத்தியாவின் ஆட்சி காலம் ஒன்பது மாதங்களைக் கடந்த பொழுது ஹதல்ஹக்கா குடிலில் *(Hatthalhaka-convent)* தங்கி இருந்து பலருக்கும் போதனைகள் செய்து நல்வழிக்கு அழைத்துச் சென்ற அற்புதமான சித்திகளைப் பெற்றிருந்த தேரி சங்கமிதாதாவும் நிபானாவை எய்தினார். அவருடைய வயது அப்பொழுது ஐம்பத்தி ஒன்பது. அவளுக்கும் தேரா மஹீன்தாவிற்கு செய்ததைப் போன்றே ஒரு வார கால இராஜ மரியாதையுடன் கூடிய இறுதிச் சடங்குகளை மன்னன் செய்தார்.

அந்த தேரியினுடைய உடலையும் ஒரு வார காலத்திற்கு பல்வேறு இடங்களுக்கும் ஊர்வலமாக எடுத்துச் சென்று தூபராமாவில் போதி மரம் இருந்த இடத்திற்கு அருகில் அந்த தேரி மரணம் அடைவதற்கு முதலிலேயே கூறி இருந்த சிட்டிசாலா *(Cittisala)* என்ற இடத்திற்கு கொண்டு செல்லப்பட்டு தகனம் செய்யப்பட்டது. அவளுடைய நிவைாக ஒரு ஸ்துாபியை அந்த இடத்தில் மன்னன் நிறுவினார்.

அதற்குப் பின் சில காலத்திலேயே தேரா மகிந்தாவுடன் சிலோனுக்கு வந்திருந்த ஐந்து தேராக்கள், அரித்தாவின் தலைமையின் கீழ் இருந்த தேராக்கள், சங்கமிதாதாவுடன் இருந்த பன்னிரண்டு தேரிணிகள், துறவிகளான பல

CLICK HERE TO VIEW ENGLISH VERSION

ஆயிரக்கணக்காக தேராக்கள், மற்றும் புத்தரின் வழியில் வந்து போதனைகள் செய்து கொண்டிருந்த பல தேராக்கள் என ஒருவர் பின் ஒருவராக மரணம் அடைந்தனர். புத்திசாலி, மரணத்தைக் கண்டு அஞ்சாமல் உலகில் பற்றற்று இருந்தவர், எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் துன்பமோ, இன்பமோ அடையாமல் இருந்தவர் என்ற பெயர் பெற்றிருந்த அந்த மன்னரும் பத்து வருடங்கள் ஆட்சி செய்து மறைந்தார்.

புனிதரின் பக்தி மார்கத்தில் இணைந்த புத்த பக்தர்களின் மனதில் பேரானந்தம் பொங்கிட வழி வகுத்த கருணா மூர்த்தியின் இருபதாம் பாகமான ‘புத்த தேரா சமாதி அடைந்தார்’ என்ற பகுதி முடிவுற்றது.

21: ஐந்து மன்னர்கள்

உத்தியாவின் *(Uttiya)* இளைய சகோதரான மஹாசிவா என்பவர் அவருடைய சகோதரனின் மறைவிற்குப் பின் பத்து ஆண்டுகள் நல்லாட்சி செய்து வந்தார். தேரா பத்தசாலாவின் பக்தரான அவர் நாகராங்கனா *(Nagarangana)* என்ற விகாராவை நாட்டின் கிழக்குப் பகுதியில் நிறுவினார்.

அடுத்து மஹாசிவாவின் இளைய சகோதரர் சூரதிஸ்ஸா என்பவர் அடுத்த அறுபது ஆண்டுகள் பெருமையுடன் அனைவரும் போற்றும் வண்ணம் ஆட்சி செய்து ஹத்திக்கண்டா *(Hatthikkhandha)* மற்றும் கோனகிரிகா *(Gonnagirika)* விகாராக்களையும், வான்குட்டர *(Vanguttara)* மலைப் பகுதியில் பாசினபப்பத்தாவையும், *(Pacinapabbata)* அனுராதபுரத்தின் வடக்குப் பகுதியில் இருந்த ரஹிராகாவில் கோலம்பலகா விகாராவையும், அரிஹிட்டா *(Arittha)* மலையின் கீழ் மகுலகா *(Makulaka)* விகாராவையும், அதன் கிழக்கில் அச்சகல்லகா விகாராவையும், கண்டனாகராவின் *(Kandanagara)* வடக்கில் கிரினீலவாஹனாகா *(Girinelavahanaka)* என்ற விகாராவையும், மேலும் ஐநூறு விகாராக்களையும் கட்டினார். அவருடைய இயற்கைப் பெயர் சுவன்னபிண்டாதிஸ்ஸா *(Suvannapindatissa)* என இருந்தது. ஆனால் அவருடைய ஆட்சியைக் கண்ட மக்களின் விருப்பத்தினால் சூரதிஸ்ஸா *(Süratissa)* என பெயர் மாற்றம் ஏற்பட்டது.

சேனா மற்றும் குட்டக்கா (*Sena And Guttaka*) என்ற தமிலாவின் *(Damilas)* இரு சேனாதிபதிகள் சூரதிஸ்ஸாவுடன் *(Süratissa)* யுத்தம் செய்து அவரைத் தோற்கடித்து ஆட்சியைக்

கைபற்றினர். அவர்கள் இருவரும் இருபத்தி இரண்டு ஆண்டுகள் ஆட்சியில் இருந்தனர். ஆனால் முத்துசிவாவின் *(Mutasiva)* மகனான அசிலா *(Asela)* என்பவர் அவர்களைத் தோற்கடித்து ஆட்சியைக் கைபற்றி பத்து ஆண்டுகள் அனுராதபுராவில் ஆண்டார். அசிலாவின் மற்ற எட்டு சகோதரர்கள் அபய்யா, தேவனாம்பியதிஸ்ஸா, உத்தியா, மஹாசிவா, மஹானங்கா, சூரதிஸ்ஸா மற்றும் கீரா *(Abhaya, Devanampiyatissa, Uttiya, Mahasiva, Mahanaga, Mattabhaya, Suratissa, and Kira)* என்பவர்களே.

சோழ நாட்டின் துாமிலாவில் இருந்த நற்குணமும் நேர்மையும் மிகுந்த மன்னர் இலாரா *(Elära)* என்பவர் அசிலாவிடம் இருந்து ஆட்சியைக் கைப்பற்றி நாற்பத்தி நான்கு ஆண்டுகள் ஆட்சி செய்தார். அவர் நண்பர்களையும், பகைவர்களையும் ஒரே விதமாக நடத்தி வந்த நற்குணம் பெற்றிருந்தவர்.

அவருடைய படுக்கை அறையின் தலைமாட்டுப் பகுதியில் ஒரு மணி கட்டப்பட்டிருந்தது. அதன் கயிறு வெளியில் தொங்கும். அவரிடம் எவருக்கு குறைகளைக் கூற விருப்பமோ அவர்கள் வந்து மணி அடித்து அவரை எழுப்பிக் கூறலாம். அவருக்கு ஒரு மகனும் ஒரு மகளும் இருந்தனர். ஒரு முறை அவருடைய மகன் திஸ்ஸா ஏரிக்கு வண்டியில் சென்று கொண்டு இருந்த பொழுது தவறுதலாக ஒரு பசு மாட்டின் கன்றின் மீது அந்த வண்டி ஏறி அதைக் கொன்று விட அந்த பசு வந்து மணி அடித்து மன்னனை எழுப்பி அவனை தன்னுடைய கன்று இறந்த இடத்திற்கு அழைத்துச் சென்றது. அதைக் கண்ட மன்னன் தன்னுடைய மகன் மீது அதே வண்டியை ஏற்றிக் கொன்றாராம்.

அது போல ஒரு பறவைக் கூட்டில் இருந்த சிறிய பறவையை

ஒரு பாம்பு விழுங்கி விட அந்த பறவை மணி அடித்து மன்னனை எழுப்பி அழைத்துப் போய் தனக்கு ஏற்பட்ட துயரத்தைக் காட்ட அந்த மன்னனும் அந்த பாம்பை பிடித்து வரச் சொல்லி அதன் வயிற்றைக் கிழித்து பறவையை வெளியே எடுத்தப் பின் அந்த பாம்பை அதே மரத்தில் தொங்கவிட்டாராம்.

பண்டைய கால பழக்க வழக்கங்களில் இருந்து சற்றும் தன்னை மாற்றிக் கொள்ளாமல் தூய்மையான வாழ்வு நெறி முறைகளை கடை பிடித்து வந்த மன்னன் ஒரு முறை சிடியா மலைக்குச் சென்று அங்கிருந்த சகோதர பிக்குக்களை அழைக்கச் சென்ற பொழுது மன்னர் சென்று கொண்டிருந்த வண்டி தவறுதலாக ஸ்துபாவின் மீது மோதியதில் ஸ்துபாவின் ஒரு பகுதி சேதம் அடைந்தது. அதைக் கண்ட மன்னன் வண்டியில் இருந்து இறங்கி சாலையில் படுத்துக் கொண்டு தன் மீது அந்த வண்டியின் சக்கரத்தை ஏற்றிக் கொல்லுமாறு வேண்டிக் கொள்ள, அங்கிருந்தவர்கள் 'எங்களுடைய குருநாதர் பழி வாங்குவதை விரும்ப மாட்டார். அதற்குப் பதில் அந்த பிக்குக்களிடம் பேசி அந்த ஸ்துபியை சரி செய்யவும்' என அறிவுறைக் கூறினர். மன்னனும் பிக்குகட்களிடம் நடந்த தவறுக்கு மன்னிப்புக் கேட்டதும் அல்லாமல் உடைந்து போன பதினைந்து கற்களுக்குப் பதில் பதினைந்தாயிரம் (*15000*) நாணயத்தைக் கொடுத்து மீண்டும் உடைந்து போன பகுதியை சீரமைத்தார்.

அது போல ஒரு மூதாட்டி காயப் போட்டிருந்த அரிசி தானியம் மழை காலம் அற்ற நேரத்தில் பெய்த திடீர் மழையினால் நாசம் அடைய அவள் அந்த மன்னனின் இடத்திற்குச் சென்று மணியடித்து நியாயம் கேட்டாள். அந்த மூதாட்டியை அனுப்பி

விட்டு அதற்கு நியாயம் கேட்டு உண்ணாவிரதத்தில் அமர்ந்து விட்டார். அவருடைய கடுமையான தவத்தினால் பயந்து போன நான்கு திசை அதிபதிகளான தாதரத்தா *(Dhataarattha)*, விருல்ஹாக்கா *(Virulhaka)*, விருப்பாக்கா (*Virupakkh)* மற்றும் வேசவானா (*Vessavana)* ஆகியோர் இந்திர லோகத்தில் இருந்த சாக்காவிடம் சென்று அது குறித்துக் கூறிய பொழுது அவர் வருண பகவானான பஜ்ஜுண்ணாவை *(Pajjunna)* அழைத்து கடும் சொற்களால் சாடினார். அதன் பிறகு எந்த காலத்தில் மழை பெய்ய வேண்டுமோ அப்பொழுது மட்டும் அதுவும் காலை வேளையைத் தவிர்த்து இரவில் மட்டும் ஏரிகள் உட்பட அனைத்து இடங்களிலும் மழை பெய்ய ஏற்பாடு ஆகியது.

தவறான எண்ணங்களை தவிர்த்து தன்னை தீமைகள் சூழ்ந்திராதவராகவும், சுத்தமான மனதும் ஆத்ம பலமும கொண்டவராகவும் வைத்திருந்து , சத்தியத்தையே தமது வாழ்வாக அமைத்துக் கொண்டு இருந்ததினால் மன்னனுக்கு அத்தனை அபூர்வ சக்தி கிடைத்திருந்தது.

புனிதரின் பக்தி மார்கத்தில் இணைந்த புத்த பக்தர்களின் மனதில் பேரானந்தம் பொங்கிட வழி வகுத்த கருணா மூர்த்தியின் இருபத்தி ஒன்றாம் பாகமான ‘ ஐந்து மன்னர்கள் ’ என்ற பகுதி முடிவுற்றது.

22: இளவரசன் காமினி பிறப்பு

எலராவை *(Elara)* என்பவரைக் கொன்று விட்டு தத்தகாமினி ஆட்சியைக் கைப்பற்றினார். அதன் பின்னணிக் கதை இது. தேவனாம்பியதிஸ்ஸாவின் இரண்டாம் சகோதரரும் அவருடைய பிரதிநிதியுமான மஹானஹா அவருடைய சகோதரருக்கு மிகவும் நெருக்கமானவர். அந்த மன்னனின் மனைவி மஹானஹாவை கொன்று விட்டு தன்னுடைய மகனை அந்தப் பதவியில் அமர்த்த இரகசியமாக திட்டமிட்டுக் கொண்டு இருந்தாள். அவள் நம்பக் கூடியவள் அல்ல, தீய மனதை கொண்டு இருந்தவள். அந்த பிரதிநிதி மஹானஹா ஒரு முறை தாரச்சா *(Taraccha)* என்ற ஏரிக்குப் போய் இருந்த பொழுது விஷம் கலந்திருந்த மாம்பழத்தை தட்டின் மீது வைத்து அவருக்குக் கொடுக்க அனுப்பி இருந்தாள். ஆனால் அந்த மஹானஹாவுடன் சென்றிருந்த அவளுடைய மகன் தவறுதலாக அதை எடுத்துத் தின்று விட அவன் மடிந்தான். அதனால் பயந்து போன பிரதிநிதி தன்னுடைய உயிரைப் பாதுகாத்துக் கொள்ள தன் மனைவி குழந்தைகளுடன் தென் கிழக்குப் பகுதியில் இருந்த ரோஹனா *(Rohana)* என்ற இடத்திற்குச் சென்று விட்டார்.

அங்கு யத்தாலய *(Yatthalaya)* விகாரில் அவருடைய கர்பிணி மனைவி ஒரு ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். அவனுக்கு தன்னுடைய சகோதரரின் பெயரான யத்தாலயதிஸ்ஸா *(Yatthalayakatissa)* என்ற பெயரை வைத்தார். அதன் பின் ரோஹன்னாவுக்கு வந்தவர் அந்த இடத்தின் ஆளுனராக தன்னை மாற்றிக் கொண்டு மஹாகாமே *(Mahagame)* வரையிலான பகுதியை ஆண்டு வந்தார். அங்கு நாஹமமகா விகாராவை *(Nagamahavihara)* நிறுவினார். உத்தகாண்டராயா

(Uddhakandaraka) விகாரா மற்றும் பல விகாராக்களையும் அமைத்தார்.அவருடைய மறைவிற்குப் பின் அவருடைய மகனான யத்தாலயதிஸ்ஸா ஆட்சி செய்தார். அது போல அவருடைய கடைசி மகனான அபய்யாவும் ஆட்சி செய்தார்.

அதன் பின் கோத்தபாய்யாவின்' *(Gothabhaya)* இளவரசனான மகன் காகவானதிஸ்ஸாவும் *(Kakavannatissa)* அரசாண்டார். அவருடைய மனைவி விஹாரதேவி *(Viharadevi)* என்பவர் புத்த கொள்கைகளில் அதிக ஈடுபாடு கொண்டிருந்த கல்யாணி என்ற நகரின் மன்னனின் மகள்.

கல்யாணியை ஆண்டு வந்த மன்னனின் பெயர் திஸ்ஸா. அவருடைய இளைய சகோதரர் அந்த மன்னனின் மனைவியுடன் கள்ளக் காதல் கொண்டு இருந்தது மன்னனுக்குத் தெரிந்து விட உயிருக்கு பயந்து அவர் ஊரை விட்டு ஓடி எங்கோ சென்று விட்டார். ஒருமுறை புத்த பிக்கு போல மாறு வேடம் அணிந்திருந்தவர் மூலம் இரகசியமாக ஒரு கடிதத்தை இராணிக்குக் கொடுத்து அனுப்பினார். அவரும் அங்கும் இங்கும் அலைந்தப் பின் அந்த மன்னனின் வீடடிற்கு சென்று கொண்டு இருந்த ஒரு துறவியுடன் இனிமையாகப் பேசி நண்பராக்கிக் கொண்டு அவருடன் மன்னனின் வீட்டிற்குள் சென்று விட்டான். அவர்களுடன் சேர்ந்து உணவு அருந்தியவுடன் எழுந்து செல்லும் முன் அந்த கடிதத்தை எடுத்து வந்திருந்த போலி பிட்கு இராணியின் பார்வையில் படும்படி கடிதத்தை நழுவ விட்டார்.

சப்தத்தைக் கேட்டு திரும்பிப் பார்த்த மன்னன் அந்த கடிதத்தை எடுத்துப் படித்துப் பார்த்தப் பின் கடும் கோபமுற்று அவரையும் அந்த துறவியையும் கொன்று கடலில் வீசி

எறிந்து விடுமாறு ஆணையிட்டார். அதனால் கோபமுற்ற கடல் தேவதைகள் அந்த நாட்டில் வெள்ளத்தை ஏற்படுத்தி கடல் நீரை நகருக்குள் நுழையும்படிச் செய்தனர். ஆனால் அந்த மன்னனோ தன்னுடைய அழகிய மகளான தேவியை ஒரு தங்கப் படகில் ஏற்றி அதில் 'இவள் மன்னனின் மகள்' என எழுதி வைத்து அந்த கடலுக்குள்ளேயே அந்த படகை அனுப்பி விட்டார்.

அந்தப் படகும் கடலில் மிதந்தபடி லங்காவை சென்றடைய அங்கிருந்த மன்னன் காகவானா *(Kakavanna)* அவளை மீட்டு தன் பட்டத்து இராணியாக்கிக் காண்டார்.

அவர் திஸ்ஸம்ம விகாரா, சிட்டலபாப்பத்தா, கமிதாவலி மற்றும் குடாலி *(Tissamahavihara,Cittalapabbata, Gamitthavali and Kütali)* போன்ற விகாராக்களை அமைத்து புத்த சகோதரர்களுடைய அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்தபடி அரசாண்டு வந்தார்.

இதற்கிடையில் கோடபப்பதா *(Kotapabbata)* என்ற இடத்தில் ஒரு புனித சாமனீர, அனைவரும் பாராட்டும் வகையில் காரியங்களை செய்து கொண்டு வாழ்ந்திருந்தார்.

ஆகாசசிட்டியாவில் *(Akasacetiya)* இருந்த விகாராவுக்குச் செல்ல இருந்த பாதை சீராக இல்லாமல் இருந்ததினால் அதற்குச் செல்ல கற்களினால் ஆன மூன்று வழிப்பாதையை அமைத்துக் கொடுத்தார். அவர் புத்த பிட்குக்களுக்கு தொடர்ந்து பல வித சேவைகளை செய்து வந்ததினால் உடல் நலம் குன்றியது. ஆதனால் அவரை ஒரு பல்லக்கில் வைத்து திஸ்ஸாரமாவில் இருந்த சீலபாசயபரிவினாவுக்கு

(Silapassayaparivena) புத்த பிட்குக்கள் அழைத்து வர ஏற்பாடு செய்தனர்.

அனு தினமும் விஹாரதேவி தான் மதிய உணவு உண்ணும் முன்பாக புத்த சகோதரர்களுக்கு பலவித பரிசுக்களை அனுப்புவாள். ஆதன் பின் நறுமணம் மிக்க மலர்கள், வாசைன திரவியங்கள், மருந்துக்கள், உடை என அனைத்தும் அனுப்புவாள்.

இப்படியாக சேவைகளை செய்து கொண்டு தேராவிடம் சென்று அமர்ந்தபடி போதனைகளைப் பெற்றுக் கொண்டு இருந்தவளிடம் தேரா கூறினார் 'உன் மகிழ்சிக்கான காரணம் நீ செய்துள்ள நல்ல காரியங்கள்தான். ஆனால் உன் காரியம் முடிந்து விட்டதாக நீ நினைக்கக் கூடாது. இன்னமும் பல நல்ல காரியங்களை நீ செய்ய வேண்டி உள்ளது. ' அதற்கு அவள் கூறினாள் ' குழந்தை பாக்கியம் இல்லாத எனக்கு என்ன மகிழ்ச்சி கிடைத்து விடப் போகின்றது'.

ஆதைக் கேட்ட அனைத்து சக்திகளையும் பெற்றிருந்த தேரா அவளுக்குக் குழந்தை பாக்கியம் உள்ளது என்பதை தெரிந்து கொண்டார். அவர் அவளிடம் 'மரணம் அடையும் தறுவாயில் உள்ள சாமனேராவிடம் சென்று வேண்டிக் கொள்' என அறிவுறை கொடுத்தார் . அவளும் அது போல அவரிடம் சென்று 'நீங்கள் என்னுடைய மகனாக பிறக்க வேண்டும். அதுவே எங்களுக்கு மகிழ்சியைத் தரும்' என்றாள்.

ஆனால் அவளுடைய வேண்டுகோளுக்கு உடனே செவி சாய்க்காததினால் அந்த சாமனேராவின் சிகிச்சைக்கு புத்த

சகோதரர்களிடம் தேவையான மருந்துகள், உடைகள் என பலவற்றையும் கொடுத்து விட்டு வண்டி ஏறி தன் இருப்பிடத்திற்குச் சென்று விட்டாள். சாமனேரா மரணம் அடைந்தார். ஆனால் அவளுடைய கருப்பையில் கருவாக உருவெடுத்தார். வழியில் சென்று கொண்டிருந்தவளுக்கு அந்த உணர்வு தோன்றியதும் தன்னுடைய பயணத்தை நிறுத்தி விட்டு மன்னனிடம் செய்தியைக் கூறி அனுப்பி அவரை வரவழித்தாள். அதன் பின் இருவரும் சேர்ந்து சாமனேரா இறந்த இடத்திற்குச் சென்று அவருடைய இறுதிக் கடன்கள் அனைத்தையும் தாமே செய்து முடித்தப் பின் அங்கிருந்த புத்த சகோதரர்களுக்கு அளவற்ற பரிசுக்களை கொடுத்து விட்டு ஊர் திரும்பினர்.

அவளுக்குக் குழந்தைப் பிறக்க இருந்த சமயத்தில் ஒரு எண்ணம் தோன்றியது. 'பன்னிரண்டாயிரம் (*12,000*) பிட்குக்களுக்குக் கொடுக்கக் கூடிய அளவிலான தேன் கூட்டில் இருந்து தேனை எடுத்து அவர்களுக்குக் கொடுத்தப் பின் மீதியை நான் அருந்த வேண்டும். எலாராவின் முதல் படை வீரனைக் கொல்ல பயன் படுத்திய வாளை சுத்தப்படுத்த உபயோகித்த தண்ணீரைக் குடிக்க வேண்டும், அனுராதபுரத்தில் இருந்து வாடாமல் கொண்டு வரப்பட்ட உள்ள தாமரைப் பூக்களினால் தன்னை அலங்கரித்துக் கொள்ள வேண்டும்'.

அது குறித்து ஜோசியர்களிடம் கேட்ட மன்னனிடம் அவர்கள் கூறினர் 'அவளுக்குப் பிறக்க இருக்கும் குழந்தை தமிலாக்களை அழித்து ஒன்றுபட்ட சமஸ்தானத்தை ஆண்டவாறு புத்த சமயத்தை வெகுவாக வளர்ப்பான்'

உடனடியாக மன்னன் ஒரு அறிவிப்பை செய்தார் 'எவன் இராணி விரும்பியதைப் போல ஒரு பெரிய தேன் கூட்டைக் கொண்டு வந்து தருகின்றானோ அவருக்கு தகுந்த பரிசுகள் தரப்படும்'. கோதா நதியின் பக்கத்தில் இருந்த ஒருவன் தலை கீழாக கவிழ்ந்து இருந்த படகில் கட்டப்பட்டு இருந்த தேன் கூட்டை எடுத்துவர அதை மன்னன் இராணியிடம் கொடுக்க அவளும் தான் விரும்பியது போல அதை உண்டாள்.

அடுத்து வேலுசுமானா *(Velusumana)* என்ற படைவீரனை அனுப்பி மற்ற இரு வேலைகளையும் நிறைவேற்றுமாறு கூறி அனுராதபுரத்துக்கு அனுப்பினார். அவனும் அங்கு போய் மன்னனின் குதிரை லாயத்தில் வேலை பார்த்துக் கொண்டு இருந்தவனிடம் நண்பனாகி சில நாட்கள் அங்கு தங்கி இருந்து கொண்டு ஒரு நாள் அதி காலை கடம்பா நதியில் இருந்து தாமரைப் பூக்களை பறித்துக் கொண்டு குதிரையில் ஏறி ஓடினார்.

அதைக் கேள்விப்பட்ட அரசன் அவனைப் பிடிக்க தன் வீரன் ஒருவரை அனுப்ப , துரத்தி வந்தவனுடைய தலையை ஒரே வெட்டில் வெட்டி, துண்டித்து விழுந்த தலையை வாள் முனையில் கொத்திக் கொண்டு மஹாகமாவிற்கு அன்று மாலையே திரும்பினான். அதைக் கண்டு இராணி மெத்த மகிழ்சி அடைந்தாள். அவனுக்கு மன்னன் பல பரிசுகளை வழங்கினார்.

அதன் பின் அந்த இராணிக்கு ஒரு சுப முகூர்த்தத்தில் அழகிய ஆண் குழந்தைப் பிறந்தது. அந்த குழந்தை பிறந்த அன்றே ஏழு கப்பல்கள் நிறைய நவரத்தினக் கற்கள் பரிசாக வந்தன. அது போல மிக உயர்ந்த ஜாதி யானை ஒன்று

ஆந்த இடத்திற்கு வந்து தன்னுடைய குட்டியை அங்கே விட்டுச் சென்றது. அதை கடலுக்கு எதிரில் இருந்த காட்டில் கண்டெடுத்த கண்டுலா *(Kandula)* என்ற ஒரு மீனவன் அரசனிடம் சென்று கூற மன்னன் ஆட்களை அனுப்பி அந்த குட்டி யானையை அழைத்து வந்தான். அதன் பெயரையும் மீனவனின் பெயரான கன்டுலா என வைத்தார். ஒரு கப்பல் தங்கக் கட்டிகளை எற்றிக் கொண்டு வந்துள்ளது என அரசனிடம் தெரிவிக்க அவர் அதையும் அவர் எடுத்து வரச் சொன்னார்.

அடுத்து பன்னிரண்டாயிரம் (*12,000*) புத்த பிக்குக்களை தன்னுடைய மகனின் பெயர் சூட்டும் விழாவிற்கு அழைத்தார். அவர் எண்ணினார் 'என்னுடைய மகன் லங்கா முழுவதையும் ஆளும் பொழுது சம்புத்தரின் தருமத்தை நன்கு நிலை நாட்டுவான். ஆயிரத்தெட்டு (*1008*) புத்த பிட்குக்கள் மஞ்சள் உடை அணிந்து தமது கைகளில் பிட்சைப் பாத்திரத்தை ஏந்தி வருவார்கள். அவர்கள் வலது காலை உள்ளே வைத்து நுழைந்தப் பின் தமது நீர் குடுவையையும் குடையையும் பக்கத்தில் ஒரு இடத்தில் வைத்தப் பின் அவர்களில் மூத்தவரான தேரா கௌதமா *(Gotama)* என்பவர் என்னுடைய மகனை எடுத்துக் கொண்டு அவனுக்கு உபதேசங்களை அருளுவார்'

அப்படி எண்ணியது போல நடந்த நல்ல சகுனத்தைக் கண்ட மன்னன் தன்னுடைய மகனுக்கு தன்னுடைய தந்தையின் பெயரான காமினி அபய்யா *(Gamani Abhaya)* எனப் பெயர் சூட்டினார். அதன் பின் ஒன்பதாம் நாள் மகாநமாவுக்குத் திரும்பிய மன்னன் தன் மனைவியுடன் உடல் உறவு கொள்ள அதன் விளைவாக பிறந்த ஆண் குழந்தைக்கு திஸ்ஸா எனப்

பெயர் சூட்ட அந்த குழந்தையும் நல்ல நிலையில் வளர்ந்தது. அந்த இரு குழந்தைகளுக்கும் அன்னப் பிரசன்னம் செய்த விழாவில் அரிசியில் செய்த உணவை ஐநூறு பிட்குக்களு தந்த பின்ஈ அந்த உணவையே தன் மனைவியும் சாப்பிட்டப் பின் மீதியில் ஒரு தங்க ஸ்பூன் அளவு எடுத்து தம் இரு குழந்தைகளுக்கும் கொடுத்த மன்னன் ‘குழந்தைகளே நீங்கள் புத்த சமயத்தை வளர விடாமல் தடுத்து விட்டால் நீங்கள் உண்ணும் உணவு ஜுரணிக்காது’ என அவர்களை ஆசிர்வதித்தார்.

அவர்கள் இருவருக்கும் பத்து மற்றும் பன்னிரண்டு வயதான பொழுது, முன்பு செய்தது போலவே பிட்குக்களை அழைத்து மரியாதைகள் செய்து உணவு படைத்தப் பின் மீதி இருந்ததை ஒரு தட்டில் வைத்து தன்னுடைய மகன்களுக்குக் கொடுத்த மன்னன் கூறினார் ‘எந்த காலத்திலும் புத்த பிட்குக்களை அலட்சியப்படுத்தாமல் இருப்போம் என்ற சபதம் செய்து கொண்டு இந்த உணவை அருந்துங்கள்’. இருவரும் மன்னனின் விருப்பப்படிக் கூறினர் ‘ நாங்கள் இருவரும் எந்த காலத்திலும் இணை பிரிய மாட்டோம்’. இப்படியாகக் கூறிய இருவரும் அதை பிரித்துக் கொண்டு உண்ணலாயினர். மீண்டும் அவர்களிடம் ‘நாங்கள் தமிலாவுடன் *(Damilas)* சண்டைப் போட மாட்டோம்’ என உறுதி எடுத்துக் கொள்ளுமாறு மன்னன் கூற அந்த சபதத்தை திஸ்ஸா ஏற்றுக் கொண்டு உண்ணத் துவங்க, காமினி உணவை அருந்தாமல் வைத்து விட்டு படுக்கை அறைக்குச் சென்று கால்களை மடக்கி சுருட்டி வைத்தபடி படுத்துக் கொண்டு விட்டான். ‘ கால்களை நீட்டிக் கொண்டு விசாலமாக படுத்துக் கொள்வதுதானே’ என இராணி

கேட்ட பொழுது அவன் கூறினான் 'தாமிலாக்கள் கங்கையைத் தாண்டி ஆட்சி செய்து கொண்டு இருக்கையில், இங்கே கோதா கடலின் *(Gotha-ocean)* அருகில் வரை மட்டுமே ஆட்சியில் உள்ள நான் எப்படி கால்களை நீட்டிப் படுக்க முடியும்?. காமினிக்கு பதினாறு வயதான பொழுது அவன் மிக்க பலசாலியாக, புத்தி கூர்மையவனாக, துடிப்பானவனாக இருந்தான்.

புனிதரின் பக்தி மார்கத்தில் இணைந்த புத்த பக்தர்களின் மனதில் பேரானந்தம் பொங்கிட வழி வகுத்த கருணா மூர்த்தியின் இருபத்தி இரண்டாம் பாகமான 'இளவரசன் காமினி பிறப்பு' என்ற பகுதி முடிவுற்றது.

23: போர் படை வீரர்கள்

தத்தகாமினியின் படையினரில் கண்டுலா *(Kandula)*, நந்திமித்தா *(Nandhimitta)* , சுரானிமிலா *(Süranimila)*, மஹாசோனா *(Mahäsona)*, கோதைம்பரா *(Gothaimbara)*, தேரபுட்டபைய்யா *(Theraputtabhaya)*, பாரனா *(Bharana)*, வேலுசுமானா *(Velusumana)*, கஞ்சதேவா *(Khañjadeva)*, புஸ்ஸதேவா *(Phussadeva)*, மற்றும் லபியாவாசபா *(Labhiyavasabha)* போன்றவர்கள் இருந்தனர். அவர்கள் மிகவும் திறமை கொண்டவர்கள். அவர்களுக்கு யானை போன்ற பலமும் இருந்தன.

சிடியா மலைப் பிரதேசத்தின் கண்டராஜி என்ற *(Khandaraji)* கிழக்குப் பகுதியை ஆண்டு வந்தவர் மன்னன் எலராவின் *(Elara)* சகோதரியின் மகனான மித்தா *(Mitta)* என்பவர். அவருடைய மாமனிடம் இருந்த அனைத்துக் குணங்களும் மித்தாவிடமும் இருந்தன. சிறு வயதான பொழுது அவர் விளையாடப் போகாமல் இருக்க அவருடைய பெற்றோர் அவரை ஒரு மைல் கல்லில் கயிறு போட்டுக் கட்டி விடுவார்கள். ஆனால் அந்த சிறுவன் *(மித்தா)* அந்தக் கயிற்றுடன் அந்த கல்லையும் சேர்த்து இழுக்கும் பொழுது கயிறு அறுந்து விடுமாம். ஆதனால் அவர் பெயர் நந்திமித்தா *(Nandhimitta)* என ஆயிற்று. அவர் பத்து யானைகளின் பலத்திற்கு சமமானவர். அவர் வயதுக்கு வந்ததும் நகருக்குப் போய் தன்னுடைய மாமனுக்கு உதவி வந்தார். தமிலாக்கள் ஸ்துபாக்களையும் மற்ற புனித இடங்களையும் தாக்கி அழித்துக் கொண்டு இருந்த பொழுது இவருடைய கையில்

கிடைப்பவர்களின் இரு கால்களையும் பிடித்துக் கொண்டு நார் உறிப்பது போல அவர்களை இரண்டாகப் பிளந்து கொன்று விடுவாராம். ஆனால் அப்படிக் கொண்று விட்டவர்களின் உடலை தேவர்கள் மறைந்து போகும்படி செய்து விடுவார்களாம்.

அவர்கள் மன்னனிடம் சென்று தமிலாக்கள் தொடர்ந்து கொலை செய்யப்பட்டு வருவதினால் அவர்களுடைய எண்ணிக்கை குறைந்து வருகின்றதே எனக் கூறிய பொழுது அவர்களை கொல்பவனை பிடியுங்கள் என்றார். ஆனால் அதை செய்து வந்தவரை அவர்களினால் கண்டு பிடிக்க முடியவில்லை. நந்திமித்தா நினைத்துப் பார்த்தார் 'நான் இப்படி செய்வதினால் புத்தருடைய போதனைகளை அவமதிக்கின்றேன். ரோஹனாவில் பல இளவரசர்கள் புத்த சமயத்தில் பற்றுள்ளவர்களாக உள்ளனர். அங்கு சென்று மன்னனிடம் பணி புரிந்து தமிலாக்களை அழித்தப் பின் அந்த இளவரசர்களுக்கு முடி சூட்டி புத்த மதத்தை செழிக்க வைப்பேன்' ஆகவே காமினியிடம் சென்று தன்னுடைய எண்ணத்தைக் கூற அவரும் அவருடைய தாயாரிடம் ஆலோசனைக் கேட்டப் பின் அதற்கு ஒப்புக் கொண்டு நந்திமித்தாவை தன்னுடைய படையில் சேர்த்துக் கொண்டார்.

அங்கே மஹாகங்காவில் மன்னன் காகவானதிஸ்ஸா *(Käkavannatissa)* தமிலாக்களை அடக்கியே வைத்திருந்தார். அவருடைய இன்னொரு மனைவியின் மகனான திகப்பையாவை *(Dïghäbhaya)* கச்சகா *(Kacchaka)* அரண்மனையின் பாதுகாவலுக்கு அதிபதியாக நியமித்தார். அவரும் இரண்டு யோசனை தூரத்திற்குள் இருந்த அனைத்து குடும்பத்தில் இருந்தும் வீட்டிற்கு ஒரு பிள்ளையை படைக்கு அனுப்புமாறு

உத்தரவு போட்டார். கோட்டிவாலா *(Kotthiväla)* மாவட்டத்தில் இருந்த காண்டகவித்திக்கா *(Khandakavitthika)* என்ற கிராமத்தில் இருந்த சம்ஹா *(Samgha)* என்ற கிராம அதிகாரிக்கு ஏழு மகன்கள் இருந்தனர். அவருடைய கடைசி மகளான நிமிலா *(Nimila)* சோம்பேரியாக இருந்தான். அந்த குடும்பத்தில் இருந்தும் ஒரு பிள்ளையை படைக்கு அனுப்ப வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. நிமிலா பத்து யானை பலம் கொண்டவன். வேலை எதுவும் செய்யாமல் சோம்பேரியாகத் திரிந்து கொண்டு இருந்ததினால் அவனுடைய மற்ற சகோதரர்கள் அவனை படைக்கு அனுப்புமாறு தந்தையிடம் கூற அவர்களுக்கு அதில் அவர்களுக்கு விருப்பம் இல்லை. ஆனாலும் அவன் ஒரு நாள் விடியற்காலை எழுந்து மூன்று யோசனை துாரம் நடந்து சென்று இளவரசரை சந்தித்தார். அவரும் அவனுக்கு ஒரு பரிட்சை வைத்தார். அவரிடம் கூறினார் ‘ நீ என்னுடைய துாதுவனாக சிடியா மலைப் பகுதியில் உள்ள துவார மண்டலா எனற் நகரத்திற்குச் செல். அங்கு குண்டலி *(Kundali)* என்ற ஒரு பிராமணர் வசிக்கின்றார். அவர் என்னுடைய நண்பர். அவரிடம் சென்று அவர் கொடுக்கும் பொருட்களை எடுத்து வர வேண்டும். அதைக் கூறிவட்டு அவனுக்கு உணவு கொடுத்து அனுப்பினார். அவனும் அனுராதபுரத்தை நோக்கி ஒன்பது யோசனை துாரம் நடந்து அந்த பிராமணரை சந்தித்தான். அவனை அன்புடன் வரவேற்றவர் ‘நீ முதலில் அந்த ஏரியில் குளித்து விட்டு வா’ என திஸ்ஸா ஏரிக்கு அவனை அனுப்பினார். அந்த ஏரிக்குச் சென்று குளித்தப் பின் புத்த போதி மரத்தை வணங்கியவன் துாபராமாவிற்குச் சென்று நகர் முழுவதையும் சுற்றிப் பார்த்து விட்டு நறுமணப் பொருட்கள், தாமரைப் பூக்கள் என பலவிதமான பொருட்களையும் வாங்கி வந்தான். அவன் அனைத்து இடங்களையும் சுற்றி வந்ததைக் கண்டு வியந்து

அந்த பிராமணா நினைத்தார். 'இவனுடைய சக்தி பிரமிக்க வைக்கின்றது. கச்சகாடித்தாவில் *(Kacchakatittha)* இருந்து துவாரமண்டலாவிற்கும் *(Dvaramandala)* அங்கிருந்து அனுராதபுரத்திற்கும் நடந்தே சென்று வந்துள்ள இவனுடைய வலிமையைக் கண்டால் மன்னன் இலாரா நிச்சயமாக இவனை வேலையில் வைத்துக் கொள்வார்'

இப்படியாக எண்ணியவர் 'இவனுக்கு ஆயிரம் நாணயங்கள் கொடுத்து வேலையில் வைத்துக் கொள்ளவும்' என ஒரு கடிதம் எழுதி மேலும் பல பரிசுக்களை அவனிடம் தந்து மன்னனிடம் அனுப்பினார். அவரிடம் இருந்த மற்ற பணி ஆட்கள் அவன் மீது பொறாமை கொண்டனர். அவன் தலை முடியை சீரமைத்து, குளித்தப் பின் புன்னவத்தான *(Punnavaddhana)* என்ற சிறப்பான உடைகளை அணியச் செய்து சில்க் *(Silk)* துணியில் செய்த தலைப் பாகைக் கட்டி மன்னனிடம் அழைத்துச் சென்றனர்.

மன்னனும் அவனுக்கு தன் வீட்டில் இருந்தே உணவு தந்தார். அது மட்டும் அல்ல பத்தாயிரம் நாணயமும். விலை உயர்ந்த படுக்கை ஒன்றையும் பரிசாகத் தந்து அனுப்பினார். அவற்றை எடுத்துக் கொண்டு சென்ற நிமிலா தனக்குக் கிடைத்தப் படுக்கையை தந்தையிடமும் பணத்தை தாயாரிடமும் கொடுத்தார்.

அன்று இரவே அவர் தன் பணியில் சேர்ந்து விட்டார். அதைக் கேட்ட இளவரசர் இன்னமும் மகிழ்ச்சி அடைந்தார். மறுநாள் பத்தாயிரம் நாணயம் அவருக்குக் கொடுத்து அவருடன் துணைக்கு ஒருவரையும் அனுப்பி வீட்டிற்கு அனுப்பினார்.

CLICK HERE TO VIEW ENGLISH VERSION

அவரும் அவற்றைத் தன்னுடைய பெற்றோர்களிடம் தந்து விட்டு மன்னன் காகவானதிஸ்ஸாவிடம் சென்றார். அவரும் காமினிக்கு பாதுகாவலராக அவரை நியமித்து சுரனிமிலா *(Süranimila)* என்ற படை வீரரின் இருப்பிடத்தில் தங்கிக் கொள்ள அனுப்பினார்.

குலம்பாரி *(Kulumbari)* என்ற மாவட்டத்தில் இருந்த ஹுண்டரிவாபி *(Hundarivapi)* என்ற கிராமத்தில் திஸ்ஸாவின் எட்டாவது மகன் இருந்தார். அவனுக்கு ஏழு வயதான பொழுது அவன் சிறிய பனை மரங்களை வெட்டுவான், பத்து வயதான பொழுது பெரிய பனை மரங்களைவெட்டி வீழ்த்துவான். யானை போன்று பலத்தைக் கொண்டு இருந்தான் அந்த சிறுவன். அவன் பெரியவனாகி மஹாசோனா *(Mahasona)* என பெயர் பெற்ற பொழுது பத்து யானையின் அளவு பலம் கொண்டு இருந்தான். அதனால் அந்த சிறுவனை அவனுடைய தந்தை மன்னனிடம் அழைத்துப் போய் அவனுடைய பலத்தைப் பற்றிக் கூற அவனையும் தன் படையில் காமினி சேர்த்துக் கொண்டார்.

நித்துவாட்டிகா *(Nitthulavitthika)* மாவட்டத்தில் இருந்த கிரி *(Giri)* என்ற கிராமத்தில் இருந்தவர் மஹாநமாவின் மகனான பத்து யானை பலம் மிக்க கோதகா *(Gothaka)* என்பவர். அவனுடைய மற்ற ஆறு சகோதரர்களும் அவனை கேலி செய்வார்கள். ஒரு முறை அவர்கள் அனைவரும் அருகில் இருந்த காட்டிற்குப் போய் அங்கிருந்த இடத்தில் தோட்டம் போட ஒரு இடத்தை உழுதனர். அதன் பின் கோதகாவிடம் பல மரங்களும் இருந்த இடத்தைக் காட்டி அதை உழுது வைக்குமாறு கூறி விட்டுச் சென்றனர். அவனும் பலமிக்க இம்பாரா *(imbara)* போன்ற மரங்களை வேரோடு

பிடுங்கி எறிந்து விட்டு வயலை தயார் செய்த பின் அவர்களிடம் சென்று விவரத்தைக் கூற அவனுடைய பலத்தைக் கண்ட மற்ற சகோதரர்கள் அவனை வெகுவாகப் புகழ்ந்தனர். அதனால் அவனுடைய பெயர் கோதைம்பரா *(Gothaimbara)* என ஆயிற்று.

கோடா *(Kota)* மலைப் பகுதியில் கிட்டி *(Kitti)* என்ற இடத்தில் ரோஹனா என்ற கிராமத் தலையாரி வசித்து வந்தார். அவருக்கு கோதபையயா *(Gothabhaya)* என்ற மகன் இருந்தார். அவருக்குப் பத்து வயதான பொழுது நான்கு அல்லது ஐந்து பேர் தூக்க முடிந்த அளவு கனமான பாறைகளை தான் ஒருவனே தூக்கிப் போட்டு பந்து போல விளையாடுவான். அவனுக்கு பதினாறு வயதான பொழுது அவனை முப்பத்தி எட்டு அங்குல தடிமனும், பதினாறு கியூபிக் நீளமுமான பனை மற்றும் தென்னை மரங்களை வெட்ட அவனுடைய தந்தை அனுப்ப அவனும் அவற்றை வேரோடு பிடுங்கி எறிந்தான். அதனால் அவனும் காமினியின் படையில் ஒரு வீரனாக சேர்ந்தான். அவனுடைய தந்தை தேரா மஹாசுமாவின் சிஷ்யர். ஒரு முறை ரோஹனா கோடபப்பாராவில் *(Kotapabbata)* மஹாசுமாவின் போதனையைக் கேட்டுக் கொண்டு இருந்தவர் ஞான மார்கத்தின் முதல் படியான சோடாபட்டி *(sotápatti)* என்ற நிலையை அடைந்து தன்னுடைய வீட்டை மகனிடம் தந்து விட்டு தேராவிடம் சென்று பப்பஜ்ஜா உபதேசம் பெற்றுக் கொண்டு தியானத்தில் அமர்ந்திருந்தவர் துறவியாகி விட்டார்.

கப்பகண்டரா *(Kappakandara)* என்ற கிராமத்தில் குமாரா *(Kumára)* என்பவருடைய மகன் பாரனா *(Bharana).* பத்து அல்லது பதினைந்து வயதான பொழுது காட்டில் வேட்டையாட

தன் நண்பர்களுடன் சென்றவன் முயல்களைத் *(hares)* துரத்திப் பிடித்து தனது கால்களினால் அவற்றை புமியில் அடித்து இரண்டாகப் பிளந்து விடுவான். அவனுக்குப் பதினாறு வயதான பொழுது நண்பர்களுடன் காட்டிற்குச் சென்றவன் கருப்பு மான் *(antelopes)*, கடம்பை மான் *(elks)* மற்றும் கரடிகளையும் *(boars)* அது போலவே அடித்துக் கொன்றான். அதனால் அவன் மாபெரும் வீரன் எனப் பெயரெடுத்து காமினியின் சைனியத்தில் சேர்ந்தான்.

கிரி மாவட்டத்தில் இருந்த குடும்பியாங்கனா *(Kutumbiyañgana)* என்ற கிராமத்தில் வாசபா *(Vasabha)* என்பவர் இருந்தார். அவருக்கு ஒரு குழந்தைப் பிறந்த பொழுது அவருடைய நண்பரும் ஆளுனருமான சுமன்னா *(Sumana)* மற்றும் வேலா *(Vela)* என்பவர்கள் வந்து பெயர் சூட்டினர். அந்த குழந்தை வளர்ந்து பெரியவனாகியதும் கிரியிடம் வேலைக்குச் சேர்ந்தான். அவரிடம் ஒருவரும் அடக்க முடியாத குதிரை இருந்தது. ‘எனக்கேற்ற குதிரை இங்குள்ளதே’ என ஒரு நாள் அவன் வேடிக்கையாகச் சொல்ல ஆளுனர் கூறினார் ‘அதை அடக்கு பார்ப்போம்’. அவன் சற்றும் தாமதிக்காமல் அந்த குதிரையைப் பிடித்து அதன் மீது ஏறிக் கொள்ள அது சுற்றி சுற்றி வந்து விட்டு அமர்ந்து கொண்டது. எதோ பல வீரர்கள் அதை அடக்கிப் பிடித்திருந்தது போல அவன் ஒருவனே மீண்டும் மீண்டும் அந்த குதிரை மீது ஏறி ஓட்ட, கூடி இருந்தவர்கள் ஆச்சரியத்துடன் அந்த நிகழ்சியை பார்த்தனர். ஆளுனர் நினைத்தார் ‘இவன் மன்னனின் படைக்கு லாயக்கானவன்’. அவனுக்கு பத்தாயிரம் நாணயம் தந்து வேலுசுமன்னா *(Velusumana)* என்ற அந்த வீரனை தனது படையில் இணைத்துக் கொண்டார்.

மஹிசநோடிகா *(Mahisadonika)* என்ற மாவட்டத்தில் இருந்த நகுலநாகா *(Nakulanaga)* என்ற கிராமத்தில் அபய்யாவின் கடைசி மகனான தேவா என்பவன் இருந்தான். அவன் தத்தி தத்தி நடந்ததினால் அவனுக்கு கஞ்சதேவா *(Khañjadeva)* எனப் பெயரிட்டனர். ஒரு முறை மிக்க பலசாலியான அவன் காட்டிற்கு தன் நண்பர்களுடன் சென்றிருந்த பொழுது அங்கு திரிந்து கொண்டு இருந்த காட்டு எருமைகளின் *(buffaloes)* கால்களைப் பிடித்து தலைக்கு மேல் சுற்றி பூமியில் அடித்து எலும்புகளை நொறுக்கிக் கொன்றான். அதைக் கேள்விப்பட்ட மன்னன் அவனை அழைத்து காமினியின் படையில் சேருமாறு ஆணையிட்டார்.

கவிதா *(Gavita)* என்ற இடத்தில் இருந்த சிட்டலபப்பதா *(Cittalapabbata)* என்ற விகாரின் அருகில் வசித்து வந்தவர் உப்பலாவின் *(Uppala)* மகனான புஸ்ஸதேவா *(Phussadeva)* என்பவர். அவன் அந்த விகாருக்குச் சென்றால் அந்த போதி மரத்தின் அடியில் வைக்கப்பட்டு இருக்கும் சங்கை எடுத்து பெரும் ஒலித் தரும் வகையில் ஊதுவான். ஆதில் இருந்து வந்த ஒலியைக் கேட்டு அவனுடன் செல்லும் மற்றவர்கள் மிரண்டு நிற்பார்கள். அதனால் அவனுடைய பெயர் உம்மதபுஸ்ஸதேவா *(Ummádaphussadeva)* என ஆயிற்று. அவனுக்கு அவனுடைய தந்தை துல்லியமாக வில் அம்பு எய்தும் கலையை கற்றுக் கொடுத்து இருந்தார். அவன் அதில் திறமைசாலியாக விளங்கினான். வண்டி நிறைய மணல், ஒன்றுடன் ஒன்றாக கட்டப்பட்ட பருமனான நூறு தோல்கள், எட்டு அல்லது பதினாறு அங்குல பருமனான உடும்பரா *(udumbara)* மரத்தில் செய்த ஆசனம் மற்றும் நாலு அங்குல பருமனான இரும்பு மற்றும் பித்தளை உலோகம் போன்ற அனைத்தும் ஒன்றன் மீது ஒன்றாக வைக்கப்பட்டிருந்த வண்டி

மீது அம்பு செலுத்த அது அவற்றை துளைத்துக் கொண்டு அடுத்தப் பக்கம் வந்து விழுந்தது. அதைக் கேள்விப்பட்ட மன்னன் அவனை அழைத்து காமினியின் படையில் சேருமாறு ஆணையிட்டார்.

துலஹாரா *(Tuládhára)* மலைக்குப் பக்கத்தில் இருந்த விஹாரவாபி *(Viháravápi)* என்ற கிராமத்தில் இருந்த மட்டா *(Matta)* என்பவரின் மகன் வாசபா *(Vasabha)* என்பவர். அவருக்கு லபியவாசபா *(Labhiyavasabha)* என்ற மகன் இருந்தான். அவனுடைய இருபதாம் வயதில் மிக்க பலசாலியாக இருந்தான். பத்து அல்லது பதினைந்து நண்பர்களுடன் ஒரு இடத்தில் குளம் வெட்டச் சென்றான் அவன். பத்து அல்லது பதினைந்து ஆட்கள் தோண்டும் அளவு மண்ணை அவன் ஒருவன் மட்டும் அவர்கள் செய்வதை விட மிகக் குறைவான நேரத்தில் தோண்டி எடுத்தான். அகவே அவனையும் அந்த மன்னன் அழைத்து காமினியின் படையில் சேர்த்தார். அந்த குளம் வாசபா குளம் என்ற பெயர் அடைந்தது.

அந்த பத்து வீரர்களுக்கும் அந்த மன்னன் தன் மகனுக்குச் செலுத்தும் அன்பை போலவே அன்பு செலுத்த அவர்கள் ஒவ்ஒருவரும் பத்து வீரர்களுக்கு சமமானவர்கள் என்ற பெயர் அடைந்தனர். அவர்கள் ஒவ்ஒருவரும் பல இடங்களில் இருந்தும் படை வீரர்களை தேர்வு செய்து ஆயிரம் வீரர்கள் கொண்ட படையை உருவாக்கினர். அந்த ஆயிரம் வீரர்கள் பல இடங்களில் இருந்தும் படை வீரர்களை அழைத்து வந்து படை பலத்தை பதினோராயிரத்து நூற்றிப் பத்து (*11,110*) வீரர்களாக்கினர்.

அவர்களும் மன்னனின் விருப்பப்படியே காமினி இருந்த இடத்தைப் பாதுகாத்து வந்தனர். நற்குணங்கள் கொண்டு, எவருக்கும் தீமைகள் செய்யாமல் வாழும் மனிதர்கள் வாழ்க்கை வசந்தமாக இருக்கும் என்பதில் ஐயம் இல்லை.

புனிதரின் பக்தி மார்கத்தில் இணைந்த புத்த பக்தர்களின் மனதில் பேரானந்தம் பொங்கிட வழி வகுத்த கருணா மூர்த்தியின் இருபத்தி மூன்றாம் பாகமான 'போர் படை விரிவாக்கம்' என்ற பகுதி முடிவுற்றது.

24: இரு சகோதரர்களின் யுத்தம்

மஹாகமாவில் காமினி *(Gámani)* என்ற இருந்து வந்தார். அவர் வாள் வித்தை, வில் வித்தை, குதிரை சவாரி போன்ற அனைத்திலும் திறமைசாலியாக இருந்தார். திகவாபியில் *(Dighavápi)* இருந்த திஸ்ஸா தன் பெரும் படையினர் மற்றும் இரதத்துடன் அந்த பெரிய நாட்டை ஆண்டு வந்தார். அதன் பின் சில நாட்களில் காமினி தன்னுடைய தந்தைக்கு ஒரு செய்தி அனுப்பினார்.' நான் தமிலாக்களுடன் போரிடப் போகின்றேன்'. ஆனால் அவருடைய தந்தை அதை விரும்பவில்லை. அவரை யுத்தம் செய்வதில் இருந்து தவிர்க்க விரும்பி 'நமக்கு நதிக் கரையின் இந்தப் பகுதியே போதும்' என செய்தி அனுப்பினார். அவருடைய மகன் மூன்று முறை தந்தையிடம் தன் விருப்பத்தைக் கூறி அனுப்பினார். ஆனால் அவருடைய தந்தை அதற்கு இணங்காததினால் கடைசி முறை பெண்களின் நகைகளை பதிலாக அனுப்பி விட்டார். அதைக் கண்டு கோபம் அடைந்த மன்னன் ' என் மகனுக்கு தங்க விலங்கு பூட்டி அடைத்து வைத்தால் ஒழிய அவனைக் காப்பாற்ற முடியாது ' என முடிவு செய்தார்.

அதைக் கேட்ட மகன் அங்கிருந்து தப்பி மலாயாவுக்குச் *(Malaya)* சென்று விட்டார். அதனால் அவருக்கு துத்தகாமினி *(Dutthagámani)* என்ற பெயர் ஏற்பட்டது.

இதன் இடையே அந்த மன்னன் மஹானுகால சிடியாவை *(Mahánuggala-cetiya)* கட்டி முடித்தப் பின் அதற்கு விழா எடுத்து புத்த பிட்குக்களை அழைக்க, சிட்டபாபதா *(Cittalapabbata)* என்ற இடத்தில் இருந்து பன்னிரண்டாயிரம்

பிட்குக்கள் (*12,000*) அங்கு வந்தனர். அதைத் தவிற இதற இடங்களில் இருந்தும் இரண்டாயிரம் (*2000*) பிட்குக்கள் வந்தனர்.

அந்த விழாவில் கலந்து கொள்ள வந்திருந்த தன்னுடைய சிறப்பான பத்து தளபதிகளையும் அழைத்து புத்த பிட்குக்கள் முன் 'நாங்கள் மன்னனின் மற்ற மகன்களுடன் சண்டையிட மாட்டோம்' என்ற சபதத்தை ஏற்றுக் கொள்ளச் சொல்லி இருந்ததினால் பின்னர் நகழ்ந்த சண்டையில் அவர்கள் எந்த பக்கத்திலும் போரிடவில்லை.

அறுபத்தி நான்கு விகாராக்களை கட்டிய மன்னன் அறுபத்தி நான்கு ஆண்டுகள் ஆட்சி செய்த பின் இறந்து போனார். அவருடைய இறந்த உடலை போர்த்தி எடுத்துக் கொண்ட அவருடைய மனைவி திஸ்ஸமஹாரமாவிற்குச் (*Tissamaháráma*) சென்றாள். அதைக் கேள்விப்பட்ட திஸ்ஸா உடனே திகவாபியில் இருந்து கிளம்பி அங்கு வந்து தன்னுடைய தந்தையின் இறுதிக் கடன்களை செய்து முடித்தப் பின் அவருடைய சகோதரரிடம் இருந்த பயத்தினால் உடனேயே தன்னுடைய தாயாரையும், பட்டத்து யானையான கன்டுலாவையும் அழைத்துக் கொண்டு திகவாபிக்கு கிளம்பிச் சென்றார்.

அதன் பின் தனது மந்திரிகளுடன் கலந்தாலோசனை செய்தவர் தன்னுடைய சகோதரர் தத்தகாமனிக்கு அந்த செய்தியை கூறி அனுப்பினார். அந்த செய்தியைக் கேட்ட தத்தகாமனி மஹாகாமாவிற்கு தன்னை மன்னாக முடிசூட்டிக் கொண்டு தன்னுடைய தாயாரையும், பட்டத்து யானையையும் உடனே

தன்னிடம் அனுப்புமாறு தன்னுடைய சகோதரரிடம் தூது அனுப்பினார். மும்முறை அவர் செய்தி அனுப்பியும் திஸ்ஸா அவர்களை அனுப்பாததினால் அவர் மீது துத்தகாமினி போர்த் தொடுத்தார். இருவருக்கும் குட்டஹாலகா *(Guttahálaka)* என்ற இடத்தில் இருந்து பத்து மைல் தொலைவில் உள்ள முப்பன்னா *(Muppana)* என்ற இடத்தின் அருகில் இருந்த குலகானியபிட்டி *(Culanganiyapitthi)* என்ற இடத்தில் கடும் போர் நிகழ்ந்தது. ஆயிரக்கணக்கானோர் யுத்தத்தில் மடிந்து போயினர். யுத்தமும் நிற்றபாடில்லை. ஆகவே புத்த பிட்குக்கள் ஒரு மலையை இரு சகோதரர்களுக்கும் இடையே எழுப்பினர். 'இது புத்த பிட்குக்களின் செயலே' என்பதை திஸ்ஸா உணர்ந்தார்.

குப்பகண்டரா *(Kappakandara)* பகுதியில் இருந்த ஜவமாலா *(Javamála)* என்ற இடத்தை வந்தடைந்த மன்னன் திஸ்ஸாவிடம் 'எனக்கு பசிக்கின்றது ' என்று கூற அவருக்கு தங்கக் கிண்ணத்தில் உணவு அளித்தார். அதை நான்கு பாகங்களாகப் பிரித்த மன்னன் புத்த பிட்குக்களுக்கும் உணவருந்த வருமாறு அழைப்பு விடுத்தார். மன்னனுக்கு போதனைகள் செய்திருந்தவரும், பியான்குடிபாவில் *(Piyangudipa)* இருந்த தேரா கோதமா *(Gotama)* அதை தன்னுடைய தெய்வீக செவிகளினால் கேட்டு ஆகாயத்தில் பறந்து செல்லுமாறு தேரா திஸ்ஸா என்பவரை அனுப்பினார். அவர் எடுத்து வந்திருந்த பிட்சைப் பாத்திரத்தில் மன்னன் அவருடைய பாகத்தைத் தவிற தன்னுடைய பாகத்தையும் போட்டு விட்டார். அது போலவே திஸ்ஸாவும் (*இளவரசர்*) தன்னுடைய பாகத்தையும், குதிரையின் பாகத்தையும் அவருடைய பிட்சைப் பாத்திரத்தில் போட்டு விட்டார்.

மன்னனிடம் இருந்து பிட்சை பாத்திரம் நிறைய உணவைப் பெற்றுக் கொண்ட தேரா அதை கௌதமரிடம் கொண்டு சென்றார். அங்கிருந்த ஐநூறு பிக்குக்களுக்கும் அந்த உணவில் இருந்து ஒவ்வொரு கவளச் சோற்றைத் தந்தப் பின் தானும் உண்டு விட்டு சிறு பருக்கைகள் ஒட்டிக் கொண்டு இருந்த அந்த பாத்திரத்தை மன்னனிடம் சென்றடையும்படி ஆகாயத்தில் பறக்கவிட்டார். அதைப் பெற்றுக் கொண்ட மன்னனும், திஸ்ஸாவும் அந்த உணவை மற்றவர்களுடன் சேர்ந்து உண்ட பின் அந்த பாத்திரத்தை மீண்டும் திருப்பி அனுப்பினார். மன்னன் குதிரை மீதேறிச் செல்ல திஸ்ஸா பட்டத்து யானை மீதேறி யுத்தகளத்திற்குச் சென்றனர்.

மஹாகானாவுக்குத் திரும்பி வந்தவர்கள் அறுபதாயிரம் படை (*60,000*) வீரர்களை அழைத்துக் கொண்டு தனது சகோதரனுடன் மீண்டும் யுத்தம் செய்யச் சென்றனர். இரு சகோதரர்களும் நேருக்கு நேர் மோதினர். அந்த பட்டத்து யானையை சுற்றி சுற்றி வந்தும் எந்த விதத்திலும் அவர்களை நெருங்க முடியவில்லை என்பதினால் தன்னுடைய குதிரையை அந்த யானையின் மேல் பகுதியைத் தாண்டி குதிக்கச் செய்து கூர்மையான அஸ்திரம் ஒன்றை மன்னன் (*தத்தகாமினி*) ஏவினான். அது யானையின் முதுகில் காயத்தை ஏற்படுத்தியது.

யுத்தத்தில் பலரும் மடிந்து விழுந்தனர். சேனை நாலா பக்கமும் சிதறி ஓடியது. என் மீது சவாரி செய்பவருடைய பெண் ஆசையினால் வீணாகிப் போனோமே என்ற கோபம் கொண்ட யானை திஸ்ஸாவை மோதி கீழே தள்ள ஒரு மரத்தின் அருகில் போக அந்த மரத்தின் மீது திஸ்ஸா ஏறி அமர்ந்து கொண்டார். சகோதரனுக்குப் பயந்து அங்கிருந்து தப்பி ஓடி வந்தவர் மூத்த தேராவின் குடிலுக்குச் சென்று

படுக்கை அடியில் பதுங்கிக் கொண்டார். 'திஸ்ஸா எங்கே ' எனக் கேட்டவாறு அவரை தேடி வந்த மன்னன் அவரைக் காணாமல் போனதினால் அந்த வீட்டைச் சுற்றி வீரர்களை காவலுக்கு வைத்து அவரைத் தேடினார். அவர் கட்டிலுக்கு அடியில் ஒளிந்து கொண்டு இருந்ததைக் கண்டவரகள் அவரை படுக்கையுடன் சேர்த்து கட்டி ஒரு இறந்தவரை தூக்கிப் போவது போல எடுத்துச் சென்று மன்னன் முன் நின்றனர். தத்தகாமினி கூறினார் ' திஸ்ஸா நீ என்னுடைய குடும்பத்தைச் சேர்ந்த பெரியவன். உன்னை கோழையைப் போலக் கொன்று விட்டு நம் குலத்தை நாசமாக்க நான் விரும்பவில்லை. அது என் பழக்கமும் அல்ல.' இப்படிக் கூறிய பின் தான் பெரிதும் மதித்த தன்னுடைய தாயாரை மஹாகமாவிற்குச் சென்று அழைத்து வந்து அறுபத்தி எட்டு விகாராக்களைக் கட்டிய அந்த மன்னன் அறுபத்தி எட்டு ஆண்டுகள் நாட்டை சிறப்பாக ஆண்டு வந்தார்.

அதற்குப் பின் அவமானமடைந்த திஸ்ஸா எவருடைய கண்களுக்கும் புலப்படாமல் திகவாபிக்குத் சென்றார். கோதகட்டாவிற்குச் *(Godhagatta)* சென்று தேராவை சந்தித்த திஸ்ஸா தன்னுடைய சகோதரருடன் தான் சமாதானமாகப் போக விரும்புவதாகக் கூறினார். அந்த தேராவும் தன்னுடன் ஐநூறு பிட்குக்களை தன்னுடன் அழைத்துக் கொண்டு திஸ்ஸாவுடன் மன்னனிடம் சென்றார். திஸ்ஸாவை வாசலிலேயே நிற்க வைத்து விட்டு பிட்குக்களுடன் உள்ளே சென்ற தேராவை அன்புடன் வரவேற்ற மன்னன் அவருக்கு உணவும் பரிசுகளும் கொடுத்து அமரச் சொன்னார். அந்த தீயவன் எங்கே எனக் கேட்ட மன்னனிடம் தேரா ஒரு

CLICK HERE TO VIEW ENGLISH VERSION

பிட்சை பாத்திரத்தை காட்டி திஸ்ஸாவை நாங்கள் அழைத்து வந்துள்ளோம்' என்று அவர் இருந்த இடத்தைக் காட்டினார். விஹாரதேவி உடனே வாயிலுக்கு ஓடிச் சென்று தன்னுடைய மகனுக்குப் பாதுகாப்பாக நின்றாள். தேராவிடம் மன்னன் 'நாங்களும் உங்களுடைய வேலைக்காரர்களே. நீங்கள் சாமனீராவை ஏழு வருடத்திற்கு முன் அனுப்பி இருந்தால் நாங்கள் சண்டையே போட்டிருக்கத் தேவை இல்லை. ஆகவே தவறு செய்தவர் என்னுடைய சகோதரரே.' என்று கூற அவரும் 'செய்த தவறை உணர்ந்து அவர் மனம் வருந்துகின்றார்' என்றார்.

'முதலில் நீங்கள் உணவு அருந்துங்கள்' என்று கூறிய மன்னன் வந்த விருந்தாளிகளுக்குச் செய்ய வேண்டியதை முதலில் செய்த பின் தன்னுடைய சகோதரரையும் அழைத்துக் கொண்டு அந்த பிட்குக்களுக்கு மத்தியில் அமர்ந்தார். அது அறுவடைக் காலம் என்பதினால் தன்னுடைய சகோதரரை நாட்டில் அறுவடை பணிகளை மேற் பார்வையிடுமாறு பணித்தார். அதை நாடு முழுவதும் தண்டோரா போட்டும் அறிவித்தார்.

புனிதரின் பக்தி மார்கத்தில் இணைந்த புத்த பக்தர்களின் மனதில் பேரானந்தம் பொங்கிட வழி வகுத்த கருணா மூர்த்தியின் இருபத்தி நான்காம் பாகமான ' இரு சகோதரர்களின் யுத்தம்' என்ற பகுதி முடிவுற்றது.

25: தத்தகமானி வெற்றி பெற்றார்

தன் மக்களுக்கு தேவையான நன்மைகளை செய்த பின் தத்தகாமினி இரதத்தில் ஏறி பெரும் படையினருடன் திஸ்ஸமஹாரமாவை *(Tissamaháráma)* நோக்கிச் சென்றார். அதன் பின் புத்த பிட்குக்களிடம் கூறினார் ' நான் தரை வழியே நதிக்கு அந்தப் பக்கம் சென்று புத்த சமயத்தை இன்னும் செழிக்க வைப்பேன்'. அந்த லட்சியத்தை அடைந்து கொள்கைகளைப் பரப்ப எங்களுக்கு துணையாக நீங்கள் வர வேண்டும்' என்று வேண்டினார். அவர் மீது இரக்கம் கொண்ட ஐநூறு பிட்குக்கள் மன்னனுடன் சென்றனர். மலாயாவுக்கு *(Malaya)* சென்று அங்கு சமய மாற்றத்தை ஏற்படுத்தியப் பின் தீபகற்பத்தில் இருந்து அனுராதபுரம் செல்லும் பாதையின் மேற்கு பகுதியை அடைந்து பட்டத்து யானை கண்டுலா மீது ஏறிக் கொண்டு தன்னுடைய படை வீரர்கள் சூழ தானே யுத்த களத்திற்கு கிளம்பிச் சென்றார். மஹாகமாவின் அனைத்துப் பகுதிகளையும் பிடித்துக் கொண்ட பின் எஞ்சி இருந்த குட்டஹாலகா *(Guttahálaka)* என்ற பகுதியை அவர்கள் அடைந்தனர்.

மஹியாங்கனாவிற்கு *(Mahiyangana)* சென்று தமிலா சட்டா *(Damila Chatta)* என்ற மன்னனை வென்று தமிலாக்களைக் கொன்ற பின் அம்பாடிஹகா *(Ambatitthaka)* என்ற நகரை சென்றடைந்தார். அந்த நகரில் ஓடிக் கொண்டு இருந்த நதியின் கரையைத் தொட்டவாறு பெரிய பதுங்குக் குழியான அகழி இருந்தது. அந்த நாட்டு தமிலா மன்னன் தித்தம்பாவுடன் *(Titthamba)* யுத்தம் செய்து முடிக்க நாலு மாதம் ஆயிற்று. அந்த கட்டத்தில் அவர் ஏழு பலம் மிக்க

தமிலா இளவரசர்களைக் கொன்றார். அந்த யுத்தத்தில் தித்தம்பாவை வஞ்சமாகத் தோற்கடிக்க வேண்டி இருந்தது. அவருடைய தாயாரை தான் மணந்து கொள்வதாக வாக்குறுதி அளித்ததை நம்பி தன்னுடைய தாயாரை யுத்த களத்தில் முன்னிலைப் படுத்திக் கொண்டு வர அவனை தத்தகாமினி தோற்கடித்தார். அந்த இடத்தின் பெயர் கேமராமா *(Khemáráma)* என ஆயிற்று.

அன்தரசோபா *(Antarásobbha)* என்ற இடத்தின் மன்னனான மஹாக்கோட்டா *(Mahákotta)* என்பவரையும், தோனா கௌவரா *(Dona Gavara)* என்பவரையும், ஹலகோல ஈஸ்ஸரியாவையும் *(Hálakola Issariya),* நலிசோபா நாலிகாவையும் *(Nálisobbha Nálika)* தோற்கடித்தார். திகபாலயகல்லகா *(Dighábhayagallaka)* கச்சரித்தா *(Kacchatittha)* மற்றும் திகபாயாவிலும் *(Dighabhaya)* இருந்த மன்னர்களைத் தோற்கடித்தார். கோடனாகராவில் *(Kotanagara)* கோட்டா *(Kota)* என்பவரையும், ஹலவாஹனாகா *(Hálavahánaka)* வையும், வஹித்தாவில் *(Vahittha)* தமிலா வஹித்தாவையும், கமானியின் கமானியையும் *(Gámani),* கும்பகாமா கும்பாவையும் *(Kumbagáma Kumba),* நந்திகாமா நத்திகாவையும் *(Nandigáma Nandika),* கனுகமாவில் *(Khánugama)* கனுவையும், தம்பா மற்றும் உன்னமாவில் மாமன் மருமகன்களான தம்பா *(Tamba)* மற்றும் உன்மராவையும் *(Unnama)* , ஜம்பு என்பவரையும் தோற்கடித்தார்.

தன்னுடைய இனத்தவர் என்று கூடப் பார்க்காமல் படையினர் மக்களைக் கொல்கின்றனர் என்ற கருத்து மன்னனின் செவியில் வந்து விழுந்தது. அதற்கு அவர் கூறினார் ' நான் இத்தனை கஷ்டங்களையும் தாங்கிக் கொண்டு சக்தியை

செலவு செய்து யுத்தம் செய்வதின் காரணம் சம்புத்தரின் சமயத்தைப் பரப்புவதற்குத்தான். ஆகவே என்னுடைய படையினர் இந்த உண்மையை மனதில் ஏற்றுக் கொண்டு அந்த சத்தியத்தை மனதில் ஏற்றுக் கொண்டே போரிடுகின்றனர்.

உயிர் பிழைத்த தமிலாக்கள் அங்கிருந்துத் தப்பி ஓடி அனுராதபுரத்தில் இருந்து இருபத்தி நான்கு மைல் தொலைவில் இருந்த காலவாபி *(Kalavapi)* என்ற நதிக்கரையின் அருகில் உள்ள விஜிதநகராவை *(Vijitanagara)* அடைந்தனர். அதன் பெயர் பின்னனர் கண்டவாரபிட்டி *(Khandhávárapitthi)* என ஆயிற்று.

விஜிதநகராவைக் கைப்பற்ற நினைத்த மன்னன் அந்த வேலையை நந்திமித்தாவிடம் ஒப்படைக்கத் தீர்மானித்தார். அதற்கு முன்னோடியாக அவனுடைய திறமையை மீண்டும் சோதிக்க எண்ணியவர் பட்டத்து யானை கண்டுலாவை அவனைத் துரத்துமாறு ஏவி விட்டார். அதுவும் நந்திமித்தாவைத் துரத்திச் செல்ல அவன் சற்றும் பயப்படாமல் அதனுடைய இரு தந்தத்தையும் பிடித்து அதனுடன் சண்டைப் போட்டு அதை முட்டிப் போட்டுக் கொண்டு அமரும் நிலையில் அதன் உடலை அழுத்தினான். அந்த யானை அடங்கியது. அந்த நிகழ்சி நடைபெற்ற கிராமத்தின் பெயர் ஹாத்திபோரா *(Hatthipora)* என ஆயிற்று. அதைத் தொடர்ந்து விஜிதநகரா மீது மன்னன் படையெடுக்கச் செல்ல தென்புற வாயிலில் அந்த வீரனின் தலைமையில் கடும் சண்டை நடந்து கொண்டு இருந்தது. கிழக்குப் பக்கம் சண்டையிட்ட மன்னன் வேலுசுமன்னா தமிலாக்களைக் கொன்று குவித்தார்.

தமிலாக்கள் நகருக்குள் நுழையும் கதவுகளை மூடினர். மன்னர் அவர்களைத் துரத்திப் பிடித்து அழிக்க தன் படையினரை அனுப்பினார். யுத்தம் செய்ய தென்புற வாயிலுக்கு கண்டுலா, நந்தமித்தா மற்றும் சுரனிமிலாவையும், மற்ற வாயில்களுக்கு மஹாசோனா, கோதா மற்றும் தேரபுத்தா போன்றோரை அனுப்பினார். அந்த அரண்மனையின் மதில் சுவற்றைச் சுற்றி மூன்று அகழிகள் வெட்டப்பட்டு, உடைக்க முடியாத சுவர்களும் இரும்புக் கதவுகளும் இருந்தன. யானை தும்பிக்கையால் கற்களைத் தூக்கிப் போட்டு கோட்டைக் கதவுகளை இடித்துத் தள்ளியது. உள்ளிருந்த தமிலாக்களும் பல விதமான ஆயுதங்களால் அதைத் தாக்கினர். அதன் மீது உருக்கி காய்ச்சிய உலோகத்தைக் கொட்ட அந்த யானையின் பின்புறத்தில் அது பலத்த காயத்தை ஏற்படுத்த வலி பொறுக்க முடியாமல் அலறி ஓடிய யானை அங்கிருந்த குளத்தில் சென்று அமர்ந்து கொண்டது.

‘இது போதைத் தரும் சுரா பானம் *(surá-draught)* அருந்தும் இடம் அல்ல. போ, போய் கதவை உடைத்துத் தள்ளு’ எனக் கோதைம்பரா *(Gothaimbara)* ஆணையிட அந்த யானை நீரில் இருந்து வெறியோடு வெளியில் வந்து மற்ற யானைகளுடன் சேர்ந்து யுத்த நிலைக்கு தயாராயிற்று.

யுத்தத்தில் யானை

அந்த யானையின் காயத்துக்கு மருந்து போட்டு தடவிக் கொடுத்து உற்சாகப் படுத்திய மன்னன் ‘போ, ஸ்ரீலங்காவை உனக்குத் தருகின்றேன்’ என்று கூறினார்.

அதன் பின்னர் மீண்டும் மீண்டும் காயத்துக்கு மருந்து போட்டு விட்டப் பின் , பலமடங்கு மடித்த எருமைத் தோல்களை அதன் முதுகின் மீது வைத்து, துணியால் நன்றாக மூடி, யானையின் முதுகின் மீது கவசம் பூட்டி, அதை உற்சாகமூட்டி அதை அனுப்பினார். பயங்கரமாகப் பிளறிக் கொண்டு ஓடிய அந்த யானையும் அரண்மனை வாயிலை தன்னுடைய தந்தத்தினால் மூர்கத்தனமாகத் தாக்கி கதவுகளைக் உடைத்து கீழே தள்ளி தன்னுடைய கால்களினால் கதவுகளை மிதித்து உடைத்தது. அந்த கதவை உடைத்துத் தள்ளி பொழுது அதில் இருந்து உடைந்து தெறித்த பகுதிகள் அதன் முதுகில் அமர்ந்து இருந்து இருந்த நந்தமித்தாவின் மீது விழுந்து அவனைக் கீழே தள்ளியதும், முன்பு தன்னுடைய தந்தங்களைப் பிடித்து கீழே தள்ளிய அவன் இப்போது தான் உடைத்துத் தள்ளிய கதவினால் கீழே விழுந்ததைக் கண்ட கண்டுலாவும் மனதில் தான் அவனைப் பழி தீர்த்துக் கொண்டு விட்டது போல மகிழ்ந்தது.

அந்த கதவை உடைத்துத் தள்ளிய கண்டுலா வெற்றிப் புன்னகையுடன் நந்திமித்தாவைத் திரும்பிப் பார்க்க அவன் ' இந்த யானை உடைத்த பகுதி வழியே நான் ஏன் செல்ல வேண்டும்' என நினைத்தபடி தானே பதினெட்டு கியூபிட் உயரமும் எட்டு உசபா நீளமும் கொண்ட சுவற்றை இடித்துத் தள்ளினார். அந்த யானை சுருனிமிலாவைப் பார்க்க அவரும் அது உடைத்தப் பகுதி வழியே செல்ல விரும்பாமல் தன்னுடைய பலத்தைக் கொண்டு உடைத்த பகுதி வழியே நகருக்குள் பிரவேசித்தார். அது போலவே கோதா *(புழவாய)* மற்றும் சோனா *(ஞழயெ)* போன்ற இருவரும் தங்களுடைய பலத்தைக் கொண்டு உடைத்த பகுதி வழியே நகருக்குள் நுழைந்தனர். யானை உடைந்த ஒரு வண்டியின்

சக்கரத்தையும், மித்தா *(Mitta)* அந்த வண்டியின் அமரும் கூட்டையும், கோதா தேங்காய் மரத்தையும், நிமிலா *(Nimila)* ஒரு வாளையும், மஹாசோனா பனை மரத்தையும், தேரபுட்டா தன்னுடைய கழியையும் எடுத்துக் கொண்டு நகருக்குள் பிரவேசித்து அங்கு கண்களில் பட்ட அனைத்து தமீலாக்களையும் கொன்று தீர்த்தனர்.

இப்படியாக நான்கு மாதம் யுத்தம் செய்து விஜிதாநகராவைப் பிடித்த மன்னன் அங்கிருந்து கிரிகலா *(Giriya)* என்ற நகருக்குச் சென்று கிரிய தமிலா என்ற மன்னனைக் கொன்றார். அங்கிருந்து மஹிலாநகரா *(Mahelanagara)* என்ற ஊருக்குச் சென்ற மன்னன் நான்கு மாதங்கள் போரிட்டு அதைப் பாதுகாத்து வந்த படைத் தலைவனைக் கொன்று நகரை கைபற்றினார். அந்த நகரத்தின் பிரதான வழிகளில் ஒன்று மிகவும் பலமான காவலில் இருந்தது, மற்ற மூன்று நுழை வாயில்களில் இருந்த கதவுகளின் வெளிப்புறம் பெரிய அகழி தோண்டப்பட்டு அவை வெளியே தெரியாமல் இருக்குமாறு நெருக்கமாக வளர்க்கப்பட்டு இருந்த கடம்பா செடிக் கொடியினால் மூடப்பட்டு இருந்தன. ஆகவே அந்த நகரைக் கைப்பற்ற தந்திர வழிமுறையைக் கடைப் பிடிக்க வேண்டி இருந்தது. அங்கிருந்து அனுராதபுரத்தை நோக்கிச் சென்று காசா *(Kása)* மலைப் பகுதியில் மையமிட்டு ஜெட்டமுலா *(Jetthamüla)* மாதத்தில் பெரிய ஏரி தோண்டி நீர்த் திருவிழா என்ற பெயரில் விழா ஒன்று எடுத்தார். இன்றும் அந்த ஏரி பஜ்ஜட்டாநகரா *(Pajjotanagara)* என்ற கிராமத்தில் உள்ளது.

தத்தகாமனி யுத்தத்திற்கு வருவதை அறிந்து கொண்ட இலாரா *(Elara)* மந்திரி சபையைக் கூட்டி ஆலோசனை செய்தார். ‘அந்த

மன்னன் ஒரு பெரிய போர் வீரர், அதைத் தவிற அவரிடம் நிறை திறமைசாலியான போர் வீரர்களும் உள்ளனர். ஆகவே அவர்களை எப்படி திறமையாக எதிர் கொண்டு போரிடுவது' என ஆலோசனை செய்தப் பின் மறுநாள் தாமே யுத்தத்தை துவக்கலாம் என முடிவு செய்தனர். தத்தகாமனியும் தன்னுடைய தாயாரிடம் அது குறித்து ஆலோசனை செய்தப் பின் அவளுடைய ஆலோசனைப்படி முப்பத்தி இரண்டு படை வீரர்களுக்கு நடுவே தான் நின்று கொண்டார். அதைச் சுற்றி இன்னும் பலரை அரசுக் கொடிகளை தூக்கிப் போகச் செய்து அவர்களுக்கு நடுவே தான் செல்வது போல உருவ பொம்மையையும் நடக்க விட்டார்.

மஹாபப்பட்தா *(Mahápabbata)* என்ற பட்டத்து யானை மீது எறிக் கொண்ட மன்னன் இலாரா, தன்னைச் சுற்றி தேர்படை சூழ, பெரும் எண்ணிக்கையிலான படை வீரர்களுடன் யுத்தத்திற்கு வந்தார். கடுமையாக நடைப் பெற்ற யுத்தத்தில் திறமைசாலியான திகஜன்து *(Dighajantu)* ஆகாயத்தில் பறந்து சென்று மன்னனின் உருவ பொம்மையை வெட்டி வீழ்த்திய பின் முதல் நிலைப் படை வீரர்களை வாளால் வெட்டிக் கொன்று அந்த உடல்களின் பாகங்களை அனைத்து இடங்களிலும் வீசினார். அடுத்து மன்னனின் படையினரை வெட்டி வீழ்த்த முன்னேறிச் சென்று மன்னனைக் கொல்லச் சென்ற எலாராவை, வீரனாக இருந்தால் தனியாக தன்னுடன் சண்டையிட தைரியமுண்டா எனக் கேட்டு அவரை அவமானப்படுத்திப் பேசினார் சுருமிலா.

திகஜன்து 'முதலில் இவனைக் கொல்கிறேன்' எனக் கூவியவாறு அவரை நோக்கிப் பாய்ந்து வந்தார். அவரைத் தடுக்க கேடயத்தைத் துாக்கிப் பிடித்த சுருமிலாவை அந்த

CLICK HERE TO VIEW ENGLISH VERSION

கேடயத்துடன் இரண்டாகப் பிளக்கின்றேன் என்று கூவியபடி ஆகாயத்தில் இருந்து அவனை நோக்கிப் பாய, சுருமிலா கேடயத்தை விலக்கிக் கொள்ள திகஜன்து கீழே விழுந்தார். தன்னுடைய வேலினால் அவரைக் குத்திக் கொன்றான் சுருமிலா. புஸ்ஸதேவா சங்கை எடுத்து ஊதியபடி பல தமிலாக்களைக் கொன்றான். படை சிதறி ஓடியது. எலாராவும் தப்பி ஓடினார். இறந்து விழுந்த அவருடைய படை விரர்களின் உடலில் இருந்து வெளியேறிய இரத்தம் அந்த ஏரியையே இரத்த சிவப்பாக்கியது. அது முதல் அந்த இடம் குலன்தவாபி *(Kulantavápi)* என்ற பெயர் பெற்றது.

‘என்னைத் தவிற எவரும் எலாராவை கொல்லக் கூடாது ‘ என மன்னன் அறிவிப்பை வெளியிடச் சொன்னார். இப்படியாகக் கூறிய பின் பட்டத்து யானையின் முதுகிலேறி எலாராவைத் துரத்திக் கொண்டு அனுராதபுரத்தின் தெற்குப் பகுதியை வந்தடைந்தார்.

அந்த பகுதியில் இரு மன்னர்களும் கடுமையாக மோதினர். எலாரா தன்னிடம் இருந்த அஸ்திரத்தை ஏவ, குனிந்து கொண்டு அதை தவிர்த்தார் தத்தகாமனி. அடுத்து தன்னுடைய யானையை தூண்டி அவருடைய யானையை தந்தத்தினால் குத்தி மரணம் அடையச் செய்து, தன்னுடைய அஸ்திரத்தை எலாரா மீது ஏவி அவரைக் கொன்றார்.

இப்படியாக முப்பத்தி இரண்டு தமிலா மன்னர்களையும் அழித்து ஸ்ரீலங்காவின் அனைத்துப் பகுதிகளையும் தன்னுடைய ஒரே குடையின் கீழ் கொண்டு வந்தார் மன்னர் தத்தகாமினி. அதன் பின் தன்னுடைய படைகள் சூழ தலை நகருக்குத் திரும்பிய மன்னன் ஒரு யோஜனை தூர அளவு பரப்பளவில்

இருந்த மக்களை வரவழித்து எலாராவின் இறுதிச் சடங்குகளை செய்தார். அவரை புதைத்த இடத்தினைப் புனிதப் படுத்திய பின் அங்கு ஒரு வழிபாட்டுத் தலத்தை அமைத்தார். இன்றும் இலங்கையின் மன்னர்கள் அந்த இடத்திற்குச் சென்றால் மௌனமாக இருந்தவண்ணம் மரியாதை செலுத்தாமல் திரும்புவதில்லை.

விஜிதநகராவை தத்தகாமினி அழிக்கும் முன் எலாராவின் படையில் இருந்த திகஜன்து தன்னுடைய மருமகனான பல்லுக்கா *(Bhalluka)* என்பவருடைய பலம் குறித்து எலாராவிடம் கூறி இருந்தார். ஆகவே அவரை உடனே யுத்தத்தில் கலந்து கொள்ள அந்த இடத்திற்கு வரும்படி அழைப்பு விடுத்தனர். தன்னுடைய அறுபதாயிரம் படை (*60,000*) வீரர்களுடன் கிளம்பியவரால் எல்லாராவின் மரணம் அடைந்து ஏழாவது நாள்தான் அங்கு வர முடிந்தது. வரும் வழியிலேயே எலாரா மரணம் அடைந்த செய்தி கிடைக்க அவர் அவமானம் அடைந்தாலும், 'தான் போரிட வேண்டும்' என்பதில் உறுதியாக இருந்து அனுராதபுரத்தின் அருகில் இருந்த கோலாம்பலஹா *(Kolambahãlaka)* என்ற கிராமத்தில் தன் படையினருடன் வந்து தங்கினார்.

அதைக் கேள்விப்பட்ட மன்னர் பெரும் படையினருடன் அங்கு வந்து பல்லுக்காவுடன் வந்த படையினர் மீது யுத்தத்தைத் துவக்கினார்.

அம்பு எய்வதில் ஐந்து விதக் கலையையும் திறமையாகப் பயின்று இருந்த உம்மதபுஸ்ஸதேவாவும் *(Ummádaphussadeva)* மன்னருக்குத் துணையாகச் சென்று இருந்தார். கடுமையாக நடை பெற்றுக் கொண்டு இருந்த யுத்த களத்தில் இருந்து

பட்டத்து யானை கண்டுலாவும், மற்ற படையினரும் பின் வாங்கத் துவங்கினர். அதைக் கண்டு அதிர்ச்சி அடைந்த மன்னர் உம்மாதபுஸ்ஸாவிடம் 'எத்தனையோ போர்களில் வெற்றி கொண்டுள்ள சைனியம் இந்த யானையின் தலைமையில் ஏன் பின் வாங்கிக் கொண்டு விட்டது ? எனக் கவலையோடு கேட்க உம்மாதபுஸ்ஸா அவரிடம் கூறினார், 'பின் வாங்குவது வெற்றி அடையப் போகும் இடத்தை தீர்மானிக்கத்தான்'. யுத்த முனையில் இருந்து பின் வாங்கிய யானை மஹாவிகாராவுக்கு அருகில் இருந்த ஒரு இடத்தில் சென்று நின்றது.

தத்தகாமினி தன்னுடைய வாயை வாளினால் மூடிக் கொண்டு நின்றிருந்தார். அதைக் கண்டு அவர்களை துரத்திக் கொண்டு அந்த இடத்திற்கு வந்த தமிலா பாலுக்கா அங்கிருந்த தத்தகாமினியை பலவாறு கேலி செய்தார். அவருடைய வாயில் ஒரு அம்பு விட்டு வீழ்த்தினால் என்ன என இறுமாப்புடன் அம்பு ஒன்றை வாயை நோக்கி செலுத்திய பின் அட்டகாசமாகச் கேலியாக சிரித்துக் கொண்டு நின்றார். அவர் செலுத்திய அம்பு வாளில் மோதி உடைந்து விழுந்தது. தான் எய்த அம்பு மன்னனின் வாயைத் துளைத்து விட்டது என எண்ணிக் கொண்டு மீண்டும் அட்டகாசமாகச் சிரித்துக் கொண்டு இருந்தவர் வாயை நோக்கி புஸ்ஸதேவா ஒரு அம்பை கண நேரத்தில் எய்ய, அது அவருடைய வாயைத் துளைத்துக் கொண்டு காதணிகளை தொட, அலறியபடி முன்புறம் தலையை குனிந்தபடி கீழே விழுந்தார் தமிலா பல்லுக்கா. விழுந்தவர் கால்களை நோக்கி இன்னொரு அம்பை புஸ்ஸதேவா வீச அது அவருடைய முழங்காலைத் துளைக்க அவர் மன்னனின் முன் பிடிபட்டுக் கிடந்த ஒரு சிறைப் பறவையைப் போல

சாஷ்டாங்கமாக நமஸ்கரித்த நிலையில் தன்னுடைய முகத்தைத் மன்னனை நோக்கிப் பார்த்தபடி கீழே விழுந்தார்.

தான் செய்த தவறை சுட்டிக் காட்ட விரும்பிய புஸ்ஸதேவா தன்னுடைய காதணியுடன் காது நுனியை வெட்டி இரத்தம் கொட்டிக் கொண்டு இருந்த அதை மன்னனிடம் காட்ட அவரும் 'அதை எதற்காக காட்டுகிறாய்' என அவனிடம் கேட்டார். புஸ்ஸதேவா 'இராஜ தண்டனையை நான் பெற்றுக் கொண்டேன்' எனக் கூற அது எதற்காக எனக் கேட்ட மன்னனிடம் 'நான் உங்கள் காதணியை *(அதாவது மன்னன் ஒருவனின்)* அம்பு எய்து வீழத்தினேன் என்ற தவறைக் காட்டவே எனக் கூறினான். அதைக் கேட்ட மன்னன் கூறினார் ' உன் அம்பைப் போல நீயும் உண்மையில் மிகவும் உயர்ந்தவன்' என அவனைப் பாராட்டினார்.

அனைத்துத் தமிலாக்களையும் கொன்று குவித்தப் பின் யுத்த பூமியில் இருந்து அரண்மனைக்குத் திரும்பினார் மன்னர். அங்கு வெற்றி விழாவைக் குறிககும் வகையில் மாடியில் நடந்த ஆட்டம் பாட்டின் மத்தியில் புஸ்ஸதேவாவின் அம்பினை எடுத்து பூமியில் நட்டு அது மறையும் வரை அதன் உயரத்திற்குப் பணங்களைக் கொட்டி அதை புஸ்ஸதேவாவுக்கு கொடுத்தார்.

அரண்மனை மாடியில் நடந்து கொண்டு இருந்த அந்த கொண்டாட்டத்தில் வாசனை திரவியங்களின் மணம் மூக்கைத் துளைக்க, நளினமாக நடனம் நடந்து கொண்டிருக்க, அற்புதமான துணிகளால் மூடப்பட்டு இருந்த படுக்கையில் தன் கடமையை செய்து விட்ட மனதுடன்

ஆயாசமாக அமர்ந்து இருந்த மன்னன் எந்த விதமான சலனத்தையும் காட்டவில்லை. அவர் எந்த விதமான சந்தோஷமும் படாமல் பல்லாயிரக்கணக்கானவர்கள் பலியாகி விட தான் காரணமாகி விட்டேனே என நினைத்தபடி அமைதியாக அமர்ந்திருந்தார்.

பியாகுண்டிபா *(Piyangudipa)* என்ற அரஹன்த் அதை கேள்விப்பட்டு தன்னுடன் இருந்த எட்டு அரஹன்துக்களை மாளிகைக்கு அனுப்பினர். ஆகாயத்தில் பறந்தபடி வந்து இறங்கியவர்களை அன்புடன் வரவேற்று அமரச் சொன்ன மன்னர். அந்த நேரத்தில் அவசரமாக வந்த காரணத்தைப் பற்றிக் கேட்டார். அவர்களும் தங்களை பியான்குடிபா அரஹன்த் அனுப்பி உள்ளார் எனத் தெரிவித்தனர். மன்னனின் அமைதியற்ற மனதை தேற்றி சமாதானப் படுத்தவே தாம் வந்ததாகவும் கூறினர். பல்லாயிரக்கணக்கானோர் மரணம் அடைந்து விடக் காரணமாகி விட்ட தன்னை எப்படித் தேற்ற முடியும் என மன்னர் கேட்டார்.

அந்த துறவிகளோ ‘ இந்த சம்பவத்தினால் சொர்கத்துக்குப் போக வேண்டிய உன் வழி அடைபட்டுப் போகவில்லை மன்னா, நீ கொன்றுள்ளது ஒன்றறை *(One and a half)* மனிதரைதான். ஒருவர் சொர்கத்திற்கு செல்ல விரும்பி உன்னிடம் வந்தார். இரண்டாமவர் ஐந்து போதனைகளை மட்டுமே கற்றறிந்தவர். அவர்களைத் தவிற மற்ற அவைரும் மூடர்கள், விலங்குகளைப் போன்றவர்கள். உன்னுடைய இந்த நற்செயலினால் புத்த சமயம் பன் மடங்கு பலப்பட்டு உள்ளது. யுத்த தர்மத்தை கடைபிடித்து தீயவர்களை அழித்த மன்னா, கவலையை மற, நிம்மதியாக இரு’ என்றனர்.

அதைக் கேட்ட மன்னனர் நிம்மதி அடைந்தார். தனக்கு தன்னுடைய பெற்றோர் கொடுத்திருந்த 'புத்த பிட்குக்களுக்கு கொடுக்காமல் நீ உணவருந்த கூடாது' என்ற அறிவுறையை நினைத்துப் பார்த்தார். தான் தவறுதலாக ஒரு குடுவையில் இருந்த சிறிது மிளகை உபயோகித்தது நினைவிற்கு வந்தது. அதற்கு நான் பரிகாரம் செய்ய வேண்டும் என முடிவு செய்தார்.

பொது மக்களுக்கு நன்மை நடக்க வேண்டும் என்பதற்காக் தீயவர்களை, கொடுமைக்காரர்களை தர்மத்தை மீறாமல் ஒரு மன்னன் அழித்து விட்டால் அது கொலையாகாது. தான் செய்தது தவறு என அவர் வருத்தப் படக்கூடாது. தீயவர்களை அழிப்பதினால் பிற்காலத்தில் நடக்க இருக்கும் நன்மையை மட்டுமே மனதில் வைத்திருக்க வேண்டும். அப்படிப்பட்ட காரியத்தை செய்பவர்கள் துன்பத்தில் இருந்து விடுபடுவார்கள்.

புனிதரின் பக்தி மார்கத்தில் இணைந்த புத்த பக்தர்களின் மனதில் பேரானந்தம் பொங்கிட வழி வகுத்த கருணா மூர்த்தியின் இருபத்தி ஐந்தாம் பாகமான 'தத்தகாமினியின் வெற்றி' என்ற பகுதி முடிவுற்றது.

26: மாரிகவட்டி விஹாரா

மாபெரும் மன்னன் தான் வெற்றி பெற்ற இடங்களை ஒன்றமைத்து அதில் சில இடங்களை தனக்கு வெற்றி கிடைக்க வழி வகுத்தப் படை வீரர்களுக்கு அவர்களுடைய தகுதிகளுக்கு ஏற்ப பரிசாக வழங்கினார். தேரபுட்டபய்யா *(Theraputtabhaya)* தனக்குக் கொடுத்த இடத்தை ஏற்க மறுத்தார். 'இது எதற்காக? இன்னும் யுத்தமே முடியவில்லையே' என்று கூறி அதை பெற்றுக் கொள்ள மறுத்தார். 'யுத்தமா, அனைத்துப் பகுதிகளையும் ஒன்றாக இணைத்து ஒரு முழு இராஜியமாக்கி விட்டேனே, இனி எங்கே யுத்தம் தொடர உள்ளது ?' எனக் கேட்ட மன்னரிடம் 'என் மன எதிரிகளான அசை, காமம், குரோதம் ஆகியவற்றுடன் போராட்டத்தில் இருக்கின்றேன்' என்றார் தேரபுட்டபய்யா. எத்தனைக் கூறியும் இராஜியத்தை ஏற்க மறுத்தவர் மன்னனின் அனுமதியுடன் பப்பஜ்ஜா உபதேசம் பெற்று துறவியாகி ஐநூறு புத்த பிட்குக்களுடன் சென்று வாழத் துவங்கினார்.

பெரும் ஆரவாரத்துடன் நடைபெற்ற ஒரு வார கால விழாக் கொண்டாட்டம் முடிவடைந்ததும் அனைத்து பட்டத்து இளவரசர்களும் கொண்டாடும் விதத்தில் நன்கு அலங்கரிக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்ட டிஸ்ஸா *(Tissa-tank)* ஏரியின் அருகில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விழா அரங்கிற்கு அபய்யா சென்றார்.

மரிகவட்டி விகாரில் *(Maricavatti-vihára)* அமைந்திருந்த

இடத்தில் மன்னன் கொடுக்க இருந்த தானப் பொருட்கள் தயாராக வைக்கப்பட்டு இருந்தன. அந்த இடத்தில்தான் பின்னர் ஸ்துாபா எழுப்பப்பட்டது.

அந்த இடத்திற்கு மன்னருடன் வந்திருந்த மக்கள் புனிதச் சின்னம் பதித்த ஈட்டியை பூமி மீது வைத்திருந்தனர். அன்று முழுவதும் தமது அரண்மனைப் பெண்களுடன் ஜலக்கிரீடை செய்து கொண்டு இருந்த மன்னன் மாலை வெளியே வந்து நகருக்குத் திரும்பத் துவங்கினார்.

'ஈட்டியை எடுத்துக் கொண்டு என் பின்னால் வாருங்கள்' என மன்னன் ஆணையிட, புதைத்து வைக்கப்பட்டிருந்த அந்த ஈட்டியை வெளியில் எடுக்க முடியவில்லை.

தன்னுடன் வந்திருந்தவர்களினால் ஈட்டியை வெளியில் எடுக்க முடியவில்லை என்றதும் தமது படையினரைக் கூப்பிட்டு அதை எடுக்கக் கூறினார். அவர்களாலும் அதை எடுக்க முடியாமல் போக, அந்த ஈட்டிக்கு நறுமணங்கள் துாவி, பூக்கள் துாவி வணங்கினர். அந்த அதிசயக் காட்சியைக் கண்ட மன்னன் ஆச்சரியம் அடைந்து ஊருக்குத் திரும்பியதும் அந்த ஈட்டியை சுற்றி சுவர் எழுப்பி, ஸ்துாபாவையும் அங்கே எழுப்ப முடிவு செய்து அந்த இடத்தில் ஒரு விகாராவை அமைக்க ஏற்பாடுகளை செய்தார்.

மூன்று ஆண்டுகளில் அங்கு விகாரா அமைக்கப்பட புத்த சகோதரர்கள் அனைவரையும் அங்கு வரவழித்து விழா கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஒரு லட்சம் பிட்குக்களும், ஒன்பது லட்ச பிட்குணிக்களும் (*9,00,000*) அந்த

மடாலயத்தில் நடந்த விழாவில் கலந்து கொண்டனர். அங்கு கூடி இருந்த புத்த சகோதரர்களிடையே பேசிய மன்னர் 'நான் புத்த சகோதரர்கள் இருப்பதை ஒரு கணம் மறந்து குடுவையில் இருந்த சிறிது மிளகைத் தின்றேன். அந்த தவறுக்கு பிராய சித்தமாகவே இந்த மாரிகவட்டி விகாராவைக் கட்டி உள்ளேன். இதை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்' என வேண்டுகோள் விடுத்து அபய்யா ஏரியின் சில பகுதிகளையும் சேர்த்து உள்ளடக்கிய மடாலயத்தை அவர்களுக்கு சமர்பித்தார். அங்கு மிகப் பெரிய கூடம் அமைக்கப்பட்டு இருந்தது. அனைத்து பிட்குக்களுக்கும் தாராளமாக தானங்கள் வழங்கப்பட்டன.

ஒரு வார காலத்திற்கு அவர்கள் அனைவருக்கும் உணவு உண்ண ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தன. ஒவ்வொரு சாமனாக்களின் தகுதிகளுக்கும் ஏற்ப அவரவர்களுக்குப் பல பொருட்களும் தரப்பட்டன. அத்தனை செலவும் மன்னரின் நேரடிப் பார்வையில் நடந்தன. மன்னனின் இருதயம் எத்தனை விசாலமானதோ அத்தனை பெரிய அளவில் அனைத்துப் தானப் பொருட்களும் இருந்தன. மூன்று முக்கிய நிகழ்ச்சிகளான - ஸ்துபாவை கட்டியது, விகாராவை அமைத்தது மற்றும் பரிசுப் பொருட்களைத் தந்தது - என அனைத்திற்கும் சுமார் இருபது கோடி (*20,00,00,000*) பணம் செலவு ஆயிற்று.

நீர், நெருப்பு, உயிரினங்கள், கைப்பற்றப்படல் மற்றும் கொள்ளை போன்றவற்றால் பாதிக்கப்படும் செல்வமானது, மக்களிடையே மதிப்புள்ளவர், நற்குணம் பெற்றவர், புனிதர்களிடையே நற்பெயர் பெற்றவர், தன் கடமைகளைத் தவறாமல் செய்பவர் என்ற அனைத்து நல்லறிவும்

CLICK HERE TO VIEW ENGLISH VERSION

கொண்டவர்களின் கையில் கிடைப்பதே சாலச் சிறந்தது. செல்வம் அப்படிப்பட்ட குணாவசியத்தைக் கொண்டவர்களிடம் சென்றடைய வேண்டும் என்றே புத்திமான்கள் விரும்புவர்.

புனிதரின் பக்தி மார்கத்தில் இணைந்த புத்த பக்தர்களின் மனதில் பேரானந்தம் பொங்கிட வழி வகுத்த கருணா மூர்த்தியின் இருபத்தி ஆறாம் பாகமான 'மாரிகவட்டி விஹாரா' என்ற பகுதி முடிவுற்றது.

27: லோஹபாதஸா புனித சடங்கு

அதன் பின் அனைவரையும் அழைத்த மன்னன் அவர்களுக்கு தன்னுடைய முன்னோர்கள் செய்த சேவைகளைப் பாராட்டி நடந்த நிகழ்சியில் மாபெரும் மகானான தேரா முன்னர் கூறியதை நினைவூட்டினார். தேரா அவருடைய முன்னோரிடம் கூறி இருந்தார் ‘ உன்னுடைய வழித் தோன்றல் தத்தகாமினி நூற்றி எண்பது கியூபிக் அடி உயர தங்க மாலை அணிவிக்கப்பட்ட மாபெரும் ஸ்தாபாவையும் ஒன்பது மாடிகள் கொண்ட உபோசதா என்ற தங்கும் இடத்தையும் லோகபாசதா *(Lohapasada)* என்ற இடத்தில் நிர்மாணிப்பார்’

அங்கிருந்த இடத்தில் புதைத்து வைக்கப்பட்டு இருந்த தங்கத் தட்டினை தேடி எடுத்து அதில் எழுதப்பட்டு இருந்த வாசகங்களை உரத்தக் குரலில் அனைவரும் கேட்கும் வண்ணம் படிக்குமாறு கூறினார். அதில் எழுதப்பட்டு இருந்தது ‘நூற்றி அறுபத்தி ஆறு (*166*) ஆண்டுகள் கழிந்தப் பின் காகவானாவின் *(Kakavanna)* புதல்வாரன தத்தகாமனி அறிவாளிகள் கூறும்படி இங்கும் அங்குமாக பலவற்றையும் நிர்மாணிப்பார்’ அதைக் கேட்ட மன்னர் தனது இரு கைகளையும் தட்டி தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார். மறுநாள் காலை எழுந்தவர் மஹாமேக பூங்காவிற்குச் சென்று அங்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்த விழாவில் ‘ இங்கு உங்களுக்கு தேவர்கள் வாழும் இடம் போன்ற ஒரு பாசறை கட்டிக் கொடுக்கின்றேன். ஆகவே எவரையாவது தேவர்கள் வாழும் இடத்திற்கு அனுப்பி ஒரு வரைபடம் தயாரித்துத்

தாருங்கள்' என்று கேட்க, அதைக் கேட்ட பிட்குக்கள் தம்முடன் இருந்த எட்டு துறவிகளை அந்த காரியத்தை செய்ய அனுப்பினர்.

கௌத்தம புத்தருக்கு முன் இருந்த புத்தர்களில் கடைசி புத்தரான காசப்பா என்பவருடைய காலத்தில் அசோகா என்ற பெயர் கொண்ட பிராமணர் ஒருவர் இருந்தார். அவர் தன்னுடைய சகோதர புத்தமார்களுக்கு தினமும் எட்டு வேளை உணவு படைத்தார். தன்னிடம் இருந்த வேலைக்காரப் பெண் பிரானி *(Birani)* என்பவளிடம் அதை தொடர்ந்து செய்யுமாறுக் கூறி இருந்தார். அவள் தன் வாழ்நாள் முழுவதும் அதை நிறைவுடன் செய்து வந்து மரணம் அடைந்து மீண்டும் அடுத்தப் பிறவி எடுத்த பொழுது ஆகாயத்தில் மிதந்து கொண்டு இருந்த தேவதைகளுடைய மாளிகையில் பணி புரியும் பெண்ணாகச் சேர்ந்து தினமும் ஆயிரம் தேவதைகளுக்கு உணவு போட்டாள்.

பன்னிரண்டு யோஜனை நீளமும் நாற்பத்தி எட்டு யோஜனை அகலமுமாக இருந்த அந்த மாளிகை ஒன்பது அடுக்குக்கள், ஆயிரம் ஜன்னல்கள், ஆயிரம் அறைகள் கொண்டதாக இருந்தது. அதில் நான்கு பக்கமும் கிளிஞ்சல் மாலைகள், தொங்க விடப்பட்டு சிறிய மணிகள் கட்டப்பட்டு இருந்தன. அந்த மாளிகையின் நடுவில் அனைத்துப் பக்கத்தில் இருந்தும் தெரியும் வண்ணம் அம்பலாத்திக பாசறை *(Ambalatthika-pásáda)* அமைந்து இருந்தது. அவள் உதவியுடன் அதன் வரை படத்தை ஒரு வழுவழுப்பான துணியில் வரைந்து எடுத்துக் கொண்டு வந்த பிட்குக்கள் அதை மன்னனிடம் கொடுக்க அது போலவே லோகபாசதாவை மன்னன் கட்டினார். அந்த பாசறையை கட்டத் துவங்கியதும் தாராள மனம் படைத்த

அந்த மன்னன் நாலு வாசலிலும் எட்டு லட்ச *(8,00,000)* தங்க நாணயங்களை ஒவ்வொரு வாசலிலும் வைத்து, அந்த வேலையில் ஈடுபட்டிருக்கும் எவரும் உண்ணாமல், உடுக்காமல் இருக்கக் கூடாது என்பதற்காக ஆயிரம் ஆடைகள், கல்கண்டு மூட்டைகள், சக்கரைப் பொடி, எண்ணை மற்றும் தேன் போன்ற பொருட்களை தாராளமாக வைக்கச் சொல்லி இருந்தார்.

ஒவ் ஒருபுறமும் நூறு கியூபிட் நீளமும் அதே அளவு அகலமும் கொண்ட பாசறை கட்டச் சொன்னார். அது ஒன்பது அடுக்குகளைக் கொண்டு பலவிதமான வண்ணக் கற்கள், நவரத்தினங்கள், தாமரைத் தோட்டம் போன்றவற்றை அடக்கி இருந்தது.

அது போல வண்ணமய மிக்க நவரத்தினங்கள் பதித்த ஆயிரம் அறைகள் அங்கு அமைக்கப்பட்டன. வேசவனாவில் *(Vessavana)* பெண்களுக்கென இருந்த மையத்தைப் போல அங்கும் நவரத்தின மையத்தில் ஒரு மையம் அமைக்கப்பட்டது. அதன் துாண்களில் புலி, சிங்கம் மற்றும் பல தேவதைகளின் உருவங்கள் செதுக்கப்பட்டு இருந்தன.

அந்த மையத்தில் நவரத்தின கற்கள் பதிக்கப்பட்ட தந்தத்திலான சிறிய மலை போன்ற அமரும் ஆசனம் இருந்தது. ஜாதகா கதைகளில் படித்தது போன்ற பிரமிப்பு தரும் விதத்தில் சுரிய ஒளிபோல தங்க நிறத்தில் மின்னிய, சந்திரனைப் போல வெள்ளி நிறத்தில் மின்னிய, நட்சத்திரங்களைப் போல முத்து முத்தாய் மின்னிய கற்கள் பதிக்கப்பட்டு இருந்தன.

அந்த ஆசனத்தில் பளபளக்கும் மிக விலை உயர்ந்து

படுக்கை விரிப்புக்கள், மெத்தை, நாற்காலிகள் என அமைக்கப்பட்டு குடுவைகளும் கைப் பிடிகளும் தங்கத்தினால் செய்யப்பட்டு இருந்தன. தாமிர மாளிகை என அழைக்கப்படும் அளவில் பாசறையின் மேற் கூறை தாமிரத்திலான தகடுகளினால் மூடப்பட்டு இருந்தது.

லோஹபாசதா தயார் ஆனதும் மன்னன் பிட்குக்களை அழைத்து மாரிகவட்டி விகாரா என்ற பெயரில் அதைத் திறந்து கும்பாபிஷேக உற்சவம் போன்ற அளவில் திறப்பு விழாவை நடத்தி வைத்தார். போதனைகளில் முதல் கட்டத்தை வெற்றிகரமாகப் பயின்றவர்கள் முதல் அடுக்கிலும், அடுத்தடுத்த அடுக்குக்களில் அடுத்த கட்டத்தை எய்தியவர்களும் தங்க வைக்கப்பட்டனர். நான்காம் அடுக்கிலும் அதற்கு மேலும் துறவிகள் *(அரஹன்த்)* தங்கினர்.

ஒரு வார காலத்திற்கு விழா எடுத்து பல விதமான பரிசுகளை தாராளமாக வழங்கி முப்பது கோடி (*30,00,00,000*) செலவான பாசறையை பிட்குக்களுக்கு வழங்கி மன்னன் மனம் மகிழ்ந்தார்.

பொருட்களை தன்னிடமே குவித்து வைத்துக் கொள்வது பலனற்றது என்பதை உணர்ந்த அறிவாளிகள் தாராளமாக கொடைகள் தந்து மனதை ஆசையினால் கட்டுப்படுத்திக் கொள்ளாமல் இருந்து மன மகிழ்ச்சி பெறுகின்றனர்.

புனிதரின் பக்தி மார்கத்தில் இணைந்த புத்த பக்தர்களின் மனதில் பேரானந்தம் பொங்கிட வழி வகுத்த கருணா மூர்த்தியின் இருபத்தி ஏழாம் பாகமான ‘ லோஹபாதஸா புனித சடங்கு’ என்ற பகுதி முடிவுற்றது.

28: ஸ்துாபி ஸ்தாபன ஏற்பாடுகள்

போதி மர விழாவிற்கு பல்லாயிரக்கணக்கான அளவில் பணம் செலவழிக்கப்பட்டது. மன்னர் நகருக்குள் பிரவேசிக்கையில் ஸ்துாபா உள்ள இடத்தில் இருந்த கல்வெட்டில் பொறிக்கப்பட்டு இருந்ததை படித்துப் பார்த்தவுடன் 'இங்கு நான் ஸ்துாபாவை கட்ட ஏற்பாடு செய்ய வேண்டும்' என முடிவு செய்தார். மாளிகைக்குத் திரும்பியவர் தனிமையில் அந்த இடத்தைப் பார்த்தபடி நின்றிருந்து நினைத்தார் ' ஏற்கனவே தமிலாக்களை அழிக்க நான் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்குத் தேவையான பொருள் உதவிகளை பெற்றுக் கொண்டு மக்களை மிக்க துயரத்துக்கு உள்ளாக்கி விட்டேன். மீண்டும் அவர்களிடம் இருந்து வரி போட்டு பணம் பெறக் கூடாது. ஆனால் ஸ்துாபா கட்டுவதற்கான செங்கல்களை நான் எங்கிருந்து பெறுவது?'

அவர் அப்படி நினைத்துக் கொண்டு இருந்தது தேவதைகளின் கவனத்திற்குச் செல்ல அவர்கள் தமது தலைவரான சாக்காவிடம் அது குறித்துப் பேசினர். அவர் உடனே விசகம்மாவை *(Vissakamma)* அழைத்துக் கூறினார் 'மன்னன் காமினி செங்கல்களுக்கு என்ன செய்வது என்ற கவலையில் உள்ளார். நீ உடனே நகருக்கு அருகில் உள்ள கம்பீரா நதிப்புறம் *(Gambhira river)* போய் ஸ்துாபாவிற்குத் தேவையான செங்கல்களை தயாரித்து வை'. அதைக் கேட்ட விசகம்மா அந்த இடத்திற்குச் சென்று செங்கல்களை தயாரித்தது.

மறுநாள் காலையில் வேட்டைக்காரர்கள் நாய்களுடன் காட்டிற்குள் சென்று வேட்டை ஆடிய பொழுது விசகம்மா தன்னை ஒரு உடும்பு *(iguana)* போல மாற்றிக் கொண்டு அவர்கள் முன் தோன்றினாள். அதைப் உடும்பு என நினைத்துப் பிடிக்க அவர்கள் அதனை துரத்திச் கொண்டு சென்ற பொழுது தான் செங்கல்கள் தயாரித்து வைத்திருந்த இடத்திற்கு அருகில் அவள் ஓடிச் சென்று நின்ற பின் மறைந்து போனாள். அதைக் கண்ட வேடர்கள் ' நமது மன்னர் ஸ்துாபியைக் கட்ட ஏற்பாடுகள் செய்து கொண்டு இருக்கின்றாரே. அவருக்கு உதவியாக இதோ இங்கே கடவுளே அதை தயாரித்து வைத்திருக்கின்றார்' என வியந்தவாறு மன்னனிடம் ஓடிச் சென்று விஷயத்தைக் கூறினர். அதைக் கேட்ட மன்னனின் இருதயம் சந்தோஷத்தினால் விம்மியது.

அந்த நகரின் வடக்குப்புறத்தில் மூன்று யோசனை துாரத்தில் இருந்த அகாரவித்திகாமா *(Acaravitthigama)* என்ற இடத்தின் அருகில் இருந்த பதினாறு கரிசா *(karisas)* நிலப் பரப்பில் பல்வேறு அளவுகளில் தங்கக் கட்டிகள் கிடந்தன. அவை ஒரு சாண் நீளத்தில் *(சுமார் ஒன்பது அங்குலம்)* இருந்து ஒரு விரல் நீள அளவில் இருந்தன. அதைக் கண்ட மக்கள் அவற்றை எடுத்துப் போய் தங்கக் குடத்தில் வைத்து, மன்னரிடம் கொடுத்து அது தமக்குக் கிடைத்த செய்தியைப் பற்றியும் கூறினர்.

அது போலவே கிழக்குப்புறத்தில் ஏழு யோசனை துாரத்தில் இருந்த தம்பபித்தா *(Tambapittha)* என்ற நதிக் கரையில் தாமிரக் கட்டிகள் பெரும் அளவில் ஒதுங்கி இருந்ததைக் கண்ட மக்கள் அவற்றையும் எடுத்துக் கொண்டு போய் மன்னரிடம் தந்தனர்.

தென் கிழக்குப் பகுதியில் நான்கு யோசனை துாரத்தில் இருந்த சுமனவாபி *(Sumanavapi)* என்ற கிராமத்தில் பெருமளவு நவரத்தினக் கற்களின் குவியல்கள் கிடைத்தன. அதைக் கண்ட மக்கள் வியந்து அவற்றை எடுத்துக் கொண்டு போய் மன்னரிடம் தந்தனர்

தென் பகுதியில் எட்டு யோசனை துாரத்தில் இருந்த அம்பத்தக்கோலா *(Ambatthakola-cave)* என்ற குகையில் நிறைய வெள்ளிக் கட்டிகள் கிடைத்தன. அந்த நகரத்தில் இருந்து பல வண்டிகளை எடுத்துக் கொண்டு மலாயா *(Malaya)* என்ற நகருக்குப் போய் இஞ்சி வாங்கி வரக் கிளம்பிய ஒரு வியாபாரி வழியில் இருந்த அந்த குகைக்கு அருகில் ஓய்வெடுக்க பயணத்தை நிறுத்தினார். களைப்பாக இருந்ததினால் ஓய்வெடுத்தப் பின் செல்லலாம் என நினைதது உணவு சமைக்க கட்டைகளைப் பொறுக்கி வர மலை மீது ஏறி சென்றவர் அங்கிருந்த பலா மரத்தில் தொங்கிக் கொண்டு இருந்த பலாப் பழத்தைக் *(bread-fruit)* கண்டார். அவை ஒவ்வொன்றும் நீர் இறைக்க பயன்படும் தண்ணீர் தொட்டியைப் *(waterpitcher)* போன்ற அளவில் பெரியதாக இருந்தன.

அந்த மரத்தில் இருந்து ஒரு பழத்தை அறுத்து எடுத்து அதன் தோலை சீவி உண்ண நினைத்தவர் ஒரு கணம் நினைத்தார் ‘இதை நான் உண்ணும் முன் தானமும் செய்ய வேண்டும்’. இப்படியாக நினைத்தவர் தானம் பெற்றுக் கொள்ள எவரேனும் இருந்தால் இங்கு வரலாம் எனக் கூவி அழைத்த பொழுது நான்கு தேராக்கள் எங்கிருந்தோ அங்கு வர, அந்த வியாபாரியும் அவர்களை மரியாதையுடன் வணங்கி அவர்களுடைய பிட்சை பாத்திரம் வழியும் அளவிற்கு அந்த பழத்தின் சாறை ஊற்றினார். அதைப் பெற்றுக் கொண்ட

CLICK HERE TO VIEW ENGLISH VERSION

அவர்கள் அங்கிருந்து கிளம்பிச் சென்று விட்டனர். அதன் பின் மீண்டும் இன்னொரு முறை தானம் பெற்றுக் கொள்ள வருமாறு கூவி அழைக்க இன்னும் நான்கு தேராக்கள் எங்கிருந்தோ அங்கு வர, அந்த வியாபாரி அவர்களையும் மரியாதையுடன் வணங்கி அவர்களுடைய பிட்சை பாத்திரம் வழியும் அளவிற்கு அந்த பழத்தின் சாறை எடுத்து ஊற்றினார். அதைப் பெற்றுக் கொண்டவர்களில் மூவர் அங்கிருந்து கிளம்பிச் சென்று விட நான்காமவர் மட்டும் சற்று தூரம் நடந்து சென்று அந்த வியாபாரி தன்னை பார்க்கும்படியான ஒரு இடத்தில் அமர்ந்து கொண்டு பழத்தை உண்ணத் துவங்கினார். அவர் அமர்ந்திருந்த இடம் ஒரு குகையின் நுழை வாயில். அதற்கிடையே அந்த வியாபாரியும் தான் பறித்த பழத்தை உண்டார். மீதி இருந்த பழங்களைப் பறித்துக் கொண்டு வண்டியில் வைக்கச் சென்றவர், எதேற்சையாக அந்த தேரா தன்னை அழைத்ததை பார்த்து அவர் சென்ற வழியிலேயே சென்று அவர் அருகில் நின்றார். அருகில் வந்த மன்னனிடம் ஒரு குறிப்பிட்ட வழியைக் காட்டி அப்படியே சென்று குகைக்குள் என்ன இருக்கிறது என்று பார் எனக் கூறிய பின் அங்கு அமர்ந்திருந்த தேரா எழுந்து சென்று விட்டார். அவர் கூறியதை உதாசீனப்படுத்தாமல் அவர் காட்டிய பாதையில் நடந்து குகைக்குள் சென்றவர் பிரமித்து நின்றார். பாளம் பாளமாக வெள்ளிக் கட்டிகள் அங்கு இருந்தன. அவற்றில் ஒன்றை வெட்டி எடுத்துக் கொண்ட வியாபாரி தன்னுடைய வண்டிகளை அங்கேயே விட்டு விட்டு அனுராதபுரத்தில் இருந்த மன்னனிடம் ஓடிச் சென்று விஷயத்தைக் கூறினார்.

அது போல நகரின் மேற்குப்புறத்தில் ஐந்து யோசனை தூரத்தில் இருந்த உருவிலா *(Uruvela)* என்ற ஊரின்

(அனுராதபுரத்தில் இருந்து சுமார் நாற்பது கல் தொலைவில் உள்ளதாம்) கடற்கரையில் ஆறு வண்டிகள் நிறைய முத்துக்களும் பவழங்களும் எங்கிருந்தோ வந்து இறங்கின. அதைக் கண்ட மீனவர்கள் அவற்றை எடுத்துக் கொண்டு போய் மன்னனிடம் தந்தனர்.

வடக்குப் பக்கத்தில் ஏழு யோசனை துாரத்தில் தற்பொழுது வவுனிக்குளம் என அழைக்கப்படும் பிலிவபீககமா *(Pelivapikagama)* என்ற ஏரியின் அருகில் நாய்களுடன் வேட்டையாடக் சென்றவர்கள், காட்டின் நடுவே பளபளத்தபடி கொட்டிக் கிடந்த அபூர்வ வகை ரத்தினக் கற்குவியலகளைக் கண்டு மன்னனிடம் சென்று அதைப் பற்றிக் கூறினர்.

இப்படியாக பல்வேறு இடங்களிலும் இருந்தும் கிடைத்த அனைத்தும் ஸ்துாபி ஸ்தாபனம் செய்யவே கிடைத்துள்ளது என்ற உண்மையை புரிந்து கொண்ட மன்னன் அவற்றை பற்றிய விவரங்களைக் கூறிவர்களை தன்னிடமே வேலைக்கு அமர்த்திக் கொண்டார்.

சுய இன்பத்திற்கான சிந்தனை சற்றும் இன்றி, அனைவரும் நன்மை அடையும் விதத்தில் பல்வேறு காரியங்களை தொடர்ந்து செய்து கொண்டு இருப்பவர்களுக்கு, தேவையான நேரத்தில் எல்லா நன்மைகளும் தாமாக தேடி வரும்.

புனிதரின் பக்தி மார்கத்தில் இணைந்த புத்த பக்தர்களின் மனதில் பேரானந்தம் பொங்கிட வழி வகுத்த கருணா மூர்த்தியின் இருபத்தி எட்டாம் பாகமான ‘ஸ்துாபிக்கான ஏற்பாடுகள்’ என்ற பகுதி முடிவுற்றது.

29: ஸ்துாபி ஸ்தாபனம்

இப்படியாக ஸ்துாபி நிர்மாணிக்கத் தேவையான அனைத்து பொருட்களையும் பல்வேறு இடங்களில் இருந்தும் பெற்ற மன்னன், வேசாக *(Vesakha)* மாதத்தின் பௌர்ணமி அன்று விசாக நட்சத்திர சேர்க்கையின் *(Visakha-constellation)* . தினத்தன்று ருவன்வேலி சாயா என்ற ஸ்துாபாவைக் *(Ruwanweli saya)* கட்டத் துவங்கினார். அந்த இடத்தில் இருந்த கல்வெட்டை அகற்றச் சொல்லிய பின் ஏழு கியூபிக் அடி ஆழத்தில் புமியைத் தோண்டச் செய்தார். பின்னர் அவரது படை வீரர்களால் கொண்டு வரப்பட்ட உருண்டை வடிவான பெரும் பாறைகளை துண்டு துண்டாக ஜல்லியாக உடைக்க வைத்து தோண்டப்பட்டு இருந்த குழியில் போட்டு கால்களில் தடித்த பல தோல் பட்டைகளைக் கட்டிய யானைகளைக் கொண்டு அந்த ஜல்லிக் கற்களை மிதிக்கச் செய்து பூமியின் அடித்தளத்தை வலுவாக்கினார். அவை செய்யப்பட்ட பொழுது தானே நேரடியாக அதை மேற்பார்வையிட்டார்.

அந்த இடத்தின் அருகில் மூன்று யோசனை துாரத்திற்கு ஓடிக் கொண்டு இருந்த கங்கை நதியால் ஏற்பட்டிருந்த மிருதுவான ஆனால் மிகவும் உறுதியான மணலை வெண்ணை களிமண் *(butter-clay)* என்று கூறும் அளவுக்கு தொட்டால் மிருதுவாக இருக்கும். அதை அங்கிருந்த சாமனேராக்கள் கொண்டு வந்து தந்தனர். அதை குழியில் யானைகளினால் மிதிக்கப்பட்டிருந்த கற்குவியல் மீது போடச் சொல்லி அதன் மீது செங்கல்களை அடுக்கச் சொன்னார். கெட்டியாக வேண்டும் என்பதற்காக அடுக்கப்பட்ட செங்கல்களின் மீது வெள்ளைக் களிமண் கலவையைக் கொட்டச் சொல்லி அதன் மீது பாதரஸ ஸல்பைட்

(cinnabar) என்ற கலவையை கொட்டச் சொன்னார். அவற்றின் மீது பின்னப்பட்ட இருப்புக் கம்பிகள் போடப்பட்டு, சாமனாக்கள் இமய மலையில் இருந்து கொண்டு வந்திருந்த நறுமணம் மிக்க மரும்பா *(marumba)* என்ற களிம்பையும் கொட்டச் சொன்னார். அதன் மீது மீண்டும் மலைக் கற்களைக் *(mountain-crystal)* கொட்டச் சொன்னார். அதன் பின் எட்டு அங்குல தடிமனான தாமிரத் தகட்டின் மீது *(copper)* சக்கரைக் கலந்த நீரில் கொட்டி தயாரித்த கபித்தா மரத்தின் *(kapittha - tree)* பிசினைத் தடவி ஒட்ட வைத்தார். கடைசியாக விஷம் கலந்த ஆர்சனிக் (arsenic) என்ற ரசாயனப் பொருளை நல்லெண்ணையுடன் கலந்து அதை ஏழு அங்குல தடிமனான வெள்ளி தகட்டில் தடவி அதையும் அதன் மீது ஒட்ட வைத்தார்.

அடித்தளத்தின் அமைப்பு



ஸ்துபாவை ஸ்தாபிக்க அப்படிப்பட்ட சிறப்பான அடித்தளத்தை தயாரித்தப் பின் அசல்ஹா *(Asalha)* மாதத்தின் வளர் பிறையின் பதினாலாம் நாள் அந்த இடத்தில் கூட்டப்பட்ட புத்த பிட்குக்களின் சம்மேளத்தின்

மத்தியில் பேசிய மன்னர் கூறினார் 'பெரும் மதிப்பிற்குறியவர்களே, நாளை இந்த இடத்தில் புனித சிடியாவை *(Cetiya)* அமைக்க அடிக்கல் நாட்டப் போகின்றேன். நீங்கள் அனைவரும் அந்த விழாவில் கலந்து கொண்டு எம்மை ஆசிர்வதிக்க வேண்டும். ஸ்துர்பா ஸ்தாபிக்க இருக்கும் நேரத்தில் நகர மக்கள் அனைவரும் இந்த விழாவில் கூடியிருந்து நறுமணம் மிக்க மலர்கள் தூவி இந்த புத்த விழாவை சிறப்பிப்பார்கள்'

சிடியாவை ஸ்தாபிக்க இருந்த அந்த புனித தலத்தை அதி விமர்ச்சையாக அலங்கரிக்குமாறு தமது மந்திரிகளிடம் ஆணையிட்டார். அவர்களும் அந்த இடத்தை எத்தனை அழகுறச் செய்ய வேண்டுமோ அத்தனை அழகிய இடமாக மாற்றினர். அது மட்டும் இன்றி அங்கு வந்து சேரும் அனைத்து சாலைகளிலும் தோரணங்கள் மற்றும் வரவேற்பு வளைவுகள் கட்டப்பட்டு அவை அனைத்தும் நன்கு அலங்கரிக்கப்பட்டன. மறு நாள் காலை முதல் தலை முடி சீவுவோர் பலரை நான்கு வாயிலிலும் அமர வைத்திருந்தார் மன்னர். அவர்களைத் தவிற வந்தவர்கள் குளிக்க உதவும் வகைக்கான வேலையாட்கள், உடுத்திக் கொள்ள மாற்றுடைகள், வாசைன திரவியங்கள் என அனைத்தையும் செய்து வைத்திருந்தார். அந்த விழாவில் பங்கேற்க வந்தவர்கள் தலையை மொட்டையடித்துக் கொண்டு, குளித்தப் பின் புது ஆடைகள் அணிந்து கொள்ள வசதியாக இருக்குமாறே அந்த ஏற்பாட்டினை செய்து இருந்தார். விழாவில் கலந்து கொள்ள நகரில் இருந்தும், கிராமத்தில் இருந்தும் மக்கள் உற்சாகமாக வந்தனர்.

நாற்பதாயிரம் (*40,000*) மக்கள் கூடி இருந்த அந்த விழாவில்

மன்னனைச் சுற்றி அவரவர் தகுதிக்கேற்ப கொடுக்கப்பட்டு இருந்த விலை உயர்ந்த ஆடைகளை அணிந்து கொண்டு மந்திரிகள் பவனி வர, அழகு மிகு மங்கையினர் நடனம் ஆடிக் கொண்டு வர , கலைஞர்கள் இனிய இசை எழுப்பிக் கொண்டு இருந்தனர். மன்னனும் அங்கும் இங்கும் சுற்றிக் கொண்டு மக்களை உற்சாகப் படுத்திக் கொண்டு இருந்தார். ஆயிரத்து எட்டு வண்டிகள் நிறைய ஒரே கட்டாக சுற்றி வைக்கப்பட்டு இருந்த துணிகள், நான்கு பக்கங்களிலும் அடுக்கடுக்கான துணிகள், தேன், சக்கரை மூட்டைகள், வெண்ணை என பலவிதப் பொருட்களும் குவித்து வைக்கப்பட்டு இருந்தன. வெளிநாடுகளில் இருந்தும் பல பிட்குக்கள் வந்திருந்தனர். அந்த நிலையில் உள்ளூரில் இருந்து வந்திருந்த பிட்குக்களின் எண்ணிக்கையை குறைத்துக் கூறத்தான் முடியுமா? இராஜகா *(Rajagaha)* என்ற இடத்தில் இருந்து தேரா இடகுப்தா *(Indagutta)* என்பவர் தலைமையில் எண்பதாயிரம் (*80,000*) புத்த பிட்குக்களும், தம்தசேனா *(Dhammasena)*என்ற தேராவின் தலைமையில் பன்னிரண்டாயிரம் (*12,000*) புத்த பிட்குக்களும் அந்த விழா நடந்த சிடியாவிற்கு வந்திருந்தனர்.

ஜேதராம *(Jetarama)* விகாராவின் தேரா பியதாஸியின் *(Piyadassi)* தலைமையில் அறுபதாயிரம் பிட்குக்கள் (*60,000*), வேசாலியில் இருந்த மாதவனா *(Mahavana)* மடாலயத்தில் இருந்து வந்த தேரா உருபுட்டராக்கிட்தா *(Urubuddharakkhita)* என்பவர் தலைமையில் பதினெட்டாயிரம் (*18,000*) பிட்குக்கள், கோசம்பியில் *(Kosambi)* இருந்த கோசீதராமாவில் இருந்து வந்த உருதாமராக்கிட *(Urudhammarakkhita)* என்ற தேராவின் தலைமையில் முப்பதாயிரம் *(30,000)* பிட்குக்கள் வந்தனர். மற்றும் உஜ்ஜயினியின் *(Ujjeni)* தக்கினாகிரியில்

(Dakkhinagiri) இருந்து தேரா உருசம்காரக்கிட்டா *(Urusamgharakkhita)* தலைமையில் நாற்பதாயிரம் *(40,000)* பிட்குக்களும் அங்கு வந்திருந்தனர்.

புப்பப்புராவைச் *(Pupphapura)* சேர்ந்த அசோகரமாவில் இருந்து ஒரு லட்சத்தி அறுபதாயிரம் *(1,60,000)* பிட்குக்கள் தேரா மித்தின்னா *(Mittinna)* தலைமையிலும், கஷ்மீராவைச் *(Kasmira)* சேர்ந்த உத்தின்னா *(Uttinna)* தலைமையில் இரண்டு லட்சத்தி எண்பதாயிரம் *(2,80,000)* பிட்குக்களும், பல்லவபோட்காவில் *(Pallavabhogga)* இருந்து மஹாதேவா *(Mahadeva)* தலைமையில் நாலு லட்சத்து அறுபதாயிரம் *(4,60,000)* பிட்குக்களும், யோனா *(Yona)* நகரின் அலசந்தா *(Alasanda)* என்ற இடத்தில் இருந்து யோனமமதம்மராக்கித்தா *(Yonamahadhammarakkhita)* என்பவர் தலைமையில் முப்பதாயிரம் *(30,000)* பிட்குக்களும் வந்திருந்தனர். அதைத் தவிற வின்ஜஹா *(Vinjha)* மலைப் பகுதியில் வசித்து வந்த தேரா உத்தராவின் *(Uttara)* தலைமையில் அறுபதாயிரம் *(60,000)* பிட்குக்கள் வந்தனர்.

போதிமன்டா *(Bodhimanda)* விகாராவில் இருந்து தேரா சித்தகுப்தா *(Cittagutta)* முப்பதாயிரம் *(30,000)* பிட்குக்களுடன் வர, வனவாசா *(Vanavasa)* வில் இருந்து கண்டகுட்டா *(Candagutta)* தலைமையில் எண்பதாயிரம் துறவிகளும், (*80,000*) கேலச விகாரில் இருந்து *(Kelasa-vihara)* தேரா சூரியகுட்டா *(Suriyagutta)* தலைமையில் தொண்ணூற்றி ஆறாயிரம் *(96,000)* பிட்குக்களும் வந்திருக்க, அந்த தீபகற்பத்தின் நாலாபுறங்களிலும் இருந்து வந்திருந்த புத்த பிட்குக்களின் எண்ணிக்கையை குறிப்பெடுத்து வைத்திருக்கவில்லை. அந்த சம்மேளனத்தில் பங்கு பெற்ற

துறவிகளின் எண்ணிக்கை தொண்ணூற்று ஆறு கோடி *(96,00,00,000)* இருக்கும் என நம்பப்படுகின்றது.

அந்த பிட்குக்கள் தம்முடைய தகுதிக்கேற்ப ஸ்துாபாவைச் சுற்றி நின்றிருந்தனர். அந்த நாட்டு மன்னன் நடுவில் நிற்க சிறிது இடம் விட்டிருந்தனர். அங்கு வந்து நின்ற மன்னன் பெருமிதத்துடன் சுற்றி நின்றிருந்த புத்த பிட்குக்களைப் பார்த்ததும் நாலாபுறமும் இங்கும் அங்கும் சென்று அவர்களுக்கெல்லாம் பூக்கள் தந்து தனது வணக்கங்களைத் தெரிவித்தார்.

அதன் பின் அடித்தளம் அமைக்கப்படு இருந்த இடத்தில் ஒரு கயிற்றின் முனையை தங்கம் மற்றும் வெள்ளியினால் செய்திருந்த கட்டையில் கட்டி அதன் மறு முனையை ஒரு அமைச்சரை பிடித்துக் கொண்டு அந்த நாலு சுவற்றுக்குள் இருந்த இடத்தினை சுற்றி வட்டமாக கோடு போடச் சொன்னார். அந்த வட்ட அளவிற்கு ஸ்துாபாவைக் கட்ட நினைத்தார். ஆனால் அதற்குள் முக்காலத்தையும் உணர்ந்திருந்த மூத்த தேராவான சித்தத்தா *(Siddhattha)* என்பவர் வருங்காலத்தை மனதில் வைத்து அதை செய்யக் கூடாது எனத் தடுத்து நிறுத்தி விட்டு ‘ அத்தனை பெரிய ஸ்துாபியைக் கட்டினால் ஸ்துாபா கட்டிய உடனேயே அந்த நாட்டு மன்னன் மடிந்து விடுவார். மேலும் அத்தனை பெரிய ஸ்துாபா என்றைக்காவது பழுது பட்டு விட்டால் அதை சரி செய்ய இயலாது.’ என தாம் தடுத்து நிறுத்தியதின் காரணத்தை தெரிவித்தார். மற்ற புத்த சகோதரர்களும் அதை ஆமோதிக்க தேராவின் அறிவுரைப்படியே அவர் குறிப்பிட்ட அளவிலான சிடியாவை நிர்மாணிக்க கற்களை அடுக்கினார்.

எட்டு பெரிய குடுவைகளில் தங்கம், எட்டு பெரிய குடுவைகளில் வெள்ளி போன்றவற்றை வைத்து அதைச் சுற்றி வட்ட வடிவமாக ஆயிரத்தி எட்டு *(1008)* ஜாடிகளை வைத்தார். அதைச் சுற்றி வட்ட வடிவமாக ஆயிரத்தி எட்டு ஜோடி *(1008)* ஆடைகளை வைத்தார். அதன் பின் எட்டு செங்கல்களை ஒன்றுக்கு மேல் ஒன்றாக அடுக்கினார். அதற்கு முறைப்படி பூஜைகளையும் புனிதச் சடங்குகளையும் செய்யச் சொன்னார். அதன் பின் அந்த செங்கல்களில் ஒன்றை தான் எடுத்துப் போய் கிழக்குப்புறத்தில் ஏற்கனவே ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்த (*அஸ்திவாரம் போடப்பட்ட இடத்தில்*) நறுமணப் புகை சூழ்ந்த இடத்தில் அதை வைத்து முதல் அடிக்கல்லை நாட்டினார்.

அப்படி வைக்கப்பட்ட அதன் மீது மல்லிகைப் பூக்களைத் தூவிய பொழுது பூமி குலுங்கியது. அடுத்து தன்னுடைய ஏழு அமைச்சர்களை அழைத்து ஒவ்வொருவரும் பூஜிக்கப்பட்ட ஒவ்வொரு செங்கலையும் அங்கிருந்து எடுத்து வரச் சொல்லி அவற்றையும் முறைப்படியான சடங்குகள் செய்யப்பட்டு ஸ்துாபி அமைக்க இருந்த இடத்தில் வைக்குமாறு கூறினார்.

நான்கு திசைகளிலும் தேவலோகம் போன்று அமைக்கப்பட்டு இடத்தில் தங்கி அனைத்து ஆசாபாசங்களையும் துறந்திருந்த நான்கு தேராக்களை மன்னன் சந்தித்து வணக்கங்களைத் தெரிவித்தப் பின் தானங்களைத் தந்தார். அதன் பின் கிழக்குப் பகுதியில் அனைத்து ஆசாபாசங்களையும் துறந்திருந்த தேரா பீயதாஸியின் *(Piyadassi)* அருகில் சென்று அமர்ந்து கொண்டார். அவருக்கு தேரா மகிழ்சி தரும் புத்த போதனைகளை செய்தார். நாற்பதாயிரம் பேர் *(40,000)* போதனைகளை ஏற்று சமயம் மாறினர். அங்கு வந்திருந்த

மக்களில் ஆயிரம் பேர் போதனைகளைப் பெற்று அரஹன்த் ஆயினர். ஆக பதினெட்டாயிரம் *(18,000)* பிட்குக்களும், பதினாலாயிரம் *(14,000)* பிட்குணிக்களும் அங்கு துறவிகள் ஆயினர்.

எந்த நிலையிலும் நாட்டு நலனையும் மக்களின் நலனையும் வைத்திருந்து, உலகத்தினருக்கு மன மகிழ்ச்சியை கொடுத்து கொடையாளியாக விளங்கியவருடைய முத்தான போதனைகளை ஏற்றுக் கொண்டு அவருடைய மார்கத்திற்கு செல்ல எவர்தான் விரும்ப மாட்டார்?

புனிதரின் பக்தி மார்கத்தில் இணைந்த புத்த பக்தர்களின் மனதில் பேரானந்தம் பொங்கிட வழி வகுத்த கருணா மூர்த்தியின் இருபத்தி ஒன்பதாம் பாகமான ‘ஸ்துாபி ஸ்தாபனம்’ என்ற பகுதி முடிவுற்றது.

30: புனிதச் சின்ன அறை

அனைத்து பிட்குக்களையும் மெத்த மரியாதையோடு வரவேற்ற மன்னர் அவர்களிடம் கூறினார் 'இந்த சிடியா கட்டி முடிக்கப்படும் வரை நீங்கள் அனைவரும் இங்கு தங்கி இருந்து என்னிடம் பிட்சை பெற்றுக் கொள்ள வேண்டும்'. ஆனால் அதை அனைவரும் ஏற்றுக் கொள்ளவில்லை. ஒரு பகுதியினர் மட்டும் ஒரு வார காலம் அங்கு தங்கி இருந்து பிட்சை பெற்றுக் கொள்ள சம்மதித்தனர். அதனால் பதினெட்டு இடங்களில் அவர்களுக்குத் தங்கும் இடம் *(கொட்டகை)* அமைத்துத் தரப்பட அவர்கள் ஒரு வார காலம் தங்கிய பின் அவரிடம் விடை பெற்றுக் கொண்டு தம் இருப்பிடம் சென்றனர்.

நகர் முழுவதும் தண்டோரா போட்டு கட்டிடக் கலை நிபுணர்களை வரவழித்தார். ஐநூறு நிபுணர்கள் அங்கு வந்திருக்க அவர்களிடம் 'நீங்கள் ஸ்துாபியை எப்படி விரைவாக அமைப்பீர்கள்' என ஒரே குரலில் மன்னன் கேட்க ஒருவர் கூறினார் ' நுாறு ஆட்களை வைத்துக் கொண்டு ஒரு லாரி மணலை தினமும் பயன்படுத்தி ஸ்துாபியை கட்டுவேன்'. அவர் நிராகரிக்கப்பட்டார்.

அடுத்தடுத்து மற்றவர்கள் அரை லாரி மண், கால் லாரி மண், அதிலும் பாதி என்றும் இரண்டு அம்மனா *(Ammana-ஒரு அளவு)* அளவே மண்ணை உபயோகிப்பேன் என்றும் பலவாறு கூறினர். ஆனால் அவர்களில் ஒருவர் 'நான் மண்ணை முதலில் இன்னும் துாளாக்கி, சல்லடைப் போட்டு சலித்தப பின் மீண்டும் அதை அரைத்து அதில் இருந்து ஒரு அம்மனா அளவு மண்துாளை எடுத்து உபயோகித்து ஸ்துாபியைக் கட்டுவேன்' என்றார்.

தேவலோக அதிபதியான இந்திரனைப் போன்று அங்கு அமர்ந்து இருந்த மன்னர் அதை ஏற்றுக் கொண்டார். அவர் நினைத்தார் ' ஸ்துாபியை கட்டுகையில் பயன்படுத்தப்படும் மண்ணில் எந்த விதமான புல்லும் சிறு செடியும் இருக்கக் கூடாது' . இப்படியாக எண்ணியவர் அந்த நிபுணரிடம் கேட்டார் 'சரி சிடியாவை எப்படிக் கட்ட எண்ணி உள்ளாய்?' அந்த நிபுணனின் உடலில் விசாகம்மா *(Vissakamma)* வின் ஆவி வந்து புகுந்து கொணடு அவரை இப்படி செய்ய வைத்தது. ஒரு தங்கக் குடுவையில் இருந்து சிறிது நீரை கையில் ஊற்றிக் கொண்டு மீண்டும் அதை அதே குடுவையில் விட்டார். தண்ணீர் விட்ட அந்த குடுவையில் நீர்க்குமிழி தோன்ற 'இப்படித்தான் ஸ்துாபியை கட்டுவேன்' என்றார் அந்த கலைஞர். அதைக் கேட்ட மன்னன் மகிழ்ந்து போய் அவனுக்கு இரண்டாயிரம் பணம் மதிப்பிலான இரண்டு விலை உயர்ந்த ஆடைகளையும், மிக உயர்ந்த விலையுடைய செருப்பையும் கொடுத்தது மட்டும் இன்றி பன்னிரண்டாயிரம் காஹபாணாவையும் *(kahapanas)* தந்தார்.

எவருக்கும் கஷ்டம் தராமல் எப்படி அத்தனை செங்கல்களையும் இங்கு கொண்டு வருவது என யோசனை செய்து கொண்டு இருந்தார் மன்னன். அதை அறிந்து கொண்ட தேவதைகள் இரவோடு இரவாக ஒவ்ஒரு நாளைக்கும் தேவையான செங்கல்களை நான்கு வாசலிலும் கொண்டு வைத்து விட்டுச் சென்றனர். அதைக் கேட்ட மன்னன் மிகவும் மகிழ்ந்து போனான். உடனே அனைத்து வாசலிலும் பதினாறு லட்சம் காப்பணாவும் *(பணம்)*, அதே அளவு துணிகள், உணவுப் பொருட்கள், வாசைன திரவியங்கள், ஐந்து ருசி கொண்ட உணவு, மலர்கள், குடிக்க தண்ணீர், ஆகாரம் போன்ற

அனைத்தையும் வேண்டிய அளவு வைக்கச் சொல்லி விட்டு 'இந்த ஸ்துாபியைக் கட்ட உதவும் எவரும் தாம் செய்யும் வேலைக்கு கூலி பெற்றுக் கொள்ளாமல் வெறும் கையுடன் போகக் கூடாது. அவரவருக்கு என்ன வேலை செய்யத் தோன்றுகின்றதோ அதை செய்த பின் அதற்கேற்ற ஊதியத்தையும் பெற்றுக் கொண்டு செல்ல வேண்டும் ' என மன்னன் ஆணையிட்டார். அங்கிருந்த ஒரு புத்த பிட்கு அந்த ஸ்துாபாவை நிர்மாணிப்பதில் தனக்கும் பங்கு வேண்டும் என எண்ணியதால் எவருக்கும் தெரியாமல் களி மண்ணில் செய்த ஒரு கலவையை செங்கலை வைத்துக் கட்டிக் கொண்டு இருந்தவனிடம் கொடுத்து விட்டுச் சென்றார். அதற்கு கூலியை பெற்றுக் கொள்ளவில்லை. அது கண்டுபிடிக்கப்பட அதனால் ஒரு சர்ச்சை எழுந்தது.

அது மன்னனின் கவனத்தில் செல்ல அந்த வேலையாளைக் கூப்பிட்டு விசாரித்தார். அந்த வேலையாள் கூறினான் 'மன்னா ஒரு கையில் மலரும் மறு கையில் களிமண் கலவையையும் ஏந்திக் கொண்டு வந்த புத்த பிட்கு கொடுத்ததினால்தான் அதை நான் பெற்றுக் கொண்டேன்.'

அந்த மன்னனும் அதை தந்த பிட்கு யார் எனக் கண்டு பிடிக்குமாறு ஒருவரை நியமித்தார். அந்த வேலையாள் கூறிய அடயாளத்தைக் கொண்டு அந்த துறவி யார் எனத் தெரிய வந்ததும் அந்த பிட்கு செய்த வேலைக்கு எதாவது கூலி கொடுக்க எண்ணிய மன்னர் போதி மரத்தடியில் வளர்ந்திருந்த மூன்று மல்லிகை செடிகளின் கன்றை ஒரு குடுவையில் வைத்து அதை எடுத்துப் போய் அவரிடம் தந்து விடுமாறு கூறினார். அதை முதலில் ஏற்க மறுத்த பிட்குவிடம் முழு விவரத்தைக்

கூறிய பின் அதைப் பெற்றுக் கொண்டார். கோதிவாலா *(Kotthivala)* மாவட்டத்தில் இருந்த பீயாங்கலா *(Piyangalla)* என்ற இடத்தைச் சேர்ந்த ஒரு பிட்கு அங்கு செங்கல்களை கட்டிக் கொண்டு இருந்த ஒரு வேலைக்காரனின் உறவினர். அவரும் தன் பங்கிற்கான வேலைக்கு அந்த சிடியா கட்டப்பட்டுக் கொண்டு இருந்த இடத்திற்கு வந்து எவருக்கும் தெரியாமல் களி மண்ணில் செய்த செங்கலைக் கொடுத்தார். ஆனால் அவர் செய்திருந்த செங்கல் அவர்கள் உபயோகித்துக் கொண்டு இருந்ததை விட வேறு அளவில் இருந்தது. ஆகவே அது குறித்து விவாதம் எழுந்தது. மன்னனுக்கும் அது தெரிய வர, அந்த செங்கலை அடையாளம் காட்டுமாறு அவனிடம் கூறினார். ஆனால் தன்னால் அதை அடையாளம் காட்ட இயலாது என அவன் கூறினான். அந்த தேராவையாது தெரியுமா எனக் கேட்டு அவருடைய இருப்பிடத்திற்கு ஒருவரை மன்னன் அனுப்பினார். தூதுவனும் கட்டஹால பரிவனா *(Katthahala-parivena)* என்ற இடத்திற்குச் சென்று தேராவை சந்தித்தப் பின் திரும்பி வந்து அவரைப் பற்றிய விவரத்தை மன்னனிடம் தெரிவித்தான். அந்த தேரா மன்னனின் சொந்த ஊருக்குக் கிளம்பிச் செல்ல இருப்பது தெரிய வர அவருக்கு ஆயிரம் பணம் மதிப்பிலான இரண்டு ஆடைகளையும், பணம், வாசைன திரவியம், சக்கரை , சாமனாக்கள் உபயோகிக்கும் பிற பொருட்கள் போன்றவற்றையும் கொடுத்தார்.

அது மட்டும் அல்லாது அந்த தேராவுடன் தானும் கிளம்பிச் சென்றார். பீயான்கலா துாரத்தே தெரிந்தது. ஒரு மர நிழலில் அந்த தேராவை அமர வைத்து இனிப்பு நீர் ஆகாரம் தந்து அவருடைய கால்களை மணம் மிக்க எண்ணைக் கொண்டு வருடி விட்டார். 'என்னுடைய வீட்டிற்கு விஜயம் செய்யும்

தேராவிற்கு நான் என்ன கொடுப்பேனோ அவை அனைத்தையும் உங்களுக்குத் தந்து இருக்கின்றேன். அது போல என் மகனுக்கும் இரண்டு உடைகள் தந்து உள்ளேன். அதையும் உங்களிடமே தந்து விட்டேன்’. அவற்றைப் பெற்றுக் கொண்ட தேரா அந்த மன்னனிடம் இருந்து விடை பெற்றுக் கொண்டு கிளம்பிச் சென்றார்.

அங்கு ஸ்துாபாவை கட்ட தன்னால் ஆன உதவிகள் செய்தவர்கள் புத்த சமயத்தை ஏற்று சொர்கத்திற்குச் சென்றனர். எவனொருவன் தான் செய்யும் செயல் தன்னை சொர்கத்தை அடைய வைக்கும் என்ற நம்பிக்கையை வைத்திருக்கின்றானோ அவன் நிச்சயமாக தன்னால் முடிந்த அளவு சேவையை ஸ்துாபாவிற்கு செய்வான்.

ஸ்துாபா நிர்மாணித்த இடத்தில் வேலை செய்து வந்த இரண்டு பெண்கள் மேலுலகில் முப்பத்தி மூன்று தேவதைகளில் ஒருவராகப் பிறந்திருந்தனர். அந்த இருவருக்கும் தாம் செய்த காரியம் நினைவுக்கு வந்ததும் பூக்களை எடுத்துக் கொண்டு ஸ்துாபிக்கு தமது வணக்கங்களைத் தர அங்கு வந்தனர். அதே நேரத்தில் படிவாங்கா *(Bhātivanka)* என்ற இடத்தில் வசித்திருந்த மகா தேராவான மஹாசிவா *(Mahasiva)* என்பவர் அன்று இரவு தாம் ஸ்துாபி அமைந்துள்ள இடத்திற்குச் சென்று வணங்க வேண்டும் என நினைத்தபடி அங்கு வந்தவர், அந்த இரு பெண்களையும் பார்த்தார். அவர்களுக்குத் தெரியாமல் அவர்கள் எப்படி தம்முடைய மரியாதையை ஸ்துாபிக்கு செலுத்தினார்கள் என்பதை கவனித்தப் பிறகு புறப்பட்ட அவர்களிடம் ‘ உங்களுடைய தேஜஸ்ஸினால் இந்த தீபகற்பமே ஜொலிக்கின்றதே. நீங்கள் தேவதைகளாக பிறக்க

என்ன காரியம் செய்தீர்கள்?' என்று கேட்டார். அவர்களும் அந்த ஸ்துாபி நிர்மாணத்தில் ஆற்றிய பங்கிற்காக தாடகாதா தம்மை சொர்கத்திற்கு அனுப்பி உள்ளார் எனக் கூறினார்.

ஸ்துாபாவின் மூன்று அடுக்குக் கட்டிடங்கள் முடிவடைந்ததும் தம்முடைய சக்தியினால் அந்த தேரா அதை பூமியில் புதைந்து போகச் செய்து பூமியின் மேற் பரப்பில் அதன் தலை தெரியுமாறு செய்தார். அப்படி ஒன்பது முறை கட்டிய அனைத்தும் புமிக்குள் மூழ்கிக் கொண்டே இருந்ததைக் கண்ட மன்னன் பிட்குக்களின் கூட்டத்தைக் கூட்ட எண்பதாயிரம் *(80,000)* பிட்குக்கள் அங்கு வந்தனர். அவர்களை நன்கு உபசரித்து தானங்கள் வழங்கியப் பின் அந்த பிரச்சனைக் குறித்து கவலைத் தெரிவித்த மன்னனிடம் அவர்கள் கூறினர் ' மன்னா, அந்த ஸ்துாபி பிற்காலத்தில் பூமிக்குள் புதைந்து போகக் கூடாது என்பதினால்தான் பல சித்திகளைப் பெற்ற புத்த பிட்கு முதலிலேயே அந்த அளவு புதைக்க வைத்தார். இனி அந்த பிரச்சனையும் வராது. நீ முதலில் முடிவு செய்திருந்தபடியே கட்டிட வேலையைத் துவக்கி கட்டி முடி' என்றனர்.

அதைக் கேட்டு மனம் மகிழ்ந்த மன்னன் மீண்டும் ஸ்துாபி கட்டும் வேலைகளைத் செய்யத் துவக்கினார். பத்து மாடிக் கட்டிடம் கட்ட பத்து கோடி *(10,00,00,000)* செங்கல்கள் பயன் படுத்தப்பட்டன. சாமனாக்களான உத்தரா மற்றும் சுமன்னாவை *(Uttara and Sumana)* அந்த புத்த சகோதரர்கள் புனிதச் சின்னம் வைக்கும் அறைக்கு அழகூட்ட குறிப்பிட்ட வண்ண பாறைகளை கொண்டு வருமாறு அனுப்ப, அவர்களும் வடக்கு குரு *(Northern Kurus)* என்ற இடத்தை அடைந்து சூரியன்

போல் ஜொலித்த எட்டு அங்குல தடிமனும் எண்பது கியூபிட் அளவு நீள அகலத்தில் இருந்த ஆறு வண்ண பாறையை எடுத்து வந்தனர். அந்த ஆறு பாறைகளையும் ஒரு பெட்டி போன்ற அமைப்பில் , ஒவ்ஒன்றும் ஒரு பக்கம் என நான்கு பக்கத்திற்கு நான்கும், தரைக்கு கீழ் மற்றும் மூடி போல இருக்குமாறு மற்ற இரண்டையும் அமைத்தனர்.

அந்த சிறு அறையில் அற்புதமான நவ மணிகளினால் செய்யப்பட்டு இருந்த சிறிய போதி மரத்தை மன்னன் வைத்தார். அந்த பதினெட்டு கியூபிட் அடி உயர மரத்தில் ஐந்து கிளைகள் இருந்தன. நீலக்கல் மீது வைக்கப்பட்டிருந்த அதன் வேர்கள் பவழத்தினாலும், கிளைகள் வெள்ளியினாலும், பழங்கள் தங்கத்தினாலும், இலைகள் பல்வேறு நவரத்தினங்களினாலும் செய்யப்பட்டு இருந்தன. அந்த மரத்தின் தண்டை சுற்றி அற்புதமான வேலையமைப்பில் எட்டு விதமான பூக்கள், பிராணிகள் போன்றவை அலங்கரித்தன. மேற் கூறையில் இருந்து தங்க, பவழ மணியோசை தரும் சிறு மணிகள் அங்கும் இங்கும் தொங்க விடப்பட்டு இருந்தன. ஒன்பது லட்சப் *(9,00,000)* பணம் மதிப்பில் முத்துச்சரங்கள் தொங்க விடப்பட்டு இருந்தன. சந்திர சூரியன் போன்றவைகளும், நட்சத்திரங்களும் பல நவரத்தின மணிகளினால் செய்யப்பட்டு மேற் கூரையில் வைக்கப்பட்டிருந்தன. ஆயிரத்தி எட்டு வண்ணக் கற்களால் ஆன மாலைகளும் தொங்க விடப்பட்டு இருந்தன.

பல அடுக்குகளாக வண்ணவண்ண கற்களினால் செய்யப்பட்டிருந்த மலர்களையும், நான்கு வித மணம் கொடுத்த திரவியங்களையும் அந்த குடுவைகளில் நிறப்பி வைத்திருந்தனர். அவற்றில் சில காலியாகவும்

வைக்கப்பட்டு இருந்தன. அவை அனைத்தும் போதி மரத்தின் அடிப்புறத்தை அலங்கரித்தபடி வைக்கப்பட்டு இருந்தன. ஒரு கோடி செலவில் ஒரு அற்புதமான ஆசனத்தில் அமர்ந்த நிலையில் தங்கத்தில் புத்தர் சிலை செய்யப்பட்டிருக்க அவரைச் சுற்றி இருந்தவர்களுடைய உருவங்கள் பல்வேறு வண்ணக் கற்களில் வடிவமைக்கப்பட்டிருந்தன. மகா பிரும்மா *(Mahabrahma)* அவர் தலை மீது வெண் சாமரக் குடையைப் படித்துக் கொண்டு இருக்க, தேவர்களின் தலைவரான சாக்கா *(Sakka)* ஒரு வித கடல் சங்கான விஜயுத்தரா *(Vijayuttara)* என்பதினால் தண்ணீர் ஊற்றி அந்த இடத்தை புனிதப்படுத்தும் சடங்கை செய்து கொண்டிருக்க, பன்காசிக்கா *(Pancasikha)* குழல் ஊதிக் கொண்டிருக்க, காலநாகா *(Kalanaga)* தன் பணிப் பெண்களுடன் நடனமாடிக் கொண்டிருக்க, ஆயிரம் கைகளைக் கொண்ட மாரா *(Mara)* யானைகளையும் படையினரையும் அழைத்து வந்து கொண்டிருக்கும் விதத்தில் அனைத்து சிற்பங்களும் நவரத்தின மணிகளினால் செய்யப்பட்டு வைக்கப்பட்டிருந்தன.

ஏழு வாரங்களாக நடைபெற்றிருந்த அனைத்து நிகழ்ச்சிகளையும் அந்த புனித அறைக்குள் இங்கும் அங்குமாக வண்ணமயமாக சித்தரித்து வைக்குமாறு மன்னர் ஆணையிட்டு இருந்தார். தேவ லோகத்தில் இருந்து வந்திருந்த பிரும்மா இறை வணக்கத்துடன் ஆரம்பித்து போதனைகளை போதிக்கத் துவங்கிய சடங்கில் இருந்து, யாசாக்கள் *(Yasa)* புத்த சமயத்தில் இணைந்த நிகழ்ச்சிகள், பத்தவாக்கியாவிற்கு *(Bhaddavaggiyas)* பப்பஜ்ஜா உபதேசம் செய்தது, ஜடிலாக்களை அடக்கியது, பிம்பிசாராவின் வருகை, ராஜகாஹா *(Rajagaha)* வந்தது, வேலுவனாவை அடைந்தது, எண்பது சிஷ்யர்கள் , கபிலவாத்து *(Kapilavatthu)* விஜயம்,

அந்த இடத்தில் இரத்தினங்கள் பதித்த பாதை தோன்றிய மாய அனுபவம், ரஹுலா மற்றும் நந்தா பெற்ற பப்பஜ்ஜா உபதேசம், ஜேதவனாவை அடைந்தது, மாம்பழ மரத்தடியில் ஏற்பட்ட மாயாஜால அனுபவம், தேவலோகத்தில் பெற்ற அறிவுறைகள், தேவர்கள் பூமிக்கு இறங்கி வந்த அதிசயம், தேராவுடன் நடத்திய விவாத வைபவம், மஹாசமாயசுத்தன்தா *(Mahasamayasuttanta)*, ரஹுலாவிற்கு செய்த அறிவுறை, மஹாமங்கலசுட்டா *(Mahamangalasutta)* , தன் மீது ஏவி விடப்பட்ட யானை தனபாலனை *(Dhanapala)* புத்தர் அடக்கியது, யக்கா அலவாக்காவை *(Alavaka)* அடக்கியது, நாக மன்னன் அபலாலாவையும் அங்குலி மாலாவின் *(Anguli-mala)* வழிப்பறக் கொள்ளைக்காரரையும் ஒடுக்கியது, பரனயகாவை *(Parayanakas)* சந்தித்தது, புத்தர் நிம்பன்னா அடைந்தது, சுகம்மதாவா *(sukaramaddava)* என்பவர் கொண்டு வந்திருந்த பன்றி மாமிசத்தை புத்தர் பெற்றுக் கொண்டது , மல்லா புக்குஸ்ஸா என்பவர் கொண்டு வந்து புத்தருக்கு அணிவித்த இரண்டு ஆடைகளின் கதை, பாசி படிந்த ககுன்தா *(Kakuttha)* ஏரியில் இருந்து புத்தர் குடிக்க தண்ணீர் எடுத்த பொழுது அது பளிங்கு போல ஆன கதை, நிப்பன்னா காட்சி, தேவர்கள் வந்து நின்றது , தேரா வரும் வரை புத்தருடைய உடல் எரிக்கப்படாமல் இருந்த காட்சிகள், மஹாகாசப்பா வந்து நின்று கால்களை மூடிய துணியை விலக்கி புத்தருடைய கால்களைத் தொட்டு வணங்கிய பின் தானாகவே சிதை எரியத் துவங்கிய காட்சி, தேவலோகத்தில் இருந்து *(ஆகாயம்)* விழுந்த தண்ணீர் எரிந்து கொண்டு இருந்த சிதையின் நெருப்பை அணைத்த காட்சி, சிதையில் இருந்து எடுத்த புத்தருடைய புனித சின்னங்களை பெற்றுக் கொள்ள ஏற்பட்ட விவாதத்தைத் தீர்த்து வைக்க பிராமணர் தோனா *(Dona)* என்பவர் அவற்றை எட்டு பாகங்களாகப் பிரித்த

CLICK HERE TO VIEW ENGLISH VERSION

காட்சி, புத்தருடைய வாழ்க்கையை குறிக்கும் ஜாடகா கதை காட்சிகள் போன்ற அனைத்தையும் அங்கு சிற்பங்களாகப் பதிக்குமாறு மன்னன் ஆணையிட்டார்.

சிடியாவின் நான்கு வாசல்களிலும் உலகைக் காத்து நின்ற நான்கு மன்னர்களான தத்தரத்தா, விருல்ஹா, விருப்பாக்கா மற்றும் வேசவனா *(Dhataratha,Virulha,Virupakkha,Vessavana)* போன்றோர் நின்றிருக்க அவர்களுடன் முப்பத்தி மூன்று கடவுட்கள், தேவதைகள், யக்காக்களின் இருபத்தி எட்டு தலைவர்கள், கைக் கூப்பி நின்று கொண்டிருந்த பிற தேவதைகள் தங்களுடைய கைகளில் மலர் கொத்துக்கள் நிறப்பி வைக்கப்பட்ட குடுவைகள், கண்ணாடிகள், தாமரை மலர்கள், மணமிக்க வாசனை திரவியங்கள் போன்றவற்றையும் ஏந்தி நின்றிருந்த காட்சிகள அமைக்கப்பட, பலவிதமான கற்களினால் அலங்கரிக்கப்பட்ட அலங்கார வளைவுகள், அவற்றில் பல இடங்களில் புத்தரின் புனித சின்னமான தம்மக்கா *(dhammacakkas)* நான்கு மூலைகளிலும் முத்துக்கள், தங்க நகைகள், வைரங்கள் என அனைத்தும் பதிக்கப்பட்டு இருந்த துாண்கள் போன்றவையும் புனித சின்ன அறைக்குச் செல்லும் வழியை அலங்கரித்தன.

ஆறு சித்திக்களையும் குறைவின்றி பெற்றிருந்த தேரா இந்தகுட்டா *(Indagutta)* தலைமையில் அவை அமைக்கப்பட்டன. மன்னனுடைய திறமை , தேவதைகள் மற்றும் தேராக்கள் அளித்த அபூர்வ சக்திகள் போன்றவற்றினால் அந்த ஏற்பாடுகள் அனைத்தும் எந்த விதமான குழப்பமும் இன்றி செய்து முடிக்கப்பட்டிருந்தன.

இருண்ட வாழ்வில் ஒளி தந்து, மக்களுடைய துயர் தீர்க்க

தன்னையே அதற்கு அர்பணித்த ஒப்புயர்வில்லாத மகான் புத்தரை போற்றி வணங்கி அவருடைய புனிதச் சின்னங்களை உலகம் முழுவதும் உள்ள மனித குல மேம்பாட்டிற்காக ஒரு இடத்தில் நிர்மாணிக்க தன்னுடைய வாழ்நாளிலேயே அதற்குத் தேவையான செயல்களை செய்ய நம்பிக்கையுடன் செயல்பட்டு, அதை செய்தும் முடித்தவர் மட்டுமே உண்மையான அறிவாளியாவார்.

புனிதரின் பக்தி மார்கத்தில் இணைந்த புத்த பக்தர்களின் மனதில் பேரானந்தம் பொங்கிட வழி வகுத்த கருணா மூர்த்தியின் முப்பதாம் பாகமான 'புனிதச் சின்ன அறை' என்ற பகுதி முடிவுற்றது.

CLICK HERE TO VIEW ENGLISH VERSION

31 : புனித சின்ன ஸ்தாபனம்

புனித சின்னத்தை ஸ்தாபனம் செய்ய அதற்கான அறை தயார் ஆனதும் மன்னன் புத்த பிட்குக்களின் சபையைக் கூட்டினார். 'மறு நாள் தாம் புனித சின்னத்தை புதியதாகக் கட்டியுள்ள அறையில் ஸ்தாபிக்கப் போவதாகவும், ஆகவே அந்த புனித சின்னங்களைக் கொண்டு வந்து தருமாறு கேட்பதற்காகவே அவர்களை அழைத்துள்ளதாகவும்' மன்னன் தெரிவித்தார். புத்த பிட்குக்களிடம் அந்த வேண்டுகோளை விடுத்ததும் மன்னர் தன் இடத்திற்குக் கிளம்பிச் சென்று விட்டார். புத்த பிட்குக்களும் அனைத்து சித்திகளையும் பெற்றிருந்தவரும், பூஜா பரிவனாவில் *(Puja-parivena)* திறமைப் பெற்றிருந்தவருடான சோனுட்டரா *(Sonuttara)* என்ற பிட்குவிடம் அந்த பொறுப்பை ஒப்படைத்தனர். அவருடைய வயது அப்பொழுது பதினாறு.

முன்னர் ஒரு முறை உலக மக்களின் விமோசனத்திற்காக புத்தர் அங்கும் இங்கும் அலைந்து கொண்டு போதித்தபடி இருந்த பொழுது கங்கை கரை நதிப்புறத்தில் நன்துதாரா *(Nanduttara)* என்ற ஒரு பிராமணரை சந்தித்தார். அந்த பிராமணர் சம்புத்தருடன் நெருக்கமாக ஆன பின் அவரை அழைத்துக் கொண்டு கங்கையும் யமுனையும் இணைந்த பகுதியான பிரயாகை *(Payaga)* என்ற இடத்திற்குச் சென்று கப்பல் ஒன்றில் ஏறினார். அப்பொழுது அவர்களுடன் இருந்தவர்களில் அனைத்து சக்திகளையும் பெற்றிருந்த தேரா பட்டாஜி *(Bhaddaji)* என்பவர் கங்கை நதியின் சற்று தொலைவில் தென்பட்ட சுழல் நீர் பகுதியைக் காட்டி ' நான் முன் பிறவியில் மஹாபாநதா *(Mahapanada)* என்ற மன்னனாக

இருந்த நான் வசித்திருந்த இருபத்தி ஐந்து யோசனை அளவு விரிந்திருந்த தங்க மாளிகை இந்த சுழல் உள்ள பகுதியில் மூழ்கி விட்டது. அது முதல் கங்கை நதியின் தண்ணீர் இதன் மீது ஓடும் பொழுது சுழலாக மாறி விடுகின்றது' எனக் கூற மற்ற பிட்குக்கள் அதை நம்ப மறுத்தனர்.

அவர்கள் சம்புத்தரிடம் சென்று அது குறித்துக் கேட்க அவர் அந்த தேராவிடம் 'அவர்களுடைய ஐயத்தைப் போக்கு' என்றார். அதனால் அந்த தேரா முதலில் தன்னுடைய சக்தியை அவர்களுக்கு எடுத்துக் காட்ட வானத்தின் வழியே பறந்து சென்று ஏழு தலா *(seven talas)* தொலைவில் இருந்த பிரும்ம லோகத்தை *(Brahma-world)* அடைந்தார். அங்கிருந்த பன்னிரண்டு யோசனை அளவு இருந்த துஸ ஸ்துாபா (*Dussa-thupa*) வை தன்னுடைய இரு கைகளிலும் ஏந்தி வந்து அதை வானத்தில் இருந்தே மற்றவர்களுக்குக் காட்டினார்.

அதன் பின் அங்கிருந்து நேராக கங்கை நதிக்குள் மாளிகை இருந்த இடத்தில் குதித்து மூழ்கி, தாம் கூறிய மாளிகையின் கலசத்தை தன் கைகளால் பிடித்துக் கொண்டு அதை அப்படியே மேலே இழுத்து வந்தார். அதைக் கண்ட பிராமணர் நந்துத்தரா ஆச்சரியம் அடைந்துக் கூறினார் ' மற்றவர்களிடம் உள்ள புனிதச் சின்னங்களை எடுத்துக் கொண்டு வரும் வகைக்கான சக்தி எனக்குக் கிடைக்கக் கூடாதா ?' அதனால் அவர் விரும்பியது போல அவருடைய அடுத்தப் பிறவியில் சோனுட்டராகப் பிறந்திருந்தார். அவருக்கு பதினாறு வயது ஆன பொழுதுதான் அவரிடம் புனித சின்னங்களைக் கொண்டு வரும் பொறுப்பைத் தந்திருந்தனர். அவர் 'அந்த சின்னங்களை எப்படி பெற்றுக் கொண்டு

வருவது?' என சகோதர பிட்குக்களிடம் கேட்ட பொழுது அவர்கள் இப்படியாகக் கூறினர் :- "மரணத்தின் விளிம்பில் இருந்த புத்தபிரான் தன்னுடைய புனிதச் சின்னங்கள் உலக மக்களின் நன்மைக்கு வழிகோல உள்ளது என்பதை அறிந்து கொண்டிருந்ததினால் தேவலோக அதிபதியான சாக்காவை அழைத்து 'தான் மரணம் அடைந்தப் பின் தன்னுடைய சின்னங்களை *(எலும்பு)* எடுத்து அவை ஒவ்ஒன்றும் எட்டு டோனாக்களாக *(Dona என்பது ஒரு குறிப்பிட்ட அளவு)* பிரித்து வைக்கப்பட வேண்டும எனவும், அவற்றில் ஒரு டோனா அளவு சின்னத்தை ராமகாமாவில் *(Ramagama)* உள்ள சாக்கியா *(Sakya)* மன்னனுடைய உறவினர்களான கோலியாக்கள் *(Koliyas)* என்ற மலை வாசி மக்கள் எடுத்துப் போய் போற்றி வணங்கி பாதுகாத்து வருவார்கள் எனவும் ஆனால் பின்னர் அவை ஸ்ரீலங்காவில் நிர்மாணிக்க இருக்கும் பெரிய ஸ்துாபியின் புனிதச் சின்ன அறையில் வைக்கபபடும் எனவும், தன்னுடைய மரணத்திற்குப் பிறகு முதலாம் ஆலோசனைக்கு தலைமை தாங்க இருக்கும் சாமனாக்களின் தலைவரான தேரா மஹாகாசப்பா என்பவர் அந்த ஏழு டோனா சின்னங்களையும் எடுத்துப் போய் பாதுகாப்பாக மன்னன் அஜாதசட்டுவின் தலைநகரமான ராஜகாஹாவில் *(Rajagaha)* வைத்திருப்பாா எனவும், பின்னர் அதைக் காண இருக்கும் மன்னன் தம்மகோசா எட்டாவது டோனா அளவு சின்னத்தையும் எடுத்துக் கொண்டு வர முயல்வான எனவும், அதை மற்ற பிட்குக்கள் தடுத்து விடுவார்கள். அதற்கு ஒரு காரணம் உள்ளது' எனவும் கூறி இருந்தார்.

புனிதர் மறைந்தப் பின் காலம் கடந்தது. ராஜகாமாவில் கட்டப்பட்ட ஸ்துாபியில் இருந்த அவருடைய புனிதச் சின்னம்

கங்கையின் நதிப் பெருக்கினால் அது வைக்கப்பட்டிருந்த கலசத்துடன் அங்கிருந்து மிதந்து சென்று விட்டது. கங்கை இரண்டாகப் பிரியும் இடத்திற்கு அது போனதும் ஜொலிக்கும் அதை சுற்றி பலவித நவரத்தின மணிகளும் வந்து மிதந்தன.

அதைப் பார்த்த நாகர்கள் அந்த செய்தியை தம் கால நாகமான *(Kalanaga)* மன்னன் மஞ்சிரேகாவிடம் *(Manjerika)* சென்று கூற, அவர் பத்தாயிரம் *(10,000)* நாகங்களை தம்முடன் அழைத்துக் கொண்டு போய் அதை எடுத்து வந்து சிறிய கோவில் கட்டி, ஸ்துாபாவையும் எழுப்பி அதில் வைத்து பூஜித்து வருகின்றார். அது மிகுந்த பாதுகாப்பில் வைக்கப்பட்டு உள்ளது. அதைதான் நீ போய் எடுத்து வந்து மன்னனிடம் தர வேண்டும். நாளை நடைபெற உள்ள புனித சின்ன ஸ்தாபனத்தில் அதை மன்னர் அந்த அறையில் வைப்பார் " என்றனர்.

அதைக் கேட்டவர் 'சரி, நான் போய் அதை எடுத்து வருகின்றேன்' என்று கூறிய பின் அறைக்குத் திரும்பியதும், மறு நாள் நடக்க இருந்த விழாவிற்கு புனிதச் சின்னத்தைக் எப்படிக் கொண்டு வரலாம் என சிந்தித்தபடி அங்கு செல்ல சரியான சமயத்தைத் தேர்ந்தெடுக்கக் காத்திருந்தார். மறுநாள் புனிதச் சின்னங்கள் அந்த புனித அறையில் ஸ்தாபிக்கப்பட உள்ளது என்ற செய்தியை நகர் முழுவதும் தண்டோரா போட்டு அறிவித்து விடுமாறு மன்னன் கூறி இருந்தார். நகரெங்கும் விழாக் கோலத்தில் அலங்கரிக்கப்பட்டு இருந்தது. தேவலோக அதிபதியான சாக்காவும் விசாகம்மாவை அழைத்து ஸ்ரீலங்கா முழுவதும் அந்த விழாக் கோலத்திற்கு என்ன தேவையோ அதை செய்து தருமாறு அனுப்பினார்.

அன்று மாலை ஒரு மன்னனுடைய கடமைகளை சரி வரச் செய்து விட்ட திருப்தியுடன், மனதில் பெரும் மகிழ்ச்சியுடன், தன்னுடன் படை சூழ, நாட்டிய மங்கைகள் நடனமாடிக் கொண்டு வர, யானை, குதிரைப் படைகள் அணிவகுத்து வர குதிரைகள் பூட்டப்பட்ட ரதத்தில் அமர்ந்து கொண்டு அழகிய ஆபரணங்களை அணிந்து கொண்டு வந்த மன்னன், அந்த விழா நடக்க இருந்த இடமான மஹாமேஹ பூங்காவை அடைந்தார். அவரை எதிர் கொண்டு அழைக்கும் விதத்தில் பட்டத்து யானை கண்டுலா நின்றிருக்க, வெண்சாமரக் குடை விரிக்கப்பட்டு அதன் கீழ் தங்கக் குடுவை வைக்கப்பட்டிருந்த இடத்தை மன்னன் அடைந்த பொழுது பல்வேறு இசைக் கலைஞர்கள் இசை இசைத்தனர். வாத்திய மேள தாளங்கள் காதைத் துளைக்கும் விதத்தில் ஒலி எழுப்பின.

சோனுட்டரா அந்த சப்தங்களைக் கேட்டார். இனியும் காலம் கடத்தக் கூடாது என்ற முடிவுடன் உடனே கிளம்பிச் சென்று நாக மன்னனை சந்தித்தார். அவரை அன்புடன் வரவேற்று அமரச் சொல்லி தனது பணிவான வணக்கங்களை அந்த துறவிக்குச் செய்த பின் அவர் அங்கு வந்ததின் காரணம் குறித்து நாக மன்னன் கேட்டார்.

அவரும் தான் வந்ததிற்கான காரணம் அனைத்தையும் மறைக்காமல் கூறினார். ' உங்களிடம் உள்ள புத்தரின் புனிதச் சின்னத்தை ஸ்துாபாவில் வைக்க வேண்டும் என குருநாதர் விரும்பி உள்ளதினால், உங்களிடம் இருந்து அதை பெற்றுக் கொள்ள வந்துள்ளேன். மறுக்காமல் என்னிடம் அதை தர வேண்டும்' என்றார். அதைக் கேட்ட நாக மன்னன் கவலை கொணடு மனதில் நினைத்தார் 'சின்னம் வைக்கப்பட்டு உள்ள

இடத்தைப் இந்த துறவி பார்த்து விட்டால எப்படியாவது அதை எடுத்துப் போய் விடுவார். அவரிடம் நான் போரிட்டு வெற்றி பெற முடியாது. ஆகவே அதை வேறு எங்காவது எடுத்துச் சென்று ஒழித்து வைத்து விட வேண்டும்'. இப்படியாக எண்ணியவர் தன்னுடைய மருமகன் வசுலதத்தவிடம் *(Vasuladatta)* இரகசியமாக சைகைக் காட்ட ,அந்த நாகம் அந்த சின்னம் வைக்கப்பட்டு இருந்த இடத்திற்குப் போய் குடுவையுடன் இருந்த புனித சின்னத்தை அப்படியே முழுங்கி வயிற்றில் வைத்துக் கொண்டு விட்டது.

வயிற்றில் வைத்துக் கொண்ட சின்னத்துடன் கூடிய குடுவையை இன்று மேரு *(Meru)* என அழைக்கப்படும் அன்றைய பெயரான சினிரு என்ற மலையடிவாரத்தில் *(Mount Sineru)* சென்று ஒரு யோசனை வட்டமும், முன்னூறு யோசனை நீளமும் கொண்ட தன் உடலை கயறு போல சுற்றி வைத்துக் கொண்டு படுத்துக் கொண்டது. அது மட்டும் அல்லாது தனது சக்தியினால் ஆயிரக்கணக்கான முகத்தை அமைத்துக் கொள்ள அந்த முகங்களின் வாயில் இருந்து நெருப்பும், புகையும் வெளி வந்தன. தன்னைச் சற்றி அரண் போல் பல்லாயிரக்கணக்கான நாகங்களையும் படுக்கச் சொல்லி இருந்தது. அந்த காட்சியைக் கண்ட தேவர்களும் மற்ற நாகர்களும், நடக்க உள்ள யுத்தத்தில் வெற்றி அடையப் போகின்றவர் யார் என்பதைப் பார்க்க ஆவலுடன் அங்கு காத்திருந்தனர்.

அந்த புனிதச் சின்னங்களை தன்னுடைய மருமகன் எடுத்துக் கொண்டு போய் ஒழிந்து வைத்து விட்டான் என்பதை தெரிந்து கொண்டவுடன் அவர் தேராவிடம் 'என்னிடம் எந்த

புனிதச் சின்னமும் இல்லையே' எனக் கூறிய பின் தேராவை தான் கட்டி இருந்த ஆலயத்திற்கு அழைத்துப் போய் காட்டியவர் மேலும் கூறினர் ' மதிப்பிற்குறிய பிட்கு அவர்களே இந்த சிடியாவில் அற்புதமான நவரத்தின மணிகள்தான் வைக்கப்பட்டு உள்ளது. ஸ்ரீலங்காவின் பல இடங்களில் மேல் மாடிக்குப் போகும் படிக்கட்டின் நுழை வாயிலில் உள்ள வட்டவடிவமான சிற்பக் கலை நிறைந்த சந்திரக் கற்களின் அழகிற்கு இணையாக வேறு எதுவும் அங்கு கிடையாது. ஆனால் அவைகளும் *(சந்திரன் கல்)* இந்த இரத்தின மணிகளின் அழகுக்கு ஈடாகாது. ஆகவே மதிப்பிற்குறிய பிட்கு அவர்களே இப்படிப்பட்ட பெருமையான சின்னத்தை எடுத்துக் கொண்டு போய் இதற்கு ஈடில்லாத இடத்தில் வைக்க நினைப்பது உங்களுடைய தகுதியை குறைக்காதா ?' என்றார்.



சந்திரக் கல் (Moon Stone)

அதற்கு அந்த தேரா 'உங்களுக்கு உண்மையை ஏற்றுக் கொள்ளும் மனப் பக்குவம் இல்லை. ஆனால் உண்மையை முற்றிலும் நிறைந்துள்ள இடத்திற்கு அவற்றை எடுத்துச் செல்வது என்னை பொறுத்தவரை முற்றிலும் நியாயமானதே. குடும்ப வாழ்வை விட்டு விலகி உலக நன்மைக்காக எந்த இடத்தில் தாடகாக்கள்

எழுந்தருளியுள்ளனரோ அந்த இடத்தில் அவர்களது புனித சின்னத்தை அந்த நாட்டு மன்னன் ஸ்தாபிக்க உள்ளார் என்பதினால் அவற்றை உடனே என்னிடம் கொடுத்து விடுங்கள்' என பதில் கூறினார்.

நாகா மன்னன் 'அந்த புனித சின்னம் இங்கிருப்பதாக நீங்கள் நினைத்தால் தாராளமாக அதை கண்டு பிடித்து எடுத்துச் செல்லுங்கள்' எனத் தேராவிடம் கூறினார். மும்முறை இருவரும் தாம் கூறியதையே திருப்பித் திருப்பிக் கூற, வேண்டுகோளுக்கு எந்த விதப் பலனும் கிடைக்கப் போவதில்லை என்பதை உணர்ந்த தேரா அந்த இடத்தில் நின்றிருந்தவாறே தன்னுடைய கையை எவருடைய கண்களுக்கும் புலப்படாத அளவு மெல்லியதாக்கி நீட்டிக் கொண்டே போய் அந்த மன்னனுடைய மருமகன் தொண்டையில் கை விட்டு சின்னத்துடன் இருந்த குடுவையை வெளியே எடுத்தப் பின் 'நாகா, நீ இங்கேயே இரு' எனக் கூறி விட்டு பூமிக்கு மேல் பகுதியை அடைந்து தன்னுடைய அறைக்குத் திரும்பினார்.

அவர் சென்றப் பின் தாம் அவரை நன்றாக ஏமாற்றி அனுப்பி விட்டோம் என இறுமாப்புடன் எண்ணிய நாகா மன்னன் தன்னுடைய மருமகனை குடுவையுடன் இருந்த சின்னத்தை எடுத்துக் கொண்டு அங்கு திரும்பி வரச் சொன்னார். ஆனால் தன்னுடைய வயிற்றுக்குள் அது இல்லை எனத் தெரிந்து கொண்ட மருமகன் அழுது புலம்பி மன்னரிடம் சென்று அது குறித்துக் கூறினான். நாம் ஏமாற்றப் போய் நாமே ஏமாற்றப்பட்டு விட்டோமே என நாக மன்னனும் மற்ற நாகர்களும் கோபத்தில் கத்திக் கொண்டும், புலம்பிக் கொண்டும் இருக்க, மஹாமேஹ பூங்காவிலோ தேவர்களும்,

மற்ற கடவுட்களும் ஒன்று சேர்ந்து பெரும் மகிழ்சியுடன் தேராவின் திறமையை பாராட்டிக் கொண்டு அந்த புனித சின்னத்தை வைத்திருந்த இடத்திற்கு அந்த தேராவை ஊர்வலமாக அழைத்துச் சென்றனர்.

உடனே நாகங்களும் புத்த சகோதரர்களிடம் ஓடிச் சென்று தாம் எப்படி வஞ்சிக்கப் பட்டோம் என்ற தம் துயரத்தைத் தெரிவிக்க, அவர்களும் நாகங்கள் மீது இரக்கப்பட்டு அந்த புனித சின்னத்தில் சிறிதளவு அவர்களுக்குக் கொடுக்க, ஆனந்தத்துடன் அவற்றை பெற்றுக் கொண்டு சென்ற நாகங்கள் அவர்களுடைய மகிழ்ச்சியை தெரிவிக்க அற்புதமான பல்வேறு பரிசுப் பொருட்களை கடலில் இருந்து கொண்டு வந்து தந்தனர்.

தங்கம் மற்றும் அற்புதமான பலவிதமான நகைகளை ஒரு பேழையில் *(Casket- நகைப் பெட்டி போன்றது)* வைத்து, ஒரு அழகிய சிம்மாசனத்தையும் தங்களுடன் எடுத்துக் கொண்டு தேவர்கள் புடைசூழ அந்த இடத்திற்கு தேவர்களின் தலைவரான சாக்கா வந்தார். அதற்கு முன்பே விசக்கம்மா அந்த இடத்தை அழகு படுத்தி வைத்திருக்க, பூமிக்குள் இருந்து வெளி வந்த தேரா அந்த அற்புதமான சிம்மாசனத்தை வைத்து அதன் மீது அந்தப் பேழையில் இருந்த புனித சின்னங்களை வைத்தார்.

பிரும்மா *(Brahma)* தலைப் பகுதியில் வெண் சாமரக் குடை பிடித்துக் கொண்டு நிற்க, சம்டுசிடா* *(Samtusita)* வெண் சாமரம் வீச, சுயமா* *(Suyama)* இரத்தினங்கள் பதிக்கப்பட்ட விசிறியால் வீசிக் கொண்டிருக்க (**இருவரும் தேவதைகள்*),

நான்கு திசைகளின் அதிபதிகளும் தத்தம் கைகளில் வாளுடன் நிற்க, பிற முப்பத்தி மூன்று தேவர்கள் தங்களுடைய கைகளில் கூடைகளை வைத்தபடி நின்றிருந்தனர்.

அவர்கள் பாரிஜாத புஷ்பங்களை அதன் மீது தூவி வணங்க, மற்ற முப்பத்தி இரண்டு தேவதைகளும் கைகளில் விளக்கு ஏற்றிக் கொண்டு நின்றிருந்தனர். இருபத்தி யக்கா தலைவர்கள் வேறு எந்த யக்காக்களும் அங்கு வந்து கெடுதல் செய்யாமல் இருக்க அந்த இடத்தைப் பாதுகாத்தபடி நின்றிருந்தனர். திம்பாரு *(Timbaru)* இசை பாடிக் கொண்டிருக்க புான்கசிட்டா *(Pancasikha)* குழல் ஊதியபடி நின்றிருந்தார். பல தேவர்கள் பாடல்களைப் பாடிக் கொண்டும் , நாக மன்னன் புகழாரம் சூட்டிக் கொண்டும் இருக்க, வானத்தில் இருந்து மணம் கலந்த மழை மெல்லப் பெய்தது. மாராவின் *(Mara)* திருஷ்டியை விலக்க தேரா இந்தகுட்டா ஒரு சிறிய தாமிரத்திலான சாமரக் குடையை தன்னுடைய சக்தியினால் வரவழித்து அங்கு நட்டு வைத்தார்.

புனித சின்ன குடுவையை அங்கிருந்து பெற்றுக் கொண்ட மன்னன் தத்தகாமனி தன்னுடைய தலையில் புனித சின்னத்துடன் இருந்த பேழையை வைத்துக் கொண்டு நடந்து சென்று அதை மீண்டும் சிம்மாசனத்தில் வைத்தார். பல விதமான தானங்களை அனைவருக்கும் வழங்கி கைகளை குவித்து வைத்திருந்தபடி அதை வணங்கினார்.

தேவலோகத்தில் இருந்து மாயமாக வந்திருந்த வெண்சாமரக் குடை , வாசனை திரவியங்கள், ஆகாயத்தில் இருந்து மிதந்து வந்து கொண்டிருந்த இனிய கானம் இத்தியாதி, இத்தியாதி போன்ற அனைத்தையும் கண்டு வியந்து நின்ற மன்னனின்

கண்களுக்கும் மக்களின் கண்களுக்கும் அங்கு நின்றிருந்த பிரும்மாவும் மற்ற கடவுட்களும், தேவர்களும் தெரியவில்லை.

உலகிற்கு அமைதி தர வந்த, மூன்று உலகையும் தன்னுடன் வைத்திருக்கும் புனிதருக்கு இந்த இராஜ்யத்தையே அர்பணிக்கின்றேன் என மும்முறை கூறிய மன்னன் அந்த புனித சின்னத்தை மீண்டும் மீண்டும் வணங்கினார்.

தன்னைச் சுற்றி தேவர்களும் மனிதர்களும், புத்த பிட்குக்களும் நின்றவண்ணம் இருக்க தலை மீது புனித சின்னப் பெட்டியை வைத்துக் கொண்டு மும்முறை அந்த ஸ்துபாவை சுற்றி வந்த மன்னன் அதன் கிழக்குப் பகுதி வழியே மேலே ஏறிப் போய் புனித சின்னம் வைக்க இருந்த அறைக்குள் நுழைந்தார்.

அந்த நேரத்தில் தொன்னூற்று ஆயிரம *(96,000)* பேர்கள் கூப்பிய கைகளுடன் ஸ்துபாவின் முன்னால் நின்றிருந்தனர். 'என் தலையில் இருந்து இறக்கி இந்தப் புனிதப் பேழையை இந்த புனித இடத்தில் வைக்க வேண்டும்' என மகிழ்சியுடன் உள்ளே நுழைந்த மன்னனின் தலையில் இருந்து தானாக மேலே எழும்பி ஆகாயத்தில் பறந்து சென்ற பேழை, ஆகாயத்தில் சுமார் ஏழு தலா உயரத்தில் நின்று கொள்ள, தானாக அதன் மூடியும் திறந்து கொள்ள, அதனுள் இருந்த புனித சின்னங்கள் வெளியில் வந்து புத்தரைப் போன்ற உருவத்தைக் காட்டின. ஒளிப் பிழம்பாய் புத்தராக காட்சி தந்த, வாழ்நாளில் பார்க்கவே முடியாத அந்த அதிசயக் காட்சியை கனவா, நினைவா எனப் புரியாமல் பன்னிரண்டு கோடி *(12,00,00,000)* மக்களும் தேவர்களும் கண்டு களித்தனர்.

அவருக்கு தாம் இருந்த இடங்களில் இருந்தே தம் வணக்கங்களைத் தெரிவித்துக் கொண்டனர்

சற்று நேரத்திலேயே மீண்டும் அந்த சின்னங்கள் அனைத்தும் தாமாக பேழைக்குள் திரும்பச் சென்று அமர்ந்து கொள்ள, பேழை மூடிக் கொள்ள, ஆகாயத்தில் இருந்து கீழ் இறங்கி வந்த பேழை மன்னனின் தலை மீது அமர்ந்து கொண்டது. அதன் பின் அதைத் தன்னுடைய தலை மீது வைத்துக் கொண்டே ஊர்வலமாகப் போனார் மன்னர். அவரைத் தொடர்ந்து தேரா இந்திரகுட்டாவும், இசைக் கலைஞர்களும், நடனமாடிக் கொண்டிருந்த மங்கையரும் மற்றவர்களும் சென்றனர். புனித அறையை அடைந்த மன்னன் தன்னுடைய கைகளை மணம் மிக்க தண்ணீரால் கழுவிக் கொண்டு, வாசைன திரவியங்களை கைகளில் பூசிக் கொண்டு பேழையைத் திறந்து புனித சின்னங்களைக் கையில் ஏந்திக் கொண்டார். அப்போது மன்னனின் மனம் நினைத்தது ' இந்த சின்னங்கள் இந்த அற்புதமாக செய்யப்பட்டுள்ள இருக்கையில் வைக்கப்படும் பொழுது, புத்தர் தன்னுடைய மரணப் படுக்கையில் இருந்த பொழுது எப்படி இருந்தாரோ அதே நிலையில் காட்சியில் தந்தவண்ணம் , தன்னிடம் தஞ்சம் அடைந்த இந்த நாட்டு மக்களின் நலனைப் எந்தவிதமான இடைஞ்சல்களும் இன்றி பாதுகாத்து வரவேண்டும்'.

மனதில் அப்படி எண்ணிக் கொண்டு அங்கிருந்த மிருதுவானஇருக்கையின் மீது அந்தப் புனிதச் சின்னங்களை வைத்து வணங்கினார் மன்னர். அவை அவர் வைத்த நிலையிலேயே இருந்தன. இப்படியாக அசல்ஹா *(Asalha)* மாதத்தின் வளர் பிறையின் உத்தரசல்ஹா *(Uttarasalha)* நட்சத்திர கிரஹ நிலையில், உபோஸ்தாவின் *(uposatha-day)*

பதினைந்தாவது நாளன்று புத்தரின் புனிதச் சின்னங்கள் அந்த இடத்தில் ஸ்தாபிக்கப்பட்டன. அதன் தலைக்கு மேல் இருக்குமாறு வெண்ணிர சாமரக் குடையை அமைத்த மன்னன் ஏழு நாட்களுக்கு விழா நடத்தினார்.

அவரும் மற்ற அனைவரும் தம்முடைய உடல்களில் போட்டிருந்த அனைத்து நகைகளையும் அந்த புனித சின்னத்திற்கு அர்பணித்தனர். அதைத் தவிற பிட்குக்களுக்கும் புத்த சகோதரர்களுக்கும் வெண்ணை, சக்கரை, ஆடைகள் என தானம் செய்தவாறு இருக்க, இரவு முழுவதும் ஒரே குரலில் புத்த பிட்குக்கள் மந்திரங்கள் ஓதிக் கொண்டு இருக்க, வாத்திய ஒலிகள் தொடர்ந்து கொண்டு இருந்தன. ஒரு வாரத்திற்கு அந்த புனித சின்னங்களை மக்கள் வணங்கி பூஜித்து வரவேண்டும் என மன்னர் அறிவித்தார். ' இந்த தீபகற்பத்தில் உள்ள அனைவரும் இங்கு வந்து நம்பிக்கையுடன் இந்த சின்னங்களை வழிபட்டு விட்டு தத்தம் இல்லங்களுக்குத் திரும்பிச் சென்று விட வேண்டும்' என தேரா இந்திரகுட்டாவும் ஆணையிட்டார்.

ஒரு வார காலத்திற்கு தானமும் தர்மமும் செய்து விழா கொண்டாடிய மன்னன் புத்த பிட்குக்களிடம் தான் தனக்கு இட்ட ஆணைப்படி புனித சின்னங்களை ஸ்தாபித்து விட்டதாகவும், இனி அந்த புனித சின்னம் உள்ள அறையை சடங்குடன் மூடும் பணியை அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் எனவும் விண்ணப்பித்தார்.

அதை ஏற்றுக் கொண்ட பிட்குக்கள் உத்தரா மற்றும் சுமன்னா என்ற இரு சாமனாக்களையும் அழைத்து தம்முடன் அவர்கள் முன்னர் கொண்டு வந்திருந்த வண்ணமிகு பாறை கற்களை

கோண்டு அந்த புனித அறையின் வாயிலை மூடுமாறு கோரினர். அவர்களும் அது போலவே செய்ய அந்த புனித சின்ன அறையை மூடிக் கொண்டு நின்ற புனிதப் பாறைகள் அங்கிருந்த மணங்களை வெளியேற்றாமல், மலர்களை வாடிப் போக விடாமல், எரிந்து கொண்டிருந்த தீபங்கள் அணைந்து விடாமல் பாதுகாத்து வரும் என்ற நம்பிக்கை நிலவியது.

மக்களுடைய நலனையே தம்முடைய மனதில் ஏந்திக் கொண்டிருந்த மன்னர், இதுவரை தம்முடன் இணைந்து புனித சின்னங்களை ஸ்தாபித்ததில் ஒத்துழைத்த மக்கள், ஆயிரக் கணக்கான இடங்களில் தம்தால் முடிந்த அளவில் புனித சின்னங்களை வழிபடும் தலங்களை அமைக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்.

தாம் செய்யும் நல்ல காரியங்களைப் போலவே அனைவரும் செய்ய வேண்டும் என விரும்பும் புத்தர்களுடைய நற்குணங்கள் எளிதில் புரிந்து கொள்ள முடியாதவை, அது போலவே அவர்களுடைய நல்வழிப் போதனை கொண்ட வாழ்க்கை முறைகளும் புரிந்து கொள்ள முடியாதவை, அவரகள் மீது வைக்கும் நம்பிக்கை எப்படி வருங்காலத்தில் ஒருவருக்கு நன்மை பயக்கும் என்பதையும் எளிதில் புரிந்து கொள்ள முடியாது. நல்ல ஜீவன்கள் தம்மைப் போலவே பிறரும் இருக்க வேண்டும் என எப்பொழுதும் நினைத்திருப்பார்கள் என்பதே உண்மை.

புனிதரின் பக்தி மார்கத்தில் இணைந்த புத்த பக்தர்களின் மனதில் பேரானந்தம் பொங்கிட வழி வகுத்த கருணா மூர்த்தியின் முப்பத்தி ஒன்றாம் பாகமான 'புனிதச் சின்ன ஸ்தாபனம்' என்ற பகுதி முடிவுற்றது.

CLICK HERE TO VIEW ENGLISH VERSION

32: துசிதா சொர்க வாசல்

சிடியாவின் வேலைகள் தொடர்ந்து கொண்டு இருந்தன. மன்னன் உடல் நலமுற்று திடீரென படுத்த படுக்கையில் விழுந்தார். மரணம் அவரை நெருங்கத் துவங்கியது. அதை உணர்ந்து கொண்டவர் தன்னுடைய இளைய சகோதரர் திஸ்ஸாவை அழைத்தார். திகவாபியில் இருந்த வந்த அவரிடம் மன்னர் ' தம்பி, இன்னும் முடிக்கப்படாமல் இருக்கும் ஸ்துபாவை விரைவாகக் கட்டி முடிப்பாயா ?' என்று கேட்க தன்னுடைய சகோதரரின் நிலைமையைக் கண்ட அவருடைய தம்பி, அந்த சிடியாவை சுற்றி வெள்ளைத் துணிகளால் மூடச் சொன்னார். அதன் பின் அந்த துணி மீது வண்ண வண்ண ஜாடிகளில் பூக் கொத்துக்கள் தொங்குவது போல பல வரிசைகளில் படங்களை வரையச் சொன்னார். மேலும் பல சித்திர வேலைபாடுகளையும் வரையச் சொன்னார். அதன் பின் மூங்கில் பிளாச்சுக்களை *(bamboo-reeds)* ஒரு அரண் போல கட்டி அதிலும் வண்ண வண்ண சித்திரங்களை வரையச் சொன்னார். பின் மேல் கூறைப் பகுதியில் சந்திர சூரியர்களை வரையச் சொல்லி விட்டு மன்னனிடம் சென்று ஸ்துபியில் 'நீங்கள் முடிக்காமல் விட்டு வைத்தப் பகுதியை கட்டி முடித்து விட்டேன்' என ஆறுதலுக்காகப் பொய் சொன்னார்.

ஒரு பல்லக்கில் படுத்துக் கொண்டு சிடியாவின் வெளிப்புறமாக சுற்றி வந்த மன்னன் தென்புற வாசல் அருகே வந்து தன்னுடைய வணக்கங்களைத் அதற்கு தெரிவித்தப் பின் பல்லக்கில் படுத்திருந்தவாறே வலது பக்கத்தில் தெரிந்த ஸ்துாபிக்கும்,

இடப்புறத்தில் தெரிந்த லோஹபாசதாவிற்கும் *(Lohapasada)* வணக்கங்களைத் தெரிவித்தார். தன்னுடைய பல்லக்கை சுற்றி நின்றிருந்த மற்ற பிட்குக்களைப் பார்த்து மனம் மகிழ்ந்தார்.

மன்னனுடைய உடல் நிலையைப் பற்றிக் கேள்விப்பட்ட தொன்னூற்று ஆறு கோடி *(96,00,00,000)* புத்த பிட்குக்கள் அங்கிருந்தும் இங்கிருந்துமாக புறப்பட்டு அங்கு வந்திருந்தனர். அவர்கள் ஒரே குரலில் மந்திர ஒலி ஓதியவண்ணம் அங்கு இருந்தனர். ஆனால் வந்திருந்தவர்களில் தேரா புட்டபைய்யா *(puttábhaya)* என்பவரை மட்டும் காணவில்லை என அறிந்த மன்னன் நினைத்தார் 'என்னுடன் இருபத்தி எட்டு முறை யுத்தங்கள் செய்து, தன் நிலையை சற்றும் விட்டுக் கொடுக்காத மாபெரும் வீரர் நான் மரணம் அடையப் போகின்றேன் என்றாபதினால் என்னைக் காண வரவில்லையோ'

பஞ்சாலி *(Pañjali)* மலைப் பகுதியில் ஓடிக் கொண்டு இருந்த கரீன்தா *(Karinda)* நதிப் பக்கத்தில் வசித்துக் கொண்டு இருந்த தேரா, தன்னைக் குறித்து மன்னன் நினைத்ததை ஞானத்தினால் உணர்ந்தார். உடனே தன்னுடைய மந்திர சக்தியினால் ஐநூறு பிட்குக்களை அழைத்துக் கொண்டு ஆகாயத்தில் பறந்து வந்து மன்னன் இருந்த இடத்தில் மற்றவர்களுடன் சேர்ந்து நின்றார். அவரைத் தன் அருகில் அழைத்த மன்னன் கூறினார் 'என்னுடன் பத்து இணையற்ற வீரர்களை வைத்துக் கொண்டு நான் பல முறை உங்களுடன் யுத்தம் செய்து இருக்கின்றேன். ஆனால் இன்றோ நான் தன்னந்தனியாக மரணத்துடன் போராடிக் கொண்டு இருக்கின்றேன்'

தேரா கூறினார் " அஞ்சாதே மன்னா, நாம் செய்யும் பாவங்களை விலக்கிக் கொள்ள முடியாதது போல மரணத்தையும் நம்மால் வெற்றி கொள்ள முடியாது. இந்த பூமிக்கு வந்து விட்ட எவரும் அழியத்தான் வேண்டும், அது பூமியில் பிறந்து விட்ட அனைத்திற்கும் பொருந்தும். இதைதான் நம்முடைய குருவும் கூறி உள்ளார். மரணம் புத்தர்களையும் விட்டு வைக்கவில்லை. நீயே எண்ணிப் பார். நிரந்திரம் அற்ற அனைத்துமே அதாவது துக்கம், பொய் என அனைத்துமே அழிய வேண்டியவைதான். எதுவும் நிரந்திரமல்ல. உன்னுடைய முன் பிறவியில் நீ புத்த போதனைகளில் கொண்டிருந்த பக்தி பாரட்டப்பட வேண்டியது. கடவுட்களை உன்னால் நேரடியாகக் காண முடிந்த துாரத்தில்தான் நீ இருந்தாய். ஆனாலும் அவற்றை எல்லாம் துறந்து விட்டு, இந்த உலகில் உன் கடமையை செவ்வன செய்து முடிக்க மனிதனாய் பிறந்து வந்திருந்தாய். நீ அமைத்துள்ள இந்த சுதந்திர தேசத்தில் புத்த போதனைகள் செழிப்புற்று வளர வகை செய்து இருக்கின்றாய். பற்பல நற்காரியங்களை செய்துள்ளவரே, நீ இன்று வரை செய்துள்ள அனைத்து நல்ல காரியங்களையும் ஒரு கணம் நினைத்துப் பார். உனக்கு நன்மை அது தரும்" என்றார்.

அதைக் கேட்ட மன்னன் மனம் மகிழ்ந்து போனார். 'என்னை ஒரே யுத்தத்தில் இன்று வெற்றி கொண்டு விட்டீர்கள்' எனக் கூறியவர், தான் செய்திருந்த அனைத்துக் காரியங்களையும் எழுதி அவற்றை தானே *(மன்னன்)* படிப்பது அனைவரும் கேட்கும்வண்ணம் உரத்த குரலில் படிக்கும்படி தன் உதவியாளரிடம் கூறினார். அவருடைய சேவைகளை எழுதிவர் உரத்த குரலில் அவற்றை படிக்கத் துவங்கினார்.

‘ இந்த மன்னன் தொன்னூற்று ஒன்பது *(99)* விகாராக்களைக் கட்டி உள்ளார். மாரிகவட்டி விகாராவைக் கட்ட பத்தொன்பாது கோடி *(19,00,00,000)* செலவாயிற்று. லோஹபாதஸாவைக் கட்ட முப்பது கோடி *(30,00,00,000)* செலவாயிற்று. ஸ்துாபாவில் உள்ள புனித அறையைக் கட்ட மட்டும் இருபது கோடி *(20,00,00,000)* செலவாக, ஸ்துாபாவின் மற்ற பணிகளுக்கு ஆயிரம் கோடி *(1000,00,00,000)* செலவாயிற்று. கோட்டா *(Kotta)* மலைப் பகுதியை ஒட்டிய பகுதியில் உணவின்றி மக்கள் தாயக்கட்டை விளையாட பயன்படும் கொட்டைகளைக் கூடத் தின்று பசியை விரட்டிக் கொண்டு இருக்கக் காரணமான அக்கக்காயிகா *(Akkhakháyika)* என்ற பஞ்சம் தலை விரித்தாடிய பொழுது அங்கு சென்ற மன்னனாகிய நான் என்னுடைய விலை உயர்ந்த இரண்டு காதணிகளைக் உடனே கயற்றிக் கொடுத்ததும் அல்லாமல் அங்கிருந்த ஐந்து தேராக்களுக்கு மிக சுவையான தானியக் கஞ்சியை *(millet- gruel)* கொண்டு வரச் சொல்லி இதய பூர்வமாக அதை அவர்களுக்கு அளிததேன். அது போல குலன்கானியா *(Cúlanganiya)* யுத்தத்தில் தோற்றுப் போய் ஓடிக் கொண்டு இருக்கையிலும் வழியில் உணவு அருந்தும் வேளை வந்த பொழுது முதலில் பிட்குக்களுக்கு பிட்சை அளித்தப் பின்னர்தான் உணவு அருந்துவேன் என்ற பழக்கத்தை மாற்றிக் கொள்ளாமலும், தனக்கு உணவு இருக்குமா என்று கூட பார்க்காமலும், வானத்தின் வழியே பறந்து வந்த பிட்குக்களுக்கு என்னுடைய பாத்திரத்தில் இருந்த உணவு முழுவதையும் அளித்தேன்.

ஸ்துாபி ஸ்தாபனமும், புனிதச் சின்னம் ஸ்தாபனமும் கட்டப்படத் துவங்கிய பொழுது மாரிகவட்டி விகாராவும் கட்டப்பட்டது. அப்பொழுது அங்கிருந்த பிட்குணிகள் மற்றும்

மற்றும் பிட்குக்களுக்கு பேதமின்றி பெரும் அளவில் தானங்கள் கொடுத்தேன். அது போல இருபத்தி நான்கு விசாக விழாக்களைக் *(Vesákha-festivals)* கொண்டாடி ஓவ் ஒரு புத்த சகோதரருக்கும் மூன்று ஆடைகள் கொடுத்தேன்.

ஐந்து முறை ஏழு நாட்களுக்கு போதனைகளை ஏற்றேன். அந்த நாட்களில் பன்னிணைடு இடங்களில் ஆயிரம் அணையா திரி விளக்குகள் ஏற்றி புத்தரை வணங்கினேன். அது மட்டும் அல்லாது பதினெட்டு இடங்களில் மருத்துவர்கள் கூறியபடி நோயாளிகளுக்கு இலவசமாக மருந்துகள் கொடுத்தேன். அனைவருக்கும் நாற்பத்தி நான்கு இடங்களில் தேனுடன் கலந்த உணவை தொடர்ந்து கொடுக்கச் சொன்னேன். அது போல அரிசியும், எண்ணையையும் நாற்பத்தி நான்கு இடங்களிலும், வெண்ணையில் வேக வைத்த ஜலா கேக்குக்களை *(jala-cakes)* நாற்பத்தி நான்கு இடங்களிலும், மேலும் நாற்பத்தி நான்கு இடங்களில் சாதாரண சாதமும் கொடுக்க ஏற்பாடு செய்திருந்தேன். ஓவ்ஒரு மாதமும் ஒரு நாளைக்கான எண்ணையை உபோசதா பண்டிகையை *(உபதேச வைபவம்)* ஸ்ரீலங்காவில் கொண்டாடிய அனைத்து விகாராக்களுக்கும் கொடுக்கச் சொன்னேன். ஆனால் தானத்தை விட போதனைகளே சிறந்த பரிசு என மக்கள் நினைத்திருந்ததாக எனக்குத் தகவல் கிடைத்ததினால், லோஹபாசதாவில் போதனை செய்வோர் அமரும் ஆசனத்தில் அமர்ந்து கொண்டு சகோதர புத்தர்களுக்கு மங்கலசுட்டா *(Mangalasutta)* என்ற போதனையை தர முடிவு செய்தேன். ஆனால் அதில் சென்று அமர்ந்ததும் அவர்கள் மீது நான் வைத்திருந்த பெரு மதிப்பின் காரணத்தினால் என்னால் போதனைகளைத் தர முடியவில்லை. அது முதல் ஸ்ரீலங்காவின்

பல இடங்களிலும் அந்த போதனையை உபதேசிப்போர்க்கு சன்மானங்கள் தரப் போவதாக அறிவித்தேன். அப்படி போதனைகளை செய்த ஒவ்ஒருவருக்கும் ஒரு நாலி அளவு *(Nali- குறிப்பிட்ட ஒரு அளவு)* வெண்ணை, வெல்லம் மற்றும் சக்கரை போன்றவற்றையும் ஆடைகளும் கொடுத்தேன். நான் ஆட்சியில் இருந்த பொழுது கொடுத்த தானங்களை விட நான் துரதிஷ்டத்திலும் *(கஷ்டத்தில்)* என்னைப் பற்றி கவலை இல்லாமலும் இருந்த பொழுது அளித்த இரண்டு தானங்கள்தான் எனக்கு மிகுந்த மன மகிழ்சியையும் இருதய ஆறுதலையும் தந்தன."

மன்னன் அவற்றைக் கூற அனைத்தையும் கேட்டுக் கொண்டு இருந்த தேரா அபய்யா என்பவர் மன்னனுக்கு மகிழ்சியை தந்த இரண்டு தானங்கள் என்ன என்பதைப் பற்றி மற்றவர்க்கு விளக்கினார். " முதல் மகிழ்சி தந்த சம்பவம், சுமனகுட்டா என்ற மலைப் பகுதியில் இருந்த ஐந்து தேராக்களில் ஒருவரான தேரா மாலயமஹாதேவாவிற்கு *(Malayamahadeva)* தானியத்திலான கஞ்சியை பஞ்ச நேரத்தில் தந்த பொழுது அவர் அதை தன்னுடன் இருந்த தொள்ளாயிரம் *(900)* பிட்குக்களுக்குக் கொடுத்தப் பினனர்தானி தான் உண்டார்.

கல்யானிகா விகாராவில் *(Kalyanika-vihara)* இருந்தவரும், தம்முடைய சக்தியினால் பூமியை அதிரச் செய்தவருமான தம்மகுட்டா *(Dhammagutta)* என்ற தேரா தனக்குக் கிடைத்த கஞ்சியை ஐநூறு பேர்களுக்குத் தந்துவிட்டு தானும் உண்டார். அது போல தாலங்காவில் *(Talanga)* இருந்த தம்மடின்னா *(Dhammadinna)* என்ற தேரா, பியாங்குடிபா *(Piyangudipa)* என்ற இடத்தில் இருந்த பன்னிரண்டாயிரம்

பிட்குக்களுக்கு தந்த பின் தானும் உண்டார். மங்கானாவில் *(Mangana)* இருந்த தேரா குட்டதிஸ்ஸா *(Khuddatissa)* என்பவர் அதை கேலசா விகாரில் *(Kelasa vihara)* இருந்த அறுபதாயிரம் *(60,000)* பிட்குக்களுக்குக் கொடுத்தப் பின் தானும் உண்டார். உக்கநாகரா விகாரில் *(Ukkanagara-vihara)* இருந்த தேரா மஹாவைய்யஹா *(Mahavyaggha)* என்பவர் அதை தன்னுடன் இருந்த எழுநூறு பிட்குக்களுக்குக் கொடுத்தப் பின் தானும் உண்டார். இரண்டாவதாக, பியாங்குடிபா *(Piyangudipa)* என்ற இடத்தில் இருந்த தேரா தன்னுடைய பாத்திரத்தில் கிடைத்த கஞ்சியை தன்னுடன் இருந்த பன்னிரண்டாயிரம் *(12,000)* பிட்குக்களுக்கு தந்த பின் தானும் உண்டார்". இப்படியாக மன்னன் அடைந்த மகிழ்சி என்பது குறித்து பற்றி தேரா கூறி முடித்தார்.

அவர் கூறிய செய்தியை கேட்ட மன்னன் தான் உண்மையாகவே பல விதங்களிலும் நல்ல காரியங்கள் செய்துள்ளேன் என எண்ணியபடி மகிழ்சியில் ஆழ்ந்தார். மேலும் அந்த மன்னன் தான் செய்திருந்த சேவைகளைப் பற்றி தொடர்ந்து கூறலானார் "இருபத்தி நான்கு ஆண்டுகளாக நான் புத்த சகோதரர்களுடைய ஆதரவாளனாக இருந்துள்ளேன். என் உடலும் கூட அவர்களுக்கு பயன் அளிக்கும் விதத்திலேயே இருக்கும்".

அடுத்து தன்னுடைய இளைய சகோதரரிடம் கூறினார் "ஸ்தாபாவில் இன்னமும் செய்து முடிக்கப்படாமல் உள்ள வேலைகளை நீ செய்து முடித்திட வேண்டும். என் அருமை திஸ்ஸா, அதை நீ கண்டிப்பாக செய்ய வேண்டும். காலையும் மாலையும் ஸ்துபாவிற்கு பூக்கள் போட்டு வணங்கு. நாள்

ஒன்றுக்கு மூன்று வேளைகள் நைவத்தியம் படைக்க வேண்டும். நான் புத்த சமயத்திற்காக என்னென்ன சடங்குகள் செய்து வந்தேனோ அவை அனைத்தையும் நீ தொடர்ந்து செய்து கொண்டு இருக்க வேண்டும். புத்த சகோதரர்களுக்கு செய்யும் சேவைகளை எந்த நிலையிலும் நிறுத்தி விடாதே" இப்படியாகக் கூறிய பின் மன்னன் அமைதியாகி விட்டார்.

உடனே சகோதர பிட்குக்கள் ஒரே குரலில் மந்திரம் ஓதத் துவங்க தேவர்கள் ஆறு இரதங்களில் ஆறு கடவுட்களை ஏற்றிக் கொண்டு வந்து மன்னனின் அருகில் நின்றனர். 'மன்னா, எங்களுடன் இந்த தேரில் ஏறிக் கொண்டு தேவலோகத்திற்கு வா' என அவரை அழைத்தனர்.

மன்னன் அவர்களுக்கு சைகை மூலம் ' தயவு செய்து நான் இவர்கள் ஓதும் தம்மாவை கேட்டு முடிக்கும் வரை காத்திருங்கள்' என்றார். பிட்குக்கள் தாம் ஓதிக் கொண்டதை நிறுத்திவிட அதை ஏன் நிறுத்தி விட்டீர்கள் எனக் கேட்ட மன்னனிடம் ' நீங்கள் எதோ சைகை செய்ததினால் நிறுத்தச் சொல்லி விட்டீர்கள் என நினைத்தோம்' என்றனர். 'பெரும் மதிப்பிற்குறியவர்களே அது அதற்கல்ல' என்றவர் தன்முன் தேவர்கள் வந்திருந்த விவரத்தை கூறினார்.

அதைக் கேட்டவர்கள் மன்னன் மரணத்தைக் கண்டு மிரண்டு போய் எதையோ கூறுகின்றார் என நினைக்க அபய்யா 'உங்களை அழைத்துப் போக இரதம் வந்து விட்டது என்பதை நாங்கள் எப்படி நம்புவது ?' எனக் கேட்க, மன்னன் தன்

கைகளில் சில மாலைகளை எடுத்து அதை ஆகாயத்தில் வீசினார். அவை கண்களுக்குத் தெரியாமல் நின்றிருந்த இரதங்களின் மேல் பகுதியில் சென்று மாலை போல மாட்டிக் கொண்டு தொங்கின. ஆகாயத்தில் மாலைகள் மட்டும் அந்தரத்தில் தொங்குவதைக் கண்டவர்கள் பிரமித்து நின்றனர். அவர்களுடைய சந்தேகமும் தீர்ந்து விட்டது. மன்னன் தேராவிடம் கேட்டார், 'மதிப்பிற்குறியவரே சொர்கத்தில் எந்த இடம் உயர்வானது" தேரா கூறினார் 'அந்த இடத்தில் உள்ள துசிதா *(Tusita)* என்ற இடமே சிறந்தது. அந்த இடத்தில்தான் இனி பிறக்க இருக்கும் மேடிய்யா *(Metteyya)* என்ற வருங்கால புத்தர் தான் பூமியில் அவதரிக்கப் போகும் காலத்தை எதிர் பார்த்தவாறு காத்திருக்கின்றார்'. அதைக் கேட்ட மன்னன் ஸ்துாபியை பார்த்தவாறே தன்னுடைய கண்களை மூடிக் கொண்டார்.

அவர் மரணம் அடைந்ததும் தேவ உருவில் இருந்தவாறு துசிதா சொர்கத்தில் தான் போய் சேர்ந்து விட்ட சேதியைக் மற்றவர்கள் கேட்குமாறு வானத்தில் இருந்து கூறிய பின் தான் ஏறிச் சென்ற இரதத்திலேயே கீழே வந்து ஸ்துாபியை மூன்று முறை சுற்றி வந்து வணங்கிய பின் துசிதாவில் இருந்த சொர்கத்தை அடைந்தார்.

அவர் மரணம் அடைந்ததும் நடனமாடிக் கொண்டு இருந்த மங்கையினர் அவருடைய தலையில் இருந்த கிரீடத்தை எடுத்தப் பின் அவருடைய உடல் சிதையில் வைக்கப்பட்டு இறுதிக் கடன்கள் செய்யப்பட்டன. அனைவரும் அழுது புலம்பினர். அங்கு ரவிவாட்டசாலா *(Ravivattisala)* என்ற இடம் அமைக்கப்பட்டது. அவரை எரித்த இடத்தில் இராஜமாலகா

என்ற இடம் அமைக்கப்பட்டது. அவரை எரித்த இடத்தில் இராஜமாலகா *(Rájamálaka)* என்ன பெயர் பொறிக்கப்பட்டு உள்ளது.

நேர்மையாக ஆட்சி செய்து வந்த மன்னன் தத்தகாமினி மேட்டிய்யாவின் முதல் சிஷ்யனாகி, மேட்டிய்யாவின் தாய் தந்தையை தன்னுடைய தாய்- தந்தையாக ஏற்றுக் கொண்டார். தத்தகாமினியின் இளைய சகோதரர் மேடிய்யாவின் இரண்டாம்

ஒரு ஓவியர் பார்வையில் விகாரா

தத்தகாமினி கட்டியதாகக் கூறப்படும் லோஹப்பிரசாதயா என்ற விகாராவின் தோற்றம். சுமார் 1600 கற்தூண்களைக் கொண்டு ஆறு வருட காலத்தில் கட்டி முடிக்கப்பட்டதாக கூறப்படும் அந்த கட்டிடம் தேவலோகத்தினைப் போலவே இருக்குமாறு கட்டப்பட்டது. பின் நாளில் அந்த கட்டிடம் தீப்பற்றி அழிந்து விட, பின்னர் வந்த சதாசிவதிஸ்ஸாவும் இன்னொரு மன்னரும் அதை மீண்டும் நல்ல நிலைக்குக் கொண்டு வந்தாலும், மன்னன் மஹேசன் என்பவர் புத்த பிட்குக்களுடன் ஏற்பட்ட கருத்து வேற்றுமையினால் அதை இடித்து விட்டார்.

சிஷ்யனாக மாறினார். ஆகவே மன்னனின் மகனான சாலிராஜகுமாரா *(Sálirájakumára)* என்பவர் மேடிய்யாவின் மகனானார்.

எந்த ஒருவரும் அனைவருக்கும் நன்மை தரும் செயல்களை மன மகிழ்வுடன் செய்தபடி இருந்தால் அவர் போற்றத்தக்கவராகின்றார். அவர் எதேற்சையாக தம்மை அறியாமல் செய்து விட்ட பாபச் செயல்கள் கூட அவர் சொர்கத்தை அடைவதை தடுக்க முடியாமல் போகும்.

புனிதரின் பக்தி மார்கத்தில் இணைந்த புத்த பக்தர்களின் மனதில் பேரானந்தம் பொங்கிட வழி வகுத்த கருணா மூர்த்தியின் முப்பத்தி இரண்டாம் பாகமான 'துாசித சொர்க வாசல்' என்ற பகுதி முடிவுற்றது.

33: பத்து மன்னர்கள்

தத்தகாமினியின் பரிபாலனத்தில் அனைவரும் சுகமாக வாழ்ந்திருந்தனர். அவருடைய மகன் சாலிராஜகுமாரா என்பவர் பிரபலமானவர். அவர் அனைவருக்கும் நன்மை தரும் காரியங்களை செய்வதில் அதிக விருப்பம் உடையவராக இருந்தார். ஆனால் அவர் ஒரு சண்டால *(candála)* குலத்துப் பெண்ணை காதலித்தார். அவருடைய முந்தைய பிறவியில் அஷோக மாலா தேவி *(Asokamáládevi)* என்ற பெண்ணைக் காதலித்து மணந்திருந்தார். அதனாலோ என்னவோ அவளைப் போலவே இவளும் இருந்ததினால் அவர் அரச கௌரவத்தைக் கண்டு பயப்படாமல் அவளை நேசித்தார். அதனால் அவர் அரச பதவிக்கு வருவதை விரும்பாத தத்தகாமனியின் சகோதரரான சதாசிவ தீஸ்ஸா *(Saddha Tissa)* என்பவர் தாமே அரசனாகி பதினெட்டு வருடகாலம் நேர்மையான முறையில் ஆட்சி செய்து வந்தார். அவர் ஆட்சியில் இருந்த பொழுது ஸ்துபாவில் வைக்கப்பட்டிருந்த வெண்சாமரக் குடையை சரி செய்து , முடிக்கப்படாமல் இருந்த யானைக்கூடம் *(elephant-wall)* என்ற இடத்தையும் கட்டி முடித்து மக்களிடம் நல்ல பெயரைப் பெற்றார். ஆனால் துரதிஷ்டவசமாக லோஹபாசாதா கட்டிடம் தீப்பற்றி அழிந்து விட்டதினால், அதை மீண்டும் புதுப்பித்து ஏழு மாடிக் கட்டிடமாகக் கட்டினார். ஆக அதன் மகிமை நூறில் இருந்து தொன்னூறு சதவிகிதமாகக் குறைந்தது. அவர் தட்சினகிரி விகாரா *(Dakkhinagiri)* , கல்லகாலேன *(Kallakálena)* விகாரா, கலம்பகா *(Kalambaka)* விகாரா, பெட்டகவாலிக *(Pettangavalika)* விகாரா, வேலாங்கவிட்டிகா *(Velangavitthika)*, துப்பலவபீடிசக்கா *(Dubbalavapitissaka)* , மத்துவிகாரா *(Matuviharaka)* மற்றும் துராடிசாக்கவாபி *(Duratissakavapi)*

போன்ற விகாராக்களையும் கட்டினார். அது மட்டும் இன்றி அனுராதபுரத்தில் இருந்து திகவாபி வரை ஒவ்ஒரு யோஜனை துாரத்திலும் ஒவ்ஒரு விகாராவைக் கட்டினார். அது மட்டும் அல்லாது அவர் திகவாபி விகாராவை *(Dighavapi-vihara)* அமைத்து நவரத்தினக் கற்கள், மணிகள் என பலவற்றையும், தங்கத்தினாலான சித்திர வடிவங்களையும் வண்டிச் சக்கரத்தின் அளவில் செய்து அலங்கரித்து, தோரணங்கள் கட்டி தொங்க விட்டு அந்த கட்டிடத்தின் அனைத்து இடங்களையும் அழகு செய்திருந்தார். எண்பத்தி நான்காயிரம் *(84,000)* போதனைகளின் சிறப்பை வெளிப்படுத்தும் விதத்தில் எண்பத்தி நான்காயிரம் முறை *(84,000)* தானங்கள் செய்தார். இப்படியாக பாராட்டப்படும்படியான பல காரியங்களை செய்தவர் மரணத்திற்குப் பின் மேலுலகம் சென்று அவரது அடுத்தப் பிறவியில் துசியாவில் வசித்திருந்த *(Tusita)* கடவுட்களில் ஒருவராகப் பிறந்தார்.

மன்னன் சதாசிவா திகவாபியில் வசித்துக் கொண்டு இருந்த பொழுது அவருடைய மூத்த மகனான லஞ்சதிஸ்ஸா *(Lanjatissa)* என்பவர் தான் ஆட்சி செய்த இடத்தில் கிரிகும்பிலா *(Girikumbhila)* என்ற விகாராவை கட்டினார். மன்னனுடைய அடுத்த மகனான துலதானா *(Thulathana)* என்பவர் கண்டாரா *(Kandara)* என்ற விகாராவைக் கட்டினார். அவர்களுடைய தந்தை சதாசிவா அனுராதபுரம் சென்று தத்தகாமினியை சந்தித்த பொழுது இன்னொரு மகனான துலதானகா *(Thulathanaka)* என்பவர் புத்த பிட்குக்கள் தங்கிக் கொள்ள விகாராக்களை அமைக்கத் தேவையான நிலத்தை அந்த மன்னனிடம் இருந்து பெற்றுக் கொண்டு வர தன்னுடைய தந்தையுடன் சென்றார்.

மன்னன் சதாசிவா இறந்தப் பின் மந்திரி சபை கூடியது. அந்த ஆலோசனைக் கூட்டத்திற்கு பெருமளவு புத்த சகோதரர்களும் வந்திருந்தனர். அவர்கள் நன்கு ஆலோசனை செய்தப் பின் மன்னனின் மகனான துலந்தனாவை *(Thulanthana)* ஆட்சியில் அமர்த்தினர். அவரால் ஒரு மாதமும் பத்து நாட்களும் மட்டுமே ஆட்சியில் இருக்க முடிந்தது. ஏன் எனில் அவருடைய மற்றொரு சகோதரனான லன்சதிஸ்ஸா அதை ஏற்றுக் கொள்ளாமல் அனுராதபுரத்திற்கு வந்து தன்னுடைய சகோதரரிடம் இருந்து ஆட்சியை தான் கைபற்றிக் கொண்டார்.

மூன்று வருடங்கள் ஆட்சியில் இருந்த லன்சதிஸ்ஸா சதாசிவாவின் மரணத்திற்குப் பின், வயதுக்கு மதிப்புத் தராமல் தன்னை உதாசீனப்படுத்தியதால் மனதில் அந்த வருத்தத்தை வைத்திருந்து தனது பதவி காலத்தில் புத்த சகோதரர்களை உதாசீனப்ப படுத்தினார். ஆனால் பின்னர் அதை மறந்து விட்டு மூன்று லட்சம் செலவு செய்து ஸ்துாபியை புத்த பிட்குக்கள் பூக்கள் துாவி வணங்க உதவுமாறு இருக்க அந்த சிடியாவில் மூன்று அடுக்கு கட்டிடம் கட்டினார். அதைத் தவிற ஒரு லட்சம் *(1,00,000)* செலவு செய்து துாபராமா மற்றும் ஸ்துாபி இருந்த இடைப் பகுதியின் பூமியைத் தோண்டி அவற்றின் இடையே இருந்த பாதை ஒரே சமனாக இருக்குமாறு செய்தார். துாபருமாவின் கிழக்குப்புறம் சிறிய ஸ்துாபியை திகதுாபா *(Dighathupa)* என்ற பெயரில் கட்டினார். மேலும் லன்சகாசனா *(Lanjakasana)* என்ற கட்டிடத்தை புத்த பிட்குக்கள் தங்கிக் கொள்ளவும் கட்டினார். கண்டகதுாபாவிற்கு மேல் ஆடை அணிவது போல இருக்குமாறு கல்லில் செய்யப்பட்ட அங்கியை செய்து போட்டிருந்தார். ஒரு லட்சம் செலவு செய்து கட்டிய விகாராவில் கிரிகும்பிலா *(Girikumbhila)* என்ற பெயரில் கொண்டாடப்பட்ட பண்டிகையில்

புத்த பிட்குக்கள் ஒவ்ஒருவருக்கும் ஆறு உடைகளைத் தரச் சொல்லி இருந்தார்.

மேலும் அரித்த விகாரா *(Arittha-viha)*, குஞ்சரிஹிநாகா *(Kunjarahinaka)* போன்ற விகாராக்களைக் கட்டிய பின் கிராமங்களில் இருந்த மக்களுக்கு இலவசமாக மருந்துவ உதவிகள் செய்தார். பிக்குணிக்கள் எத்தனை அரிசி வேண்டும் எனக் கேட்டாலும் அதைத் தருமாறு ஆணையிட்டார். அவர் ஒன்பது மாதமும் பதினைந்து நாட்களும் ஆட்சி செய்தார்.

லன்சகதிஸ்ஸா மரணம் அடைந்ததும் அவருடைய இளைய சகோதரர் கல்லட்டனஹா (*Khallatanaga*) என்பவர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். லோஹபாதஸாவைச் சுற்றி முப்பத்தி இரண்டு பாசதாக்களைக் கட்டினார். ஸ்துாபியைச் சுற்றி ஹேமமாலி *(Hemamáli)* எனப்பட்ட மணல்கள் நிறப்பிய நடை பாதையைக் கட்டி அதற்கு அப்பால் தடுப்புச் சுவர் எழுப்பினார். குருன்டோவாசகா *(Kurundavásoka)* என்ற விகாராவையும் கட்டிய பின் மேலும் பல நல்ல காரியங்களைச் செய்தார்.

கல்லட்டனஹாவின் *(Khallátanága)* படைத் தலைவரான கம்மஹாரடக்கா *(Kammaharattaka)* என்பவர் கல்லட்டனஹாவிடம் இருந்து ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டார். ஆனால் கல்லட்டனஹாவின் சகோதரர் வட்டகாமனி *(Vattagamani)* என்பவர் அந்தப் படை வீரரைக் கொலை செய்து விட்டு ஆட்சியைப் பிடித்தார். கல்லட்டனஹாவின் மகனான மஹாகுலிகா *(Mahàculika)*

என்பவரை தன்னுடைய மகனாக ஏற்றுக் கொண்ட வட்டகாமனி கல்லட்டனஹாவின் மனைவியை பட்டத்து ராணியாக்கிக் கொண்டார். அதனால் அவர் மஹாகுலிகாவிற்கு தந்தைப் போல ஆக அவருடைய பெயர் பிட்டிராஜா (*Pitiraja*) என ஆயிற்று.

இப்படியாக பதவியில் வந்து அமர்ந்தவருடைய ஐந்தாவது மாத ஆட்சியில் ரோஹன்னா *(Rohana)* என்ற இடத்தில் அவருடைய வம்சத்தை சேர்ந்தவர்களுடைய சொந்த ஊரில் இருந்து வந்த திஸ்ஸா *(Tissa)* என்ற ஒரு பிராமணருடைய பேச்சைக் கேட்டு தவறான நடவடிக்கைகளில் இறங்க தன்னுடைய ஆதரவாளர்களை இழந்தார். விளைவு ஏழு தமிலாக்கள் மஹாதித்தாவிற்கு படையுடன் வந்து சேர்ந்து இராஜ்யத்தை தம்மீம் தந்து விடுமாறு கோரினர். புத்திசாலியான மன்னன் தனக்கு அறிவுறை கூறிய பிராமணரிடம் அந்த இராஜ்யத்தை எடுத்துக் கொண்டு தமிலாக்களை விரட்டுமாறு கூற அவரும் அதை நம்பி தமிலாக்களுடன் யுத்தம் செய்தார். ஆனால் தமிலாக்கள் அவரை தோல்வியுறச் செய்தனர்.

அடுத்து மன்னனுடன் கோலம்பலாகா *(Kolambalaka)* என்ற இடத்தில் யுத்தம் செய்த தமிலாக்கள் அவரையும் வென்றனர். யுத்த பூமியை விட்டு தனது ரதத்தில் ஏறிக் கொண்டு தப்பி ஓடினார் மன்னன். அதைக் கண்ட புத்த பிட்கு அல்லாத ஒரு துறவியான கிரி *(Giri)* எனபவர் ‘அதோ சிங்கம் ஓடுகின்றது’ எனக் கத்தினார். அதைக் கேட்ட மன்னன் தன்னுடைய ஆசை நிறைவேறினால் அந்த இடத்தில் புத்த விகாரா கட்டுவதாக மனதில் பிரமாணம் எடுத்துக் கொண்டார். அவர் தப்பி ஓடுகையில் அனுலாதேவி மற்றும் தான் எடுத்து வளர்த்த மஹாகுலா மற்றும் தன் மகன் என்ற அனைவரும்

காப்பாற்றப்பட வேண்டும் என முடிவு செய்து அவர்களையும் தன்னுடன் அழைத்துச் சென்றார். பாரம் அதிகமாக இருந்ததினால் இரதத்தின் வேகம் குறைந்தது. அதனால் மன்னன் தன்னுடைய இரண்டாம் மனைவியான சோமதேவி *(Somadevi)* என்பவளுக்கு பல நகைகளைக் கொடுத்து அவளை இரதத்தில் இருந்து இறங்கிக் கொள்ளுமாறு கூற அவளும் அவற்றைப் பெற்றுக் கொண்டு தப்பி ஓடினாள்.

யுத்தத்திற்குப் புறப்படும் முன் பயந்து போன மன்னன் தன்னுடன் தன்னுடைய இரண்டு மனைவிகள் மற்றும் மகனையும் இரதத்தில் ஏற்றிக் கொண்டு போயிருந்தார். அவர் யுத்தத்தில் தோற்றுப் போய் ஓடிய நேரத்தில் தேவனாம்பியதிஸ்ஸா காலத்தில் எடுத்து வரப்பட்ட புத்தருடைய புனித சின்னமான பிட்சை பாத்திரத்தை எடுத்துக் கொள்ள மறந்து போய் விட்டார். தப்பி ஓடியவர் வேசகிரி *(Vessagiri)* என்ற காட்டில் ஒளிந்து கொண்டார். குப்பிக்காலா *(Kupikkala)* விகாராவை சேர்ந்த தேரா மஹாதிஸ்ஸா அவரை அந்த காட்டில் கண்டார். அவரைக் கண்டு மனம் இறங்கிய தேரா புத்த பிட்குக்களின் நியதியின்படி பிட்சை எடுத்த உணவை தான் சாப்பிடாமல் புத்த பிட்கு அல்லாதவருக்குக் கொடுக்கக் கூடாது என்பதினால் தான் சாப்பிட்ட உணவில் மீதியை அவர் உண்ண அளித்தார். அவருடைய கருணை மிக்க செயலை மன்னன் ஒரு கேடகா மர இலையில் *(ketaka -leaf)* எழுதி வைத்தப் பின் பல இடங்களை அந்த விகாராவுக்கு எழுதி வைத்தார். சாதாரணமாக அப்படிப்பட்ட செய்திகளை மன்னர்கள் வெள்ளி அல்லது தங்க தட்டுக்களில்தான் எழுதி வைப்பது வழக்கம். அங்கிருந்து தேராவுடன் சென்ற மன்னன் சிலசோபகண்டகா *(Silasobbhakandaka)* என்ற இடத்தை அடைந்து அங்கு வசிக்கலானார். அங்கிருந்து மீண்டும் கிளம்பி

CLICK HERE TO VIEW ENGLISH VERSION

சாமகல்லா *(Samagalla)* என்ற இடத்தின் அருகில் இருந்த முத்துவேலாங்க *(Matuvelanga)* நகருக்குச் சென்றார். தேரா அவரை பாதுகாப்பாக வைத்திருக்குமாறு கூறி தன்னுடைய சிஷ்யரான தனசிவா *(Tanasiva)* என்பவருடன் அவரை அனுப்பினார். மலாயாவில் *(Malaya)* இருந்த அவருடன் மன்னன் பதினான்கு வருடங்கள் வாழ்ந்திருந்தார்.

ஏழு தமிலாக்களில் ஒருவர் சோமதேவியின் மீது காதல் கொண்டு அவளை மணந்து கொண்டு தன்னுடன் அழைத்துக் கொண்டு இந்தியாவிற்குச் சென்று விட்டார். இன்னொரு தமிலாவோ பத்து சித்திக்களையும் கொண்டிருந்த புத்தருடைய பிட்சை பாத்திரத்தை எடுத்துக் கொண்டு இன்னொரு நாட்டிற்கு கிளம்பிச் சென்று விட்டார்.

ஆனால் தமிலா புலஹத்தா *(Pulahattha)* என்பவர் பைய்யா *(Bahiya)* என்ற தமிலாவை தம் படைத் தலைவனாக நியமித்தப் பின் மூன்று வருடங்கள் ஆட்சி செய்தார். பைய்யாவோ மன்னன் புலஹத்தாவைக் கொலை செய்து விட்டு இரண்டு ஆண்டுகள் ஆட்சி செய்தார். அவருடைய படைத் தலைவராக பனையாமரா என்பவர் *(Panayamara)* இருந்தார். பனையாமராவும் பைய்யாவைக் கொன்று விட்டு ததிகா *(Dathika)* என்ற படைத் தலைவரை தன்னுடைய படைக்கு நியமித்தப் பின் ஏழு மாதங்கள் ஆட்சி செய்தார். ததிகா என்ற அந்த தமிலாவும் பிலயமாராவை கொன்று விட்டு அனுராதபுரத்தில் இரண்டு ஆண்டுகள் ஆட்சி செய்தார். இப்படியாக அந்த ஐந்து தமிலாக்களும் பதினாலு வருடங்களும் ஏழு மாதமும் ஆட்சி செய்தனர்.

இதற்கு இடையில் மலாயாவில் ஒரு நாள் மன்னனின் மனைவி

ஒரு பேழையை வைத்திருந்தபடி சென்று கொண்டு இருந்த பொழுது வட்டகாமினியின் மனைவி அனுலாதேவி அவள் மீது மோதி அவளுடைய பேழையை தன்னுடைய காலால் உதைத்து விட , மன்னனின் மனைவி அழுது கொண்டே மன்னனிடம் சென்று அழுதாள். அதைக் கேட்ட தனசிவா கோபமடைந்து தன்னுடைய கையில் வில் ஏந்தி அவரை தாக்க வந்த பொழுது, மன்னனிடம் ஓடிச் சென்ற மனைவி அந்த செய்தியைக் கூற அவசரம் அவசரமாக மன்னன் தன்னுடைய மனைவி மற்றும் மகன்களை அழைத்துக் கொண்டு வெளியேற வந்த பொழுது தனசிவா அவர் மீது அம்பை ஏவ நினைத்த பொழுது அந்த மன்னன் தன் படையினரைக் கூவி அழைக்க நொடிப் பொழுதில எட்டு பேர் பராக்கிரமமான யுத்த ஆயுதங்களை எடுத்துக் கொண்டு ஓடி வந்ததினால் அவர் தப்பினார்.

அங்கிருந்து சென்ற மன்னன் குப்பிக்கலாவின் தேராவான மஹாதிஸ்ஸாவிடம் சென்று ரோஹன்னாவில் இருந்த அச்சகல்ல விகாராவில் *(Acchagalla-vihara)* புத்த வைபவம் நடத்துமாறு வேண்டுகோள் விடுத்தார். அதே நேரத்தில் மன்னனின் மந்திரிகளில் ஒருவரான கபிசிசா *(Kapisisa)* என்பவர் அகாச சிடியாவின் முற்றத்தை பெருக்கச் சென்றப் பின் தீரும்பி வந்து சாலையில் அமர்ந்திருந்தார். அந்த இடத்திற்கு தன்னுடைய மனைவியுடன் சென்ற மன்னன் சாலை ஓரத்தில் அமர்ந்திருந்த மந்திரி தான் வந்த பொழுது எழுந்து தலை குனிந்து நின்று மரியாதை செலுத்தவில்லை என்ற கோபத்தில் அவரை வெட்டிக் கொன்று விட்டார். அதனால் கோபமுற்ற மற்ற ஏழு மந்திரிகளும் அவரை விட்டு விலகிச் சென்று விட்டனர். அவர்கள் சென்று கொண்டு இருந்த பொழுது வழிப்பறிக் கொள்ளைக்காரர்கள் அவர்களிடம் இருந்தவற்றை

கொள்ளை அடித்து விட அவர்கள் ஹம்பகல்லகா *(Hambugallaka)* என்ற விகாராவுக்கு சென்று அடைக்கலம் ஆயினர். அங்கிருந்த தேராவிடம் அவர்கள் அடைக்கலம் ஆகி அவரிடம் இருந்து நான்கு சுத்திரங்களையும் கற்றறிந்தனர். அவரும் தனக்கு கிடைத்த பிட்சையில் எண்ணை, அரிசி, சக்கரை மற்றும் ஆடைகளை அவர்களுக்குக் கொடுத்தார்.

அவர்கள் ஓய்வெடுத்ததும் அவர்களைப் பற்றிய விவரங்களைக் கேட்டறிந்த தேரா 'புத்த போதனைகளைப் பரப்ப உங்களுக்கு எவருடைய துணை அவசியம், தமிலாவுடைய ஆதரவா இல்லை மன்னனின் ஆதரவா' எனக் கேட்க அவர்களும் அந்த இருவரில் மன்னனின் ஆதரவே தேவை எனக் கூற மன்னன் மீது அவர்கள் கொண்டிருந்த காழ்ப்புணர்ச்சியை ஒரு வழியாக மாற்றிய தேரா திஸ்ஸாவும், மஹாதிஸ்ஸாவும் மன்னனையும் வர வழித்து இரு பிரிவுகளிடையே இருந்த மனக் கசப்பை மாற்றி மீண்டும் அவர்கள் ஒண்றிணைந்து செயல்பட வைத்தனர்.

அந்த மன்னனும் அனுராதபுரத்திற்கு வந்து ததிகாவை கொன்று மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றினார். அவர்கள் புத்த விகாராக்களைப் போல கட்டி இருந்த அரமா *(Arama)* என்ற கட்டிடங்களை இடித்துத் தள்ளிய பின் பன்னிரண்டு அறைகளைக் கொண்ட விகாராவை அங்கு கட்டினார். மஹாவிராஹா கட்டப்பட்டு இருநூற்றிப் பதினேழு ஆண்டுகள், பத்து மாதங்கள் மற்றும் பத்து நட்கள் கழிந்த பின் அபயகிரி விகாராவை *(Abhayagiri-vihara)* அங்கு எழுப்பிய மன்னன் இரண்டு தேராக்களையும் வரவழித்து அதை தான் தவித்திருந்த நேரத்தில் இரு முறை தமக்கு அபயம் அளித்த தேரா மஹாதிஸ்ஸாவிற்கு அந்த விகாராவை அர்பணித்தார்.

வட்டகாமனியின் முழுப் பெயர் வட்டகாமினி அபய்யா என்பதினாலும், கிரி என்ற இடத்தில் தமிலாக்கள் கட்டிய நிகன்தாவை இடித்து விகாராவை அந்த இடத்தில் எழுப்பியதினாலும், அது அபயகிரி விகாரா எனப் பெயர் பெற்றது.

அதன் பின் அந்த மன்னன் சோமாதேவியை வரவழித்து அவளுடைய பெயரில் சோமராமா *(Somarama)* என்ற மடாலயத்தை நிறுவி அவள் நடுவே இழந்திருந்த அந்தஸ்தை மீண்டும் மீட்டுக் கொடுத்தார். யுத்த பூமியில் இருந்து தப்பிச் சென்ற பொழுது, அவளை வழியில் இறக்கிவிட்டுச் சென்றதும் அவள் கடம்பா மலர் கொடிகள் சூழ்ந்திருந்த இடத்தில் மறைந்து கொண்ட பொழுது, அந்த மறைவான இடத்தில் காலைக் கடன்களை கழித்துக் கொண்டு இருந்த சாமனேராவின் உதவியுடன் அவள் தப்பியதால் அந்த இடத்திலும் ஒரு விகாராவை அமைத்தார்.

ருவான்வாடிகடபா *(Ruwanwaelidagaba)* வின் வடக்குப் பகுதியில் சுமார் ஒரு மைல் தொலைவில் சிலசோபஹகன்டகா *(Silasobbhakandaka)* என்ற சிடியாவையும் நிறுவினார். மன்னரின் ஏழு பராக்கிரமசாலி வீரர்களில் உதயா என்பவர் தென் பகுதியில் தஷ்ஷிண விகாராவைக *(Dakkhina-vihara)* கட்டினார். அதே இடத்தில் இன்னொரு மந்திரியான முலா என்பவர் முலவோசவ விகாராவைக் *(Mulavokasavihãra)* கட்டினார். மந்திரி சலியா என்பவர் சலியாரமாவையும் *(Saliyarama)* , பப்பத்தா என்பவர் பப்பத்தரமாவையும் *(Pabbatarama)*, திஸ்ஸா என்பவர் உத்தரதிஸ்ஸரமாவையும் *(Uttaratissarãma)* கட்டினர். அவற்றைக் கட்டி முடித்ததும் தேரா திஸ்ஸாவை வரவழித்து தமக்கு சமயத்தில் அவர் செய்த

உதவிக்குக் கைமாறாக அவற்றை அவருக்கு அர்பணிப்பதாகக் கூறினார்கள்.

தேராவும் பல்வேறு இடங்களிலும் இருந்த புத்த பிட்குக்களை அழைத்து அவரவர் தகுதிக்கேற்ப அந்த விகாராக்களில் தங்க வைத்தார். அவர்களுடைய எண்ணிக்கை மிக அதிகமாக இருந்தாலும் அவர்களுக்கு எந்த விதமான குறைகளும் இருக்கூடாது என நினைத்த மன்னன் அவர்களுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களும் தாராளமாகக் கிடைக்க ஏற்பாடுகள் செய்தார்.

மஹாதிஸ்ஸா என்ற தேரா அடிக்கடி மடாலயத்தை விட்டு வெளியேறி ஊரில் இருந்த பிட்குக்கள் அல்லாத பாமர மக்களுடைய வீடுகளுக்கும் சென்று கொண்டு இருந்ததினால் அவரை மடத்தில் இருந்து வெளியேற்றினர். அவருடைய சிஷ்யரான பஹாலமசுத்டடிஸ்ஸா *(Bahalamassutissa)* என்பவர் கோபமடைந்து அங்கிருந்து கிளம்பிச் சென்று அபயகிரி விகாராவில் போய் தங்கி தனிப் பிரிவைத் துவக்கினார். சிறிது காலத்திற்குப் பின்னர் அபயகிரி விகாராவில் இருந்து பிரிந்து சென்ற தஷ்ஷிண விகாராவை சேர்ந்தவர்கள் இரண்டாகப் பிரிந்த தேரவாடா பிரிவினர்களுடன் சேர்ந்து கொண்டு இன்னொரு பிரிவாயினர்.

பிரிந்து கொண்டேஇருந்த பிரிவினரைக் கண்ட மூன்று பித்தாக்களைச் சேர்ந்த பிட்குக்கள் மூல அத்தகதா *(புத்தரின் கதை)* அழிந்து விடக் கூடாது என நினைத்ததினால் அதுவரை வாய் மொழியினால் கூறப்பட்டு வந்திருந்த போதனைகளையும் மற்ற செய்திகளையும் புத்தகம் போல் எழுதி வைக்கத் துவங்கினர்.

வட்டகாமானி அபய்யா இப்படியாக பன்னிரண்டு வருடங்கள் ஆட்சி செய்தார். அதற்கு முன் தமிலாக்களினால் விரட்டி அடிக்கப்பட்டதற்கு முன்னர் ஐந்து மாதங்கள் ஆட்சி செய்திருந்தார்.

தன்னுடைய மன அமைதியையும் மக்களுடைய நலனையும் மனதில் கொண்டு அதற்காக உழைத்தபடி ஆட்சி செய்பவரே புத்திசாலி மன்னன் ஆவார். ஆனால் மற்றவர்களுடைய நலனை சற்றும் நினைத்துப் பார்க்காமல், சுயநலவாதியாக இருந்து கொண்டு இருப்பவர் எத்தனை பெரிய பதவியில் இருப்பினும் மன அமைதி பெறுவதில்லை.

புனிதரின் பக்தி மார்கத்தில் இணைந்த புத்த பக்தர்களின் மனதில் பேரானந்தம் பொங்கிட வழி வகுத்த கருணா மூர்த்தியின் முப்பத்தி மூன்றாம் பாகமான ‘பத்து மன்னர்கள்’ என்ற பகுதி முடிவுற்றது.

CLICK HERE TO VIEW ENGLISH VERSION

34: பதினோறு மன்னர்கள்

அவருடைய மரணத்திற்குப் பிறகு மஹாகுலி மஹாதிஸ்ஸா *(Mahácúlí Mahátissa)* என்பவர் பதினான்கு ஆண்டுகள் நீதி நேர்மையுடன் ஆட்சி செய்து வந்தார். தன்னுடைய உழைப்பினால் பெற்ற பணத்தைக் கொண்டு தானங்களை செய்வதுதான் சிறப்பு என நம்பிய மன்னன் தாம் பதவி ஏற்ற ஒரு வருடத்தில் மாறு வேடம் அணிந்து கொண்டு தினமும் சிறிது நேரம் ஒரு வயலில் தொழிலாளி போல வேலை செய்து அதில் கிடைத்த சம்பாத்தியத்தில் மஹாசுமன்னாவுக்கு பிட்சை அளித்தார். அம்பத்தகோலாவின் (*Ambatthakola*) அருகில் இருந்த தங்க மலை எனப்பட்ட சோனகிரியில் இருந்த மூன்று கரும்பாலையில் வேலை செய்து அதில் கிடைத்த கூலியான வெல்லத்தையும் எடுத்து வந்து அதையும் தானமாகக் கொடுக்க ஏற்பாடு செய்தார். அவர் முப்பதாயிரம் *(30,000)* பிட்குக்களுக்கும் பன்னிரண்டாயிரம் *(18,000)* பிட்குணிகளுக்கும் ஆடைகள் தானம் செய்தார்.

அவர் மேலும் ஒரு உன்னதமான விகாராவைக் கட்டிய பின் ஒவ்ஒருவருக்கும் ஆறு ஆடைகள் என அறுபதாயிரம் *(60,000)* பிட்குக்களுக்கும் அறுபதாயிரம் *(60,000)* பிட்குணிகளுக்கும் கொடுத்தார். அதே மன்னன் மண்டவாபி விகாரா, வங்கவாட்டகல்லா *(Vankavattakagalla)* இ திஹபஹுகல்லகா (Dighabahugallaka), மண்டவாபி விகாரா *(Mandavapi)* மற்றும் ஜலாகம *(Jalagama-vihara)* போன்ற விகாராக்களையும் கட்டினார். பதினான்கு வருடங்கள் ஆண்ட பின் தான் செய்த நற் காரியங்களின் விளைவாக சுவர்கத்திற்குச் சென்றார்.

CLICK HERE TO VIEW ENGLISH VERSION

வட்டகாமனியின் ஒரு புதல்வாரன கோரனாகா *(Coranaga)* என்பவர் மஹாசுலாவின் *(Mahácúla)* ஆட்சியில் புத்த சமயத்திற்கு மாறுபட்ட கொள்கைகளைக் கொண்டவராக இருந்தார். மஹாசுலா மறைந்த பின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவர் எவரும் வந்து தங்காத பதினெட்டு விகாராக்களை இடித்து விட்டார். பன்னிரண்டு ஆண்டுகள் அந்த மதி கெட்ட மன்னர் ஆட்சி செய்தார். அவருடைய மனைவி கொடுத்த விஷம் கலந்த உணவை உண்டவர் மரணம் அடைந்து லோகதாரிகா *(Lokantarika-hell)* என்ற நரகத்திற்குச் சென்றார்.

அவர் மரணம் அடைந்த பின் மஹாசுலாவின் மகனான திஸ்ஸா என்பவர் ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்தார். கோரநாகாவின் *(Coranaga)* மனைவியான அனுலா *(Anulá)* என்பவள் அந்த அரண்மனை காவலாளி ஒருவனுடன் இருந்த கள்ளக் காதலினால் தனது கணவனுக்கு உணவில் விஷம் கலந்து கொடுத்து சாகடித்து விட்டதைப் போலவே திஸ்ஸாவிற்கும் உணவில் விஷம் கலந்து கொடுத்து அவரை கொன்ற பின் காதலனுக்கு அந்தப் பதவியைத் தந்தாள்.

அரண்மனை முதல் சுற்றுக் காவலில் இருந்த அந்த காவலாளி அனுலாவை தனது பட்டத்து இராணியாக்கிக் கொண்டு ஒரு வருடம் இரண்டு மாதம் ஆண்ட பின் அவனையும் அவள் விஷம் வைத்துக் கொன்றாள். அதற்குக் காரணம் நகரத்தில் இருந்த தமிலா வடுகா *(Damila Vatuka)* என்ற தச்சனிடம் அவளுக்கு ஏற்பட்டிருந்த காதலே. தமிலா வடுகா பதவி ஏற்றுக் கொண்ட பின் அனுலாவை தனது பட்டத்து இராணியாக்கிக் கொண்டு ஒரு வருடம் இரண்டு மாதம் ஆண்டார்.

CLICK HERE TO VIEW ENGLISH VERSION

மீண்டும் அனுலா அரண்மனைக்கு விறகுகள் சுமந்து வந்த தாரு பாடிக டிஸ்ஸா *(Daru Bhatika Tissa)* என்பவன் மீது காதல் கொண்டு வாடுகாவையும் விஷம் வைத்துக் கொன்ற பின் விறகு சுமந்த டிஸ்ஸாவை ஆட்சியில் அமர்த்தினாள். அவனும் அனுலாவை தனது பட்டத்து இராணியாக்கிக் கொண்டு ஒரு வருடம் ஒரு மாதம் ஆண்டார். மஹாமேஹவனாவில் தெரியாத்தனமாக அவன் ஒரு குளத்தைக் கட்டினான். அதில் சென்று குளித்து வந்த அனுலா அங்கிருந்த பிராமண பூசாரி நிலியா என்ற தமிலாவை கண்டு அவர் மீது காதல் கொண்டதின் விளைவாக தாரு பாடிக டிஸ்ஸாவையும் விஷம் வைத்துக் கொன்று விட்டாள். அதன் பின் நிலியாவிடம் பதவியைத் தர அவரும் அவளை மணந்து கொண்டு ஆறு மாதங்கள் அனுராதபுரத்தில் அவள் பேச்சைக் கேட்டிருந்தபடி ஆண்டு வந்தார். ஆனால் மேலும் மேலும் காம உணர்வு கொண்ட அனிலா அரண்மனை காவலாளிகள் முப்பத்தி இரண்டு பேர்களுடன் உறவு கொள்ளத் துடித்து, நிலியாவையும் விஷம் வைத்துக் கொன்ற பின் தானே அரியணை ஏறி நான்கு மாத காலம் நாட்டை ஆண்டாள்.

ஆனால் அனுலாவின் கொடுமைகளுக்குப் பயந்து அரண்மனையை விட்டு ஓடிப் போய் இருந்த மஹாகுலிகாவின் இரண்டாம் மகனான குட்டகன்னதிஸ்ஸா *(Kutakanna Tissa)* என்பவர் பப்பஜ்ஜா உபதேசம் பெற்று தன்னுடன் ஒரு பெரும் சேனையை திரட்டிக் கொண்டு வந்து அனுலாவைக் கொன்ற பின் இருபத்தி இரண்டு ஆண்டுகள் ஆட்சியில் இருந்தார். அவர் சிடியா மலையில் உபோஸ்தா பண்டிகைக் கொண்டாட பெரிய கட்டிடத்தைக் கட்டியது மட்டும் இன்றி அதன் கிழக்குப்புறமாக ஸ்துாபி ஒன்றையும் கட்டிய பின், போதி மரம் ஒன்றையும் அங்கு நட்டார்.

இரண்டு நதிகளுக்கு இடையே பேலகாம விகாராவை *(Pelagamavihara)* அமைத்தார். அதன் பக்கத்திலேயே வானகா *(Vannaka)* மற்றும் அம்படுக்கா *(Ambadugga)*, பயோலுப்பலா *(Bhayoluppala)* போன்ற குளங்களையும் அமைத்தார். நகரை சுற்றி ஏழு கியூபிக் உயர அளவில் பெரிய சுவற்றைக் கட்டி அதன் பக்கத்தில் பெரிய அகழியையும் வெட்டினார்.

அனுலாவின் உடலை எரித்த அரண்டனை வளாகத்திற்கு சற்று தள்ளி இன்னோரு புதிய அரண்மனையை கட்டினார். நகரில் பதுமாசுர *(Padumassara)* என்ற பெயரில் பூங்காவைக் கட்டினார். அவருடைய தாயார் தன்னுடைய இளம் வயதிலேயே, அதாவது முதலில் பல் துலக்கத் துவங்கிய கால கட்டத்திலேயே புத்த சமயத்திற்கு வந்து விட்டவள். அதனால் தன்னுடைய குடும்ப நிலத்தில் அவருடைய தாயாருக்காக கன்னி மடாலயம் ஒன்றைக் கட்டி அதன் பெயரை தண்டகேஹா *(பல் வரிசை வீடு)* என வைத்தார்.

அவருடைய மரணத்திற்குப் பின் இளவரசர் பட்டிகபைய்யா *(Bhatikabhaya)* என்பவர் ஆட்சி பொறுப்பை ஏற்று இருபத்தி எட்டு ஆண்டுகள் ஆண்டார். அவர் மஹாதாதிக்கா *(Mahadathika)* என்ற நேர்மையான மன்னருடைய சகோதரர் என்பதினால் அவருடைய பட்டப் பெயர் படிகராஜா *(Bhatikaraja)* என ஆயிற்று. அவர் லோஹபாதசாதாவை சீர்படுத்தி இரண்டு வேடிகாக்களைக் *(vedikas)* கட்டினார். அங்கு கட்டப்பட்ட உபோசதாவின் *(உபதேச மண்டபம்)* பெயரை ஸ்துாபியின் நிவைாக துாபராமா *(Thuparama)* என வைத்தார்.

நகரைச் சுற்றி ஒரு யோஜனை துாரத்திற்கு சுமன்னா மற்றும் உஜ்ஜுக்கா போன்ற இரண்டு விதமான மல்லிகை மலர்

செடிகளை நட்டு வளர்க்கும்படி ஆணையிட்டார். மக்கள் மீது சுமத்தப்பட்டிருந்த பல வரிகளை விலக்கினார். வேடிகாவின் கீழ் பகுதியில் இருந்து சிடியாவின் மேல் பகுதி வரை இருந்த பாதையின் இருபுறமும் இருந்த சுவர்கள் மீது நாலு விரல் அளவு ஒரு விஷேச தைலத்திலான கலவைப்பூச்சு போடச் சொல்லி அந்த இடத்தில் நறுமணம் தந்த மலர்ச் செடிகளை மிகவும் அடர்த்தியாக வைக்கச் சொல்லி அந்த ஸ்துாபி இருந்த இடத்தை மலர் பூமி போல் ஆக்கினார்.

இன்னொரு முறை சிடியா முழுவதும் எட்டு விரல் அளவு தடிமனாக அந்த விஷேச தைலப்பூச்சு போடச் சொல்லி அனைத்து இடத்தையும் மலர் சோலையாக்கினார். அபய்யா ஏரியில் இருந்து குழாய் மூலம் தண்ணீர் எடுத்து வந்து ஸ்துாபி மீது நீர் பொழிந்த வண்ணம் இருக்கும் விதத்தில் செயற்கை நீருற்று வைக்க ஏற்பாடு வைத்தார். நுாறு வண்டி நிறைய வந்த முத்தை விஷேச எண்ணை தடவிய கயிற்றில் மிக நெருக்கமாகக் கோர்க்கக் கூறி ஸ்தாபாவிற்கு அந்த மாலையை அர்பணித்தார். சிடியாவை சுற்றி பவழம் மற்றும் தங்கத்திலான பூக்களை வலைபோல பின்னிப் போட்டு வணங்கி வந்தார்.

ஒரு முறை புனித அறையின் உள்ளே பல அரஹன்துக்கள் ஒருமித்த குரலில் எதோ ஓதிக் கொண்டு இருந்தது போல உணர்ந்தவர் அவர்களை தானனால் பார்க்க முடியவில்லை என்றால் அங்கிருந்து போகக் கூடாது என முடிவு செய்து உண்ணாவிரதத்தில் அமர்ந்து விட்டார். அதனால் தேராக்கள் விஷேசமான நுழை வாசல் அமைத்து அவரை புனித அறைக்கு உள்ளே அழைத்துச் சென்று காட்டினர். உள்ளே சென்று திரும்பியவர் தாம் கண்ட காட்சிகளைப் போன்ற உருவச்

சின்னங்களை சிடியாவில் அமைக்க சொல்லி காட்சிப் பொருட்களாக அவற்றை வைத்தார்.

சிடியாவிலும் அதைச் சுற்றியும் தேன் கூடுகள், வாசைன தரும் மலர்கள், மலர் கொத்துக்களுடன் கூடிய குடுவைகள், முட்டி அளவு நீரில் வரிசையாக மிதந்து கொண்டிருந்த தாமரை மலர்கள் போன்றவை இருந்தன. அவற்றைத் தவிற வெண்ணையில் ஊற வைத்த திரிகளை உபயோகித்து ஏற்றி வைக்கப்பட்ட தீபங்கள், மதுகுலா *(madhuka)* என்ற எண்ணையிலும், நல்லெண்ணையிலும் ஏற்றப்பட்ட விளக்குகள் என அனைத்தும் ஸ்துாபாவிற்கு அழகு சேர்க்க, அங்கு ஏழு வேளைகள் நிவேத்தியம் படைக்கப்பட்டன.

ஒவ்ஒரு வருடமும் தொடர்ந்து கட்டிடம் வெள்ளையடிக்கப்பட்டு வண்ணம் பூசி பராமரிக்கப்பட்டது. அது முடிந்ததும் அதை கொண்டாடும் விதத்தில் அங்கு விழா கொண்டாடப்பட்டது. அது போல போதி மரத்திற்கும் பூஜைகள் செய்யப்பட்டு விழா நடைபெற்றது. அதைத் தவிற ஸ்துாபாவின் பெருமையை பறைசாற்றும் வேசக பண்டிகைகள் *(Vesakha-festivals)* என்ற பெயரில் இருபத்தி எட்டு பண்டிகைகளும், எட்டாயிரத்து நான்கு சிறிய பண்டிகைகளும் கொண்டாடப்பட்டன. அந்த விழாக்களில் நடனமாடுவோர், பல்வேறு வாத்திய- இசைக் கலைஞர்கள், போன்றவர்கள் பங்கேற்றனர். தினமும் மூன்று முறை அந்த இடத்திற்குச் சென்று புத்தரை வணங்கி மலர்க் மத்தளம் *(flower-drum)* என்ற பெயரில் மலர்கள் துாவி அதை ஆராதித்தார். புத்த சமய போதனைகள் செய்து கொண்டு இருந்தவர்களுக்கு நிறைய வெகுமதிகள் தொடர்ந்து வழங்கப்பட்டன. அது போல பாவரன சடங்குகளிலும் *(pavarana-ceremony)* தானங்கள் தரப்பட்டன. துறவிகளுக்கு

எண்ணை, வெல்லம், ஆடைகள் போன்றவை தாராளமாக வழங்கப்பட்டன. ஒன்று பழுதடைந்து விட்டால் இன்னொன்று இருக்கட்டும் என்பதற்காக அனைத்து நகர்களிலும் சிடியாக்கள் கட்ட நிறைய இடங்கள் ஒதுக்கப்பட்டன. பப்பத்தாவில் தினமும் ஆயிரம் பிட்குக்களுக்கு அடையாள அட்டைகள் தரப்பட்டு உணவு வழங்கப்பட்டன. அரண்மனை, சிட்டபட்டன்பாசதா *(Cittupatthanapasada),* மனியுபட்டன்பாசதா *(Maniupatthanapasada),* பதுமா வீடு *(Paduma-house)* மற்றும் சட்டப்பாசதா *(Chattapasada)* போன்ற ஐந்து இடங்களில் புனித பிட்குக்களுக்கு மரியாதைகள் செய்யப்பட்டு அவர்களுக்குத் தேவையான பொருட்கள் தரப்பட்டன. மேலும் தனக்கு முந்தைய மன்னர்கள் புத்த சமயத்தின் மேன்மைக்காக செய்து வந்திருந்த அனைத்துக் நற் காரியங்களையும் மன்னன் படிகாவும் *(Bhatika)* தொடர்ந்து செய்து வந்தார்.

படிகராஜா மரணம் அடைந்தப் பின் அவருடைய இளைய சகோதரர் மஹாதீதிக மஹாநகரா *(Mahadathika Mahanaga)* என்பவர் பன்னிரண்டு ஆண்டுகள் பற்பல நற் பணிகளை செய்தவாறு ஆண்டார். ஸ்துாபாவை கிளின்சிகா பாறைகளைக் *(kincikkha-stones)* கொண்டு பலப்படுத்தினார். சுற்றிலும் இருந்த நடை பாதைகளில் போடப்பட்டு இருந்த மண்ணிற்கு பதில் நல்ல தளம் அமைத்தார். விகாராக்களில் சமய போதனைகள் செய்பவர்களின் வசதிக்காக ஆசனங்கள் செய்து தந்தார். தியான மண்டபம் இருந்த கட்டிடம் வலுவாக இல்லை என்பதினால் அங்கு அம்பத்தால ஸ்துாபியைக் *(Ambatthala-thupa)* கட்டினார். அவர் தியானம் செய்து கொண்டிருந்த பொழுது அவர் மீது மேலிந்த கட்டிடத்தில் இருந்து கற்கள் உடைந்து விழுந்ததினால் அதைக் கட்டினார். இப்படியாக அந்த கட்டிடத்தை வலுவாகக் கட்டிய பின் நான்கு

நான்கு வாயில்களிலும் அற்புதமான இரத்தினங்கள் பதித்த அலங்கார வளைவுகளை அமைக்க ஏற்பாடுகள் செய்தார். சிடியாவை சுற்றி ஒரு யோஜனை துாரத்திற்கு நான்கு நுழை வாயில்களை அமைத்து அற்புதமான சாலைகளை கட்டச் செய்து அந்த சாலையின் இருபுறமும் கடைகளை நிறுவச் சொன்னார். அந்த சாலையின் வழி நெடுங்கிலும் அங்காங்கே வரவேற்பு வளைவுகள், அலங்காரத் தோரணங்கள், கொடிகள், என பலவும் அமைக்கப்பட்டது. அது மட்டும் அல்ல சாலை விளக்குகள் அனைத்து இடங்களிலும் , ஏன் ஒரு யோஜனை துாரத்திற்கு கடலிலும் கூட போடப்பட்டன. குடம்பா நதியில் இருந்து சிடியா மலைப் பகுதி வரை போடப்பட்டிருந்த சாலையில் மக்கள் நடந்து செல்ல கம்பளம் போடப்பட்டு இருந்தது. சிடியா சீரமைக்கப்பட்ட பின் நடந்தேறிய விழாவிற்கு இவ்விதமான வசதிகளை செய்திருந்த மன்னன் , அந்த நிகழ்சியை கிரிபந்தா காணிக்கை *(Giribhanda-offering)* என அழைத்தார்.

புத்த பிட்குக்களுக்கு தானங்களை கொடுக்க எட்டு இடங்களில் ஏற்பாடு செய்திருந்த அந்த இராஜ்யத்தின் அதிபர், தங்கத்திலான மேளத்தினை அடித்து புத்த பிட்குக்களை அங்கு நடந்த விழாவிற்கு அழைத்து அங்கு வந்த இருபத்தி நாலாயிரம் பிட்குக்களுக்கு தானம் தந்தார். ஒவ்ஒரு பிட்குவிற்கும் ஆறு உடைகளைத் தந்தும், சிறையில் இருந்தவர்களுடைய தண்டனைக் காலத்தைக் குறைத்தும் நற்பணிகள் செய்தார். நான்கு வாசல்களிலும் அமர்ந்திருந்த முடி வெட்டும் தொழிலாளிகளுக்கு அந்த இடங்களிலேயே நிரந்தரமாக தங்கிக் கொண்டு தமது தொழிலை செய்து கொண்டிருக்கவும் அதிகாரம் கொடுத்தார். அவருடைய முன்னோர்கள் செய்து வந்திருந்த நல்ல பணிகளை அவருடைய

அவருடைய மூத்த சகோதரர் முடக்கி வைத்திருந்தார். ஆகவே நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த அந்த பணிகளை மீண்டும் துவக்கி அனைத்தையும் முடித்து வைத்தார். புத்த பிட்குக்களிடம் தன்னையும், தன்னுடைய மனைவி, இரு மகன்கள், பட்டத்து யானை, நாட்டு குதிரை போன்றவற்றையும் மன்னன் அர்பணிக்க முயன்ற பொழுது அதை ஏற்க மறுத்த பிட்குக்கள் அதை தடுத்து நிறுத்தினார்கள்.

புத்த பிட்குக்களுக்கு ஆறு லட்ச *(6,00,000)* செலவிலும், பிட்குணிகளுக்கு ஒரு லட்ச *(1,00,000)* செலவிலும் அவரவர் தேவைகளுக்கேற்ப பல தானங்களை செய்தார். கல்யானகானிக்காவில் *(Kalayanakannika)* இருந்த மன்னன் மனினகபப்பட்தா *(Maninagapabbata)* மற்றும் கபுகண்டா *(Kubukanda)* என்ற விகாராக்களையும் கட்டினார். நதிப் பக்கத்தில் சமுத்த விகாராவையும் *(Samudda-vihara)* , ரோஹன்னாவில் இருந்த ஹுவககானிக்கா *(Huvacakannika)* என்ற இடத்தில் குலநாகபப்பட்டா *(Culanagapabbata)* என்ற விகாராவையும் கட்டினார். முன்னர் பாசனதீபகா *(Pasanadipaka)* என்ற விகாராவுக்கு சென்றிருந்த பொழுது மன்னனுக்கு அங்கிருந்த ஒரு சாமனீரா தண்ணீர் கொடுத்து உதவியதால் அரை யோஜனை தூர காலி நிலத்தை அவர் தங்கி இருந்த அந்த விகாராவுக்கு தானமளித்தவர், அதை பிட்குக்களின் உபயோகத்திற்கென பயன் படுத்துமாறு கூறினார். அது போலவே மண்டவாபி *(Mandavapi)* என்ற விகாராவில் தமக்கு உதவிய மற்றோரு சாமனீராவின் விகாராவுக்கும் அங்கிருந்த பிட்குக்களின் உபயோகத்திற்கென நிலம் கொடுத்தார்.

எவர் ஒருவர் அனைவரிடமும் ஒருமித்தக் கருத்துக்களுடன்

ஒன்றிணைந்து வாழ்கின்றாரோ, மமதையையும், சோம்பேறித்தனத்தையும் வெற்றி கொண்டு, சிற்றின்ப ஆசைகளில் இருந்து தம்மை விடுவித்துக் கொள்கின்றாரோ, அப்படிப்பட்டவர் ஆட்சிப் பொறுப்பேற்றால் மக்கள் ஒருவரும் துன்பத்தைத் அனுபவிப்பதில்லை. அப்படிப்பட்ட ஆட்சியாளர்கள் நல்ல துாய்மையான காரியங்களையே நம்பிக்கையுடன் செய்வார்கள் என்பதில் ஐயம் இல்லை.

புனிதரின் பக்தி மார்கத்தில் இணைந்த புத்த பக்தர்களின் மனதில் பேரானந்தம் பொங்கிட வழி வகுத்த கருணா மூர்த்தியின் முப்பத்தி நான்காம் பாகமான ‘பதினோரு மன்னர்கள்’ என்ற பகுதி முடிவுற்றது.



ஓவியர் பார்வையில் அன்றைய புத்த பிட்குக்கள்

35: பன்னிரண்டு மன்னர்கள்

மஹாடதிக்காவின் *(Mahadathika)* மரணத்திற்குப் பின் அவருடைய மகனான அமண்டகாமினி அபய்யா *(Amandagamani Abhaya)* என்பவர் ஒன்பது வருடங்களும் எட்டு மாத காலமும் ஆட்சி செய்தார். ஸ்துாபாவின் மேலிருந்த வெண் சாமரக் குடையின் *(parasol)* உயரத்தை இன்னுமும் உயரமாக்கி மெல் பகுதியிலும், கீழ் பகுதியிலும் வேதிகளைக் *(vedi- விடுதி)* கட்டினார். லோஹபாதசாவில் உள் வராண்டா மற்றும் முற்றத்தையும் கட்டினார். அது போல துாபராமாவின் உபோஸ்தாவிலும் கட்டினார். இரண்டுக்கும் உயர்தரமான இரத்தினங்கள் கொண்ட கூடாரத்தையும் *(pavilion)*, இராஜதாலின விகாராவையும் *(Rajatalena-vihara)* கட்டினார். அனுராதபுரத்தில் மஹாகமேன்தி *(Mahagamendi)* என்ற குளத்தை கட்டி அதை தட்ஷண விகாராவுக்கு அர்பணித்தார். அந்த நாட்டின் எந்த ஒரு பகுதியிலும் எவரும் கொலை செய்யக் கூடாது என கடுமையான உத்தரவு போட்டிருந்தார். பல்வேறு வகையான திராட்சைக் கொடிகளை பல இடங்களிலும் வளர்க்கச் சொல்லியிருந்த மன்னன் அமன்தியா, கிரிணிப் பழங்களையும், ஆடைகளையும் அமன்தகாமினி *(Amandagamani)* என்பவர் பெயரில் தானம் செய்தும் தன்னுடைய நற்காரியங்களைத் தொடர்ந்தார்.

அவருடைய இளைய சகோதரரான கனிராஜனுதிஸ்ஸா எப்பவர் தன்னுடைய சகோதரரைக் கொன்று விட்டு மூன்று வருடங்கள் ஆட்சியில் இருந்தார்.நாட்டு நலனுக்கு எதிராக இருந்த அறுபது பிட்குக்களை அவர்கள் வைத்திருந்த பொருட்களுடன் பிடித்து வரச் செய்து தீமை செய்த அவர்களை கனிரா

CLICK HERE TO VIEW ENGLISH VERSION

(Kanira) என்ற குகையில் அடைத்து வைக்குமாறு ஆணையிட்டார். கனிராஜனுவின் *(Kanirajanu)* மரணத்திற்குப் பின் அமந்தகாமனியின் புதல்வாரன குலபைய்யா *(Culabhaya)* ஆட்சிப் பொறுப்பை ஏற்று ஒரு வருடம் ஆண்டார். அவர் தலைநகரின் தென் பகுதியில் குலகல்ல *(Culagallaka)* என்ற விகாராவைக் கோனகா நதிக்குப் *(Gonaka-river)* பக்கத்தில் கட்டினார்.

குலபைய்யாவின் மரணத்திற்குப் பின் அவருடைய சகோதரியான சிவாலி *(Sivali)* என்பவள் நான்கு மாதங்கள் ஆட்சியில் இருந்தாள். அவள் அமன்தாவின் *(Amanda)* மகள். ஆனால் அமன்தாவின் மருமகனான இலநகா *(Ilanaga)* என்பவர் சிவாலியை பதவியில் இருந்து துரத்திவிட்டு தான் மன்னன் ஆனார். ஒரு வருடம் பதவியில் இருந்த அவர் ஒரு நாள் டிஸ்ஸா ஏரிக்கு போய் இருந்த பொழுது அவருடன் சென்று இருந்த லம்பகன்னாக்கள் *(Lambakannas)* என்ற ஒரு இனத்தவர் அவரை தனியே விட்டுவிட்டு தலை நகருக்குத் திரும்பி விட்டனர். அதனால் கோபமுற்ற மன்னன் அவர்களுக்குத் தண்டைனையாக அவர்கள் அந்த ஏரியின் பின்புறத்தில் இருந்து மஹாதுபா வரை உறுதியான சாலையை அமைக்க வேண்டும் என ஆணையிட்டு, அவர்களுடைய வேலையைக் கண்காணிக்க கெளடலா *(caudalas)* என்பவர்களை மேற்பார்வையாளர்களாக நியமித்தார். அதனால் கோபமற்ற லம்பகன்னாக்கள் அனைவரும் திரண்டு வந்து மன்னனை சிறை பிடித்து அரண்மனையிலேயே கைதியாக வைத்து நாட்டின் ஆட்சியை தாம் ஏற்றனர். அந்த மன்னனின் மனைவியோ தன்னுடைய மகன் கண்டமுகசிவாவை ஒரு துணியால் மூடி மறைத்து தன்னுடைய பணிப் பெண்ணிடம் கொடுத்து பட்டத்து

யானையிடம் சென்று அவனை அதனிடம் விட்டுவிட்டு வருமாறு கூறி இருந்தாள். அதோடு அந்த யானைக்கு ஒரு செய்தியையும் அனுப்பி இருந்தாள்.

அந்த வேலைக்காரிகள் சிறுவனை யானையிடம் அழைத்துச் சென்று 'இது எங்களுடைய மன்னின் குழந்தை. அவர் சிறையில் இருக்கின்றார். இந்த சிறுவனை மன்னனை சிறைப் பிடித்துள்ள அந்த மூர்கர்கள் கொல்வதை விட உன்னால் கொல்லப்படட்டும் என்பதற்காக இராணி உன்னிடம் விட்டு விட்டு வரச் சொல்லி அனுப்பி உள்ளார்' என்று கூறிவிட்டு அவனை அதன் காலடியில் கிடத்தினர். அதைக் கேட்டு கண்ணீர் வடித்த யானை கோபமடைந்து தன்னைக் கட்டி இருந்த கயிற்றை அறுத்துக் கொண்டு, கம்பத்தை உடைத்து ஆவேசமாக அரண்மனையை நோக்கி ஓடியது. அரண்மனையின் பிரதான வாயிலை உடைத்துக் கொண்டு உள்ளே சென்ற யானை சிறையில் மன்னன் இருந்த இடத்தை அடைந்து சிறையின் கதவுகளை உடைத்து மன்னனை மீட்டு தன் முதுகில் அவரை ஏற்றிக் கொண்டு மஹாதித்தாவிற்குச் ஓடிச் சென்றது. அந்த இடத்தில் இருந்த ஒரு கப்பலில் மன்னனை ஏற்றிவிட்ட பின் மலாயாவை நோக்கி தானும் சென்று விட்டது.

அந்த மன்னன் அடுத்த நாட்டிற்குச் சென்று மூன்று வருடங்கள் வாழ்ந்த பின் படையை திரட்டிக் கொண்டு ரோஹன்னாவிற்குச் சென்றார். சக்கஹரசோபா *(Sakkharasobbha)* என்ற துறைமுகத்தை அடைந்தவர் அங்கு இன்னும் பெரும் சேனையை திரட்டினார். இதற்கிடையே மலாயாவில் இருந்து பட்டத்து யானை தென்புற வாயில்

வழியாக ரோஹனாவில் புகுந்தது. துலதாரா *(Tuladhara)* என்ற விகாராவில் கபி ஜாதகாவை பெரிய தேராவிடம் இருந்து கற்றறிந்திருந்த மஹாபாதுமா *(Mahäpaduma)* என்ற ஜாதகா கதைகளை போதித்து வந்தவர் *(preacher of jatakas)*, புத்த சமயத்தில் ஏற்பட்டிருந்த பற்றுதல் காரணமாக, நாஹம விகாராரை *(Nagamahavihara)* விரிவாக்கினார். அதன் பின் எண்ணூறு நேரான தனுக்களின் நீளத்திற்கு *(ஒரு தனு என்பது எட்டு அடியாகும்)* ஸதுாபாவின் எல்லையை இன்னமும் விரிவாக்கி மஹானமாவின் அருகில் திஸ்ஸா என்ற குளத்தையும், துாரா *(Dura)* என்ற குளத்தையும் கட்டி இருந்தார்.

தம்மால் வெளியேறிய மன்னன் பெரும் படையுடன் வருகின்றார் என்பதைக் கேள்விப்பட்ட லம்பகன்னாக்களும் யுத்தத்திற்குத் தயார் ஆயினர். காபலகண்டா *(Kapallakkhanda)* என்ற நகர நுழை வாயில் அருகே இருந்த ஹன்கரபிட்டி *(Hankarapitthi)* என்ற இடத்தில் இரு பிரிவினரும் பயங்கரமாக மோதிக் கொள்ள பலரும் மாண்டனர்.

கடல் பயணம் செய்திருந்ததினால் ஏற்பட்டிருந்த களைப்பினால் மன்னனின் படை வீரர்கள் சோர்ந்து போய் பின் வாங்கத் துவங்க, மன்னன் தானே யுத்த முனைக்கு சென்றார். ஆக்கிரோஷமாக அவர் யுத்தம் செய்து எதிரிகளின் தலைகளை சீவிக் கொண்டு இருக்க பயந்து போன லம்பகானாக்கள் அபயக் குரல் எழுப்பியவண்ணம் தம் தலையை மூடிக் கொண்டும் தொங்கப் போட்டுக் கொண்டும் அவருடைய வண்டியின் சக்கரத்தின் முன் சென்று வழிமறித்தபடி நிற்க அவர்களைக் கொல்ல வேண்டாம் என

என மன்னன் ஆணையிட்டு அதற்குப் பதில் அவர்களை உயிருடன் பிடிக்குமாறு கட்டளை இட்டார்.

வெற்றி வீரராக தலைநகரில் நுழைந்த மன்னனின் தலை மீது இராஜ்யக் குடை பிடிக்கப்பட்டு இருக்க திஸ்ஸா விழாவிற்குச் சென்றார். அதன் பின் தன்னுடைய படைவீரர்கள் சூழ ஆயுதங்களை எடுத்துக் கொண்டு தனக்கு கிடைத்த நற்பலனை எண்ணி மகிழ்ந்தவாறு ,தன்னை விரோதித்துக் கொண்ட லம்பகானாக்களை பிடித்து இருவர் இருவராக கட்டி, அவர்களை வரிசையாக ஒருவர் பின் ஒருவராக நிற்க வைத்து அவர்களையும் சேர்த்துக் கட்டி, கட்டிய கயிற்றின் மறு முனையை இரதத்தில் கட்டி விலங்குகள் இழுப்பது போல அவருடைய இரதத்தை இழுத்துக் கொண்டு போகுமாறு செய்தார். அரண்மனையின் வாசலில் சென்றவுடன் அவர்களுடைய தலைகளை சீவி விடுமாறு கட்டளை இட்ட பொழுது அதை அவருடைய தாயார் தடுத்து நிறுத்தினாள். அவள் ‘இவர்கள் உன் இரதத்தை இழுத்து வந்ததினால் எருதுகளுக்கு *(oxen)* சமமானவர்கள். ஆகவே அவர்களுடைய தலையை சீவாமல், அவர்களுடைய கொம்பையும், கால் குளம்பையும் சீவி எறி’ எனக் கூற அதன்படி அந்த லம்பகானாக்களின் மூக்குகளையும், கால் விரல்களையும் மட்டும் வெட்டி அனுப்புமாறு ஆணையிட்டார். எந்த நகரில் யானை தன்னை காத்து நின்றதோ அந்த இடத்திற்கு யானைக்கு மரியாதை செலுத்தும் வகையில் ஹத்திபோகா *(Hatthibhoga)* என்ற பெயர் வைத்தார். இலங்கா இப்படியாக ஆறு வருடங்கள் அனுராதபுரத்தை அரசாண்டு வந்தார்.

அவருடைய மரணத்திற்குப் பின் அவருடைய மகனான கண்டமுக சிவா *(Candamukha Siva)* என்பவர் பதவி ஏற்று

எட்டு வருடங்கள், ஏழு மாதம் பதவியில் இருந்தார். அந்த மன்னன் மானிக்கராகமகா *(Manikaragamaka)* என்ற இடத்தில் இருந்த ஈசாரசமானா *(Issarasamana)* என்ற விகாராவின் உபயோகத்திற்காக ஒரு குளத்தை வெட்டிக் கொடுத்தார்.

கண்டமுக சிவாவின் இளைய சகோதரர் யாசலலகதிஸ்ஸா *(Yasalalakatissa)* என்பவர் தமது சகோதரரை திஸ்ஸாவில் நடந்த வியைாட்டுப் போட்டியில் கொன்று விட்டு தான் பதவியைப் பிடித்து ஏழு வருடங்களளும் எட்டு மாதங்களும் ஆட்சி செய்தார்.

அந்த அரண்மனையின் காவலாளியாக இருந்த தத்தா *(Datta)* என்பவரின் புதல்வாரன சுபா *(Subha)* என்பவன் மன்னனைப் போலவே உருவ ஒற்றுமையைக் கொண்டு இருந்தான். அவனும் அந்த இடத்தில் காவலாளியாகவே இருந்தான். மன்னன் ஊரில் இல்லாத நேரங்களில் எவருக்கும் தெரியாமல் மன்னனுடைய அணிகலன்கள், தலைப்பாகை, உடைகள் போன்றவற்றை அணிந்து கொண்டு அவருடைய ஆசனத்தில் சென்று அமர்ந்து கொள்வான். அவனை சுபா என அறியாமல் அவனை மன்னன் யாசலலகா எனவே நினைத்து அவரை மந்திரிகள் வணங்க, காவலர்கள் தலை குனிந்து மரியாதை செய்தனர். இது பலமுறை நடந்தது. உண்மையை ஒருவரும் அறிந்திருக்கவில்லை. ஒருநாள் அந்த காவலாளி சுபா அரசனை பெயர் கூவி அழைத்து கேலியாக சிரித்துக் கொண்டு இருக்க தன்னைப் பார்த்து ஏன் அவன் கேலியாக சிரிக்கின்றான் என மன்னன் பார்த்துக் கொண்டு இருக்கையிலேயே அவனைக் கொன்று விட்டு சுபா பதவியில் அமர்ந்தான். அவன் சுப்பராஜா *(Subharaja)* என்ற பெயரில் ஆறு வருடங்கள் ஆட்சி செய்தான்.

அபயகிரி மற்றும் மஹாவஹாரா என்ற இரண்டு விகாராக்களிலும் அவர் பல அறைகளைக் கட்டச் சொல்லி அந்த இடத்திற்கு தன்னுடைய பெயரை வைக்கச் சொல்லி இருந்தார். உருவிலாவுக்கு அருகில் வல்லி விகாரா என்பதையும் அதன் கிழக்குப் பகுதியில் ஏகாத்வாரா என்ற விகாராவையும், மஹாவேலி கங்கையின் *(Mahawaeliganga)* வாயருகே நந்திகமாகா என்ற விகாராவையும் கட்டினார்.

லும்பகானா வம்சத்தினை சேர்ந்த வசபா *(Vasabha)* என்பவன் படைத் தலைவராக இருந்த தன்னுடைய மாமனுடன் வடக்குப் பகுதியில் வசித்து வந்தார். திக்கா யாசலாக்கா என்பவர் ஒரு முறை வாசபா என்பவர் நாட்டை ஆளுவார் என ஜோசியம் கூறி இருந்தினால் நாட்டில் வசபா என்ற பெயருடைய அனைவரையும் கொன்று விடுமாறு மன்னன் ஆணையிட்டார். ஆகவே வசபாவின் மாமன் தன்னுடைய மனைவியுடன் கலந்தாலோசனை செய்தப் பின் அவனை மன்னனிடம் அழைத்துச் செல்ல முடிவு செய்தார்.

அந்த படைத் தலைவருடைய மனைவி வசபாவைக் காப்பாற்ற நினைத்தாள். அவர்கள் மன்னனிடம் செல்லக் கிளம்பிய பொழுது வேணடும் என்றே சுண்ணாம்பு கலக்காத வெற்றிலைப் பாக்கை மடித்துக் கொடுத்தனுப்பினாள். படைத் தலைவர் அரண்மனையின் வாயிலை அடைந்தவுடன் சுண்ணாம்பு இல்லாத வெற்றிலைப் பாக்கைப் பாத்ததும், தன்னுடைய மருமகனை விட்டிற்குச் சென்று சுண்ணாம்பு எடுத்து வருமாறு அனுப்பினார். வீட்டிற்கு வந்த வசபாவிடம் படைத் தலைவனின் மனைவி ஆயிரம் பணம் கொடுத்து விவரத்தைக் கூறி அங்கிருந்து வேறு இடத்திற்கு தப்பி ஓடி

அங்கிருந்து தப்பி ஓடியவன் மகா விகாராவை அடைந்து தேராவிடம் தஞ்சம் அடைய, அவர் அவனுக்கு ஆடைகள், உணவு என அனைத்தும் தந்து உதவினார். அங்கிருந்த பொழுது ஒரு தொழு நோயாளி அவன் ஒரு காலத்தில் மன்னனாகப் போகின்றான் என ஆருடம் கூற அவன் மிக்க மகிழ்சி அடைந்தான். கண்டகுட்டா மற்றும் கபல்லபுவா என்றவர்களின் கதையில் கூறப்பட்டுள்ளது போல அவர் ஒரு புரட்சியாளனாக மாறி ஆட்களைத் திரட்டிக் கொண்டு ஒவ்ஒரு கிராமமாக கைப்பற்றிக் கொண்டு ரோஹன்னாவை அடைந்தார். இரு வருடங்களில் அங்கிருந்த மக்களின் ஆதரவைப் பெற்றுக் கொண்டு படையை பலப்படுத்திக் கொண்டு தலைநகரை நோக்கி சென்று சுபராஜாவுடன் யுத்தம் செய்து வெற்றி பெற்று தன்னை அதிபராக வசபா முடிசூட்டிக் கொண்டார். அவருடைய மாமன் யுத்தத்தில் மரணம் அடைந்தார். ஆனால் அவருக்கு முன்னர் தப்பி ஓட உதவிய அவருடைய மாமனின் மனைவி போதா *(Pottha)* என்பவளை மன்னன் வசபா தனது நாட்டின் இராணியாக்கினார்.

ஒரு முறை அவர் ஜோதிடர் ஒருவரை அழைத்து தன்னுடைய ஆயுள் காலம் எத்தனை எனக் கேட்ட பொழுது அவரும் இன்னும் பன்னிரண்டு ஆண்டுகள்தான் அவர் உயிர் வாழ்வார் என்றார். அவனுக்கு ஆயிரம் பணம் கொடுத்து அந்த விஷயத்தை இரகசியமாக வைத்துக் கொள்ளச் சொன்னார். அதன் பின் அவர் புத்த பிட்குக்களை அழைத்து அவர்களை மரியாதையுடன் வணங்கிய பின் தன்னுடைய மரணத்தை தள்ளிப் போட வேறு ஏதும் மார்கம் உள்ளதா என வினவினார். அதற்கு அவர்கள் அவருடைய வாழ்கை முறையை சற்று மாற்றிக் கொண்டு, அனைவருக்கும் தண்ணீர் வடிகட்டிகளை தானமாகத் தர வேண்டும் *(குடிக்கும் நீரில்*

உயிர் ஜன்துக்கள் இருந்தால் அவை வயிற்றுக்குள் சென்று மரணம் அடையாது), நோயாளிகளுக்கு மருத்துவ உதவிகளை செய்ய வேண்டும், இடிந்து கிடக்கும் கட்டிடங்களைப் புதுப்பிக்க வேண்டும், ஐந்து போதனைகளை கடை பிடிக்க வேண்டும், உபோஸ்தா தினத்தன்று உபவாசம் இருக்க வேண்டும் போன்றவற்றைக் கடைபிடித்தால் ஆயுளை அதிகரித்துக் கொள்ள முடியும் என்றனர்.

அதனால் தீபகற்பத்தில் இருந்த அனைத்து புத்த பிட்குக்களுக்கும் ஒவ்வொரு ஆண்டும் மூன்று ஆடைகள் தானம் செய்தார். மேலும் வேறு இடங்களில் இருந்த தேராக்களுக்கும் ஆடைகள் கொடுத்து அனுப்பினார். முப்பத்தி இரண்டு இடங்களில் தேன் கலந்த பால் பாயசம் கொடுக்கப்பட, இன்னும் அறுபத்தி நான்கு இடங்களில் பல்வேறு தானங்கள் செய்யப்பட்டன. சிடியா பப்பத்தா, துாபராமாவில் இருந்த சிடியா, ஸ்துாபி, மற்றும் போதி மரத்து ஆலயம் போன்ற நான்கு இடங்களில் ஆயிரம் விளக்குகளை ஏற்றினார். சிட்டலகுட்ட *(Cittalakuta)* விகாராவில் பத்து அழகிய ஸ்துாபிகளையும், இடிந்த கட்டிடங்களை சீரமைத்தும், வல்லியேற விகாரில் *(Valliyera-vihara)* இன்னொரு மஹாவல்லிக்கோட்டா *(Mahavalligotta)* என்ற விகாராவையும் கட்டினார். அது மட்டும் அல்லாது அனுராமா *(Anuráráma)* என்ற விகாராவையும் மஹாகமாவிற்கு அருகில் கட்டினார். ஹெலிகமா *(Heligáma)* என்ற கிராமத்தில் இருந்த எட்டு கரிசா அளவிலான நிலங்களையும் அவற்றுக்கு வழங்கினார். திஸ்ஸவாதமனாகா *(Tissavaddhamanaka)* என்ற இடத்தில் முசிலா விகாராவைக்*(Mucela-vihara)* கட்டினார். அலிசாரா *(Alisára)* கால்வாயில் இருந்து ஓடிய ஒரு பகுதி நீரை அந்த

விகாராவுக்கு ஒதுக்கினார். காலம்பத்தித்தா *(Galambatittha)* என்ற இடத்தில் இருந்த ஸ்துர்பாவின் மீது இன்னொரு செங்கல் வரிசை வைத்து பூச்சு போட்டு அதை பலப்படுத்தினார். அங்கு இன்னொரு உபோசதாவைக் கட்டி அங்கிருந்த விளக்குகள் அனைத்தும் எரிந்து கொண்டிருக்கும் அளவுக்கு எண்ணைத் தருமாறு கூறி இருந்தார். ஆயிரம் கரிசா அளவு நிலத்தில் ஒரு பெரிய குளம் வெட்டச் சொன்னார். அதை அந்த விகாராவுக்கு தானமாகக் கொடுத்தார். அது போலவே ஈசரசமானகா *(Issarasamanaka)* விகாரிலும், துாபராமா ஸ்துாபி ஆலயத்திலும் உபோசதா மண்டபம் கட்டினார். மஹாவிகாராவின் மேற்குப் பக்கம் பார்த்திருக்குமாறு பல அறைகளைக் கட்டினார். பேய் மழையினால் சேதம் அடைந்திருந்த கடுசாலா *(Catussala)* என்ற கட்டிடத்தை புனரமைத்தார். போதி மரத்தடியின் முற்றத்தில் நான்கு அற்புதமான புத்தர் சிலைகளை நிறுவினார். மன்னனின் மனைவியான போத்தா அதே இடத்தில் ஸ்துாபாவின் வழிபாட்டிற்கு ஒரு ஆலயம் அமைத்தாள். அது முடிந்ததும் பெரிய விழா எடுத்து பல்வேறு தானங்கள் தர ஏற்பாடு செய்து இருந்தார். புத்த சமய போதனைகளை செய்து வந்த புத்த பிட்குக்களுக்கு அவர்களுக்கு என்ன தேவையோ அவற்றைத் தரவும், வெண்ணை மற்றும் அவர்களுக்கு வெல்லக் கட்டிகள் தரவும் ஏற்பாடுகள் செய்திருந்தார். நான்கு நுழை வாயில்களிலும் ஏழைகளுக்கு அன்ன தானம் செய்யப்பட்டன. நோயுற்று இருந்த பிட்குக்களுக்கு நோயாளிகளுக்கான உணவுகள் தரப்பட்டன. கயாந்தி *(Cayanti)* , ராஜுப்பாலா *(Rajuppala)*, வஹா *(Vaha)*, கோலம்பகாஹா *(Kolambagamaka)*, மஹாநிக்கவட்டி *(Mahanikkhavatti)*, மஹாரமேதி *(Maharametti)*, கோஹலா

(Kohãla), காலி *(Káli)*, கம்புட்டி *(Cambuti)*, கதாமாகனா *(Cathamangana)* மற்றும் அக்கிவாதமானகா *(Aggivaddhamanaka)* என்ற பெயர்களில் பன்னிரண்டு குளங்களும் கால்வாய்களும் வெட்டப்பட்டன. நகரின் பாதுகாப்பை முன்னிட்டு நகரைச் சுற்றி இருபத்தி ஐந்து முதல் இருபத்தி ஏழு அடி உயர சுவற்றை எழுப்பினார். அவை மீது கண்காணிக்கும் நிலைகளை நிறுவினார். அரண்மனை தோட்டத்திலும் குளம் வெட்டி வாத்து போன்ற பறவைகளை அங்கு வசிக்க விட்டார்.

நகரில் பல இடங்களிலும் குளியல் அறைகள் கட்டி அதன் பக்கத்தில் பாதாள அறை மூலம் கால்வாய் நீர் வர ஏற்பாடுகள் செய்து இருந்தார். இப்படியாக பற்பல நல்ல காரியங்களை செய்து வந்தவனுக்கு பல இடைஞ்சல்கள் ஏற்பட்டாலும் அவை தானாகவே விலகிப் போக அவர் நாற்பத்தி நான்கு ஆண்டுகள் ஆட்சி செய்து நாற்பத்தி நான்கு வேசகா பண்டிகைகளையும் நடத்தி வைத்தார்.

வாசபாவிடம் இருந்த பயத்தின் காரணமாக முன்னர் சுப்பராஜா தன்னுடைய மகளை கட்டுமானப் பணியில் இருந்த ஒரு தொழிலாளியிடம் அவளைப் ஒப்படைத்து பாதுகாப்பாக வளர்த்து வருமாறு கேட்டுக் கொண்டு இருந்தார். வாசபாவினால் சுப்பராஜா கொல்லப்பட்டவுடன் அவருடைய மகளை தன்னுடைய மகளைப் போல பாதுகாப்பாக வளர்த்து வந்த அந்த தொழிலாளிக்கு தினமும் அவள்தான் உணவு எடுத்து சென்று வந்தாள்.

ஒரு நாள் அவள் உணவு எடுத்து வருகையில் கடம்பா செடிகளுக்கு இடையே ஏழு நாட்களாக மயக்கமாக கிடந்த

துறவி ஒருவரைக் கண்டு அவருக்கு உணவு தந்தாள். அதனால் அவள் வீட்டிற்குச் சென்று மீண்டும் தன் வளர்ப்பு தந்தைக்கு உணவு தயாரித்துக் கொண்டுவரவேண்டி இருந்தது. அன்று தாமதமாக வந்ததின் காரணத்தைப் பற்றிக் கேட்டறிந்த அவன் மனம் மகிழ்ந்து போய் தினமும் அந்த துறவிக்கு உணவு தருமாறு கூறினான். மறு நாள் மயக்கம் முழுதும் கலைந்து எழுந்தவர் என்றாவது ஒரு நாள் அரச குடும்பம் அவளிடம் சென்றால் அந்த இடத்தை நினைவில் வைத்திருக்கும்படி கூறிய பின் இறந்து விழுந்தார்.

வசபாவின் மகனுக்கு திருமணம் செய்யும் வயது வந்தது. அந்த பெண்ணை *(சுப்பராஜாவின் பெண்)* கண்ட அந்த கிராமத்தினர் அவள் முகத்தில் ராஜ தோரணை வீசுவதைக் கண்டு மன்னனிடம் சென்று அந்த பெண்ணைப் பற்றிக் கூறினர். அவரும் அவளை அழைத்து வரச் சொல்லி ஆட்களை அனுப்பிய பொழுது அந்த கட்டுமானப் பணியில் இருந்த தொழிலாளி மன்னனிடம் சென்று அவள் சுப்பராஜா என்ற மன்னனின் மகள் என்ற உண்மையைக் கூறி அவள் தன்னிடம் வளர்ந்த கதையைத் தெரிவிக்க மன்னர் மகிழ்ந்து போனார். அவளை தன்னுடைய மகனுக்கே மணம் செய்வித்து வைத்தார்.

வசபாவின் மரணத்திற்குப் பின் அவருடைய மகன் வங்கனசிகடிஸ்ஸகா *(Vankanasikatissaka)* பதவி ஏற்று மூன்று வருடங்கள் அனுராதபுரத்தை ஆண்டு வந்தார். கோனா *(Gonariver)* நதிக்குப் பக்கத்தில் மஹாமங்கலா *(Mahámangala)* என்ற விகாராவை வங்கனசிகடிஸ்ஸகா கட்டினார். அவருடைய மனைவி மஹாமட்டா *(Mahámattá)* உயிர் இழந்த தேரா தன்னிடம் கூறி இருந்தபடி ஒரு

விகாராவை அவர் மரணம் அடைந்த இடத்தில் அமைக்க தேவையான பணத்திற்கு ஏற்பாடு செய்தாள்.

வங்கனசிகடிஸ்ஸகா மரணம் அடைந்ததும் கஜபாஹுககாமினி *(Gajabahukagamani)* என்ற அவருடைய மகன் இருபத்தி இரண்டு ஆண்டுகள் ஆட்சி செய்தார். தன்னுடைய தாயாரின் கட்டளைப்படி அவர் தேரா மரணம் அடைந்த இடத்தில் முதுவிகாரா என்ற பெயரில் விகாராவை அமைத்து தாயாருடைய வாக்குறுதியை நிறைவேற்றினார். அதற்கான கட்டுமான செலவிற்காக அவருடைய தாயார் ஒரு லட்சம் *(1,00,000)* பணம் தந்தாள். இப்படியாக அந்த விகாராவை தாயும் மகனும் சேர்ந்தே கட்டினர். அது மட்டும் அல்லாமல் அதே இடத்தில் பலரிடமும் இருந்தும் பெற்றிருந்த நிலத்தில் ஸ்துாபி ஒன்றையும் நிர்மாணித்தார்.

அவர் அபயூட்டர *(Abhayuttara)* என்ற ஸ்துாபாவை கட்டி நான்கு வாசல்களை அமைத்து ஒவ்ஒன்றுக்கும் இடையே செல்ல குறுக்கு வழியையும் அமைத்து இருந்தார். காமினிடிஸ்ஸா குளம் *(Gamanitissa-tank)* என்பதைக் கட்டி அதை அபயகிரி விகாராவுக்கு தானமாகத் தந்தார். மாரிகவட்டித் துாபாவை இன்னும் ஒரு மேல் பூச்சு பூசி பலப்படுத்தினார். நுர்று லட்ச *(100,00,000)* பணத்தில் நிலங்களை வாங்கி அங்கிருந்த பிட்குக்களின் உபயோகத்திற்கு தந்தார். அவருடைய கடைசி கால ஆட்சியில் ரமுக *(Ramuka)* விகாரா என்பதைக் கட்டி நகரில் மஹேஜனசாலா *(Mahejasanasala hall)* என்ற கூடத்தையும் அமைத்தார்.

கஜபாஹுவின் மரணத்திற்குப் பின் அவருடைய மாமனார்

மஹாலக்க நாகா *(Mahallaka Naga)* என்பவர் ஆறு ஆண்டுகள் ஆட்சி செய்தார். அவர் கிழக்குப் பகுதியில் சேஜலாகா *(Sejalaka)* என்ற விகாராவையும், கோடபாபடா *(Dakapasana)* என்ற விகாராவை தெற்குப் பகுதியிலும், தகபாசனா *(Dakapasana)* என்ற விகாராவை மேற்குப் பக்கத்திலும், பீஜகாம தனவேலீ *(Bijagama Tanaveli)* என்ற இடத்தில் நாகதீபசலிபப்பஜ்தா *(Nagadipa Sálipabbata)* என்ற விகாராவையும், ரோஹனா நகரில் தோபாலனகப்பப்பட்தா **(Tobbalanágapabbata)** என்ற விகாராவையும் , நகருக்குள் கிரிஹாலிகா *(Girihálika)* என்ற விகாராவையும் சேர்த்து ஏழு விகாராக்களை தன்னுடைய ஆட்சி காலத்தில் கட்டினார்.

பெரும் செல்லத்தைப் பெற்றாலும் இப்படிப்பட்ட போற்றத்தக்க நல்ல காரியங்களை செய்ய நல்லவர்களால் மட்டுமே முடியும், ஆனால் மூடர்களோ தம்முடைய சுகத்திற்காக மேலும் மேலும் செல்வத்தை அடையும் பேராசை கொண்டு தீமைகளை மட்டுமே செய்கின்றனர்.

புனிதரின் பக்தி மார்கத்தில் இணைந்த புத்த பக்தர்களின் மனதில் பேரானந்தம் பொங்கிட வழி வகுத்த கருணா மூர்த்தியின் முப்பத்தி ஐந்தாம் பாகமான ‘ பன்னிரண்டு மன்னர்கள் ’ என்ற பகுதி முடிவுற்றது.

CLICK HERE TO VIEW ENGLISH VERSION

36: பதிமூன்று மன்னர்கள்

மஹாலக்க நாகாவின் மரணத்திற்குப் பின் அவருடைய புதல்வாரன பாடிகடிஸ்ஸகாகா *(Bhatikatissaka)* என்பவர் ஸ்ரீ லங்காவை இருபத்தி நான்கு ஆண்டுகள் ஆட்சி செய்தார். அவர் மஹா விஹாராரவை சுற்றி சுவர் எழுப்பினார். காவரடிஸ்ஸா *(Gavaratissa)* விகாராவை அமைத்து அதன் உபயோகத்திற்கு மஹாமனி *(Mahámani)* என்ற குளத்தையும் கட்டினார். பட்டிக்கடிஸ்ஸா *(Bhatikatissa)* என்ற விகாராவையும் கட்டினார். துாபராமாவில் இன்னொரு விகாராவைக் கட்டி ரன்தகண்டகா *(Randhakandaka)* என்ற குளத்தையும் அமைத்தார். இளகிய மனம் படைத்தவர் வேறுபாடின்றி புத்த பிட்குக்களுக்கும், பிட்குணிகளுக்கும் நிறைய தானங்கள் கொடுத்தார்.

அவருடைய மரணத்திற்குப் பின் அவருடைய இளைய சகோதரரான கனிததிஸ்ஸகா *(Kanitthatissaka)* என்பவர் பதவி ஏற்றார். அவர் பூடராமாவில் *(Bhutáráma)* இருந்த தேரா மஹாநாகாவிற்கு பரிச்சயம் ஆனவர் என்பதினால் அபயகிரியில் இரதனபாசாதாவை *(Ratanapásáda)* அமைத்தார். அபயகிரியை சுற்றி சுவர் எடுப்பி பெரிய பரிவனாவை அங்கு கட்டி, மனிசோமா *(Manisoma)* விகாரில் இன்னொரு பரிவனாவைக் கட்டினார். சிடியாவில் ஒரு ஆலயமும் அதைப் போல நாகதீபாவில் இன்னொரு ஆலயமும் கட்டினார்.

மஹாவிராஹாவில் கட்டப்பட்டு இருந்த சுவர்களை இடித்து விட்டு அந்த இடத்தில் பல அறைகளைக் கட்டினார். நான்கு பக்க பாதசாவையும் அங்கு கட்டினார். தக்ஷின விகாராவில்

இருந்த ஸ்துாபாவற்கு வலு கொடுக்க அதையும் புதுப்பித்தார். மேகவனாவில் இருந்து சுவர்களையும் அகற்றி அங்கு அன்னதானக்கூடம் அமைத்தார். மஹாவிஹராவில் இருந்த சுவற்றை இடித்து அங்கிருந்து தஷ்ஷின விகாராவுக்குப் போக சாலை அமைத்தார். புதமரானவிகாரா *(Bhutárámavihára),* ராமகோனகா *(Ramagonaka),* மற்றும் நன்தாதிஸ்ஸா *(Nandatissa)* போன்ற விகாராக்களை அமைத்தார்.

கிழக்குப் பகுதியில் கங்கராஜி என்ற இடத்தில் அனுலாதிஸ்ஸபப்பத்தா *(Anulatissapabbata),* நியலடிஸ்ஸிராமா *(Niyelatissárama),* பிலபிட்டிவிகாரா *(Pilapitthivihára),* மற்றும் இராஜம விகாரா *(Rájamahávihára)* போன்றவற்றைக் கட்டினார். மேலும் மூன்று உபோசதாக்களையும் கட்டி கல்யானிகவிகாரா *(Kalyanikavihára),* மண்டலகிரிகா *(Mandalagirika),* மற்றும் துப்பலவாபிட்டிஸா *(Dubbalavápitissa)* போன்றவற்றையும் கட்டினார்.

அவருடைய மரணத்திற்குப் பின் அவருடைய மகன் குஜ்ஜநாகா *(Khujjanága)* என்பவர் ஆட்சிக்கு வந்தார். அவர் ஒரு வருட காலம் அரசாண்டார். அவரை கொலை செய்து விட்டு அவருடைய இளைய சகோதரர் குஞ்சநாகா *(Kuñchanága)* என்பவர் இரண்டு வருடங்கள் ஆட்சி செய்த பொழுது ஏகநாலிகா *(Ekanálika)* என்ற பஞ்சம் தலை விரித்தாடிய பொழுது ஐநுாறு புத்த பிட்குக்களுக்கு தொடர்ந்து தானங்களை செய்து வந்தார்.

ஆனால் மன்னனுடைய மனைவியின் சகோதரரும் படைத் தலைவருமான ஸ்ரீநிகா *(Sirinága)* என்பவர் மன்னனுக்கு எதிராக மாறி தனக்கேற்ற படைகளை தயார் செய்து கொண்டு

தலை நகருக்கு வந்து மன்னனுடன் யுத்தம் செய்து அவரைத் தோற்கடித்து ஆட்சியைக் கைப்பற்றியவுடன் அனுராதபுரத்தை பத்தொன்பது ஆண்டுகள் ஆண்டு வந்தார். ஸதுாபி மீது அழகிய வேலைபாடுகள் அமைந்த வெண்சாமர குடை அமைத்த மன்னன், லோஹபாசதாவை ஐந்து மாடிக் கட்டிடமாக மாற்றி அமைத்து, அதில் இருந்து போதி மரம் இருந்த இடத்தின் நான்கு வாயில்களுக்கும் செல்ல படிக்கட்டுக்கள் அமைத்தார். அவை கட்டப்பட்டு முடிந்த பின் அதன் திறப்பு விழாவன்று தீபகற்பத்தில் இருந்த அனைத்துக் குடும்பங்களிடம் இருந்தும் பெற்ற வரியில் பெரும் அளவில் தானங்கள் செய்தார்.

ஸ்ரீநிகாவின் மரணத்திற்குப் பின் அவருடைய மகன் வோஹரிகாடிஸ்ஸா *(Voharikatissa)* என்பவர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். அவர் நீதியும், நேர்மையும் கொண்டு முன் காலத்தைய பழக்க வழக்கங்களை மாற்றாமல் இருபத்தி இரண்டு ஆண்டுகள் ஆட்சி செய்தார். அவர் ஒருவருக்கு ஏற்படும் உடல் காயத்தை அபராதம் எனக் கருதியதால் அவருக்கு அந்த பெயர் ஏற்பட்டது.

குப்பக்காமாவில் இருந்த தேராவின் போதனைகளைக் கேட்டவர் ஐந்து இடிந்திருந்த கட்டிடங்களை சீரமைத்தார். அனுராமாவில் இருந்த தேரா மஹாடிஸ்ஸாவின் அறிவுறைப்படி மசிலப்பட்டினாவில *(Mucelapattana)* நிறைய தானங்களை செய்தார். வோஹரிகாடிஸ்ஸா அபயகிரி மற்றும் மஹாவவிகாராவில் இரண்டு பெரிய கூடங்களை அமைத்தார். அது போல கிழக்குப் பகுதியில் இருந்த போதி ஆலயத்தில் இரண்டு பித்தளையில் ஆன சிலைகளை வைத்தார். அவர் சட்டபானகபாசதா *(Sattapannakapasada)* என்பதை கட்டி

மஹாவிகாராவுக்கு மாதம் ஆணிரம் பணம் தந்து வந்தார். அபயகிரி விகாரா, தஷ்ஷிணமூலா *(Dakkhinamula),* மாரிகவட்டி விகாரா, குலலிடிஸ்ஸா *(Kulalitissa),* மஹியாங்கன விகாரா, மஹானஹடிஸ்ஸா மற்றும் கல்யானிகாவில் *(Kalyánika)* இருந்த எட்டு துாபாக்கள் தலை மீது குடைகளை அமைத்தார். மூலநாகசேனாபதி விகாரா (*Mulanagasenapati-vihara*), தஷ்ஷின விகாரா, மரிகவட்டி விகாரா, புட்டபாகா *(Puttabhaga),* ஈசாரசாமனா, நாகதீபகா போன்ற ஆறு விகாராக்களில் நான்கு புறமும் சுவர்களை எழுப்பினார். ஆங்கு அனுரராமா *(Anurarama)* என்ற உபோசாதா மண்டபங்களையும் கட்டினார். புனிதர்களைப் பற்றிய செய்திகளை விளக்கும் அரியவாசமா (*Ariyavamsa),* என்ற புனித நுால் படிக்கப்பட்ட பொழுது தான தருமங்கள் செய்யப்பட்டன. கடன்பட்டிருந்த பிட்குக்களின் கடன்களை அடைக்க மூன்று லட்சம் *(3,00,000)* செலவு செய்தார். வேசகா பண்டிகையின் பொழுது ஒவ்ஒரு பிட்குவிற்கும் மூன்று ஆடைகளைத் தந்தார். தன்னுடைய மந்திரியான கபிலா மூலம் கேனன் *(Canon)* வடநாட்டு மஹாயனர் போதித்து வந்த வேடுல சூத்திர *(Vetulya)* போதனைகளை தடுத்து நிறுத்தி புத்த சமயத்தின் உண்மையான போதனைகளை தழைக்கச் செய்தார்.

மன்னனுடைய இளைய சகோதரரான அபயநாகா என்பவருக்கு மன்னனின் மனைவியுடன் இருந்த காதல் பற்றி தெரிந்து விட்டதினால் உயிருக்குப் பயந்து ஊரை விட்டு ஓடி பல்லதித்தா *(Bhallatittha)* என்ற இடத்திற்குச் சென்று விட்டார். அதற்கு முன் கோபத்தினால் அவருடைய மாமனான சுபதேவாவின் *(Subhadeva)* கைகளையும் கால்களையும் வெட்டினார். மாமன் மன்னனிடம் சென்று அந்த செயலைக்

பற்றிக் கூறினார். அவரால் குடும்பம் பிளவுபட்டது. அபயநாகா தப்பி ஓடிய பொழுது கப்பலில் ஏறப் போகையில் அவருடன் கூடச் சென்ற நாய் ஒன்று அவருக்கு இடைஞ்சலைத் தர அதை மிருகத்தனமாக அடித்து விரட்டியும் அது மீண்டும் அவன் பின் சென்றது. அதை சுட்டிக் காட்டிவர் தம்முடைய படையினர் அந்த நாயைப் போல தமக்கு விசுவாசமாக இருக்க வேண்டும் என கூறினார்.

அதன் பின் அபயா தன்னுடைய தூதுவனை மன்னனிடம் அனுப்பி பொழுது சுபதேவா வந்த தூதுவன் மீது ஒரு பனை மரத்தை சாய்க்க முயல அவன் பயந்து திரும்பி ஓடினான். அபயநாகா கோபம் அடைந்து பெரும் படையுடன் வந்து தனது சகோதரருடன் யுத்தம் செய்தார். அதில் மன்னன் தோற்று தன்னுடைய மனைவியுடன் மலாயாவுக்கு ஓடிப் போன பொழுதும் அவரைத் துரத்திச் சென்று அவரை கொன்று விட்டு அவர் மனைவி தூக்கி வந்து அரசைக் கைப்பற்றி எட்டு வருடங்கள் ஆண்டார்.

அந்த மன்னனும் போதி மரத்தைச் சுற்றி வேடி பாறைகளை அமைத்தும், லோஹபாசதாவில் கூடமும் அமைத்தார். இரண்டு லட்சம் *(2,00,000)* செலவு செய்து துணிகள் வாங்கி அவற்றை தீபகற்பத்தில் இருந்த பிட்குக்களுக்கு தானம் செய்தார்.

அபயநாகாவின் மரணத்திற்குப் பின் ஸ்ரீநாகா II ***(Sirinága II)*** என்பவர் ஆட்சிக்கு வந்தார். அவர் அவருடைய சகோதரனான திஸ்ஸாவின் மகன். இரண்டு வருடங்கள் ஆட்சி செய்தவர் போதி மரத்தை சுற்றி இடிந்திருந்த சுவர்களை மீண்டும் கட்டினார். போதி ஆலயத்தை சுற்றி இருந்த இடத்தில் மணல்

போட்டிருந்த நடை பாதையையும் மீண்டும் சீரமைத்தார். முசிலா மரத்தின *(Mucela-tree)* தென்புறத்தில் ஹம்சவத்தா *(Hamsavatta)* என்ற விகாராவையும், பெரிய மண்டபத்தையும் கட்டினார். அவர் மரணம் அடைந்ததும் அவருடைய புதல்வாரன விஜயகுமாரா *(Vijaya-Kumaraka)* என்பவர் ஒரு வருடம் ஆண்டார்.

மஹியகானாவில் மூன்று லம்பகன்னாக்கள் நண்பர்களாக இருந்தனர். அவர்களின் பெயர் சம்ஹதிஸ்ஸா *(Samghatissa)* , சம்ஹபோதி *(Samghabodhi)* மற்றும் கோதகபாயா *(Gothakabhaya)* என்பது. அவர்கள் மன்னனிடம் வேலை செய்ய டிஸ்ஸா நதிக் கரை வந்து கொண்டு இருந்த பொழுது ஒரு குருடர் அவர்களுடைய நடை சப்தத்தைக் கேட்டு இந்த நாட்டை ஆளப் போகும் மூன்று மன்னர்களின் சப்தம் இது எனக் கூவினார். அந்த சப்தத்தை பின்னால் வந்து கொண்டிருந்த அபயா கேட்டதும் நின்றார். மீண்டும் அந்த குருட்டு மனிதன் அதே ஆருடத்தை திருப்பிச் சொல்ல யாருடைய ஆட்சி நிலைத்து நிற்கும் என அவர் கேட்க, குருடன் கூறினார் ‘கடைசியாக செல்பவரே நிலையான ஆட்சி தருவார்’.

நாட்டிற்குச் சென்ற மூவரும் மன்னன் விஜயாவைக் கொன்ற பின் படைத் தலைவர் சம்ஹதிஸ்ஸாவை மன்னனாக்கினர். அவரும் அனுராதபுரத்தில் நான்கு ஆண்டுகள் ஆட்சி செய்து வந்தார். அவரும் ஸ்துாபாவில் வண்ண ரத்தினங்கள் பதித்த வெண்சாமரக் குடையை நிறுவி அதன் நான்கு பக்கங்களிலும் இருந்த சூரிய சித்திரத்தின் மீது ஒவ்ஒன்றின் விலையும் ஒரு லட்சம் *(1,00,000)* என்ற அளவில் கற்களைப் பதித்தார்.

சட்டா பண்டிகையின் பொழுது நாற்பதாயிரம் பிட்குக்குவிற்கும் ஆறு ஆடைகயைத் தந்தார்.

தாமஹலாகாவில் தேரா மஹாதேவாவின் போதனைகளைக் கேட்டுக் கொண்டு இருந்த பொழுது அரிசி உணவில் தயாரிக்கப்பட்ட கஞ்சியின் மகிமைப் பற்றி அவர் கூற, மனம் மகிழ்ந்து போன மன்னன் நாட்டின் நான்கு நுழை வாயில்களிலும் அரிசியில் செய்த விஷேச கஞ்சியை எத்தனை தேவையோ அந்த அளவு கொடுத்தார்.

அடிக்கடி ஆட்சியாளர்களின் மனைவிகள் ஜம்பு பழங்களைச் சாப்பிட சிலோனின் வடக்குப் பகுதியில் இருந்து இந்திய துணை கண்டத்திற்கு போகும் வழியில் இருந்த பாசினடிபாகா *(Pacinadipaka)* என்ற தீவிற்கு யாத்திரையை மேற் கொண்டனர். அதனால் அங்கிருந்த பசினதிபா வெறுத்துப் போய் அந்த பழத்தில் ஒரு முறை விஷம் வைத்து விட அதை மன்னன் உண்டு மரணம் அடைந்து விட்டார். அதனால் சம்பபோதியை அபயா மன்னனாக முடிசூட்டிக் கொண்டார்.

அந்த மன்னனை ஸ்ரீ சம்பபோதி என அழைத்தனர். அவர் புத்த சமயத்தின் ஐந்து கொள்கைகளையும் தவறாமல் கடை பிடித்து இரண்டு ஆண்டுகள் ஆண்டார். மஹாவிகாரில் ஐந்து சலகா பள்ளிகளை *(salaka-house)* நிறுவினார். அந்த நாட்டினர் பஞ்சத்தினால் அவதியுற்ற பொழுது தானும் போதி மரக் கூடத்தில் சென்று அமர்ந்து கொண்டு மடிந்து போனாலும் சரி மழை வராவிடில் அங்கிருந்து போக மாட்டேன் என சபதம் செய்து கொண்டார். அடுத்த சில மணி நேரத்தில் ஸ்ரீலங்காவில் கனத்த மழை பெய்யத் துவங்கியும் அவர்

எழுந்து வரவில்லை. ஆகவே பல இடங்களில் வடிகால் குழாய்களை அமைத்து தண்ணீரை வெளியேற்றி மன்னனை எழுப்பி வந்தனர்.

ஒரு முறை அவருடைய நாட்டில் அவருக்கு எதிராக புரட்சி நடந்த பொழுது அவர்களைக் கொல்லாமல் விடுதலை செய்து விட்டு எவரும் அறியாமல் புரட்சியாளர்கள் தங்கி இருந்த இடத்தில் இறந்து போனவர்களுடைய உடல்களை எரித்து விடச் சொல்ல அவர்கள் தம் மக்களை உயிரோடு எரிக்கின்றார் என்று எண்ணிய புரட்சியாளர்கள் பயமடைநது ஓடினா் .

ரத்தக்கி *(Ratakkhi)* என்ற யட்சிணி, கண்களை சிவப்பாக்க வைத்து அதன் பின் நோய் தரும் வகையில் ஒரு வியாதியை ஒரு ஊரில் ஏற்படுத்தியது. அந்த நோய் வந்தவர்கள் வேறு எவருடனாவது சென்று பேசினாலோ, அவர்களுடைய கண்களைப் பார்த்தாலோ அவர்கள் மரணம் அடைந்து விடுவார்கள். மரணம் அடைந்தவரை அந்த யாக்கா என்ற யட்சிணி முழுங்கி விடும்.

அதைக் கேள்விப்பட்ட அரசன் மனம் உடைந்து போய் தன் அறையில் சென்று எட்டு உபோசதா விரதங்களை அனுஷ்டித்து அந்த யாக்கா அந்த இடத்தில் வரும்வரை தான் எழுந்திருக்க மாட்டேன் என அமர்ந்திருந்தார். அவருடைய பூரண பக்தியின் மகிமையினால் அந்த யாக்க அவரிடம் வந்தது. அது யார் என்று கேட்டவரிடம், தான் ஒரு யாக்கா என்றது. அதற்கு என்ன வேண்டும, ஏன் தன்னுடைய மக்களை விழுங்குகின்றாய் எனக் கேட்டவரிடம் தனக்கு ஒரு மானிலம் முழுவதிலும் உள்ள மக்கள் வேண்டும் என்றது. அதைத்

தன்னால் ஒப்புக் கொள்ள முடியாது என்றவரிடம், பேரம் பேசி, தான் கேட்டவற்றை ஒவ்ஒன்றாக குறைத்துக் கொண்டு ஒரு மனிதனையாவது தரவேண்டும் என முடிவாகக் கூறியது.

அப்படி என்றால் சரி என்னை எடுத்துக் கொள் என மன்னன் கூற அதை தன்னால் ஏற்க முடியாது என்றது யாக்கா. ஆகவே கிராமங்களில் இருந்து தினமும் அதன் எல்லைக்கு வந்து அதற்கு உண்ண உணவுப் பொருட்களைத் தர ஏற்பாடு செய்வதாக உறுதி மொழி கூறினார் மன்னன். அதை ஏற்றுக் கொண்ட யட்சினியும் சென்று விட்டது. அதன் பின் அதனால் ஏற்பட்ட பிரச்சனையும் முடிவுக்கு வந்தது.

மன்னனுடைய பொருளாளர் கோதபைய்யா என்பவர் *(Gothakabhaya)* அவருக்கு எதிராக மாறினார். ஆகவே தன்னால் எந்த உயிருக்கும் மரணம் ஏற்படக் கூடாது என்ற முடிவுடன் தனது கைகளில் ஒரு வடிகட்டியை எடுத்துக் கொண்டு தெற்குப்புற வாசல் வழியே மன்னன் தப்பி ஓடினார்.

அவரை வழியில் சந்தித்த ஒரு மனிதர் தன்னுடைய உணவை அவருக்குத் தர அவர் அதை ஏற்க மறுத்தார். தன்னால் அவருக்கு எதுவும் தர இயலாது என்பதினால் அதை ஏற்க மறுத்தார். வந்தவரும் விடாமல் பிடிவாதம் பிடிக்க தான் யார் என்பதை தெரிவித்தார் மன்னன் சம்பபோத்தி. நடந்த அனைத்தையும் கூறிய பின் அவர் கொடுத்த உணவை அருந்தியதும் தன்னுடைய தலையை எடுத்துக் கொண்டு மன்னனிடம் காட்டினால் அவருக்கு நிறைய பரிசுப் பொருட்கள் கிடைக்கும் என்றார். உணவு அருந்தியதும் மன்னர் மரணம் அடைய அவருடைய தலையை அந்த வழிப்போக்கர் எடுத்துக் கொண்டு போய் கோதபையாவிடம் காட்ட அவருக்கு நிறைய

தங்கம் மற்றும் பலவிதமான பரிசுக்களை அவர் வழங்கி மரணம் அடைந்த மன்னனுக்கு இறுதிக் கடன்களையும் செய்யச் சொன்னார்.

இப்படியாக மேஹவானபைய்யா *(Meghavannabhaya)* என்ற கோதபைய்யா பதிமூன்று ஆண்டுகள் ஆட்சி செய்தார். அவர் இன்னொரு மாளிகையைக் கட்டி, அதன் வாயிலில் பெரிய கூடத்தையும் அமைத்தார். தினமும் ஆயிரக்கணக்கான புத்த பிட்குக்களை அழைத்து அரிசியில் செய்த கஞ்சி, மற்றும் ஆடைகள் தந்து வந்தார். இருபத்தி ஒன்று நாட்கள் அதைத் தொடந்து செய்தார். மஹாவிகாராவில் இன்னொரு கூடம் அமைத்தார். லோகபாதசாவில் தூண்களை புதுப்பித்தார். நான்கு நுழை வாயில்களிலும் வண்டிச் சக்கர சின்னங்களை அமைத்தார். மூன்று நுழை வாயில்களிலும் கல்லில் செய்யப்பட்ட சிலைகளிலும், தெற்குப்புற வாயிலில் கல்லில் செய்யப்பட்ட சிம்மாசனத்தையும் அமைத்தார். மேற்கு பகுதியில் தியான மண்டபம் கட்டினார். தீபகற்பத்தில் இடிபாடுகளுடன் இருந்த அனைத்து கட்டிடங்களையும் பழுது பார்க்கும்படிச் செய்தார். தூபமாலாவில் இருந்த ஆலயத்தையும், தேரா மஹுன்தா இருந்த அம்பத்தால மடாலயத்தையும் மீண்டும் திறக்கச் சொன்னார்.

அது மட்டும் இன்றி தூபராமாவில் இருந்த மனிசோமா *(Manisoma)*, மானிக்கவட்டி விகாராவில் இருந்த மனிசோமராமா *(Manisomarama)*, தஷ்ஷின விகாராவில் இருந்த உபோசதாக்கள் போன்றவற்றை மீண்டும் திறக்கச் சொன்னார். மேகவானபைய்யா *(Meghavannabhaya)* என்ற புதிய விகாராவைக் கட்டி அதன் திறப்பு விழாவன்று தாம்

அழைத்திருந்த முப்பதாயிரம் *(30,000)* பிட்குக்களுக்கு ஆறு ஆடைகளும் தந்தார்.

அது போல ஒவ்ஒரு வருடமும் வேசகா பண்டிகையைக் கொண்டாடச் சொல்லி புத்த பிட்குக்கள் ஒவ்ஒருவருக்கும் ஆறு ஆடைகள் தானம் செய்து வந்தார். அபயகிரி விகாரில் இருந்த அறுபது பிட்குக்கள் மாற்றுக் கருத்துக் கொண்ட வேடுலா போதனைகளை *(Vetulya-doctrine)* பரப்பிக் கொண்டு புத்த போதனைகளை நிந்தித்துக் கொண்டு இருந்ததினால் அவர்களை மடத்தை விட்டு வெளியேற்றி, சமுதாயத்தில் இருந்து விலக்கி வைத்து நாடு கடத்தி அவர்களால் ஏற்பட்டிருந்த குழப்பத்தை விலக்கினார். கோலா *(Cola)* பிரிவை சேர்ந்த சங்கமித்தா *(Samghamitta)* என்ற பிட்கு மந்திரங்களை உபயோகித்து பேய், பிசாசுகளை ஓட்டுபவர். அவர் மஹாவிகாராவுக்கு வந்து தங்கிய பொழுது அங்கிருந்த பிட்குக்களிடன் மனஸ்தாபம் ஏற்பட்டது.

அந்த ஒழுங்கீனமற்ற பிட்கு தூபராமாவில் நடந்த கூட்டங்களில் கலந்து கொண்டு சம்பபாலாவில் *(Samghapala)* இருந்த தேரா கோதபையாவைக் குறைக் கூறிக் கொண்டும் இருந்தார். அவர் மன்னனின் விருந்தாளியாக விரைவில் மாறினார். அவர் வீட்டிற்கும் அடிக்கடி செல்லத் துவங்கினார். அவர் மீது மிகுந்த மரியாதை கொண்ட மன்னன் தன்னுடைய மூத்த மற்றும் இளைய மகன்களான ஜெத்ததிஸ்ஸா *(Jetthatissa)* மற்றும் மஹாசேனா *(Mahasena)* என்பவர்களை அவரிடம் பயிற்சி பெற அனுப்பினார். அந்த பிட்குவும் இளையவரின் மீது அதிக அக்கறைக் கொண்டு இருந்ததினால் மூத்தவன் அவரை வெறுத்து வந்தான். மன்னனின் மரணத்திற்குப் பின் ஜெத்ததிஸ்ஸா *(Jetthatissa)* மன்னனாகி

தனக்கு எதிராக இருந்த மந்திரிகளை தண்டிக்க முடிவு செய்தார். தந்தையின் சவ ஊர்வலத்தில் தன்னுடைய தந்தையின் உடலை எடுத்துக் கொண்டு இளைய சகோதரனை முன்னால் நடந்து போகச் சொல்லிய பின் அவன் பின்னால் மந்திரிகள் அணிவகுத்துச் செல்ல கடைசியாக ஜெத்ததிஸ்ஸா சென்றார். சுடுகாட்டிற்குச் சென்று தந்தைக்கு இறுதிக் கடன்களை செய்து சிதைக்கு தீ மூட்டியவுடன் அந்த மயானத்தின் கதவுகளைப் பூட்டச் சொல்லி விட்டு தனக்கு எதிராக இருந்த மந்திரிகளின் தலைகளைச் சீவி தன்னுடைய தந்தையின் சிதையைச் சுற்றி எறிந்தார். அத்தனை கொடுமையாக அவர் நடந்து கொண்டதினால் கொடுங்கோலன் என்றப் பெயரைப் பெற்றார். அதன் இடையில் மஹாசேனாவுடன் கலந்து ஆலோசனை செய்திருந்த பிட்கு சங்கமித்தா மன்னனின் கொடுமையைக் கண்டு பயந்து வேறு நகருக்கு ஓடிவிட்டார். மஹாசேனா எப்பொழுது பதவியில் அமர்வார் எனக் காத்து நின்றார்.

ஜெத்ததிஸ்ஸா தன்னுடைய தந்தை லோஹபாதசாவில் கட்டி முடிக்காமல் விட்டிருந்த ஏழு மாடிக் கட்டிடத்தைக் கட்டினார். அதன் மதிப்பு ஒரு கோடி *(1,00,00,000)* ஆயிற்று. அதற்கு அறுபதாயிரம் *(60,000)* செலவு செய்து ஒரு மாலையை மன்னன் கொடுக்க அதன் பெயர் மனிபாடசதா *(Manipasada)* என ஆயிற்று.

துாபாவிற்கு விலை உயர்ந்த இரத்தினங்களைக் கொடுத்தார். போதி மர ஆலயத்திற்கு மூன்று நுழை வாயில்களை வைத்தார். ஐந்து இடங்களில் தங்கி இருந்த புத்த பிட்குக்களுக்கு பாசினடிஸ்ஸபப்பதா *(Pacinatissapabbata)* என்ற விகாராவை அதைத்துக் கொடுத்தார்.

துாபராமாவில் தேவநாம்பியதிஸ்ஸா செய்து வைத்திருந்த அற்புதமான கற் சிலையை எடுத்து வந்து அதை பாசினடிஸ்ஸபப்பதாவில் வைத்தார். சிடியபப்ப விகாராவில் இருந்த காலமாட்டிக்க குளத்தையும் அது போல் பாசினடிஸ்ஸபப்பதாவுக்குக் கொடுத்த பின் பெரிய விழா மற்றும் வேசகா பண்டிகை போன்றவற்றை செய்து முப்பதாயிரம் *(30,000)* புத்த பிட்குக்களுக்கு ஆறு ஆடைகள் கொடுத்தார். ஆலம்பகாலா குளம் வெட்டினார். இப்படியாக பல நற் காரியங்களை செய்தவர் பத்து ஆண்டுகள் ஆண்டார்.

எத்தனை நல்ல குணம் பெற்றிருந்தாலும், எத்தனை நல்ல காரியங்களை செய்திருந்தாலும், சுதந்திரமாக செயல் பட்டாலும், தித்திப்பான உணவு பண்டத்தில் கலந்து விட்ட விஷம் போல, நல்ல காரியங்களை விட நேர்மையற்ற முறையில் ஆட்சி செய்து கொடுமையான காரியங்களை செய்பவர் இறுதியில் நல்ல பலன்களின் விளைவுகளை அனுபவிக்க முடிவதில்லை.

புனிதரின் பக்தி மார்கத்தில் இணைந்த புத்த பக்தர்களின் மனதில் பேரானந்தம் பொங்கிட வழி வகுத்த கருணா மூர்த்தியின் முப்பத்தி ஆறாம் பாகமான ‘ பதிமூன்று மன்னர்கள் ’ என்ற பகுதி முடிவுற்றது.

37: மன்னன் மஹேசன்

ஜெத்ததிஸ்ஸாவின் மரணத்திற்குப் பின் மஹாசேனா ஆட்சிக்கு வந்தார். அவர் இருபத்தி ஏழு வருடங்கள் ஆட்சி செய்தார். வேறு நாட்டிற்கு முன்னர் தப்பி ஓடியிருந்த தேரா சம்ஹமித்தா அவருடைய பட்டாபிஷேகத்திற்கு வந்தார். அந்த மன்னன் பதவி ஏற்றதும் அவர் அந்த மன்னனை பயன் படுத்தி தேரா மஹாவிகாராவை அழிக்க மனதுக்குள் முடிவு செய்தார். மன்னனிடம் அவர் கூறினார் 'மன்னா மஹாவிராகாவில் தங்கி உள்ளவர்கள் வினயாக்களை சரிவர போதிப்பதில்லை. ஆனால் நாம்தான் அந்த போதனைகளை முறையாகப் போதிக்கின்றோம்' எனக் கூறி அவர் மனதைக் கெடுக்கத் துவங்க இனி மஹாவிஹாராவில் உள்ள பிட்குகக்களுக்கு எவரேனும் தானம் செய்தால் அவர்கள் மீது நூறு பணம் அபராதம் விதிக்கப்படும் என மன்னன் அறிவித்தார்.

ஆதனால் அங்கிருந்த பிட்குக்கள் அதை விட்டு வெளியெறி மலாயா மற்றும் ரோஹனாவுக்குச் சென்று விட்டனர். இப்படியாக மஹாவிராகா ஒன்பது வருடங்களாக காலியாகக் கிடந்தது. ஒருவரும் அற்ற இடம் மன்னனுக்குச் சொந்தமாகி விடும் எனக் கூறி மன்னனின் மனதை மாற்றிய அந்த தீய எண்ணம் கொண்ட தேரா அங்கிருந்து கிளம்பிச் சென்று விட்டார். போகும் முன் மக்கள் மனதிலும் அப்படிப்பட்ட தீய எண்ணத்தை விதைத்து விட்டு சென்று விட்டார்.

தேரா சம்ஹமித்தாவிடம் நெருக்கமாக இருந்த சோனா என்ற மந்திரி ஏழு மாடிக் கட்டிடமான லோஹபாதசாவை வெட்கமற்ற

பிட்குக்களின் துணையோடு தரை மட்டம் ஆக்கினார். அதில் இருந்த விலை உயர்ந்த பொருட்களை மற்ற விகாராவில் இருந்தவர்கள் எடுத்துப் போயினர் என்றாலும் பெரும்பான்மையானவை அபயகிரி மடத்தில் இருந்தவர்களுக்குக் கிடைத்தது. அதனால் அபயகிரி மடம் செல்வம் மிக்க விகாராவாயிற்று. சோனா மற்றும் தீய தேரா சம்ஹமித்தாவின் பேச்சைக் கேட்டு நடந்த மன்னன் பல தீய காரியங்களை தன்னை அறியாமல் செய்து வந்தார். பாசினடிஸ்ஸபப்பதாவில் இருந்து அற்புதமான சிலையை கொண்டு வந்து மீண்டும் அபயகிரி விகாராவில் வைத்தார்.

அங்கு புனித அறைக் கட்டி, போதி மரத்தை நட்டு, நான்கு பக்கச் சுவர் எழுப்பினார். குக்குட்டா *(Kukkuta)* என்ற பரிவனாவையும் அங்கு கட்டினார். அபயகிரி விகாராவுக்கு அந்த தேரா சம்ஹமித்தா மூலம் அரசு மரியாதைக் கிடைத்தது.

மேஹாவன்னபைய்யா *(Meghavannábhaya)* என்ற அமைச்சர் மன்னனுக்கு எதிராக மாறினார். அவர் மஹாவிராஹாவை மன்னன் அழித்து விட்டாரே எனக் கோபமடைந்து மலாயாவுக்குச் சென்று அங்கு பெரும் படையை திரட்டிக் கொண்டு துாருதிஸ்ஸகா குளத்தருகில் *(Dúratissaka-tank)* தங்கினார்.

அதைக் கேட்ட மன்னன் தன்னுடைய படையினருடன் அங்கு சென்றார். மலாயாவில் இருந்து வந்திருந்த மேஹாவன்னபைய்யா குடியும் கும்மாளமும் போட்டுக் கொண்டு தன்னுடைய நண்பனான மன்னன் தன்னுடன் இருந்தால் அதை இன்னமும் அனுபவிப்பேன் என எண்ணியவாறு இரவில்

எவருக்கும் தெரியாமல் மன்னனை சந்தித்தார். அவரை நம்பி அவருடன் உணவு அருந்திய மன்னன் அவர் எப்படி தனக்கு எதிரியானார் என்ற விவரத்தைக் கேட்க மஹாவிகாராவை அவர் அழித்து விட்டக் கோபத்தில்தானன் தான் அப்படி செய்ததாக மேஹாவன்னபைய்யா கூறினார்.

தன்னை மன்னித்து விடுமாறும் அந்த விகாராவை தான் மீண்டும் புதுப்பிக்கின்றேன் எனவும் மன்னன் வாக்குறுதி தந்து விட்டு தன் தலை நகருக்குத் திரும்பினார் அவருடன் மேஹாவன்னபைய்யா செல்லாமல் புனர் பணிக்குத் தேவையானவற்றை சேகரிக்க தான் அங்கேயே நின்று விட்டார்.

எழுத்தாளர் ஒருவரின் மகளும், மன்னனின் மனைவியுமானவள் மஹாவிகாராவை அழித்த தேரா மீது கடும் கோபம் கொண்டு இருந்தாள். துபராமாவையும் அழிக்க சென்ற தேரா சம்ஹமித்தாவை கொன்று விட ஏற்பாடு செய்திருந்தாள். அவரை அவள் ஏற்பாடு செய்திருந்த ஆட்கள் கொன்ற பின் அமைச்சர் சோனாவையும் கொன்றனர். இதற்கு இடையில் மேஹாவன்னபைய்யா கட்டிடப் பணிக்கான பொருட்களை எடுத்துக் கொண்டு வந்து பல பரிவனாக்களைக் கட்டினார். புத்த பிட்குக்கள் மீண்டும் மன்னன் மீது நம்பிக்கை வைக்கத் துவங்கினர். போதி ஆலயத்தில் அற்புதமான வெண்கலச் சிலைகள் செய்யபப்பட்டு வைக்கப்பட்டன.

தக்கினராமாவில் *(Dakkhinarama)* இருந்தவரும், மன்னருடைய நல்ல நண்பரும், ஆனால் மனதில் தீய எண்ணங்கள் கொண்டிருந்த தேரா திஸ்ஸா ஜேதவான விகாராவை மஹாவிகாராவில் இருந்த ஜோதி வனத்தில் கட்டினார். அது

போல மற்ற விகாராக்களில் இருந்த சுவர்களையும் எடுத்து விடுமாறு அவன் பிட்குக்களை கட்டாயப்படுத்தத் துவங்க பலரும் விகாராக்களை விட்டு வெளியேறினர். ஆனால் சில பிட்குக்கள் அங்கேயே தங்கி விட்டனர்.

ஒன்பது மாதங்கள் பிட்குக்கள் இல்லாத இடமாக இருந்தது மஹாவிகாரா. சுவற்றை எடுத்து விட்டால் நமக்கு என்ன என்று அங்கிருந்த பல பிட்குக்கள் கருதத் துவங்கினர். அகவே மீண்டும் பல பிட்குக்கள் மஹாவிகாராவுக்கு வந்து தங்கத் துவங்கினர். ஆனால் அதை திரும்பி வந்தவர்களில் பலரும் சுவற்றை எடுப்பதை எதிர்த்ததினால் அந்த திட்டம் கைவிடப்பட்டது. அது மட்டும் அல்லலாது அந்த பிட்குக்கள் தேரா திஸ்ஸாவின் மீது பல குற்றச்சாட்டுக்களையும் கூறி குறிப்பாக தேஜதவனா கட்டிய விதத்திற்கு ஆட்சேபம் எழுப்பினர். அவற்றைக் கேட்டு உண்மைகளை அறிந்து கொண்ட நேர்மையான அமைச்சர் ஒருவர் மன்னனின் எதிர்ப்பையும் மீறி அந்த தேராவை *(திஸ்ஸா)* அங்கிருந்து வெளியேற்றினார்.

மன்னன் மன்னிஹிர விகாராவைக் *(Manihira-vihara)* கட்டினார். அதைத் தவிற மேலும் மூன்று விகாராக்களைக் கட்டினார். பிராமணரகள் வணங்கிய கடவுட்களை கொண்ட விகாராக்களான கோகன்ன *(Gokanna),* ஏரகவில்லா *(Erakavilla),* மற்றும் பிரும்மன் கண்டலா *(Brahman Kalanda)* போன்ற விகாராக்களை இடித்துத் தள்ளினார்.

மேலும் மிககாம *(Migagama)* விகாரா, , ககசேனகபப்பத்தா *(Gañgásenakapabbata),* கிழக்கில் துதுசேனபபப்பத்தா *(Dhátusenapabbata),* போன்ற விகாராக்களைக் கட்டினார்.

அவற்றைத் தவிர துபராம விகாரா, ஹுலபித்தி *(Hulapitthi)* வகாராக்களையும் உத்தரா, அபயா என்ற பெயரில் இரண்டு கன்னி மாடங்களையும் கட்டினார். யக்கா கலவேலா *(Kalavela)* இருந்த இடத்தில் ஒரு ஸ்துபாவையும் கட்டி பல இடிந்திருந்த கட்டிடங்களை சீரமைத்தார். பிட்குக்களில் உயர்ந்த சம்மதேராக்கள் ஆயிரம் பேர்களுக்கு தானங்களும் வருடத்திற்கு ஒரு முறை பிட்குக்களுக்கு உடைகளும் கொடுக்க ஏற்பாடு செய்தார். ஆனால் அவர் செய்திருந்த தானங்கள் பற்றிய எழுதப்பட்டுள்ள செய்திகள் கிடைக்கவில்லை.

நாடு செழிக்க மனிஹிரா *(Manihira)*, மஹாகமா, *(Mahagama)*, சல்லுாறு (*Challura*), கானு (*Khanu*), மஹாமனி (*Mahamani*), கோகவாதாத் (*Kokavataand*), தம்மரம்மா, கும்பலாகா, வாஹனா, ரத்தமாலகண்டகா (*Dhammaramm*), திஸ்ஸாவட்டமானகா (*Tissavaddhamanaka*) , வேலாங்கவிட்டி (*Velangavitthi*) , சிரா (*Cira*) , மஹாதராகல்லகா (*Mahadaragallaka*) மற்றும் காலபாசன்னா (*Kalapasana*) போன்ற பதினாறு ஏரிகள் வெட்டினார். கங்கை நதியில் பப்பதன்தா என்ற கால்வாயைக் கட்டி பெரும் புகழ் பெற்றார்.

இப்படியாக மஹாவம்சம் இனிதே முடிந்தது

என் நன்றி

இந்த நூலாசிரியரான ஜெயராமன் என்கின்ற நான் ஒரு ஓய்வு பெற்ற அரசு அரசு அதிகாரி. 2005 ஆம் ஆண்டு ஓய்வு பெற்றதும் ஒரு பொழுது போக்காக சாந்திப்பிரியா என்ற புனைப் பெயரில் ஆன்மீக சம்மந்தப்பட்ட கட்டுரைகளை மட்டும் எழுதத் துவங்கி நூற்றுக்கும் மேற்பட்ட கட்டுரைகள், கதைகள் எழுதினேன். அதைத் தவிற மூன்று மகான்களைப் பற்றிய சரித்திரத்தை மூன்று ஆசிரமங்களுக்காக எழுதினேன். இணையதளத்தில் - முருகப் பெருமான் பற்றிய ஆராய்சி கட்டுரைகள் , இரமண மகரிஷியின் கதைகள் / கட்டுரைகள், அய்யா வழி போன்ற பலவும் என் மொழி பெயர்பில் வெளி வந்துள்ளன. அந்த நேரத்தில்தான் மஹாவம்சத்தை மொழி பெயர்க்க சந்தர்ப்பம் திரு பாவன்த பெரிரா *(Bawantha Perera)* மூலம் வந்த பொழுது ஒரே மூச்சில் என்று கூடக் கூறும் விதத்தில் தினமும் நான்கு மணி நேரம் அமர்ந்து அதை படித்துப் எழுதினேன். படிக்கப் படிக்க என்ன அற்புதம், என்ன அருமை, என்ன அதிசயம் என்ற நினைவு அலையலயாய் எழுந்து மறைந்தது. எழுதி முடித்த எனக்கு கடலில் சங்கமித்த நதிபோல மனம் ஆயிற்று. அந்த அனுபவத்தை எப்படி வர்ணிப்பது என்று புரியவில்லை. அதுவும் கூட புத்த பிரானின் கருணையோ ? இதில் தவறுகள் இருப்பின் அவற்றுடன் உங்கள் கருத்துக்களையும் எனக்கு nrj_1945@yahoo.com அல்லது nrj1945@gmail.com என்ற இணைய தளத்தில் எழுதினால் அதை சரி செய்ய முயல்கின்றேன்

20.12.08

சாந்திப்பிரியா

CLICK HERE TO VIEW ENGLISH VERSION